
# இல்லாமல் போன இன்பங்கள்



கோவிலூர் செல்வராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாமல் போன இன்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாமல் போன இன்பங்கள்

**கோவிலூர் செல்வராஜன்**

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்

20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,

சூளைமேடு, சென்னை - 94

தமிழ்நாடு இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Illaamal Pona Inbangal

**by**

**Koviloor Selvarajan©**

**First Edition**

**March 2013**

Mithra : 227

ISBN : 978-93-81322-15-4

Pages : 272

Price : ₹.150 /-

Printed & Published by

**Mithra Arts & Creations Pvt Ltd.,**

20/2, Zackria Colony, 1st Street,

Choolaimedu, Chennai - 600 094.

Ph : +91 44 2372 3182 / 2473 5314

Email : mithraart@gmail.com, mithrabooks@gmail.com

www.mithra.co.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



**நே**ரிய நேசத்திற்கும் ஊறிடு பாசத்திற்குமுரிய என்தம்பி கோவிலூரின் நூலுக்கு வாழ்த்துரை வழங்குகின்ற வாய்ப்பினைத் தந்த தாய்த்தமிழுக்கும் தமிழ் போற்றும் தெய்வத் திருவொளிக்கும் எனது பெரு நன்றிகளையும் வணக்கங்களையும் முதலிற் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பணி வடக்கமென்றால் என்ன வென்று நான் என்தம்பி கோவிலூரிடம்தான் கற்றுக் கொண்டிருக்கிறேன்!

கவியுளத்தை இனங்காணும் கவியுளம் கொண்டவன் கோவிலூர். இவனைக் கோவிலூர் என்றுதான் நான் உரிமையோடு அழைப்பேன். நெருக்கமாகப் பழகும் கோவிலூர் போன்ற தம்பியரை யான் 'அவன் இவன்' என அழைக்காவிட்டால் எனது அழைப்பிற்கே அர்த்தமில்லாமற் போய்விடலாமென்ற அச்சத்தின் பயனாய் இவ்வாழ்த்துரையிலும் 'ன'கரத்தையே நகரவிட்டுள்ளேன்.

'சத்தியம் சாகாது' என்ற எனது சத்திய வரிகள் சாத்தியமாகுமென்ற நம்பிக்கையோடு எனக்கு நல்லுரம் வழங்குகின்ற தம்பியின் கருத்தோசைக்களமாக வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற இந்நூல் தமிழச்சாதியின் பிணிபோக்கி அவர்தம் வாழ்விற்கு அணிசேர்க்கவல்ல சக்தியுடன் அச்சேறியுள்ளது கண்டு அக மகிழ்வும் இறும்பூது மெய்துகின்றேன்.

அதுவும் எமது தாய்த்திருநாட்டின் மூத்தநல் லெழுத்தாளர் ஐயா 'எஸ். பொ' அவர்களின் ஆசிக்கரங் களின் அனுசரணையோடு இந்நூல் அச்சேறுதல் வரலாற்றுத் தொடர்ச்சியை வலுப்படுத்துகின்றது.

உலக சமுதாய முன்னேற்றத்தையும் நீதி தர்ம நியாய விதிமுறைகளையும் முன்வைத்தே தம்பி கோவிலூரின் எழுத்தாணி அசைந்திருக்கிறது. கருத் தோட்டம் நடமாடியிருக்கிறது. ஒளிவு மறைவற்ற உத்வேகமான உணர்ச்சியோட்டம் இவரது கட்டுரைச் செல்நெறியாகத் தடம்பதித்துள்ளதை இதனைப்படிக் கின்ற வாசகர்களால் எளிதில் அடையாளங்கண்டு கொள்ளமுடியும்.

நெஞ்சத்தூய்மையுடனும் அஞ்சாத் துணிவுடனும் எண்ணத்தின் திண்மையுடனும் சிந்தைத் தெளிவுடனும் எவனாற்த் தன்னை வெளிப்படுத்த முடிகிறதோ அவனாற்தான் இவ்வுலகிற்கு நற்பயன்களை நயக்கவல்ல இலக்கிய மாண்புகளைத் தரமுடியுமென்பது எனது ஆழமான நம்பிக்கையாகும்.

போலித்தனமும் புகழ்ச்சித்தேடலும் காலைக் கழுவிக் கடன்வாங்கும் நோக்கும் கூழுக்காய்க் கொள்கை விற்று நாலுக்கும் ஐந்துக்கும் நாவசைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடும் எழுது கோலுக்கு ஒவ்வாத உடைமைகள் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

தீக்கோல் கொண்டு தீட்டுகின்ற திண்மையே நாட்கோளால் நலுங்காது நானிலத்தில் நிலைக்குமென்ற தீர்க்கமான தெளிவுடன் கோர்க்கப்பட்ட கட்டுரையாரமாக வெளிவருகின்ற இந்நூலில் மீன்பாடும் தேனருவித் தமிழோசையும் ஆங்காங்கே அணிசேர்த்து நிற்பதை ஆசையோடு அனுபவிக்கும் வாய்ப்பும் நமக்குக் கிட்டுகிறது.

புலம் பெயர்ந்து வந்தும் கூட திருந்திவாழ விரும்பாத உணர்வாளர்களையும் சாதிசமயச் சாக்கடை களின் எசமானர்களையும் ஏமாற்றிகளையும் ஏமாளி களையும் மாறுங்களேன் என்று மதிப்போடும், மனத் தூய்மையோடும், அக்கறையோடும் ஆதங்கத்தோடும் தனது கட்டுரைகளினூடு கள்ளங்கபடமின்றிக் கேட்கிறான் இந்தச் சமுதாயச்சிற்பி.

கட்டுரைத்தலைப்புகளே கவிதை மொட்டுக் களாகக் கருத்தினைக் கொட்டுகின்றன.

'ஊருக்குத் திரும்பணும்' 'குடும்பம் ஏன் பிரிகிறது?' நாயும் கறிச்சட்டியுமாக' 'பூவும் பொட்டும்' 'உறவுகளில் விரிசல் வேண்டாமே' 'அறிவைத்திற அனைத்தும் புரியும்' 'காதல் வாழ்வதற்காக? வழுக்கி வீழ்வதற்கா?' 'மூடநம்பிக்கைகளை மூட்டை கட்டுங்கள்' எனப் பல கட்டுரைகள் வழியாகக் கருப்பொருள் களைக் கடைவிரித்துக் காட்சிப்படுத்தியுள்ளான் தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலூர். பாடல்களையெழுதி மிகவும் கம்பீரமான குரலிற் பாடும் ஆற்றல் பெற்ற கவிஞன் கோவிலூர் செல்வராஜன் பாடல் வரிகளில் யதார்த்தமும் இருக்கும், பதார்த்தமும் இருக்கும், கதார்த்தமும் இருக்கும்.

கட்டுரைகளின் மத்தியில் மெட்டுக்களோடு தாயகச் சிட்டுக்கள் சிறகுவிரித்து நிற்கின்றன. புலம்பெயர்ந் தாலும் உளம்பெயராத ஈழத்தமிழனின் ஆழப்புதைய லாக இந்நூல் தோற்றம் பெறுகிறது.

இவ்விடத்தில் இன்னுமொரு குறிப்பினைப் பதிவு செய்வது எனது கடமையென யான் எண்ணுகிறேன்.

அண்மையில் நான் தமிழகத்திற்குச் சென்றிருந் தேன். நல்ல தமிழுள்ளங்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இந்த உள்ளங்கள் ஒட்டு மொத்த நிலையில் ஒரு கருத்தினை எனக்கு உறுதிப் படுத்தினார்கள். இன்று தமிழையும், தமிழர் அடையாளங் களையும் உலகப்பரப்பில் மிகவும் பெருமையோடும் வீச்சோடும் வெளிப்படுத்தி வீறுநடைபோடுபவர்கள் ஈழத்தமிழர்களே, என்ற தங்களது நம்பிக்கையை இவ்வுள்ளங்கள் மிகுந்த அன்புறவோடு எனக்குக் கூறிவைத்தார்கள்.

தேமதுரத்தமிழோசையைத் தரணியின் திசை யெல்லாம் பரப்புகின்ற பணியில் நாம் முன்னிலைப் படுத்தப்படுகிறோமென்று எண்ணும்போது தாயகப்பிரிவு தரும் தாங்கொணாத் துயரம்கூடச் சற்றுத் தளரத்தான் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிடத் தமிழகத்தின் மிகமுக்கியமான பல்கலைக்கழகத் தளங்களிலும் மற்றும் மேனிலைக் கல்வி நிலையங்களிலும் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்பிலக்கியங்கள் பற்றிய தேடல்களும் ஆய்வுகளும் இவைபற்றிய விழிப்புணர்வும் பல நிலைகளில் முடுக்கி விடப்பட்டுள்ளதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் தம்பி கோவிலூர் செல்வராஜன் போன்ற எழுத்துச் சிற்பிகளின் கருத்தோவியங்களும் கவியோரைகளும் உலகப் பரப்பினை நிறைக்குமென்ற நம்பிக்கையோடு தம்பியின் எழுத்துப் பணிமென்மேலும் தொடர, இவரையும் இவருக்கு அனைத்து வகையிலும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் அனைத்து உள்ளங் களையும் வாழ்த்தி, இவருக்கு வளமும் நலமும் வழங்க எல்லாம்வல்ல அன்னை பராசக்தியின் பேரருளையும் வேண்டி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழ்
வளர்க தமிழ்த்தொண்டு.
வளம் பெறுக வையகம்.

அன்புடன்

**புலவர் சிவநாதன்**
**தமிழவை லண்டன்**
**14-02-2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



**கோ**விலூர் செல்வராஜன் அவர்களை இனவுணர்வு சார்ந்த ஓர் ஊடகவியலாளராக, உள்ளத்தில் ஊறித் ததும்பும் எண்ணற்ற மேலான உணர்வு களை எழுத்தில் வடித்து வழங்கும் உயரிய படைப்பாளராகத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். இன்று நம் பார்வையில் விரிந்து கிடக்கும் தமிழிலக்கியத் தளத்தில் மண்ணின் மணமும் நிறமும் மாறாமல், யதார்த்த வாழ்க்கைப் போக்குகளைப் போலிப் பாசாங்கின்றி, அவசியமற்ற சரிகை வார்த்தைகளின் அலங்காரப் பூச்சின்றி எளிமை யாய், இயல்பாய் கட்டுரை, கவிதை, புதினம், நாடகம் போன்ற பல வடிவங்களில் படைத்தளித்து அழுத்தமாகத் தங்கள் தடத்தைப் பதித்து வருபவர்கள் ஈழத் தமிழர்கள் என்பது எந்த வகையிலும் மறுக்க முடியாத உண்மை. இந்த உண்மைக்கு உரம் சேர்க்கிறது செல்வராஜனின் சிந்தனைத் தொகுப்பு.

'அருமையில் எளிய அழகே போற்றி' என்று ஆண்டவனை ஆராதிக்கிறார் மணிவாசகர். அருமை யான சிந்தனைகளை எளிமையான மொழியில் அழகான நடையில் படைப்பதுதான் இலக்கியப் பண்பு. உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஆண்டவன், உண்மைத் தன்மை உடையதுதான் இலக்கியம். இறைவனை இலக்கியத்தின் உள்ளீடாகப் பார்த்தும் பாவித்தும் பரவசப்படுவதுதான் தமிழினம். செல்வராஜனின் சிந்தனைகள் அனைத்தும் அருமை யானவை. அவற்றை ஆற்றொழுக்கான அழகிய தமிழில் எளிய நடையில் அற்புதமாக வழங்கியிருக்கிறார்.

'மனம் என்பது ஐம்புலன்களின் இயக்கத்தினால் ஏற்படும் மாயத்தோற்றம்.'

'புகழ்ச்சி பூமாலையாக இருந்தால் பரவாயில்லை. அது ஒரு ஆபரணமாக இருக்கக் கூடாது.'

'ஆணவம் தன்னைத்தானே சிறப்பித்துக் கொள்கிறது. பணிவு மற்றவரால் சிறப்பிக்கப்படுகிறது.

'வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகிறது.'

'ஒரே மௌனவிரதம் என்பது நாக்கிற்கு நாம் கொடுக்கும் தண்டனை'

என்பன போன்ற சொற்சித்திரங்களை இத்தொகுப்பில் எந்தப் பக்கம் திருப்பினாலும் படித்துப் பரவசப்படலாம்.

மற்றவர் உங்ளை மதிக்கவேண்டுமா, நாக்கும் வாக்கும், கல்லைக் கொட்டினால் அள்ளலாம், புத்தகம் படியுங்கள், வெற்றி உன் கைகளில், இழந்தது ஏராளம், உங்கள் குடும்பம் எப்படி, தமிழா நீ தமிழ் பேசடா, குரங்குக் குணம், தலைக்கு மேலே கத்தி என்று பல் வேறு தலைப்புகளில் செல்வராஜா செதுக்கியிருக்கும் சிந்தனைச் சிற்பங்கள் வாசகர் கருத்துக்கு வாய்த்த விருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஒரே ஊற்றிலிருந்து நல்ல தண்ணீரும் உப்புத் தண்ணீரும் ஊறுமா? அத்தி மரம் ஆப்பிள் பழங்களையும், திராட்சைக்கொடி மாம்பழங்களையும் சேர்த்துத் தருமா? எப்படி ஒரே நாக்கினால் நல்லதையும் கெட்டதையும் பேசமுடிகிறது?’ என்று ஆதங்கம் கொள்வதிலும்...,

‘தாய் மண்ணை இழந்தோம். எழில் கொஞ்சும் கிராமங்களை இழந்தோம். பொன் விளையும் பூமி, வயல்காட்டை இழந்தோம். வளம் கொழிக்கும் கடலை இழந்தோம். செந்தமிழை மறந்தோம். தெருக்கூத்தை மறந்தோம். பண்பாட்டுக் கோலத்தை மறந்தோம், நல்ல உணவையும் உறக்கத்தையும் இழந்தோம். கோவில், தேவாலய திருவிழாக்கள், உற்சவங்களை இழந்தோம்’ என்று ஒவ்வொரு ஈழத் தமிழரும் இழந்ததையும் மறந்ததையும் பட்டியலிட்டுத் தன் இதய சோகத்தை இறக்கிவைப்பதிலும்...,

‘தன்னலம், விட்டுக் கொடுக்காத சுபாவம், ஆணவம், நாகரிக மோகம், ஆடம்பர உச்சம், ஊதாரித் தனம், கருத்து மோதல்கள், ஒவ்வொருவரின் ஒவ்வாத செயற்பாடுகள், பொருளாதாரத்தில் தனித்து நிற்கும் வல் லமை’ போன்ற காரணிகள் மணமுறிவை ஏற்படுத்தும் சூழலை வெளிப்படுத்தும் விதத்திலும்...,

‘பலவீடுகளில் தமிழ் பேசப்படுவதில்லை. நன்றாகத் தமிழ் படித்தவர்களும் தமிழைப் பேசுவ தில்லை. உலகத்தில் எந்தவொரு இனத்தவனும் செய்யாத செய்ய விரும்பாத இழிசெயலைத் தமிழன் மட்டும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறான்' என்று அடக்க முடியாத கோபத்துடன் பொங்கி வெடிப்பதிலும், குடும்ப உறவுகள், இன்றைய இளைஞர்கள் கற்கும் கல்வியின் பயன், பெற்றோரைப் புறக்கணித்தல், புலம் பெயர்ந்த தமிழரிடையே படிந்து விட்ட போலித்தனங்கள், அன்றாட வாழ்க்கையில் சந்திக்க நேரும் நீசர்களின் பொய்முகங்கள் ஆகியவற்றைச் சரியான புரிதலுடன் தோலுரித்துக் காட்டுவதிலும் செல்வராஜனின் சத்திய ஆவேசத்தைத் தரிசிக்க முடிகிறது.

ஒரு நாவல் வடிப்பதை விட, ஒரு கவிதை படைப்பதை விட, செறிவான கருத்துகளடங்கிய ஒரு கட்டுரையை வாசகரின் வாசிப்பு அனுபவமாக மாற்றும் வண்ணம் தீட்டுவதுதான் எழுத்துலகில் சிரமமானது. இத்தொகுப்பில் நண்பர் செல்வராஜன் சிரமமில்லாமல் அச்சாதனையை இயல்பாய் நிகழ்த்தியிருக்கிறார். ஈழப் படைப்புலகின் சாதனைச் சிகரமான அறிஞர் 'எஸ்.பொ'வை நன்றியுடன் தொழுதேத்தும் செல்வராஜன் அவரைப் போன்று படைப்பிலக்கிய உலகில் ஆதிக்கம் செலுத்த இன்னும் பலநூறு காலங்கள் பயணிக்க வேண்டும். காலம் அதற்கான களத்தை அமைத்துத் தரும்.

சென்னை
15.11.2012

அன்புடன்,
**தமிழருவி மணியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



நாவல், சிறுகதை, கவிதை, பாடல்கள் என்று ஏதோ எனது இலக்கிய அறிவுக்கும், பட்டறிவுக்கும் உட்பட்டு சில படைப்புகளை எழுபதுகளிலிருந்து அவ்வப்போது என்னால் வெளிக் கொண்டுவர முடிந்தது. தாயகத் திலிருந்தபோது தமிழ் தினசரி களில் வெளிவந்த எனது படைப்பு களைவிட நான் ஆசிரியராக இருந்த சஞ்சிகைகளிலும் சில ஆக்கங்களை என்னால் எழுத முடிந்தது. நாட்டைவிட்டு ஒரு புலம்பெயர்ந்த தமிழனாக நான் மாறிய பின் ஏற்பட்ட தமிழ் மான உணர்வும், சமூக அக்கறையும், பிரக்ஞையும் என்னை மீண்டும் எழுதத் தூண்டினாலும் முரண்பாட்டு மோதல்களுக்கு மத்தியில் என் எழுதுகோல் உறங்கித்தான் கிடந்தது. இந்த உறக்கத்திற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது, அது என்னவென்றால், நான் புதியதொரு சமுதாயத்தின் அங்கத்தவனாக மாறிக்கொண்டிருந்ததேயாகும். இருந் தாலும் நான் ஒரு புலம்பெயர்ந்த ஈழத்தமிழன். தமிழ் மொழியினாலே என் தனித்துவ அடையாளங்களை தக்கவைத்துக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் எனக்கு இருப்பதாக உணர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய மொழிச் சூழலில் உழைத்து, அந்நிய தொழில் கலாச்சாரத்திலே இணைந்து, அந்நிய நாகரிகங்களிலும், விழுமியங்களிலும் தமிழ் நேசிப்புடன் வாழவேண்டிய ஒரு புதிய ஜாதிதான் புலம்பெயர்ந்த தமிழன். ஆனால் ஒரு தமிழனாக, தமிழை தன் தாய் மொழியாக, அந்த தாய்மொழியின் மேன்மையை தனது சமூகத்திற்கும், ஏன் தனது குடும்பத்திற்கும்கூட சொல்லிப் புரியவைக்கக்கூட முயலாமல் புலத்தில் பல தமிழர்கள் வாழ்கிறார்கள். ஏனைய இனத்தவர்களும் தங்கள் நாட்டைவிட்டு அந்நிய மண்ணில் வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தாய்மொழியை மறக்க வில்லை, சிதைக்கவில்லை. தமிழன் மட்டும்தான் தன் தாய்மொழி தமிழுக்கும் துரோகம் செய்து புலத்திலும், தமிழ் நிலத்திலும் வாழ்கிறான். எனது தமிழ் சமூகத்தில் நான்கொண்ட அக்கறையும், தாய்மண்ணின் மேல் வைத்த மாறாத பாசமும், தாய்மொழி மேல் வைத்திருக்கும் உயரிய விருப்பாலும் தான் நான் மீண்டும் எழுதத் தொடங்கினேன். அந்தவகையில் 1997ல் எனது படைப்பாக வெளிவந்த “விடியாத இரவுகள்” என்ற சிறுகதை தொகுதிக்கு, தமிழ்நாட்டின் “லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசு” கிடைத்தது. அன்றைய காலகட்டதில் ஒரு ஈழத்து படைப்பாளிக்கு தமிழ்நாட்டில் பரிசும், பாராட்டும் கிடைப்பது மிகவும் கஷ்டமான காரியம். மித்ர வெளியீடாக அந்த நூல் வெளிவந்தது கூடுதல் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக மேற்குறிப்பிட்ட தளங்களில் சில படைப்புகளை வெளிக்கொணர்ந்த எனக்கு இம்முறை புதிய களமான கட்டுரைக் களத்தில் நாட்டம் வந்தது. எனது இணையதளங்களில் நான் எழுதிய கட்டுரைகளை வாசித்த பலர், இதை ஒரு புத்தகமாக கொண்டுவரலாமே என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க அறுபது கட்டுரைகளை இங்கு அச்சுவாகனம் ஏற்றி இருக்கின்றேன். இவைகள் புலத்திலும், நிலத்திலும் வாழும் எமது மக்களின் வாழ்க்கை முறைகளையும், அந்த வாழ்வியலில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் எம் மக்களின் மனங்களில் புகுந்து, முகிழ்ந்து புரையோடிப்போன வெறுக்கத்தக்க குணாதிசயங்களையும் அவர்களின் வாழ்வியல் மாற்றங்களையும், இந்த மாற்றங்களால் அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் மற்றும் பொதுவான விடயங்களையும் இந்தக் கட்டுரைகளில் எனது எழுதுபொருளாக எடுத்துள்ளேன்.

இந்தக் கட்டுரைத் தொகுதிக்கு நான் கேட்ட உடனேயே, தனது கொள்கையைத் தளர்த்திக் கொண்டு என்மேல் அவர் கொண்ட அன்பால் சிறப்பான ஓர் அணிந்துரையை வழங்கிய எனது அன்புக்கும், பாசத்திற்கும், மரியாதைக்கும், மதிப்புக்குமுரிய திரு. தமிழருவி மணியன் அண்ணர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் பலகோடி நன்றிகளையும் சொல்லிக்கொள்கிறேன். நல்ல மனசுகொண்ட, ஒருவரின் வாயால் வாழ்த்துக்கிடைப்பது பெரும்பாக்கியமல்லவா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் கவியுள்ளம் கொண்ட... இலக்கிய ஞானமும், இலக்கண பித்தும் நிறைந்த... ஒருவர் மூலம் இந்த நூலுக்கு வாழ்த்துரை ஒன்று வழங்க கடைசி நேரத்தில் நினைத்தபோது என் அண்ணர் புலவர் அண்ணா அவர்கள்தான் முதல் தெரிவானார்... தன் அன்பையும், ஆசியையும் கொட்டி அருமையான ஒரு வாழ்த்துரையை வழங்கி இருக்கிறார்கள். அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள். அட்டைப்படம் ஒன்று வரைந்து தர முடியுமா தம்பி? என்று கேட்டவுடன் மறுக்காமல் வரைந்து தந்த என் பாசத்துக்குரிய ஓவியர் புகழேந்தி அவர்களுக்கும், இன்றைய திகதியில் தமிழ்கூறும் நல்லுலகம் மதிக்கும், பாராட்டும், அதிசயிக்கும் ஒரேயொரு ஈழத்துப் படைப் பாளி, எழுத்தாளர், விமர்சகர், பதிப்பாளர், மூன்று தலை முறைக்கும் மேலாக தனது எழுத்தின் வீரியத்தால், வேரூன்றி விருட்சமாக நின்றுகொண்டிருக்கும் "எஸ்.பொ" என்று உலகறிந்த அப்பா (நான் அப்படித்தான் அவரை அழைப்பது) எஸ்.பொன்னுத்துரை அவர்கள் மித்ர பதிப்பகத்தின் மூலம் இந்நூலை மிக நேர்த்தியாக வடிவமைத்துத் தந்துள்ளார். அவருக்கும் எனது கோடான கோடி நன்றிகள். மற்றும் இந்த நூல் வெளிவருதற்கு அனைத்து விதத்திலும் உதவிகள் செய்த எனது மைத்துணர் இரா. தெய்வராஜன், கடைசி நேரத்தில் பொறுப்பெடுத்து கனகச்சிதமாக இந்த நூலை நிறைவாக்கித் தந்த கவிதாயினி, எழுத்தாளினி எம் மண்ணின் படைப்பாளினி சகோதரி ஈழவாணிக்கும் எனது நன்றிகள். மனிதன்தான் அவனது குணங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளை வடிக்கும் சிற்பி சூழ்நிலையை உருவாக்கும் ஓவியன் விதியை நிர்ணயிக்கும் படைப்பாளி மொத்தத்தில் எண்ணங்களின் தலைவனே மனிதன். எனது எண்ணங்களை, சிந்தனைகளை கட்டுரைகளாக இந்த நூலில் நீங்கள் பார்க்கலாம், படிக்கலாம். விமர்சனம் என்பது ஒரு படைப்பாளிக்கு உறுதியையும், உந்து சக்தியையும் கொடுக்க வேண்டும் என்று உண்மை யான விமர்சகர்கள் சொல்வதுண்டு. ஆனால் ஒரு படைப்பு வெளிவந்தால் அதை யாரும் எப்படியும் விமர்சிக்கலாம் என்ற கூற்றும் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் எதையும் எதிர்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் முடியும். உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கத்துடன் கூடிய நன்றிகள்.

என்றும் அன்புடன்
**கோவிலூர் செல்வராஜன்**

146, Cherrywood Lane
Morden. London,
SM4 4HQ,U.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

**பா**ரத கண்டத்தின் தொன்மைப் பண்புகளையும், கலை - இலக்கிய வீறுகளையும் என்றும் நிறுவி நிற்பன இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்கள். திராவிட புத்தி ஜீவித மூர்க்கத்துக்கும் ஆக்கினைக்கும் உள்ளானது இராமாயணம். 'கீமாயணம்' என்றும், 'இராவண காவியம்' என்றும், 'கம்பரசம்' என்றும் துவைத்தெடுக்கப் பட்டது. இத்தகைய அதாப்பியங்கள் மகாபாரதத்திற்கு நிகழவில்லை. மானிட குலத்தின் அனைத்துக் கோலங் களையும் விகற்பங்களையும் அதிற்ச் சந்திக்கலாம். மனித வசனங்கள் ஆண்டவனின் அருள் வாக்கியங்களாகத் திரளும் அற்புதத்தைக் காணலாம். அன்பும் - அறமும், சதியும் - துரோகமும், பாசமும் - பகையும் பின்னிப் பிணைந்ததுதான் வாழ்க்கை என்பதற்கான வேதம். 'வில்லைக் காட்டாமல் பல்லையா காட்டுவான் அர்ஜுனன்' என்று 'சினிமா என்றி'க்கான உபகாரி. அஃது இன்று திராவிட மாயையின் ஆயுள் பரியந்தக் குத்தகைக்காரரின் மனச்சாட்சியின் உள்ளே உறங்காதிருத்தலும் சாத்தியமே. பாரதத்தின் உச்சக்கட்டம் குருக்ஷேத்திரம். போரின் அனைத்துக் கபடங்கள், சதிகள், வஞ்சனைகள், அவலங்கள், அணாப்புதல், கோழைத்தனம் ஆகியன மட்டுமன்றி, அறங்களும், அழகின் அமைதிகளும், ஆண்மையும், மறங்களும், ஈகைகளும் சூத்தாடும் போர்க்களம். அது மானிட வாழ்வியலின் மகாகுறியீடு. போரின் செல்நெறியில் பாச நெகிழ்ச்சிகளும், வீரசபதங்களும் இணையும் பாங்கிலே... அபிமன்யு கொலை, குருநிலத்தின் சமர்நிலைச் சமன்பாட்டிலே பாரிய மாற்றத்தினைப் புகுத்தியது. சதிகாரரின் சூழ்ச்சியை அறுக்க எடுத்த அறச்சீற்றத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறச்சாதனையாக... முள்ளிவாய்க்காலிலே நிறைவேற்றப் பட்ட ஈழத்தமிழ் இனச்சங்காரத்தினை, குருக்ஷேத்திரத்தில் நிகழ்த்தப்பட்ட அபிமன்யு கொலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது என் பார்வைக்குப் பொருந்துகின்றது. அன்னை இந்திரா வாலும் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆரினாலும் வளர்த்தெடுக்கப் பட்ட தமிழ் ஈழ இனத்தின் விடுதலை வெறி என்ற அபிமன்யுவைச் சாகடிக்க, அஹிம்ஸையின் வித்தையைக் கற்பித்த காந்தி அண்ணலின் தலைபொறிக்கப்பட்ட இந்திய ரூபாய்கள் எத்தனை கோடிகள் வாரி இறைக்கப்பட்டன? அதற்கான சதி நிறைந்த வியூகத்தைப் பின்னிக்கொடுத்த மதியூகச் 'சேட்டன்'களினால், மீன்பிடிக்காரன் சிமியோனாக ஏசுநாதர் கண்களிலே பட்டு, கத்தோலிக்க மதத்தின் பீற்றராய் - பாறையாய் - எழுந்து நிற்பவரின் தேவாலயம் நிறுவப்பட்டுள்ள நாட்டிலே பிறந்து, பாரதத்தின் செவிலித்தாயின் மௌன சம்மதமின்றி இந்த வெறியாட்டம் நிகழ்த்தப்படவில்லை என்பதை நிறுவ முடியுமா? முடியாது. அதேசமயம், அந்த அன்னை செய்துள்ள தியாகமும் கொஞ்சமல்ல. கிறிஸ்தவ வேதத்தின் அடித்தளம் மன்னித்தல். அதற்குக்கூட மறுத்தான் வைத்து, பாரத்தின் மெய்யான மருமகள் என்பதை எண்பிக்கும் வகையிலே லட்சக் கணக்கான தமிழ் ஈழ இளைஞர்களை ஒரே நாளிலே கொன்று குவித்து, அந்த இரத்தத்தைப் பூசித் தன் கொண்டையை முடிந்துகொண்ட பாரதத்தின் அற்புத பத்தினிப் பெண் சொக்கத் தங்கமன்றி வேறென்ன. இந்த அன்னையின் தியாகத் தழும்புகளுடன் ஒப்பிடும்பொழுது, அன்னை திரேஸாவின் சேவை வெறும் ஜுஜுப்பி! 'அற்புத சொக்கத்தைப் பார்த்துப் பல்லைக் காட்டாது, வில்லையா காட்டுவது?' என்று ஏழு கோடி தமிழர் களின் தலைவர் புதிய வசனங்கள் எழுதினாலும் வியப் பில்லை. சோகமா அல்லது வெற்றித் திலகமா என்பதைக் கண்டுபிடிக்கும் அலுவலைப் புதிதாக முளைத்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புலனாய்வு எழுத்தாளர்'களிடம் விட்டுவிடுவோம். வாசிப்பு நேரத்தினை எவ்வாறு செலவு செய்வது என்கிற குழப்பத்தி லுள்ள புலம்பெயர்ந்து வாழும் தமிழ் ஈழரின் சுவைப்புக்கு வாகாக எழுதித் தந்துள்ளார் கோவிலூர் செல்வராஜன். 'இல்லாமல் போன இன்பங்கள்' என்கிற மகுடம் எல்லா வற்றையும் உருவகமாகச் சுட்டுவதாக எனக்குத் தோன்று கின்றது.

இரண்டு தசாப்த காலமாக கோவிலூர் செல்வராஜனின் கலை - இலக்கிய நேசிப்புகளை நான் அறிவேன். இந்த நேசிப்பின் காரணமாகவே இருவரும் நட்புப் பாராட்டி வாழ்கின்றோம். என் வயதினை மதித்து என்னை 'அப்பா' என்றழைப்பது அவர் வழக்கம். அவருடைய சிறுகதைகள் அடங்கிய தொகுதி ஒன்றினை 1997ஆம் ஆண்டில் மித்ர சார்பாக வெளியிட்டேன். அந்த ஆண்டிற்கான "லில்லி தேவசிகாமணி" இலக்கியப் பரிசினை வென்று, தமிழ் நாட்டின் இலக்கியவாதிகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். தமிழ்க் கலை - இலக்கிய வகைகள் பலவற்றிலும் உண்மையான அக்கறை செலுத்தி, அவற்றின் நேர்த்திகளையும் நுட்பங் களையும் அவர் அறிந்து கொண்டதையும் அறிவேன். பத்திரிகையிலும், வானொலியிலும் கடமையாற்றிய அநுபவங் களைத் தனது கலை - இலக்கியப் பயணத்திலே இணைத்துக் கொள்வதில் கணிசமான வெற்றி சாதித்துள்ளார். கவிதை ஆற்றலையும், இசைஞானத்தையும் இணைத்து, தான் பிறந்த திருக்கோயில் - தம்பிலுவில் ஆகிய கிராமங்களிலுள்ள திருக்கோயில்களின் புகழைத் தமிழ்கூறும் நல்லுலகில் பரம்பச் செய்ய அரும்பாடுபட்டுள்ளார். அவருடைய மைத்துனர் தெய்வராஜன், என் சம்பந்தி. இசையில் குடும்ப மாகவே அவர்கள் காட்டிவரும் ஈடுபாடு என்னை வியப்பில் ஆழ்த்திய சந்தர்ப்பங்கள் ஏராளம். 'இசை நிகழ்ச்சி' ஒன்றைக் கல்யாணம் போன்றே செலவுகளைப் பாராமல் நிகழ்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிப்பவர்கள் என்பதற்கு நான் வாழும் சாட்சி. இப்பொழுது கோவிலூர் செல்வராஜன் இலக்கியத்தின் பிறிதொரு பிரிவிலே, தம்முடைய தடத்தினைப் பதிக்கின்றார்.

இலக்கியத்தில் படைத்தல் மட்டுமன்றி பகிர்தலும் இடம்பெறும். பகிர்தல் செப்பமுடன் நடைபெற்றிருக்கா விட்டால், சங்க இலக்கியம் என்கிற சொக்கத் தங்கச் சுரங்கம் நமது சுவைப்புக்குக் கிடைத்திருக்க மாட்டாது. எழுத்தாளனின் நோக்கம், அநுபவம், இலக்கு, திறமை, சார்பு, புகழ், பணம், ஊடகம் ஆகிய ஏதுக்கள் பலவற்றிலே பரம்பல் நிகழும். **'படைப்பிலும் பார்க்க, செறிவான கருத்துகளடங்கிய கட்டுரையை வாசகனின் அனுபவமாக மாற்றுவது சிரம மானது.'** இந்தக் கருத்தினை இன்று தமிழ்நாட்டில் மிகவும் அறியப்பட்ட எழுத்தாளரும், பேச்சாளருமான தமிழருவி மணியன் தன் அணிந்துரையில் முன் வைக்கின்றார். பகிர்தல் மட்டுமே இலக்கியம் என்கிற கருத்து விவாதத்திற்குரியது. ஆனால், பகிர்தலை முன்னெடுப்பதற்கு வாகான வடிவம் கட்டுரை என்பதில் வழக்கும் பிணக்கும் கிடையாது. இதனை உள்வாங்கி, கோவிலூர் செல்வராஜன் 'இல்லாமல் போன இன்பங்கள்' என்கிற இந்நூலினை நிறைவாகவே செய்துள்ளார். மனித அக்கறைகளைப் பரந்துபட்டு உசாவும் அறுபது தலைப்புகளில் நமது அநுபவங்களை அகலிக்கத் தூண்டியுள்ளார். சென்ற நூற்றாண்டின் ஐந்தாம் ஆறாம் தசாப்தங்களிலே அவதானிப்பையும், அக்கறையையும், அநுபவத்தையும், அறிவையும் தூண்டுவதற்கான கட்டுரை கள் ஏராளமாக எழுதப்பட்டன. சஞ்சிகைகள் அவற்றை விரும்பிப் பிரசுரித்தன. இலக்கிய ஆர்வலர்கள் அவற்றைத் தேடிச் சுவைத்தார்கள். இன்று அவற்றைச் சஞ்சிகைகளின் பக்கங்களிலே காணோம். இப்பொழுது கோடம்பாக்கத்துக் கிசுகிசுக்களையும், கொலை - கற்பழிப்பு - ஒழுக்கப் பிறழ்வு ஆகியவற்றை வெளிச்சமிட்டுக் காட்டும் புலனாய்வுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளையும், அதிகாரம் சுகிப்போரை மகிழ்விக்க சோப்புத் தடவுதலையும் விட்டுவிட்டால் வேறு பாடுபொருள்கள் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு இல்லாது போய்விட்டது. இந்நிலையில், செல்வராஜனின் இந்நூல் முயற்சி பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

பகிர்தலுடன் இலக்கியம் நின்றுவிடுவதில்லை என்பது கவனத்திற்குரியது. இலக்கியம் ஆத்ம திருப்திக்கான தேடல். தன்னைப் படைப்பின் தியானத்திலும் தவத்திலும் கரைத்தல். அந்தக் கரைதலிலே எல்லாமே இல்லையாகி நீக்கமற்ற வெறியாக விரியும் சிலிர்ப்பு. அந்த விரல் நொடிப்பு ஆனந்தம் அதுவே இலக்கிய நித்தியத்துவம். **'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடீ'** என்றும், **'உன்கண்ணில் நீர்வழிந்தால் என்நெஞ்சில் உதிரங் கொட்டுதடீ!'** என்றும் பாடியபொழுது பாரதிக்கு அந்த ஆநந்த ஆனந்த சித்தித்திருத்தல் சாத்தியம். சினிமா, பணம் ஆகிய வசதிகளை உடுக்கடித்து 'கவிச்சக்கரவர்த்தி'யாக வலம் வந்தால் அந்த நித்தியத்துவம் வாய்க்கும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. வேதாளங்களை ஈர்த்தெடுக்க வசதி செய்யலாம்.

'வேதாளங்கள்' மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி விட்டன. வெளிநாடுகளில் ஈட்டிய அந்நியச் செலாவணி வசதியினால், தான் 'விஸ்வரூபம்' எடுத்த படைப்பாளியாய் நிவேதிக்கப்படுதல் வேண்டும் என்கிற தற்பற்றுடன், தில்லு முல்லில் ஈடுபட்டு, தமிழ் - ஈழனின் தன்மானத்தினை நிர்வாணப்படுத்தும் கழிசடைகளையே 'வேதாளங்கள்' என்று குறிப்பிடுகிறேன். அவ்வாறு சொல்லும் உரிமை எனக்கு உண்டு. 'பகீரதன்' காலத்து வேதாளத்தை இறக்கிய முதலாவது விக்ரமாதித்தன் நான் என்பது வரலாறு. 'என் மனைவிக்குத் தமிழ் மறந்துவிட்டது; புகலிட நாட்டிலே பொறுக்கிய மொழியிலேதான் கவிதை மழை பொழிகிறது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புளுகுபவனை - 'என் நாவல் இந்தியிலே மொழி பெயர்க்கப்படுகிறது, அதனை அன்னை சோனியா வாசித்து மகிழ்வார்' என்று விரல் சூப்புபவனை - 'என்னுடைய வலைத்தளத்தை வாசிப்பவர் எண்ணிக்கை ஐயாயிரம் தாண்டும்' என்று கூவுபவனை - 'என்னுடைய இரண்டு நாவல்களுக்குப் பிறகுதான் ஏனைய தமிழ் நாவல்களை வரிசைப்படுத்தலாம்' என நாட்டாமை பேசும் தமிழ் முகமற்ற வனுக்குக் கூழைக் கும்பிடு போடுபவனை 'வேதாளம்' என அழைத்தால் வேதாளம் கோபித்துக் கொள்ளுதலே நியாயமாகும். இத்தகைய கேவலங்களினால் ஏற்படும் வலி, அபிமன்யு கொலையால் ஏற்படும் வலி நிகர்த்ததே! இவற்றை மறப்பதற்காகவேனும் 'இல்லாமல் போன இன்பங்கள்' போன்ற நூல்கள் வர வேண்டும்.

கோவிலூர் செல்வராஜன் தன்னுடைய புகழைப் பெருக்கும் சாதனமாக தமது கலை - இலக்கிய ஈடுபாட்டினை மாற்றிக் கொண்டதில்லை. தான் பிறந்த மண்ணையும், தனக்கு பாலூட்டிய தமிழையும், சேவிப்பதற்காக அவர் பெற்றுள்ள கலை - இலக்கிய அனுபவங்களைச் சிரத்தை யுடன் பயன்படுத்துகிறார். முஸ்லிம்கள் வடக்கிலும், தெற்கி லும் செறிந்து வாழவும், மேற்கில் காடும், கிழக்கில் கடலும் சூழ்ந்து தனித்து விடப்பட்டுள்ள பிரதேசத்தின் தமிழ் மணத்தையும், சைவ சேவிப்பினையும் முன்னெடுக்கும் செல்வராஜனின் தொண்டு பல தலைமுறைகளுக்கு நின்று நிலவ வாழ்த்துதும்.

**எஸ்.பொ**

2A Hakea Place
Epping 2121
Australia
☎: 062 - 98685090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. எட்டாக்கனியாக போய்விடுமா?
2. தற்கொலை?
3. ஊருக்கு திரும்பணும் ?
4. மக்களும், சாஸ்த்திரங்களும்...
5. மன அழுத்தம்...
6. "தாக்கத்தியும், வேலைக்காரன்கம்பும்"
7. தமிழா நீ தமிழ் பேசடா....
8. கனவுகண்ட வாழ்க்கை இருந்தும்?
9. குடும்பம் ஏன் பிரிகிறது?
10. ஒப்ர வின்பிரே போல் வருமா?
11. குரங்குக்குணம்....
12. பெற்றோரின் கவனத்திற்கு......
13. நாயும் கறிச்சட்டியுமாக....
14. பூவும்... பொட்டும்...
15. பேராசைப் படாதீர்கள்...
16. உடைந்த உள்ளங்கள்...
17. ஆறாம் அறிவை அரட்டி விடுவோம்...
18. தற்கால தமிழ் சினிமாக்கள்...?
19. உறவுகளில் விரிசல் வேண்டாமே...
20. பாராட்டுதல்...
21. கோவில்கள்...?
22. மனித நேயம்...
23. புத்தகங்கள் படியுங்கள்...
24. அறிவைத்திற... அனைத்தும் புரியும்...
25. தமிழ் மருத்துவர்கள்?
26. நல்ல தமிழ் பேச நாக்கு வராதோ!
27. கிணற்றுத் தவளைகளா நீங்கள்?
28. தலைக்கு மேலே கத்தி
29. சேர்ந்து வாழ்தல்...?
30. சடங்குகள்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. உப்புச்சப்பற்ற உரையாடல்...?
32. உங்கள் குடும்பம் எப்படி?
33. கொச்சையா... பச்சையா... பேசாதீர்கள்...
34. இல்லாமல் போன இன்பங்கள்...
35. இழந்தது ஏராளம்....
36. காதல்... வாழ்வதற்கா? வழுக்கி வீழ்வதற்கா?
37. மூட நம்பிக்கைகளை மூட்டைகட்டுங்கள்...
38. உடன்பிறந்தோரை வெறுக்காதீர்கள்
39. அன்பைத் தேடி அலையும் அப்பாக்கள்...
40. இளமைப்பருவம்... இது நெருப்பாறு?
41. நகைகள் திருடுதல்... ஒரு தொழிலாகிறது?
42. இந்த மானம் கெட்ட தமிழனை என்ன செய்வது?
43. தமிழ் கூறும் நல்லுலகத்தின் வாழ்த்துப்பெறும் இலக்கியர் "எஸ்.பொ"
44. நாக்கு
45. மனம்
46. நன்றி மறப்பது நன்றன்று
47. பொறாமைத் தீயை அணையுங்கள்
48. தன்னடக்கம் உன்னை உயர்த்தும்
49. நட்பை மதித்து நட...
50. உப்பா அது உவர்ப்பா...
51. ஒப்பிட்டுப் பார்த்தல்...
52. உள்ளமும்... உழைப்பும்...
53. உன் வாழ்க்கை... உன் கையில்...
54. வார்த்தைகள்... காயப்படுத்தும்...
55. நவீன கர்ணர்கள் மாறுவார்களா?
56. தூக்கு தண்டனை... மரண தண்டனை...
57. ஒற்றுமை
58. பெற்றோர்கள்...
59. உறவு என்ன ஊறுகாயா?
60. உண்மைகள் உறங்குகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எட்டாக்கனியாக போய்விடுமா?

"கஞ்சியோ கூழோ என்றாலும் குடிச்சிட்டு, ஓட்டையோ உடைசலோ என்றாலும் இருந்திட்டு ஊரோட இருந்திருக்கலாம். எங்கட உசிருக்கு உத்தர வாதம் இல்லை என்றுதான் தாய்மண்ணை பிரிந்து ஏதிலிகளாக அந்நிய மண்ணுக்கு வந்து அடைக்கலம் தேடிக்கொண்டோம். ஆனால் அது இப்போ தப்போ என்று தோணுது" இப்படி விரக்தியாக பல புலம்பெயர்ந்த தமிழர்களும் புலம்புவதை கேட்கமுடிகிறது.

என்ன விடயம் என்று ஆராய்ந்து பார்த்தபோது ஒரு முக்கிய விடயம் முன்வைக்கப்பட்டது. அது என்ன வென்றால், தங்கள் பிள்ளைகளை தங்களிடமிருந்து பிரித்தெடுத்து அரச குழந்தைகள் காப்பகத்தினரிடம் ஒப்படைக்கிறார்கள் அதிகாரிகள் என்றும், தங்களுக்குப் பயமாகவும், என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் சம்பந்தப்பட்டவர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலக நாடுகளில் வாழும் பலதரப்பட்ட புலம்பெயர் மக்களுக்கு, அந்த நாடுகளின் குழந்தைகள் காப்பு சட்டம் பெரிதும் சவாலாக இருக்கிறது. இந்த பராமரிப்பு, காப்பு சட்டங்கள் மிகவும் கவனமாக பேணப்படுவதுடன், கடினமாகவும், கண்டிக்கத்தக்கதாகவும் இருக்கும்.

மேலும் இங்கு தகப்பன் யார் என்று தெரியாமல் அல்லது சொல்ல விரும்பாமல் இருக்கும் ஒரு தாய்க்கும் அவர் குழந்தைக்கும் கூட சிறந்த பராமரிப்பும், பாதுகாப்பும் கொடுக்கப்படும். குடும்பங்களைவிட இவர்களுக்கு சிறப்புச் சலுகைகளும் உண்டு. இப்படி இருப்பதை பலர் பிழையான வழியில், முறையில் பயன்படுத்துவதும் உண்டு. என்ன இருந்தாலும் ஐரோப்பிய நாடுகளிலே குழந்தைகளை கண்டிக்கிறோம் என்று துன்புறுத்தவோ, அடிக்கவோ அல்லது காயப்படுத்தவோ முடியாது. அப்படி செய்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகவும், குழந்தைகளை பெற்றோரிடமிருந்து பிரிப்பதாகவும் இருக்கும்.

பல வெளிநாட்டவர் தங்கள் பிள்ளைகளை அடித்து, துன்புறுத்துகிறார்கள் என்று அறிந்துகொண்ட அதிகாரிகள் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கு பணித்திருக்கிறார்கள், குழந்தைகளை, மாணவர்களை பரிசோதித்து அல்லது விசாரித்து தங்களுக்கு அறிக்கை தரும்படி. இதன்படியே பாடசாலைக்கு செல்லுகின்ற குழந்தைகளின் மேலாடைகளை களைந்து ஏதும் காயங்கள், வீக்கங்கள் இருக்கின்றனவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பார்க்கிறார்கள். அப்படி இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதைவிட இந்தச் சட்டத்தை அறிந்துகொண்ட ஓரளவு வளர்ந்த பிள்ளைகளும்கூட தாய்,தகப்பனிடம் தங்களை கண்டிக்க உங்களுக்கு சட்டமும் இல்லை. அப்படி தண்டித்தால் நாங்கள் உங்களை விட்டு பிரிந்துபோவதை தடுக்கவும் முடியாது என்று பயம் காட்டுகிறார்கள். இதனால் பல தமிழ் குடும்பங்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பதுபோல இருக்கிறார்கள். எங்கே தங்கள் பிள்ளைகள் தங்களை விட்டு போய்விடுவார்களோ அல்லது பிரித்தெடுக்கப்படுவார்களோ என்ற பயத்தில் இருப்பதாக அறியமுடிகிறது.

ஒரு இனத்தின் அடையாளங்களையும், விழுமியங்களையும் தொலைத்துவிட்டு வாழ, ஒரு சந்ததிக்கு இந்த நாடுகளின் இந்த சட்டங்கள் வழிவகுத்து விடுமா என்ற கேள்வி சமூக ஆர்வலர்களிடம் எழுகிறது. பெற்றோர் எப்படி இதைக் கையாளப் போகிறார்கள், என்ற வினாவும் பரவலாக கேட்கப்படுகிறது. தமது கலாச்சாரங்கள், பண்பாடுகள் தங்கள் பிள்ளைகளுக்கு எட்டாக்கனியாக போய்விடுமா, என்ற பயம் இவர்களுக்கு இருப்பதும் உண்மைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கொலை?

ஓர் உயிரினம் தனது உயிரைத் தானே மாய்த்துக் கொள்வது தற்கொலை என்று சொல்லப்படுகிறது. இது ஐந்தறிவு கொண்ட உயிரினங்களிடையே ஏற்படாது. ஆறறிவு கொண்ட மனித இனத்தில்தான் இந்த தற்கொலை இன்று பரவலாகச் செய்யப்படுகின்றது. ஒருவர், சுட்டுக் கொலை செய்யப்பட்டார் வெட்டி அல்லது அடித்துக் கொலை செய்யப்பட்டார். அல்லது கபடத்தன மாக உணவிலோ, பாலிலோ விஷம் வைத்துக் கொலை செய்யப்பட்டார் என்றெல்லாம் கொலைச் செய்திகளை நாம் கேள்விப்படுவதுண்டு. இதைவிட நம் தேசத்திலே அரச படைகள் குண்டு போட்டுக் கொலைசெய்த லட்சக் கணக்கான எமது உறவுகள் பற்றியும் நாம் அறிந்து இருக்கிறோம். இவை எல்லாம் கொலை. ஆனால் தனது உயிரைத் தானே அழித்துச் சாவதற்கு பெயர் தற்கொலை. இது காலம் காலமாக மனித குலத்தில் அரங்கேறிவரும் ஒரு பாதகச் செய லாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் தோல்வி, பரீட்சையில் தோல்வி,கடன் காரன் தொல்லை, வீட்டில் பிரச்சினை, மானபங்கப் படுத்தப்படல் அடைதல் என்று பல காரணங்கள் இந்த தற்கொலைக்குச் சொல்லப்படுகின்றன. இதை விட அதீத குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி என்ன செய்கிறோம் என்று தங்களுக்கே தெரியாத நிலையில் வீம்புக்காக, வெறும் அடாவடித்தனத்துக்கு நஞ்சு குடிப்பது, தூக்குப்போட்டுத் தொங்குவது, தன்னைத்தானே சுட்டுக் கொள்வது, நிறையவே தூக்க மாத்திரைகளை உட்கொண்டு இறந்துவிடுவது என்று பல வழிகளில் இந்தத் தற்கொலை செய்பவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

இவர்களை உண்மையில் சுத்தக் கோழைகள் என்றே உலகம் சொல்கிறது. வாழத் தெரியாத அல்லது வாழ்வதற்கு வழிதெரியாத, வழியைத் தேடாத வடிகட்டிய முட்டாள்கள்தான் இந்தத் தற்கொலையாளர் கள் என்றும் சமூகம் இவர்களைப் பழிக்கிறது.

தற்கொலைகளை நியாயப் படுத்துவதற்கு ஒரு சிலர் முயன்றாலும் அது சட்ட திட்டங்களுக்கு ஒத்துவர மாட்டாது. அதற்கு அனுமதியும் இல்லை. நோய்வாய்ப் பட்டு அதைக் குணப்படுத்த முடியாத நோயாளிக்கு கருணைக்கொலை செய்யவே சட்டம் இலகுவாக இடம் கொடுப்பதில்லை. காரணம் மனித உயிரின் சிறப்பும், மேன்மையும், அதன் முக்கியத்துவமுமே. ஆனால் இன்று பலர் தற்கொலை செய்துகொண்டு இறந்து விடுகிறார்கள். இவர்கள் உண்மையில் கோழைகளே. அதுவும் குடும்ப பந்தத்தில் இருந்துகொண்டு மனைவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை விட்டுவிட்டு அவர்களை மறந்து நடுக்கடலில் விட்டகணக்காக தற்கொலை செய்து சாகிறார்கள். இவர்கள் தங்கள் சாவுக்குப் பின்பு தங்கள் குடும்பம் எப்படித் தத்தளிக்கும் என்று சிறிதும் உணர்வதில்லை. இவர்கள் உண்மையில் சுயநல வாதிகளே. இவர்கள் தங்களைமட்டும் நினைத்து, தங்களின் நலன்களில் கவனம் கொண்டு வாழ்ந்தவர் கள். அந்த சுகத்தைப் பேண முடியாமல் அல்லது தங்கள் நலன்களைக் காக்கப் பொருளாதாரம் பற்றாக் குறையாக வரும் பொழுது மனமொடிந்து சாவைத் தழுவிக்கொள்கிறார்கள். அதிலும் குடிக்கு அடிமை யானவர்கள் பற்றிச் சொல்லவே வேண்டாம். இவர்கள் பிறரை நம்பியே இருப்பார்கள். இவர்களுக்கு மனைவி பற்றியோ, பிள்ளை பற்றியோ எந்தக் கவலையும் கிடையாது.

“குடி குடியைக் கெடுக்கும், குடி உயிரைப் பறிக்கும்” என்பதெல்லாம் இவர்களுக்குப் பிடிக்காத சொல்லாடல்கள். உலகில் தற்கொலை செய்தவர்கள் அநேகர் குடிகாரர்களே. ஒருவேளை நிறையக் குடித்துத் தங்களை மறந்த நிலையில்தான் இவர்களுக்குத் தற்கொலை செய்யத் துணிவு வருமோ என்னவோ.எது எப்படி இருந்தாலும் இந்தத் தற்கொலை என்பது ஒரு கோழைத்தனம். இதை சமூகமோ அல்லது சட்ட, திட்டங் களோ ஏற்றுக்கொள்வதில்லை என்பதைவிட, ஆத்மா வுக்கு செய்யும் துரோகம்,பாவம் என்றும் தற்கொலை செய்ய முயல்வோர் எண்ணித் துணிய வேண்டும் என்பதை இக்கட்டுரை சொல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊருக்குத் திரும்பணும் ?

தாயகத்திலிருந்து தங்கள் மகனின் மூலமாகவோ, அல்லது மகளின் அழைப்பின் நிமிர்த்தமோ புலத்திற்கு வந்து வாழ்ந்துகொண்டிருக்கும் வயோதிபப் பெற்றோர்களுக்கு இப்பொழுதெல்லாம் மனசு மகிழ்ச்சியாக இல்லை என்றும், ஒரு சோகத்தின் சாயல் இவர்களுக்கிடையே இழையோடி இவர்களை காட்டிக் கொடுத்து விடுகின்றது என்றும் அறிய முடிகிறது.

என்ன? ஏது? என்று விசாரித்தால், "எங்களுக்கு இந்தப் புலம் பெயர் வாழ்வு பிடிக்கவில்லை, எங்கள் பிள்ளைகளின் விருப்பத்திற்காகவும், அவர்களின் பிள்ளைகளை அதாவது எங்கள் பேரப்பிள்ளைகளை பார்க்கவேண்டும், அவர்களை வளர்க்கவேண்டும் என்றுதான் நாங்கள் எங்கள் தாய் நாட்டை விட்டு வந்தோம். வந்த புதிதில் ஏதோ ஒரு சந்தோசத்தில் இருந்தோம். அது நீண்ட நாட்களாக எமது பிள்ளைகளைப் பிரிந்திருந்து பின்பு ஒன்று சேர்ந்ததால் கூட இருக்கலாம். என்னதான் வசதி, வாய்ப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இப்போது நாங்கள் மகிழ்ச்சியாய் இல்லை. ஊரில் வீடு, வளவு, முற்றம், வேலி, அடைச்சல், தோட்டம், துரவு சொந்தம் பந்தம்,ஒட்டு உறவு, அயலண்டை அவர்கள் நட்பு மற்றும் கோவில் குளங்கள் என்று இருந்த எங்களுக்கு ஒரு சிறிய அறையில் நான்கு சுவர்களுக்குள் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. நாட்டில் ஏற்பட்ட போரில் நாங்கள் சிக்கி எங்கள் உயிர்கள் போனாலும் பரவா யில்லை என்று இப்போது யோசிக்கின்றோம். அப்படி லட்சக்கணக்காக எம் மக்கள் இறந்தார்கள்தானே, நாமும் அப்படிப் போயிருக்கலாம் என்று தோன்றுகிறது" என்று மிக விரக்தியாகச் சொல்கிறார்கள்.

மேலும் அவர்களை ஏன் அப்படி? நல்லாத் தானே போயிட்டிருந்தது, இப்பமட்டும் என்ன வந்தது? என்று கேட்டால், சொல்கிறார்கள்..." இல்ல, மகன், மருமகள் (அல்லது மகள் மருமகன்) இருவரும் வேலைக்குப் போனபின்பு பேரப்பிள்ளைகளைப் பார்த்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து, பின்பு சமைத்து, வீடு துப்பரவாக்கி பேரன்பேத்திகளைப் பள்ளிக்குக் கொண்டு விட்டு பின்பு போய் கூட்டிவந்து, அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்து, தூங்கவைத்து... இப்படி நாளொன்றுக்கு நாங்கள் படும் பாடு கடும்பாடு. எங்களைப் பார்க்கவே எங்களுக்கு நேரமில்லை.

வேலைக்குப் போனவர்கள் வந்தாலும், அவர்கள் சாப்பிட்டுவிட்டு தங்கள் பாட்டில் டிவியோ அல்லது கொம்பியூற்றரோ பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது படுத்து தூங்குவார்கள். அதுவுமில்லாவிட்டால் அடுத்த வேலைக்குப் போய்விடுவார்கள். அவர்களையும் குற்றம் சொல்லமுடிவதில்லை. காரணம் இங்கு அப்படி இயந்திரமாக வேலைசெய்தால்தான் கட்டுப்படியாகும்.

எல்லாமே பணம்தான். வீட்டு மோட்கேஜ், கரண்ட், தண்ணி, கவுன்சில் டக்ஸ்,டெலிபோன்,காஸ், கார் இன்சுறேன்ஸ், அதற்கு ரோடு டக்ஸ், பெட்ரோல், பேங்க்லோன், பிள்ளைகளின் ஸ்கூல் பீஸ், ட்யூசன்பீஸ், தமிழ் ஸ்கூலில் படிக்க அதற்கு பணம், நுண்கலைகள் கற்க அதற்கு பீஸ், இனி இங்கு நடக்கும் திருமணங்கள், பூப்பு நீராட்டுக்கள், பிறந்தநாள்கள், நன்கொடைகள், கலைநிகழ்ச்சிகள், கைத்தொலை பேசிகளும் அதற்கு டொபப்புகளும் இப்படி ஏகத்துக்கும் பணம், பில் கலாச்சாரம் தான் இங்கு வெகுவாக இருக்கிறது. இதற்காக இருவரும் சம்பாதிக்க வேண்டும். இல்லாவிட்டால் முடியாது என்ற நிலை இங்கு இருக்கிறது. இனி சாப்பாட்டுச் செலவு தனி. ஊரில் என்றால் ஏதோ கிடைக்கிறதைச் சாப்பிட்டு விட்டுப் போகலாம். இங்கு அப்படியில்லையே. ஊர்மரக்கறிகளும் விலை, அங்கிருந்து வரும் மீன்களும் அதிக விலை. இதற்கு எல்லாம் இவர்கள் உழைக்க வேண்டும். அதனால் எங்கள் பிள்ளைகளைப் பார்க்கும் போது மனம் துன்பப்படுகிறது. அவர்களும் எங்களை கட்டுப்படுத்தி பார்க்கவேண்டும் என்று எண்ணவில்லை. தங்களால் முடியவில்லையே, என்றே ஆதங்கப் படுகிறார்கள். இப்படி இவர்களின் துன்பங்களும் எங்களை துயரடையச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இங்கு தனிமைப் பட்டுக்கொண்டோம் என்று ஒரு சாராரும், மற்றொரு சாரார் எங்களுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. குறிப்பாகப் பேரப்பிள்ளைகளின் நடவடிக்கைகள் எங்களுக்கு சுத்தமா பிடிக்கவில்லை. அவர்கள் எங்களை மதிப்பதுமில்லை, பெரிதாக நினைப்பதுமில்லை, சிலவேளைகளில் எங்களை மரியாதைக் குறைவாகவும் அவர்கள் பேசுகிறார்கள். இதை எங்கள் பிள்ளைகள் கூட கண்டுகொள்வதில்லை. இதனால் நாங்கள் மனமொடிந்துபோனோம். மனதில் மகிழ்ச்சி இல்லை. எங்களுக்கு இந்த புலத்து வாழ்க்கை வெறுத்து விட்டது. தலைமுறை இடைவெளி மட்டுமல்ல அதற்குள் பெரிய விரிசல்களே வந்துவிட்டன. எங்கள் மொழியும், அடையாளங்களும் தொலைந்து போய் விட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக பாட்டன், பாட்டி, தாய், தகப்பன், மாமன் மாமி, பெரியப்பன் சித்தப்பன், கூடப் பிறந்த சகோதரர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்ற உறவு முறைகள் கூட இங்கு சோடைபோய்விட்டன. சொந்தக்காரங்களை இங்குள்ள இளையோருக்குத் தெரிவதே இல்லை. சொல்லி புரியவைக்க முயன்றாலும் அவர்கள் அதில் அக்கறையோ, நாட்டமோ பெரிதாகக் காட்டுவதில்லை. இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு எங்களால் இங்கு இருக்க முடியவில்லை. அதனால் கூழோ, கஞ்சியோ குடித்தாலும் எங்கட கடைசிக் காலத்தை எங்கட மண்ணில் கழிக்க விரும்புகிறோம்" என்று சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் புலத்திலே வாழ்கின்ற வயோதிகப் பெற்றோருக்குப் பலவிதங்களில் மனம் பாதிப்பு அடைந் திருக்கிறது. இவர்கள் மேலே குறிப்பிட்ட சில காரணங் களைவிட இன்னும் பல காரணங்கள் இவர்களிடம் மறைந்து கிடக்கின்றன. அதை அவர்கள் நாகரிகம் கருதி இங்கே சொல்லவில்லை. இருந்தாலும் இக்கட்டுரையின் நோக்கம் கருதி அதை நாம் சொல்ல வேண்டும். புலத்திலே பல குடும்பங்களில் பெற்றோரை சுமையாக நினைக்கும் தன்மையும், அவர்கள் காது படவே அவர்களைத் தூசிக்கும் மருமகளோ அல்லது மருமகனோ இருக்கிறார்கள். போதாக் குறைக்கு அவர்கள் சொன்னதுபோல் இந்தப் பேரப் பிள்ளைகளின் அவமதிப்பும், அவர்களைச் சஞ்சலப் படுத்துகிறது. இப்படிப் பல வழிகளில் இவர்கள் மனமொடிந்து போனதால் இவர்களில் பலர் ஊருக்குச் செல்ல விரும்புகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. என்ன இருந்தாலும் “சொந்த நாடு என்றாலே சொர்க்க புரிதான்...” என்ற எனது பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களும் சாஸ்த்திரங்களும்...

நாளையும், கோளையும், சாஸ்த்திரங்களையும், திதிகளையும், இராசிகள், அதன் பலன்களையும், எமகண்டங்கள், இராகு காலங்கள், என்ற வகையறாக்களையும், மற்றும் ஜாதகங்களையும், இன்னும் வாஸ்து சாஸ்திரங்கள், சகுனம் சம்பந்தமான மூடக் கொள்கைகள் என்பனவற்றையும் தங்களகத்தே கொண்டு திரிகிறார்கள் எமது மக்கள்.

எதற்கு எடுத்தாலும் நேரம் பார்ப்பதும், காலம் பார்ப்பதும், சகுனம் பார்ப்பதும், கோவில்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி ஐயர்மாரிடம் இன்று நல்ல நாளா? புதிதாக வீடு வாங்கப் போகிறோம் இன்று வாங்கலாமா? இன்று புதிதாக கார் வாங்கலாமா? வாங்கிய வண்டிக்கு அர்ச்சனை செய்து, பின்பு அதை எலுமிச்சை பழத்தை மிதிக்கப் பண்ணலாமா?

எங்களுக்கு புதன் பார்வை இருக்கிறதா? சனி ஏழரையா? அல்லது அட்டமமா? என்று சாஸ்திரங் களில் மூழ்கி மூட நம்பிக்கைகளில் முடங்கித் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தையும், நேரத்தையும், வாழ்வின் முன்னேற்றத் தையும் மக்கள் இழக்கிறார்கள்.

இவர்களின் இந்த நடவடிக்கைகளினால் அல்லது பலவீனங்களினால், பணம் சம்பாதிக்கும் நோக்குடன் பல ஜோசியர்கள், சாஸ்திரிகள், தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஈழத் தமிழர்கள் வாழும் மேற்குலக நாடுகளுக்குத் தங்கள் சாஸ்த்திர கடைகளை விரித்து வியாபாரம் பண்ணுவதற்கு அதிக அளவில் வருகிறார்கள்.

இவர்களில் பலர் பல யுக்திகளையும் கையாண்டு தங்கள் வியாபாரத்தை பெருக்கிவிடுகிறார்கள். அது எப்படி என்றால்,'' நான்,சூப்பர் ஸ்டார் ரஜினி, உலக நாயகன் கமல், இளைய தளபதி விஜய் மற்றும் அஜீத், சூர்யா, த்ரிசா, நயன்தாரா இவர்களுக்கெல்லாம் சாஸ்த்திரம் பார்த்தவன் என்றும், அரசியல் தலைவர் கள், அமைச்சர்கள் என்று பலரும் எனக்கு வாடிக்கை யாளர்கள் என்றும் சொல்லி அதற்கு ஆதாரமாக புகைப்படங்களையும் காண்பித்து மக்களை தங்கள் பக்கம் இழுத்து விடுகிறார்கள். அந்தப் புகைப்படங்கள் உண்மையா?போலியா? என்பது அவர்களுக்கு தான் தெரியும்.

எப்பொழுதும் தமிழ்நாட்டு சினிமா, சஞ்சிகைகள், பத்திரிகைகளில் மோகம் கொண்ட எம்மக்கள் இவர்களை நம்பி, இவர்கள் விரிக்கும் இந்த வியாபார வலையில் சிக்கி எடுத்ததற்கு எல்லாம் இவர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அல்லது தொலைபேசியில் தொடர்புகொண்டு சாஸ்திரம் பார்த்து பெரும் தொகைப் பணத்தை செலவு செய்கிறார்கள். போதாக் குறைக்கு இணையத் தளங்களும் இந்த சோதிடர்களின் தகவல்களை பணம் வாங்கிக்கொண்டு விளம்பரம் செய்கின்றன.

கைரேகை சாஸ்த்திரம், ஜாதகக் குறிப்புப் பார்க்கும் சாஸ்த்திரம், எண் ஜோதிடம், காண்டம் பார்த்தல், வாஸ்து சாஸ்த்திரம், கிளி ஜோசியம், இராசிபலன் பார்த்துச் சொல்லுதல்,குறிப்பால் உணர்ந்துபார்த்தல், என்று பல சாஸ்த்திரங்கள் இவர்களிடம் கிடைக் கின்றன.

இந்தக் கட்டுரை சாஸ்த்திரத்தைக் கொச்சைப் படுத்தியோ அல்லது அப்படி ஒன்று இல்லை என்றோ சொல்ல எழுதப்படவில்லை ஏனென்றால் புராண, இதிகாசங்கள், மற்றும் திருவிவிலியம் (பைபிள்) போன்ற நூல்களிலும், சாஸ்த்திரிகள் பற்றியும் அவர்கள் திறமைகள் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக மகா பாரதத்தில் பாண்டவர்களில் சகாதேவன் அனைத்து சோதிடக் கலைகளையும் கற்றவன், துரியோதனன் போருக்கு நாள் குறிக்க சகாதேவனையே நாடினான். பைபிளில் மூன்று சாஸ்த்திரிகள் வான சாஸ்த்திரத்தின் மூலம் வெள்ளி களின் திசையை வைத்து இயேசு பிறந்த இடத்தைத் துல்லியமாக கணித்தனர் என்றும் அறிகின்றோம். ஆகவே சாஸ்த்திரம் இருக்கிறது. அதை எப்படி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே, எப்பொழுது, எதற்கு கையாள்வது அல்லது நம்புவது என்பதை அறிந்து கொள்வதுதான் மக்கள் செய்யவேண்டியது.

அதை விடுத்து எல்லாவற்றிற்கும் சாஸ்த்திர சம்பிரதாயம் பார்த்துக்கொண்டு தங்கள் வாழ்வை, தங்கள் முயற்சியை, தங்கள் முன்னேற்றத்தை முடக்கிக் கொண்டு வாழ மக்கள் முற்படக் கூடாது என்பதையும், சோதிடர்களின் சாஸ்த்திரக் கடைகளுக்கு இவர்கள் நிரந்தர வாடிக்கையாளர்களாக மாறிவிடக்கூடாது என்பதையும் சொல்வதே இக்கட்டுரையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன அழுத்தம்...

நோய் என்றும் சொல்லமுடியாது இது நோய் இல்லை என்றும் சொல்ல முடியாது. ஆனால் எம் மக்களிடையே இன்று பரவலாக இந்த உடல் கோளாறு, அல்லது பாதிப்பு பரவலாகக் காணப்படுகின்றது. அதிலும் புலம் பெயர்ந்த எமது மக்களிடையே இந்த பாதிப்பு அதிக அளவில் இருப்பதாக அறியமுடிகிறது. ஆண்,பெண் இருபாலாருக்கும் இந்த மன அழுத்தம் வருவதாக மருத்துவர்களின் அறிக்கையும் சொல்கிறது.

இந்த மன அழுத்தம் வருவதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் பல காரணங்கள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. தாயகத்திலிருந்து வந்து ஒரு அந்நிய தேசத்தில் பல ஆண்டுகளாக வேலையும், உழைப்பும் என்று இருந்துவிட்டு முப்பத்தியைந்து வயசுக்கு மேல் வாழ்க்கை ஒன்றை அமைத்துக்கொள்ளாத ஆண், பெண் இருபாலாருக்கும் மன அழுத்தம் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை ஒன்று கிடைக்கவேண்டும் என்பதற்காக பெற்றோரின் ஏற்பாட்டில் தாயகத்திலிருந்து மேற்குலக நாடுகளுக்கு வரும் பெண்களுக்கு சரியான வாழ்க்கை கிடைக்காதபோது அல்லது நினைத்து வந்தபடி அது அமையாத போது அழுத்தம் மனதில் அண்டிவிடுகிறது. வீட்டில் மனைவி, மக்களுடன் கணவனுக்கு ஏற்படும் பிரச்சனைகள் அல்லது கணவன், பிள்ளைகளுடன் மனைவிக்கு உண்டாகும் ஒவ்வாத, ஒத்துப்போகாத தன்மைகளாலும் ஆளாளுக்கு மன அழுத்தம் வருகிறது.

மற்றும் வேலைத்தளங்களில் பிற இனத்தவர் தங்களை வேறுபடுத்தி, அவமதித்து (discrimination) நடத்துவதன் மூலமும் பலர் மன அழுத்தம் அடைந்து அவதிக்குள்ளாகிறார்கள். இன்னும் அளவுக்கதிகமான கடன் தொல்லையால் சிலர் இந்த மன அழுத்தத்திற்கும் ஆளாவதுண்டு. இன்னும் சொல்லப்போனால் எல்லா வசதிம், வாய்ப்புகளும் இருந்தும், ஏதோ ஒரு வகையில் அமைதி இல்லாமல் போகும்போது பலரை இந்த மன அழுத்தம் ஆட்கொள்கிறது.

எம்மிடையே சிலருக்கு வித்தியாசமான முறையிலும் இது வர எத்தனிக்கிறது. அது என்னவென்றால் மற்றவர்களைப் பார்த்து பொறாமையும், எரிச்சலும் பட்டு, உள்ளம் புழுங்கும் போது இந்த மன அழுத்தம் வந்து ஒட்டிவிடுகிறது.

இப்படி பல வழிகளில் வரும் மன அழுத்தத்தினால் எம்மவர் மிக பாதிப்படைகிறார்கள். மருத்துவரையோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் நிபுணரையோ இவர்கள் நாடுவதில்லை. மாறாக உற்சாகம் இழந்து, சோர்வடைந்து எப்பொழுதும் காணப்படுவார்கள். நாளடைவில் இவர்களுக்கு வேறு நோய்கள் வந்து நொந்து நொடிந்து போகிறார்கள்.

இவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். முறையான மருத்துவ பரிசோதனை செய்யவேண்டும். ஒரு மன நல மருத்துவரை நாடவேண்டும். அவர்களின் ஆலோசனைப்படி நடந்து இந்த மன அழுத்தத்தில் இருந்து இவர்கள் வெளிவந்து ஒரு சாதாரண இயல்பு வாழ்க்கைக்குள் வரவேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

மக்களே! மாறுங்கள். வாழ்வில் மணம் கண்டிப்பாக வீசும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தாக்கத்தியும் வேலைக்காரன் கம்பும்"

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று சொல்லி, ஆனைகட்டி போரடித்த" காலம் ஒன்று உண்டு என்று சொல்வார்கள்.

"போரடித்தல்" என்பது விளைந்த வேளாண் மையை அறுவடைசெய்து, ஒரு மேட்டுநிலத்தில் பக்கு வமாக குமித்து அதை மாடுகள் கொண்டோ, அல்லது யானையைக்கொண்டோ மிதிக்கப்பண்ணி நெல்மணிகள் வேறாகவும், வைக்கோல் வேறாகவும் பிரிப்பதே ஆகும். நூற்றாண்டு காலங்களுக்குமுன் இந்த முறை பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் காலப்போக்கில் இது மாறியது கைவிடப்பட்டது.

இலங்கை ஒரு விவசாய நாடாக மாறியபோது உலக அளவில் விவசாய விஞ்ஞானம் மேலோங்கி இருந்தது என்று சொல்லலாம். இதனால் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் விவசாயத்திற்கு என்று ஓர் அமைச்சு, ஒரு திணைக்களம் என்று அமைக்கப்பட்டது. கமத்தொழில் திணைக்களத்தின் புதிய வரவால் நவீன விவசாய உபகரணங்கள், புதிய உரவகைகள், பூச்சிகொல்லி கள், அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய புதிய நெல் இனங்கள் என்பனவற்றை அறிமுகம் செய்தது. இவற்றைப் பயன்படுத்தி விவசாயப் பெருமக்கள் நல்ல விளைச்சலையும், வருமானத்தையும் பெற்றார்கள். பெரும்போகம், காலபோகம் என்று வேளாண்மை செய்கை பண்ணினார்கள்.

நீர்பாசன வசதி உள்ளவர்கள் இரண்டு போகமும் பயிரிட முடிந்தது. பாசனவசதியற்ற வயல் களைக்கொண்ட விவசாயிகள் மழையை நம்பியே விதை விதைத்தார்கள். இலங்கையில் நெற்சாகு படியை கிழக்கு மாகாணமே எண்பது சதவீதம் பூர்த்தி பண்ணுகிறது. வாகரை தொடங்கி பாணமை வரை நீண்டு பரந்து கிடக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் விவசாயத்திற்கு பயன்படுத்தப் படுகின்றது. பச்சைப் பசேலென்று எங்கும் வயல் வெளிகள். எழுவான்கரை, படுவான்கரை என்று ஊரின் மையத்தைக்கொண்டு பிரித்து இரு பகுதிகளிலும் வேளாண்மை பயிரிட்டு நாட்டின் அரிசித்தேவையை பெருமளவு பூர்த்தி செய்வது கிழக்கு மாகாணமே என்று சொல்லலாம். நாட்டில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்திற்கு முன்புவரை கிழக்குமாகாண நெற்சாகுபடி மிக நன்றாகவே இருந்தது. ஊர்களில் நிறைய உழவு இயந்திரங்களும், ஏராளமான எருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுவண்டில்களும் பயன்பாட்டுக்கு இருந்தன. ஒரு காலத்தில் இலங்கை புள்ளிவிபரப்படி அதிக அளவு உழவு இயந்திரங்களைக்கொண்ட ஊராக அக்கரைப்பற்று இருந்திருக்கிறது.

அறுவடைக்காலம் தொடங்கினால் ஊர்களே செஞ்சளித்துப்போய் ஒரு களை கட்டிவிடும். உழவு இயந்திரங்களின் இரைச்சல்களும், வண்டில்களின் சத்தமும் விவசாயிகளின் ஆரவாரமும், நடமாட்டமும் இருக்கும். அறுப்பு, கட்டு, சூடுவைப்பு, சூடுமிதிப்பு, தூற்றல், அவணக்கணக்கில் அளந்து கட்டுதல் என்று ஊர்களே ஒரே வேளாண்மை வாசமாக இருக்கும்.

ஆனால் இப்பொழுது அந்த அமர்க்களத்தையும், ஆரவாரத்தையும் அங்கு காண முடியவில்லை. நீண்ட கால இடைவெளிக்குப்பின் இம்முறை நான் ஊருக்கு சென்றேன்.காலபோக அறுவடைக்காலமாகவும் அது இருந்தது.

இந்தக்கட்டுரை எழுதுவதற்கு என்னை உந்திய விடயம் அங்கு விவசாயிகளிடமும், விவசாய நாட்கூலிகளிடமும் காணப்பட்ட மாற்றங்களே.

அன்று வயல் விளைந்து அறுவடைக்கு தயாரான பின்பு "புதிரெடுத்தல்" என்று சொல்லி வயலில் எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும் புற்றடியிலோ அல்லது மரத்தடியிலோ ஒரு தென்னங்குருத்தை கிழித்துக்கட்டி விளைந்த நெற்கதிர்களில் ஒரு கைப்பிடி உடைத்தெடுத்து அதை அரிசியுடன் கலந்து பொங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் அடுத்த ஒரு நல்ல நாள் பார்த்து அறுவடையை தொடங்குவார்கள். வயலில் எட்டுப்பத்து பேர் நின்று ஆளாளுக்கு இரண்டுபங்கோ, மூன்றுபங்கோ வெட்டிவிட்டு அடுத்தநாளும் வந்து வெட்டுவார்கள்.

அதன் பின் உப்பட்டி பிரட்டி, கூட்டிக்கட்டி, சூடுவைத்து அழகுபார்ப்பார்கள். அடுத்த ஒரு வாரத்தில் நல்ல வெயில்நாளில் உழவு இயந்திரம் கொண்டு சூடு போடுவார்கள். இதனால் பலருக்கு தொழிலும், வருமானமும் கிடைத்தது.

இன்று அங்கு என்ன நடக்கின்றது? வயல் தொழிலாளிகளின் தாக்கத்தியும், வேலைக்காரன் கம்பு துருப்பிடித்தும் ஒட்டடை படிந்தும் கிடப்பில் கிடக்கிறது. இவர்கள் சோர்ந்து போய், சோக மாக ஊரில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. அவர்களிடம் பேச்சுக்கொடுத்த போது விரக்தியாக பேசுகிறார்கள். ஒரு வயல் சொந்தக்காரன் ஒரு நாளில் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடுகிறான். இதற்கு காரணம் அறுவடை இயந்திரம். வயல்களிலும், வீதிகளிலும் அறுவடை இயந்திரங்கள். எல்லா வேலைகளையும் இது செய்துவிடுகிறது. இது தற்போதைக்கு ஒரு விவசாயிக்கு இலகுவாகவும், லாபகரமாகவும் இருந் தாலும் முன்பு இருந்த ஒரு குதூகலம் இல்லை என்றே சொல்லவேண்டும். இதைவிட எனக்கு மனதை தொட்ட விடயம் என்னவென்றால்... ஊரில் உள்ள விவசாயிகள் எதையோ இழந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் இந்த அறுவடை இயந்திரங்களைப்பார்த்து பெருமூச்சு விட்டதுதான்.

இந்த சூழ்நிலையில் இவர்களை நினைத்து, இவர்களில் ஒருவனாக என்னை நான் கற்பனை செய்துகொண்டு எழுதிய பாடல் ஒன்றை பதிவு செய்கிறேன்.

வேலகாரன் கம்பு மில்ல....
வெள்ளாம கயிறுமில்ல ...
களவட்டி பொங்கல் இல்ல-வயலில்
கதிரு பொறுக்க பெண்கள் இல்ல ..
காலம் மாறி போச்சி கந்தப்பா...நம்ம
கோலம் மாறி போச்சி..கந்தப்பா ...

ரெண்டுபங்கு மூண்டுபங்கு
வெள்ளாம வெட்டின கைடா....
உப்பட்டி கூட்டிக் கட்டி..
கட்டுக்கட்டாய் கட்டின கைடா...
சூடு வைச்சி அழகு பார்த்து,,
கத்தைகட்டி முடியும் வைச்சி

முடியிலொரு கொடியும் பறக்க விட்டோம் கந்தப்பா
சூட்டு அடியை சுற்றி வலமும் நாம வந்தோம் கந்தப்பா
இன்று இடிவிழுந்த கதையாய் போச்சே ஏன்டா கந்தப்பா.....

அவுரியில ஏறிநின்று....
கைப்பெட்டி பிடிச்ச கைடா..
அரண்டரண்டு காத்தடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக தூத்தின கைடா...
கொம்புகட்டி..முறிச்சித்தூத்தி..
சாக்கெடுத்து அளந்துகட்டி...
மூடைகளாய் அடுக்கிப் போட்டோம் கந்தப்பா
இன்று முதுகிலதான் குத்திப்போட்டார் கந்தப்பா
அறுவடை மெசினக்கொண்டு மடுத்துப்போட்டார் கந்தப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழா நீ தமிழ் பேசடா....

தாயின் கருவில் நாம் இருக்கும் போதே காது கொடுத்து கேட்கும் மொழி நம் தாய் மொழி. தாயைப் புறக் கணிப்பதும், தாய் மொழியை புறக் கணிப்பதும் மனிதர்கள் செய்யும் பாவங்களில் மன்னிக்க முடியாத பாவமாகும். இனிமையும், நீர்மையும் நிறைந்த தமிழ் நம் தாய் மொழியாக வாய்த்தது நமக்கு கிடைத்த மாபெரும் வரம்.

ஒரு இனத்தின் தொன்மையான நாகரிகத்தை யும், பண்பாட்டு விழுமியங்களையும் வாழையடி வாழையாக வளர்த்தெடுப்பதும், அடுத்துவரும் தலை முறைக்கு தோள் மாற்றுவதும், அந்த இனம் அழியா மல் காத்துவரும் தாய்மொழி ஒன்றுதான், மொழி அழிந்தால் ஒரு இனத்தின் முகம் அழியும். மொழி தொலைந்தால் கடலில் கலந்த நீர்த்துளியாய் ஒரு இனத்தின் தனித்துவம் மிக்க அடையாளமும் தொலைந்துபோகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்கள் இதை உணரவேண்டும், எத்தனையோ தடவைகள் மேடைகளிலும், ஊடகங்களிலும் எமது தமிழ் மொழியின் அவசியம் பற்றியும், அதை பெற்றோர் கள் பிள்ளைகளிடம் எடுத்து சொல்லி அவர்களிடம் தமிழ் படிப்பதற்கும், பேசுவதற்கும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் சொல்கிறார்கள். இதை எத்தனை பேர் கேட்டு அல்லது உணர்ந்து செயல்படுத்துகிறார்கள்? இன்னும் பலர் ஆங்கிலத்திலும், மற்றும் பிறமொழிகளிலும் தான் பேசுகின்றார்கள்.

குறிப்பாக புலத்தில் உள்ள தமிழ் பாடசாலை களில் கூட பிள்ளைகள் பிறமொழிகளில் தான் பேசு கின்றார்கள். லண்டனிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு நான் சிலசமயம் நடுவராக அழைக்கப்பட்டு செல்வ துண்டு. அங்கே நான் அவதானித்திருக்கிறேன் பிள்ளை கள் ஆங்கிலத்தில்தான் பேசுகின்றார்கள். சில ஆசிரியர் களும் இந்த தவறை செய்கிறார்கள்.

நேரே நான் கேட்டிருக்கிறேன் ஏன் இப்படி செய்கிறீர்கள்.? தமிழ் சொல்லிக்கொடுக்கும் – கற்றுக் கொடுக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு திரிந்தால் பிள்ளைகள் எப்படி தமிழ் படிப்பார்கள், எப்படி தமிழ் பேசுவார்கள் என்று. அது அப்படித்தான் நடக்கிறது. அவர்கள் தமிழ் பேச விரும்புகிறார்கள் இல்லை. அல்லது பேச வருகுதில்லை. என்று சாக்குப்போக்கு சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலை மாறவேண்டும். கிழமை நாட்கள் தவிர்ந்த விடுமுறை நாட்களில் நடக்கும் தமிழ் பள்ளிக்கூடங்களில் தமிழ் கட்டாயமாக பேசப்பட வேண்டும், என்ற நிலைப்பாட்டை நிர்வாகத்தினர் கொண்டு வரவேண்டும். தமிழ் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் தமிழிலே மட்டும் பேசவேண்டும் என்ற விதியை கொண்டுவந்து அதை நடைமுறைப்படுத்த நிர்வாகம் ஆவன செய்ய வேண்டும், மற்றது, வீட்டில் என்ன நடக்கிறது? பல வீடுகளில் தமிழ் பேசப்படுவதில்லை. இதில் என்ன கொடுமை என்றால், நன்றாக தமிழ் பேசக்கூடியவர்கள் கூட, ஊரில் தமிழ் படித்து வந்தவர்கள்கூட தமிழை பேசுவதில்லை. இவர்கள் பேசுவதை கேட்கும்போது நெஞ்சு வெடிக்கும்.

உலகத்தில் எந்த ஒரு இனத்தவனும் செய்யாத, செய்ய விரும்பாத இழிசெயலை தமிழன் மட்டுதான் செய்கிறான். இதில் என்ன பெருமையும் உயர்வும் இவனுக்கு வந்ததென்று அவனுக்குமட்டும்தான் தெரியுமா? அல்லது அவனுக்கே தெரியாதா? என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவுகண்ட வாழ்க்கை இருந்தும்?

எங்கள் மக்கள் மனங்களில் ஏறக்குறைய எழுபதுகளின் காலப்பகுதியில் ஒருவிதமான ஏக்கங் களும், கனவுகளும் இருந்தன. தாயகத்தில் அநேகமான மக்கள் நடுத்தர வகுப்பினைச் சேர்ந்தவர் களாக இருந்தார்கள். நவீன தொழில்நுட்பத்தின் ஆரம்ப காலம் எமது தேசத்தில் தலை தூக்கி இருந்தது.

தொலைக்காட்சிகள் கூட எண்பதுகளின் ஆரம்பத்தில்தான் எம்மக்கள் வீடுகளில் பரவலாக பாவனைக்கு வந்திருந்தது. இதைக்கூட பரம்பரைப் பணக்காரரும், வசதியுள்ளவர்களும், வர்த்தகப் பெருமக்களும்தான் வாங்கி சந்தோசப்பட்டார்கள். ஒரு ஆசிரியனுக்கோ, ஒரு எழுதுவினைஞனுக்கோ, அல்லது ஒரு சாமானியனுக்கோ இவற்றை வாங்கி நுகர்வதற்கு முடியவில்லை. அவர்களது வருமானம் வாழ்க்கையை ஓட்டுவதற்கே பற்றாக்குறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது., மனசுக்குள் ஏக்கமும்சோகமும் இவர்களுக்கு இருந்ததோடு, தங்களுக்கு இந்த ஆடம்பரப் பொருட்கள் எல்லாம் வெறும் கனவுதானா என்ற கேள்வியும் இருந்தது.

அத்தோடு அந்தக் காலப்பகுதி மிக கடுமை யான காலமாகவும் இருந்தது. நாட்டின் அசாதாரண நிலைமையும், போர்மேகங்கள் சூழ்ந்த ஒரு கால மாகவும், அது இருந்ததை நாம் மறுப்பதற்கு இல்லை. நடுத்தர வகுப்பு மக்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்ட காலப்பகுதியாகவும் எண்பதுகளின் ஆரம்பம் இருந்தது. பலர் நாட்டைவிட்டுப் பக்கத்து நாட்டிற்கும், தூர தேசங்களுக்கும் குடும்பத்துடன் பயணித்த காலம் என்றும் அதைச் சொல்லலாம். குடும்பமாகப் பயணப்பட முடியாதவர்கள் தங்கள் வளர்ந்த பிள்ளைகளையாவது நாட்டைவிட்டு அனுப்பிவிடவேண்டும் என்று முனைப் போடு இருந்து, பயண முகவர்களையும், மற்றும் வேறு வழிகளையும் நாடி நின்ற காலமது என்றும் சொல்லலாம்.

அந்தச் சூழ்நிலையில் நாட்டை விட்டு வந்த மக்கள் உலகின் பல பாகங்களிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலிய போன்ற நாடுகளுக்கு சிதறுண்டார்கள். ஏதிலிகளாகவே பல ஏக்கங்களுடன், எதிர்பார்ப்புகளுடன், எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கேள்வியுடன் வந்த இவர்கள் உண்மையில் கடினமான வாழ்க்கையைத்தான் ஆரம்பத்தில் அனுபவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, உடை, மொழி, கலாச்சாரம், தட்பவெப்ப நிலை, போன்ற காரணிகளை இவர்கள் எதிர்கொண்டு, அவற்றை அந்த நாட்டுக்கு ஏற்றபடி அனுசரித்துப் போக வேண்டிய ஒரு கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. பனியும்,குளிரும், பல்லின மக்களின் வாழ்க்கைமுறை இவர்களுக்கு பரீட்சயமில்லாததால் பல காலம் எடுத்தது எமது மக்களுக்கு அவற்றைப் பழக்கப் படுத்திக் கொள்வதற்கு என்பதே உண்மையாகும்.

ஊரில் நல்ல நிலையிலும், உத்தியோகத்திலும் இருந்த பலருக்கு இந்தச் சிதறிய வாழ்க்கை ஜீரணிக்க முடியாததொன்றாகவும், தங்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக தள்ளிவிட்டதாகவும் நினைத்து வருந்தி னார்கள். ஆனால் காலப்போக்கில் புலம் பெயர்ந்ததின் நோக்கமும், எஞ்சிய காலத்தின் வாழ்தலும் இவர் களுக்குப் புரிதலை ஏற்படுத்தத் தங்களை மாற்றிக் கொண்டு பிறமொழியைப், புதிய வாழ்வியலை கற்றுக் கொண்டு, தங்களின் கடின உழைப்பின் மூலம் தங்கள் வாழ்க்கையை வளம்படுத்திக்கொண்டார்கள்.

தாயகத்தில் மத்திய வகுப்பினராக இருந்து கஷ்டப்பட்டவர்கள், கனவுகண்டவர்கள் வாழ்க்கை இன்று கைகூடி நிற்கிறது. கண்ட கனவுகள் எல்லாம் கண்முன்னே நிற்கிறது. அருள் இருக்கிறது, பொருள் இருக்கிறது, ஆடம்பர வாழ்வு இருக்கிறது, கார் இருக்கிறது, வீடு இருக்கிறது, காசு இருக்கிறது ஆனால் இவர்களுக்கு அமைதியும், ஓய்வும், நிம்மதியும் இருக்கிறதா என்றால் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வாழும் நோக்கம் பணம் பண்ணுவதா? என்று கேட்கும் அளவிற்கு இரவுபகலாக ஓர் இயந்திர வாழ்க்கைக்குள் தங்களை உட்படுத்திக்கொண்டு உழைக்கத் தொடங்கினார்கள். தாயகத்தில் பட்டு வந்த கடன்கள் அடைக்கப்பட்டன. அங்குள்ள உறவு களுக்கும் பணம் அனுப்பி அவர்களையும் பார்த்துக் கொண்டார்கள். இவர்கள் கனவுகண்ட வாழ்க்கை கண்முன்னே நிற்கிறது ஆனால் இவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? என்றால் இல்லை.

இவர்கள் பிள்ளைகள் பிறமொழிகளில் கல்வி கற்று, அந்தந்த நாட்டுக் கலாசாரத்தை பின்பற்றிக் கொண்டு தமிழ் பண்பாட்டினை மறந்து, அல்லது அது பற்றி தெரியாமல் வளர்ந்து, தமிழ் அடையாளங்களை தொலைத்து, உண்மையான அன்பை, பாசத்தை, வெளிப்படுத்த, அல்லது புரிந்துகொள்ளத் தவறி, பல தவறான பாதையில் நடக்கவும் தொடங்கிவிட்டார்கள். பெற்றோர்கள் உடைந்து போனார்கள். அன்று இவர்கள் ஓடியோடி உழைத்துத் தங்களின் கனவு வாழ்க்கையை நனவாக்கினார்கள்.

இன்று இடிந்துபோய், ஒடிந்துபோய் இருக் கிறார்கள். பலருக்கு மன அழுத்தம், மனச்சோர்வு, வந்துவிட்டது. விடுப்பு எடுத்துக்கொண்டு எங்கேயாவது பயணிக்கிறார்கள். பல குடும்பங்களில் உண்மையான அன்பு இல்லை. கணவன், மனைவிக்குள்ளும் இல்லை, பெற்றோர், பிள்ளைகளுக்குள்ளும் இல்லை. இவர்கள் கனவு கண்ட வாழ்க்கை கண்முன் இருந்தும் சந்தோ சமாக இருக்கிறார்களா? இல்லவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மியில் அரைத்தெடுக்கும் சரக்குக்குப் பதிலாக உடனடி மசாலாத் தூள், துரத்திப் பிடித்து அறுத்த நாட்டுக் கோழிக்குப் பதிலாக எப்போதோ பொதி செய்யப் பட்ட குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சி, இயற்கையாக விளைவிற்கப்படும் காய்கறிகளுக்கு பதிலாக, மருந்தூட்டி வளர்க்கப்பட்ட காய்கறிகள், கைக்குத் தரிசிக்கு பதிலாக பாசுமதி அரிசி, மற்றும் எல்லாமே உடனடி பாவனை பொருட்கள் என்று சமையல் அறை யில் நிறைந்துபோய்க் கிடக்கின்றன. இதெல்லாம் உடல் நலத்திற்கு உகந்ததா? கண்டிப்பாக இல்லை. கனவு கண்ட வாழ்க்கை கண்முன்னேதான் நிற்கிறது ஆனால் எம் மக்கள் எப்படி இருக்கிறார்கள்? பதில் நீங்கள்தான் சொல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பம் ஏன் பிரிகிறது?

இன்று தமிழ் குடும்பங்களில் ஆத்மார்த்தமான அன்பு, உண்மைத்தன்மை, பாசம், நேசம் எல்லாம் இல்லாமல் போய்விட்டது, அல்லது வெகுவாகக் குறைந்துவிட்டது என்று பல குடும்பங்களின் நடவடிக்கைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

கடவுள் மனிதர்களைப் படைத்தபோது அவர்களை ஆண், பெண்ணாகவே படைத்தார். இதன்பிரகாரமே ஒருவன் தன் தகப்பன், தாயை விட்டு வேறு ஒரு பெண்ணுடன் சேர்ந்து இருப்பதற்காகவே திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்திக்கொள்கிறான்.

"திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்..." "திருமணம் சொர்க்கத்தில் நிட்சயிக்கப் படுகிறது" என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் அதெல்லாம் அந்தக்காலம், அந்தக் கருத்துகளெல்லாம் இன்றைய திகதிக்கு மாறிவிட்டது. இப்போது "ஆசை அறுபது நாள், "மோகம் முப்பது நாள்" என்று ஆகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சொலப்போனால் "ஒருநாள் கூத்து" என்றும் பேசப்படுகின்றது.

இன்று அநேக தம்பதியினர் அழகும், கவர்ச்சியும் இருக்கும்வரை, அல்லது பிரச்சினைகள் முளைக்கும் வரைதான் அன்பாக, பாந்தமாக இருக்கிறார்கள். சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கே இன்று சில குடும்பங்கள் பிரிகிறார்கள். ஏன் விவாகரத்துவரை போய்விடுகிறார்கள். இவர்களின் இந்தச் செயலால், இவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், அவர்கள்தான் பாதிப்புக்குள்ளாவர்.

இதை ஏனோ இவர்கள் உணர்வதில்லை. இந்தக் குடும்பங்களில் பிரச்சினைகள் வருவதற்கு என்ன காரணம்? ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாத தன்மை, தன்னலம், சம உரிமை, சரிநிகர் சம்பாத்தியம், கல்வித்தகமை, அறிவார்த்தமான வெளிப்பாடு இல்லாமை, போன்ற காரணிகளால் கணவன் – மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் மனப்பொருத்தமில்லாத தன்மை, எதற்கெடுத்தாலும் எதிர்த்தல், குதர்க்கமாகப் பேசுதல், குறை சொல்லுதல், அன்பற்ற உபசரிப்பு, சுயநலப்போக்கு, பிள்ளைகளை சரிவர வளர்க்காத முறைமை, (இதில் தாயின் பங்கு மிக முக்கியம்) என்பன குடும்பங்கள் திருமண வாழ்க்கையில் வெற்றிகாண முடியாமல் போவதற்கு வழிவகுக்கின்றன.

எங்கே இவர்கள் பிழை விடுகின்றார்கள்? எங்கே தவறுகின்றார்கள்? என்றால்.. கணவன், மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தருக்கொருத்தர் உண்மையாக இல்லாமை. இதுவே திருமண பந்தத்தை முறிக்கும் முக்கிய எதிரியாகும். பாலியல் முறைகேடு. அதாவது துணை அல்லாதவரோடு கள்ளத்தொடர்பு கொள்ளுதல். இது ஏற்படக்காரணம் என்ன? தாம்பத்தியத்தில் திருப்தி இல்லாத தன்மையே. சிலர் பணம் சம்பாதிப்பதும், பொருள்பண்டம் சேர்ப்பதும்தான் வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டு தாம்பத்தியத்தில், மனைவியை திருப்திப்படுத்துவதில் கோட்டைவிட்டு விடுகிறார்கள். இதனால் தவறு நடக்கிறது. இது குடும்ப வாழ்க்கையில் மிக முக்கியமான விடயம் என்று பல கணவர்மார் எண்ணுவதில்லை. திருவிவிலியத்தில் ஒரு வசனம் இருக்கிறது. "கணவன் மனைவிக்கு செலுத்தவேண்டிய கடனை செலுத்தவேண்டும்" அதாவது தாம்பத்தியக் கடனை அவன் செலுத்த வேண்டும். அதேபோல் மனைவியும் செலுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்று எமது சமூகத்திலே அதுவும் தாயகத்தை விட்டு, புலம் பெயர்ந்து வாழும் எம்மவரிடையே இந்த பிரச்சினை நிறைய இருக்கின்றன. பல தவறுகள் நடந்து, குடும்பம் பிரிவுண்டு நடுத்தெருவுக்கு வந்திருக்கிறது. இன்னும் சில காரணங்கள் இருக்கின்றன குடும்பங்கள் சிதறுண்டு போவதற்கு. அவை என்னவென்று பார்த்தால், சில ஆண்கள் மனைவியை அடிமையாக, ஒரு வேலைக்காரியாக நடத்துதல், மனைவியை மதிப்பதில்லை, ஒரு தீர்மானம் எடுக்கும்போது மனைவி யின் கருத்தை கேட்காது அவரை ஒதுக்குதல், அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் சில மனைவிமார் கணவரை மதிப்பதில்லை, எப்போதும் ஏட்டிக்குப் போட்டியாக இருப்பது, குடும்பத்தில் சமாதனத்தைக் கட்டிக்காக்க முயல்வதில்லை, கணவருக்குக் கட்டுப்பட்டு நடப்பதில்லை, கணவரின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுதல், பிறர் மத்தியில் கணவரைத் தரக்குறைவாக, தாழ்வாக பேசுதல் போன்ற விசயங்களும் கணவன் மனைவியை வெறுத்து ஒதுக்க ஏதுவாக அமைந்துவிடுகின்றன.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் குடும்பங்களில் நடப்பதால்தான் பல குடும்பங்களில் சூறாவளி வீசி விடுகின்றது. அதைத்தொடர்ந்து சுனாமியே வந்தது போல் குடும்பம் பிரிகிறது. இதை எப்படிச் சரி செய்து கொண்டு வாழ்க்கையை வசந்தமாக்குவது? என்று பிரச்சினைக்குரியவர்கள் யோசிப்பார்களா? என்றால் அதுவும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

“இதெல்லாம் படிக்க, கேட்க நல்லாகத்தான் இருக்கும், ஆனா, இந்தக்காலத்துக்கு ஒத்துவருமா? எங்களுக்கு பிடிக்கவில்லையென்றால் தூக்கி எறிந்து விட்டு போயிட்டே இருப்போம், பிடிக்காத ஒருவருடன் நாங்கள் வாழவேண்டும் என்ற அவசியம் எங்களுக்கு இல்லை.” என்று சொல்பவர்களும் எம்மிடையே இருக்கிறார்கள். அவர்கள் கருத்து, அல்லது வாதம் இன்றைய நாகரிக உலகில் ஏற்புடையதுதான்.

ஆனால், அன்பான குடும்பம், அளவான குடும்பம், நாகரீகமான குடும்பம் சமூகத்தில் மதிப்பும், மரியாதை யும் உள்ள குடும்பம், மற்றவர்களுக்கு உதவுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம், அயலவரை நேசிக்கின்ற குடும்பம், பண்பாடு உள்ள குடும்பம், சமாதானத்தை விரும்புகின்ற குடும்பம், ஆபத்தில் உதவுகின்ற குடும்பம் என்றெல்லாம் பிறர் பேசும்படியாக வாழும் ஒரு குடும்பமாக ஏன் நீங்கள் இருக்கக் கூடாது? ஏன் உங்கள் குடும்பம் மாறக்கூடாது? என்பதை கொஞ்சம் யோசித்தால் நல்லது நடக்குமல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒப்ர வின்பிரே போல் வருமா?

இன்றைய திகதிக்கு தொலைக்காட்சி என்பது உலகின் சகல இன மக்களிடமும் ஒரு தவிர்க்க முடியாத சாதனமாக இருக்கிறது. 1920களில் இது உலகில் பாவனைக்கு வந்தாலும் எங்களுக்கு 1970 களில் தான் இதன் பயனை முழுதாகப் பெறமுடிந்தது என்று சொல்லலாம். இப்பொழுதெல்லாம் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு இதன் பாவனை பெருகி இருக்கிறது.

நாள் முழுதும் வேலைப்பழுவால் அலுத்துக் களைத்து வருபவர்களுக்கு ஒரு ஆறுதல் தரக்கூடிய பொழுதுபோக்குச் சாதனமாக தொலைக்காட்சி இருக்கிறது. இன்று எத்தனையோ தொலைக்காட்சி நிறுவனங்கள் 24 மணி நேரமும் தங்களது ஒளிபரப்பு சேவையைச் செய்கின்றன.

திரைப்படங்கள், பாடல்கள், மருத்துவம், வரலாறு, சமய நிகழ்ச்சிகள், உலகச் செய்திகள், உள்ளூர் செய்திகள், நாட்டியங்கள், நகைச்சுவைகள், நாடகங்கள், பட்டி மன்றங்கள், நேர்காணல்கள், நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கள், என்று ஒரு நீண்ட பட்டியலே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மேற்குலக நாடுகளில் இடம்பெறும் பல நிகழ்ச்சிகளைத் தழுவி அல்லது பிரதி செய்து அதேபோல் அதி விருப்பத்திற்குரிய (reality show) நிகழ்ச்சிகளை போட்டிபோட்டுக்கொண்டு நடத்துகின்றன. குடும்ப பிரச்சினைகள், இளையோர் தடம்மாறல்கள், அதற்கான தீர்வுகள், போன்ற சமூக அக்கறை கொண்ட நிகழ்ச்சிகளையும் இவை ஒளிபரப்புகின்றன. ஆனால் இந்த நிகழ்ச்சிகள் தரம் வாய்ந்தவையா? என்பதே கேள்வியாக இருக்கிறது.

அமெரிக்கத் தொலைக்காட்சியில் முன்பு மிகப் பிரபல்யம் பெற்ற ஒரு நிகழ்ச்சி (OPRAH TALK SHOW) இதை 20 வருடங்களாக தொடர்ச்சியாக நடத்திப் பெரும் புகழ் பெற்ற ஒளிபரப்புச் சீமாட்டி ஒபரா வின்பிரே (OPRAH WINFREY) அவர்களாகும். இவர் உலக பிரசித்தி பெற்றவர். கோடிகளைச் சம்பாதித்தவர்.

ஒரு கறுப்பு இன பெண்மணியாக இருந்தாலும் வெள்ளையர்களால் வெகுவாக விரும்பப்பட்டவர். ஏன் தெரியுமா? அவர் அந்த நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிய விதம், அல்லது பாணி என்று சொல்லலாம். தன்னோடு பேசுபவர்களை, அவர் பேசவைக்கும் பாங்கு, மனம் நோகாமல், முகம் சுளிக்காமல், அழுது வடியாமல், மிகவும் சுவாரசியமாக எப்பொழுதும் தொகுத்து வழங்கினார். மிக சாதாரண மனிதர்களையும் பேசவைக்கும் திறன் அவருக்கு இருந்தது. பதும வயது (TEEN AGE) கொண்டவர்களையும் மிக பவ்வியமாகப் பேசி, அவர்கள் பெற்றோருடனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றோருடனும் பிரச்சினையைத் தீர்க்கும் திறமை அவருக்கு இருந்தது. அதனால் ஒபராவின் புகழ் ஓங்கி இருந்தது. ஒரு சமயத்தில் அவர் குறிப்பிட்ட அரசியல் தலைவர் உச்சம் பெற்றார். அவர் சொன்ன புத்தகம் அடுத்த நாளே கோடிகளில் விலைபோனது. அப்படி ஒரு பெருமையும், முதன்மையும் அவர் கொண்டிருந்து, உலக மக்களால் விரும்பப் பட்டவராகவே ஓய்வு பெற்றார்.

சமூக பிரச்சினைகளை மையப்படுத்தி இப்பொழுது சென்னை, மற்றும் ஐரோப்பிய நாடு களிலுள்ள தொலைக்காட்சிகளும் ஒரு சில நிகழ்ச்சி களை ஒளிபரப்புகின்றன. ஆனால் அவை தரமான-தாக இருக்கிறதா? என்பதைத்தான் இக் கட்டுரை கேள்வியாக வைக்கிறது.

அண்மையில் சென்னையில் இருந்து ஒளிபரப் பாகும் ஒரு தொலைக் கட்சியில் உண்மைகள் பற்றி பேசும் ஒரு நிகழ்ச்சித் தொடரைப் பார்க்க நேர்ந்தது. அது கணவன், மனைவி சம்பந்தப்பட்டது. நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் பொழுதே கணவன், பேசிக் கொண்டிருக்கும் மனைவியைத் தனது செருப்பைக் களற்றி அடிக்கிறான். நிகழ்ச்சியை நடத்துபவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். திரும்பவும் அவர் அடிக்க முயன்ற போதே உதவியாளர்கள் வந்து தடுக்கிறார் கள். மற்றுமொரு நிகழ்ச்சியில் சட்டப்படி திருமணம் முடித்த ஒரு இளம் தம்பதியை, பேசிக் கொண்டி ருக்கும் போதே பெண்ணின் தங்கையும், தகப்பனும் அடிக்கிறார்கள். அதே தயாரிப்பாளர் பார்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொண்டே தடுக்கப் பார்க்கிறார். ஆனால் அந்தக் கணவனுக்கு அடிவிழுகிறது. இது ஆரோக்கியமான நிகழ்ச்சியா? ஒரு நேரலை ஒளிபரப்பு என்றாலும் பரவாயில்லை ஆனால் இது ஒரு ஒளிப்பதிவு நிகழ்ச்சி. இதை ஒளிபரப்பும்போது வெட்டி, நெறிப்படுத்தி காண்பித்திருக்கலாம் அல்லவா.

மனிதம், மனிதநேயம் என்று பேசிக்கொண்டு அதன் புனிதத்தையே புதைக்கும் விதத்தில் அல்லவா இந்த நிகழ்ச்சி இருக்கிறது. என்னதான் முட்டி மோதிக்கொண்டு மற்ற ஒளிஅலைகளுக்கு (CHAN-NEL) போட்டியாக நிகழ்ச்சிகளை நடத்தினாலும் தரம் இல்லாத நிகழ்ச்சி மக்களின் வரவேற்பைப் பெறுமா? ஒரு அடாவடி குணம், அடிதடி தன்மை கொண்ட நிகழ்ச்சியை ஒளிபரப்ப வேண்டுமா?

ஆக, என்னதான் மேற்குலக நாடுகளின் நிகழ்சிகளைத் தழுவிக்கொண்டு இவர்கள் குதிரை ஓடினாலும், கழுதையின் குணத்தை மாற்றவா முடியும்? மிகச் சில்லறைத்தனமாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும் அல்லவா இவை இருக்கின்றன. மக்களுக்கு மகிழ்ச் சியை, பொழுதுபோக்கை தரக்கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாறாகப் வெறுப்பையும், கோபத்தையும் வரவழைக்கும் நிகழ்ச்சிகளாகக் கூடாது என்று சொல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒப்ர வின்பிரே போன்ற தரமான தொலைக்காட்சி தொகுப்பாளர்களை தமிழ் தொலைக்காட்சிகளில் எப்பொழுது காணலாம் என்பதே நல்ல தமிழ் நேயர்களின் விருப்பமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குரங்குக்குணம்....

எம் மக்கள் மத்தியில், எங்கள் உறவுகள் மட்டத்தில் இருக்கும் தவறான செயல்களுள் மிகவும் வருத்தத்தைப் பிறருக்கு ஏற்படுத்துவது என்னவென்றால் இவர்கள், ஒரே கோணத்தில் மட்டும் சிந்தித்து, தாங்களாகவே ஒரு முடிவை தீர்மானித்துக்கொண்டு பிறர் மேல் அதை திணிக்க முற்படுவதும், அவர்களை குற்றவாளிகள், அல்லது தப்பு செய்தவர்கள் என்று மறைமுகமாகக் குத்திக்காட்டுவதுமாகும்.

இவர்கள் பிறரின் கஷ்டங்கள் பற்றியோ, அல்லது அவர்களின் கருத்துக்கள் பற்றியோ கவலைப்படாமல், சிந்திக்காமல் "எடுத்தேன், கவிழ்த்தேன்" என்ற நிலைப்பாட்டில் எடுத்தெறிந்து பேசி மற்றவர்களின் மனதை நோகடிப்பதையே கருத்தாக கொண்டவர்கள். இவர்கள் ஒரு செயலைச் செய்யமுற்பட முன்னரும், ஒரு கருத்தை தெரிவிக்கு முன்னரும், அதன் பின்விளைவுகள் பற்றிச் சிந்திப்பதில்லை. தங்களின் நடவடிக்கையினால், அல்லது கருத்தாக்கத்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் எதிர்கொள்ளும் சாதக, பாதகங்கள் பற்றி இவர்களுக்கு சிறிதும் கவலை இல்லை.

மற்றும் இவர்களின் எதிபார்ப்புகள். கண் மூடித்த னமான இவர்களின் இந்த எதிர்பார்ப்பானது மற்றவர்கள் இப்படித்தான் செய்யவேண்டும், இப்படித் தான் நடக்கவேண்டும், என்று சுயநலத்துடன் சேர்ந்த இவர்களின் எதிர்பார்ப்பு, இவர்களுக்குத் தெரியா மலேயே, இவர்களை நாறடித்துவிடும் என்பதை இவர்கள் புரிந்துகொள்வதில்லை.

"நாங்கள் அவருக்கு அதை செய்திருக்கிறோம், இதை செய்திருக்கிறோம், அவர் எங்களுக்கு இதைச் செய்தால் என்ன, அதைச் செய்தால் என்ன," என்று எண்ணுவதும், அடுத்தவர்களின் பிரச்சினை பற்றியோ, அவர்களின் குடும்பச் சூழல் பற்றியோ நினைக்காததும் இவர்களை ஒரு சுயநலப் போக்காளர்களாகவும் தன்னலம் மிக்கவர்களாகவும் இனம் காட்டிவிடும் என்பதை இவர்கள் ஏன் உணர்வதில்லை?

இவர்கள் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை களை, இவர்களே தீர்க்காமல் மற்றவர்களையும் அதற்குள் இழுத்துப் போட நினைப்பது எந்தவகையில் நியாயம்? புலம் பெயர்ந்து அந்நிய மண்ணில் நாம் வாழும்போது உறவுகளை அனுசரித்துப்போக வேண்டும் என்ற நினைப்புக்கூட சிலருக்கு இருப்ப தில்லை. எடுத்ததுக்கெல்லாம் குறை, குற்றம் பார்த்து, குத்திக்காட்டி கதைத்து, உறவில் ஒரு விரிசலை ஏற்படுத்தி, ஒரு நல்லது, கெட்டதுகளுக்கு ஒதுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து, பின்பு அதை விமர்சித்து இருப்பதும் சிலரின் பழக்கமாக இருக்கிறது.

மற்றது தொலைபேசி உரையாடல்... கிரகம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தது மற்றவர் களுடன் செய்திகளை, கருத்துக்களை பரிமாறவும், சுக, துக்கங்களை அறிந்துகொள்ளவும், முக்கியமான நேரத்தில் தொடர்பு கொண்டு உதவிக்கு அழைக்க வும் என்று சொல்லலாம். ஆனால் எம்மில் பலர் தொலைபேசியில் எப்படிப் பேசுவது என்ற நாக ரீகமே இல்லாமல் பேசுவதை என்னென்று சொல்வது? வார்த்தைகளால் மற்றவரை காயப் படுத்தவோ, கடிந்துகொள்ளவோ இல்லை தொலைபேசி.

பல குடும்பங்களில் பல நாட்களாக தொலை பேசி உரையாடல்கள் இருப்பதில்லை. காரணம் வேலைப்பழு, நேரமின்மையாக இருக்கலாம். அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதைவிடுத்துப் பிழையாக நினைத்து, குதர்க்கமாக பேசி, தொலைபேசி எடுத்த வரையே "ஏனடா எடுத்தோம்" என்று எண்ண வைக்கும் வகையில் சிலர் பேசுவது உண்மையில் ஒவ்வாத விசயமாகும்.

உறவுகளே வாழும் காலம் கொஞ்சம்தான். அதை சொந்த, பந்தங்களோடு சேர்ந்து வாழ்ந்து உங்கள் வாழ்க்கையை வசந்தமாக்குங்கள். "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்பார் பட்டினத்தார். ஒருத்தரும் ஒன்றையும் கொண்டுபோகப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நல்ல மனிதன் தன் இருதயமாகிய பொக்கிசத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாதவன் அதேபோல் பொல்லாததை எடுத்துப் போடுகிறான். ஒருவனின் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.” என்று திருவிவிலியம் சொல்கிறது.

ஆக, குரங்கு போல் குணத்தை வைத்திருக்காமல், நல்ல மனிதர்களாய் வாழப் பழகுங்கள். மனம் ஒரு குரங்கு என்று சொல்வதுண்டு. குரங்கின் குணம் நமக்கு வேண்டாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோரின் கவனத்திற்கு......

இன்றைய அறிவியல் யுகத்திலும், தொழில் நுட்ப சாதனங்களின் அதீத வளர்ச்சியிலும், புதிய கண்டுபிடிப்புகளிலும் உலகம் இன்று சுழன்று கொண்டிருக்கிறது. விதவிதமான, நவீன கைத்தொலை பேசிகள், தொலைக்காட்சிகள், வீடியோ விளையாட்டு களை போட்டு தொலைக்காட்சியில் பார்த்து மகிழக் கூடிய ஒரு சாதனம், என்று பல நவீன உதிரிகள் இப்பொழுது எங்கும் கிடைக்கின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர் வரை இந்த வீடியோ விளையாட்டுகளை மணிக்கணக்கில் இருந்து விளையாடுகின்றார்கள்.

வீடுகளில் பிள்ளைகள் படிக்கிறார்களோ இல்லையோ, ஆனால் ஏற்கனவே ஒலி, ஒளி இணைக்கப் பட்ட (DVD) தட்டுகளை போட்டுப் பார்த்து தங்களின் அதிக நேரத்தை செலவு செய்கிறார்கள். அதுவும் மிகவும் வன்முறையை உள்ளடக்கிய வீடியோ விளையாட்டுகள்தான் இப்பொழுது இவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி கொண்டு சுடுதல், இயந்திரத் துப்பாக் கியால் சுட்டுத் தள்ளுதல். பீரங்கி கொண்டு தாக்குதல், கத்தி, வாள் மற்றும் பயங்கர ஆயுதங்கள் மூலம் எதிரிகளை அழித்தல் என்ற ரீதியில் இந்த விளையாட்டுகள் வீடியோ விளையாட்டுகளாக உலகம் முழுவதும் இன்று பரவலாக சந்தைப் படுத்தப்படு கின்றது. MAN HUNT, RESIDENT EVIL-5, DEAD RISING, MAD WORLD, GEARS OF WAR, என்று சொல்லிக்கொண்டே போகலாம். இவை மிகப் பயங்கரமான வன்முறைகளையும், இரத்தக் களரியை யும் பிரதிபலிக்கின்றன. இரத்தத்தை உறையச் செய்யக் கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படியான கொலை வெறியை தூண்டக்கூடிய படத் தொகுப்புத் தட்டுகளை விளையாட்டு என்ற ரீதியில் பார்க்கும் சிறுவர்களும், பெரியவர்களும் உளவியல் பாதிப்புக்கு வெகுவாக உள்ளாசிறார்கள் என்று ஒரு புள்ளி விபரம் சொல்கிறது.

இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடங்கள், கல்லூரி கள், கடைத்தெருக்கள், மக்கள் அதிகமாகக் கூடும் கடற்கரை, பூங்கா போன்ற இடங்களிலெல்லாம் பல துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், குண்டுவெடிப்புகள் எல்லாம் மேற்குலக நாடுகளில் நடைபெறுகின்றன. சென்றவருடம் நோர்வே நாட்டில் இடம்பெற்ற ஒரு தனி மனிதனின் கொலை வெறி தாண்டவத்தால் 91 பேர் கொல்லப்பட்டார்கள். இது அந்த நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. காரணம் அமைதியான மனிதநேயம் மிக்க நாடான தங்கள் நாட்டில் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுபயங்கரம் வெடித்து தங்கள் நாட்டை சின்னாபின்னப் படுத்திவிட்டது என்று நோர்வே மக்கள் கருதுகிறார்கள். "அன்றூஸ் பிரீ வீக்" என்ற ஒரு தனி மனிதனின் இந்த வன்முறை செயல் நாட்டுக்கு அவப்பெயரைத் தந்துவிட்டது என்றும் அவர்கள் அங்கலாய்க்கிறார்கள். அந்த மனிதன் மன நிலை பாதிகப்பட்டவன் என்ற காரணத்தைக்காட்டி இன்னும் அவனுக்கு தண்டனை வழங்கப்படவில்லை. இவன் ஒரு வருடமாக, ஒரு நாளைக்கு 17 மணித்தியாலங்கள் வன்முறை மிக்க வீடியோ விளையாட்டுகளை விளையாடியிருக்கிறான் என்ற தகவலும் வந்திருக்கிறது.

இதனால்லேயே அவன் தன்னை ஒரு கொலை யாளியாக ஆக்கிக்கொள்ள முடிந்தது என்றும் சொல்லப்படுகிறது. இப்படி மனிதனை மிருகமாக்கி கொலைவெறியுடன் உலாவவிடக்கூடிய சாதனமே இந்த வன்முறை வீடியோ விளையாட்டுகளாகும். குழந்தைகள், சிறுவர்கள், இளையோர்கள் என்று இதை இன்றைய திகதிக்கு எல்லோரும் விளையாடு கிறார்கள். குறிப்பாக சிறுவர்கள் கேட்கிறார்களே என்று பெற்றோரும் இந்த வீடியோ விளையாட்டுகளை வாங்கிக் கொடுக்கிறார்கள்.


அத்தோடு பிள்ளைகளின் பிறந்தநாள், மற்றும் கொண்டாட்ட தினங்களிலும் அன்பளிப்பாக உறவினரும், நண்பர்களும்கூட இந்த வீடியோ விளையாட்டுகளைதான் பரிசாக அளிப்பதுண்டு. அவர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, பெற்றோர்கள் இந்த வீடியோ விளையாட்டுகள் பற்றி தங்கள் பிள்ளைகளிடம் போதிய கவனம் எடுக்கவேண்டும். அவர்கள் எத்தகைய விளையாட்டுகளை எப்பொழுதும் விளையாடுகிறார்கள் என்பதை அவதானிக்க வேண்டும். மற்றும் I POT, கைத்தொலைபேசி என்பனவற்றில் இவர்கள் என்ன பண்ணுகிறார்கள், எவ்வளவு நேரம் செலவு செய்கிறார்கள் போன்ற விசயங்களையும் பெற்றோர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும், அவர்களின் கல்வி, மற்றும் முனேற்றம் குறித்தும் பெற்றோரே கவனமெடுங்கள் என்று சொல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாயும் கறிச்சட்டியுமாக....

மனித குலத்தின் உறவுமுறைகளிலே சகோதர உறவுமுறைக்கு நிகரான உறவுமுறை இல்லை. அதிலும் அண்ணன்,தங்கை உறவு என்பது அண்ணன், தம்பி உறவைவிட மேலானது. ஒரே கருவறையில் கிடந்தது ஒரே தாய்ப்பாலை குடித்து, ஒரே வீட்டில் அன்பையும், பாசத்தையும், சின்னச்சின்ன சண்டை சச்சரவுகளையும் அதனால் வரும் சிறுபிணக்குகளையும் பின்பு வரும் சந்தோசத்தையும் பார்த்துப் பார்த்து வளர்ந்த அந்த அண்ணன் தங்கை உறவு உலகத்திலே உள்ள உறவுமுறைகளிலே உன்னதமானது.

குடும்ப சூழலுக்கு தக்கபடி இந்த உறவு இருக்கும். தாய், தந்தையரின் வாழ்க்கை முறை, அல்லது அவர்களின் பொருளாதார நிலை என்பனவும் இந்த அண்ணன், தங்கை உறவுக்கு வலுச் சேர்க்கும். உதாரணமாக நோய்வாய்ப்பட்ட ஒரு தந்தைக்கு மகனாகவும், மகளாகவும் இருக்கும் இரண்டு உயிர் களுக்கிடையிலான அன்புப் பிணைப்பு அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் தகப்பனை இழந்த ஒரு குடும்பத்தில் இருக்கும் ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் ஒருத்தரில் ஒருத்தர் மிகப் பாசமாக இருப்பார்கள். தன் தங்கைக்காக வாழ்ந்து, அவளின் நலனுக்காக உழைத்து அவளுக்காக ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து, பின்னர் அதைப்பார்த்து சந்தோசப்பட்டு இருந்த பலரை நாம் பார்த்திருக்கிறோம். இந்த அண்ணன், தங்கை பாசத்தைப் பற்றி அந்த நாட்களில் வந்த தமிழ் திரைப்படங்கள் அழகாக வெளிப்படுத்தி உள்ளன. ஒரு "பாசமலர்", ஒரு "அன்புக்கோர் அண்ணன்", "சகோதரி", என் தங்கை கல்யாணி" "தங்கைக்காக" இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் திரைப்படங்களில் இடம் பெற்ற கதாபாத்திரங்கள் ஒரு சமூகத்தின் நடைமுறை வாழ்வியல் வட்டத்துக்குள்ளேதான் இருந்திருக் கின்றன. இந்தத் திரைப்படங்களை இப்போது பார்த்தா லும் அறுபது வயதுள்ளவர்கள் கண்கலங்குவார்கள். ஆனால் தற்போதைய இளைய சமுதாயத்தினர் இதைப் பார்ப்பார்களா? அல்லது பார்த்து ரசிப்பார்களா? என்றால் இல்லை.

காரணம், இவர்களுக்கு அண்ணன், தங்கை பாசமே இப்பொழுது இல்லை என்று சொல்லும் அளவிற்கு இவர்களின் வாழ்வியல் முறை வந்து விட்டதே ஆகும். இது புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழும் எமது தமிழ் சமுதாயத்திலே புரையோடிவிட்ட, வேரோடிவிட்ட ஒரு நிலையில் இருக்கிறது என்றே சொல்லலாம். இதற்குக் காரணம் மேற்குலக நாகரிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் இவர்கள் சிக்கிவிட்டதால் சகோதர பாசத்தை இவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. ஒரே வீட்டில் இருக்கும் தனது தங்கையை, ஒரு தமையன் ஒரு அந்நிய பெண்ணைப்போல நினைத்தே அவளுடன் பழகுவதையும், பேசுவதையும் பல வீடுகளில் பார்க்க முடிகிறது. அதைவிட கொடுமை ஏட்டிக்கு போட்டியாக இருவரும் இருப்பதும், நடந்து கொள்வதுமாகும். பெற்றோர் இதைக் கண்டித்தாலும் இவர்கள் அவர்களை கண்டுகொள்வதில்லை. காரணம் பெற்றோரையே இவர்கள் மதிப்பதில்லையே. தாய், தந்தையரை கனம் பண்ணாத இந்தப் பிள்ளைகள் எப்படி ஒருவரை ஒருவர் மதித்து, நேசித்து இருப்பார்கள்?

அந்தக் காலங்களில் திருமணம் முடித்துப் போனாலும் அண்ணன், தங்கை பாசம் தொடர்ந்து கொண்டே இருக்கும். அண்ணனுக்கு ஏதும் கஷ்டம் வந்தால் தங்கை துடிதுடித்துப் போவாள். தனது தங்கைக்கு ஏதும் பிரச்சினை வந்தாலும் அண்ணன் துடித்து போவான். ஆனால் இப்போது அப்படி இல்லையே. வீட்டில் இவர்கள் பேசும்போது "அது உன்னோட பிரச்சினை", "இது என்னோட பிரச்சினை இல்லை" என்று ஒரு அந்நியன் பேசுவதுபோல் அல்லவா பேசுகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையாலும், போர்நிமித்தமாகவும் தங்கள் நாட்டைவிட்டு அந்நிய மண்ணில் அகதிகளாக தங்கள் பிள்ளைகளுடன் வந்த பெற்றோருக்கு இப்பொழுது மிகவும் வேதனையாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தைத் தருவதாகவும் இருப்பது அவர்கள் பிள்ளைகள் நடந்து கொள்ளும் விதமே. பிள்ளைகள் ஒருத்தருக்கொருத்தர் "நாயும் கறிச்சட்டிபோலவும்"

"பூனையும் எலியுமாகவும்" "கீரியும் பாம்புமாக வும்" இருக்கிறார்கள் என்று பல பெற்றோர் சொல்கிறார்கள். இந்தப் பெற்றோரின் மன உளைச் சலையும், ஆதங்கத்தையும் இவர்கள் பிள்ளைகள் புரிந்துகொள்வார்களா? ஒரு அண்ணனுக்கும், ஒரு தங்கைக்கும் உள்ள, அல்லது ஒரு தங்கைக்கும் ஒரு அண்ணனுக்கும் உள்ள அன்பை, எங்கள் பண்பாட்டு விழுமியங்களுக்கு உட்பட்டு இவர்கள் உணர்ந்து கொள்வார்களா, என்ற கேள்வியே இப்பொழுது பெரிதாக புலம்பெயர் நாடுகளிலே எழுந்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூவும்... பொட்டும்...

பூமுடிப்பது, பொட்டுவைப்பது எல்லாம் தமிழ் பெண்களின் பண்பாடு... பூவுக்கும் பொட்டுக்குமாகவே வாழ்ந்த பெண்கள் எமது சமூகத்தில் காலம்காலமாக இருந்திருக்கிறார்கள். மங்கலமான பொருட்களாகவே இந்தப் பூவும்பொட்டும் இன்றுவரை பார்க்கப்படுகிறது. திருமணமான பெண்கள் பூ முடிப்பதும், பொட்டு வைப்பதும் வழக்கம். அதுவும் இப்போது இரண்டு பொட்டுகள் நெற்றியிலும், தலைவகிடு தொடங்கும் இடத்திலும் குங்குமப் பொட்டு இடுவதை நாம் பார்க்கிறோம். ஒரு சுமங்கலிக்கு அடையாளமாக இந்தப் பூவும், பொட்டும் இருக்கின்றன.

கடவுள் சந்நிதியில் அந்தக்காலப் பெண்கள் "கடவுளே என் பூவையும், பொட்டையும் காப்பாத்து" என்று பிரார்த்திப்பார்கள். அதற்கு அர்த்தம், அவர் களின் கணவனைக் காப்பாற்று என்பதே. கணவனை இழந்த பெண்கள் இந்த இரண்டு மங்கலப் பொருட்களையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு ஆளாகுவார்கள். பின்பு விதவை, கைம்பெண் என்ற பெயர்களைச் சூட்டி சமூகத்தில் இடம்பெறும் மங்களகரமான காரியங்களில் சேர்க்காமல் ஒதுக்கி வைத்துவிடுவார்கள். ஏனென்று கேட்டால் அதுதான் மரபு, வழக்கம், ஐதீகம் என்றெல்லாம் சொல்லி விளக்கம் தருவார்கள்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால் எந்தக்காரணம் கொண்டும் இவர்களை முன்னுக்கு வரவிடாமல் தடுப்பார்கள். காரணம் கேட்டால் "முழிவியளத்துக்குக் கூடாதவர்கள். நல்ல சகுனமாக இருக்க மாட்டார்கள்" என்று மூட நம்பிக்கைக்கு கதிகாலிடுவார்கள். இதெல்லாம் முன்பு நமது மக்களிடையே பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது இந்த பூ, பொட்டு சமாச்சாரம் எல்லாம் வளர்ந்து நிற்கின்ற இந்த நாகரிக உலகில் எடுபடுகிறதா என்றால், பதில் இல்லை என்றே வருகிறது. அதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியப்படாதவை. மனித வாழ்வும், வாழ்வியல் முறையும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து எங்கேயோ போய்விட்டது. இன்னும் பண்பாடு, கலாசாரம் என்று சொல்லிக்கொண்டு இருப்பது என்ன நியாயம் என்று கேட்பவர்கள் எம்மிடையே இருக்கிறார்கள்.

அள்ளிமுடித்து, பின்னிப்பிரித்து தலையலங் காரம் செய்ய முடியே இல்லாத பல பெண்கள் இப்போது புலத்தில் இருக்கிறார்கள். "போப் கெயார், ஸ்ட்ரெயிட் கெயார்" என்று பல பெயர்களில் நவீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையலங்காரங்கள் வந்துவிட்டன. இதில் எப்படி பூ முடிப்பது?, நெற்றியில் பொட்டு வைப்பதையே பல பெண்கள் விரும்புவதில்லை.

இதற்கு காரணம் என்ன? தங்களைத் தமிழ் பெண்கள் என்று காட்டிக்கொள்ள விரும்பாத தன்மையா? அல்லது தற்போது இருக்கும் அவசரமான உலகிலே இவைகளுக்கு நேரமில்லை என்ற நிலையா? அல்லது தாங்கள் பணிபுரியும் இடங்களில் இந்த பூ, பொட்டெல்லாம் சரிவராது, அது சகபணியாளர்களை, பிற இன மக்களை தங்கள்பால் இழுத்து, தங்களை விமர்சனப் படுத்திவிடும் என்ற பயமா? என்பது தெரியவில்லை.

என்ன இருந்தாலும் பெண்களுக்கு கூந்தல் என்பது அழகு சேர்ப்பதே. அதில் பூமுடிப்பது அழகுக்கு அழகு சேர்ப்பதே. பெண்களின் கூந்தலுக்கு உள்ள மணம் இயற்கையா அல்லது செயற்கையா? என்று அறிய முற்பட்ட பாண்டிய மன்னன் ஒருவன் புலவர்களிடம் சந்தேகம் கேட்டான். அதற்கு தருமி என்ற ஏழைப் புலவன் சிவனிடமிருந்து,

"கொங்குதேர் வாழ்க்கை" யம் சறைத்தும்பி
காமம் செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியது கெயிலிய நட்பின்
மயிலியட் செரிய யிட் டரிவை கூந்தலின்
நெறியவும் உளவோ நீ அறியும்பூவே"...........

என்ற பாடலை கடனாகப் பெற்றுக் கொடுத்து, மன்னனின் சந்தேகத்தைப் போக்கியதும், நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலில் பிழை கண்டுபிடித்ததும் நமக்குப் புராண வரலாற்றிலிருந்து தெரிகிறது. கூந்தல் பெண்களுக்கு எவ்வளவு அழகு, முக்கியம் என்பதை பல வரலாறுகள் சொல்கின்றன.

ஆக, என்ன இருந்தாலும் எமது தமிழ் பண்பாட்டின்படி பெண்களுக்கு பூவும், பொட்டும்தான் அடையாளங்கள். அவைதான் இவர்களுக்கு அழகு சேர்க்கும் என்பதே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசைப் படாதீர்கள்....

“சின்னச் சின்ன ஆசை
சிறகடிக்கும் ஆசை......
முத்து முத்து ஆசை
முடிஞ்சு வச்ச ஆசை...”

கவிப்பேரரசு வைரமுத்து எழுதி இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் இசையமைத்துப் பட்டிதொட்டி யெல்லாம் ஒலித்த பாடல் இது. என்ன வகையான ஆசைகள், எப்படியெப்படி ஆசைப்பட வேண்டும் என்ற செய்திகளை கலைநயத்துடன், இதமான இசையுடன், அழகாக சொன்ன பாடல் இது. மின்மினி அழகாகப் பாடியிருப்பார்.

ஆனால் எம்மில் சிலர் எதற்கு ஆசைப்படுவது, எவ்வளவு ஆசைப்படுவது? என்ற விவஸ்தை, விபரம் தெரியாமல் சுயநலத்துடன் தறிகெட்டதனமாக ஆசைப்பட்டுக் கடைசியில் வாழ்க்கையென்னும் கட்டிடத்தின் அத்திவாரமே ஆட்டம் காணும் அளவுக்கு ஆளாகி விடுவதை இன்று பரவலாக எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையே நிலத்திலும், புலத்திலும் பார்க்க முடிகிறது. "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது என்னவோ உண்மைதான். அதற்காக பொருளே உலகம் என்று வாழ்ந்து, சுயநலத்துடன் மற்றவர்களை ஏமாற்றிப் பணம், பொருள், சொத்து, சுகம் பார்க்கத் துடிப்பது எந்தவகையில் நியாயம்? விரலுக்கு ஏற்ற வீக்கம் இருக்கவேண்டும் என்று சொல்வதுண்டு. அதை விட்டுவிட்டு விரலை அகோரமாக வீங்க வைத்தால் நன்றாகவா இருக்கும்? இருக்காது. எம்மில் சிலர் இந்த அகோரமான வீக்கத்திற்கு ஆசைப்பட்டு கடைசியில் அவதிக்குள்ளாகின்றார்கள்.

ஆசைப்படுங்கள் அளவோடு ஆசைப்படுங்கள். அடுத்தவரை ஏமாற்றி, அடுத்துக் கெடுத்து, அவர்களை ஆசைவார்த்தை காட்டி அவதிக்குள்ளாக்கி நீங்களும் திண்டாடி மற்றவர்களையும் திண்டாட வைக்காதீர்கள். "பேராசை பெரும் தரித்திரம்" என்ற ஒரு சொல்லாடலும் நாம் அறிந்ததே. பலர் பேராசைப் பட்டு தங்களிடம் இருக்கும் சொத்து சுகங்களையும் மட்டுமின்றி நிம்மதி, சந்தோசத்தையும் தொலைத்துவிட்டு இருப்பதையும், இவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்படுவதையும் இன்று பார்க்க முடிகிறது.

இறப்புக்கும், பிறப்புக்கும் இடைப்பட்ட காலம் என்னவோ கொஞ்சம்தான். இதற்குள் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்ந்து மறைந்தால் உலகம் நம்மை நினைக்கும். ஆகவே அளவோடு ஆசைப்பட்டு ஆனந்தமாக இருங்கள். பேராசை வேண்டாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடைந்த உள்ளங்கள்....

பெற்றோர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் இப்பொழுது எம்மினத்தின் இளையோருக்கு தேவைப் படாத விடயங்களாக ஆகிவிட்டன. அதுவும் குறிப்பாக புலத்தில் வாழும் இளையோர்கள் ஒருபடி மேலேயே நிற்கிறார்கள். ஏனென்றால் அவர்கள்தான் இப்போது தங்கள் சொந்தக்காலில் நிற்குமளவிற்கு வேலை-யையும், வருமானத்தையும் தேடிக்கொண்டார்களே. தாய், தந்தை பற்றிய எந்த அக்கறையும் அவர்களுக்கு இல்லை. ஒரு சிலர் விதி விலக்காக இருக்கலாம்.

ஆனால் அதிகப்படியான இளைஞர்கள் பெற்றவர்களைப் பெரிதாக மதிப்பதில்லை. படிக்கும் காலத்திலேயே காதல் வயப்படுகின்றார்கள். தாயகத்தில் காதலிப்பது, புலத்திலே காதலிப்பது இந்த இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அங்கே காதலித்தால் கண்டிப்பாக ஊர், உறவு, பெற்றோர் என்று பல தடுப்புகள் வந்து தலைகாட்டும். ஆனால் இங்கு, அதாவது புலம்பெயர்ந்த நாடுகளில் அப்படி இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலக நாகரிகத்துக்குள் எமது இளைய சமுதாயம் அமுங்கிக்கொண்டதே. பள்ளியில் படிக்கும் போதே அவர்களுக்கு பெண் சிநேகமோ, ஆண் சிநேகமோ கண்டிப்பாக அவசியம் என்றாகிவிட்டதே. இல்லாவிட்டால் சக மாணவர்கள் தங்களை மதிக்க மாட்டார்கள் என்றல்லவா இவர்கள் சொல்கிறார்கள். இதற்காகவே பலர் சிலரை சிநேகித்துக் கொள்கிறார்கள்.

பெற்றவர்களுக்கு தெரியாமல் சிலர் இந்த சிநேகத்தை கொண்டுசெல்வார்கள். பலர் தெரியப் படுத்தியும் தொடர்வதுண்டு. அது நாளடைவில் காதலாக மாறிவிடுவதும் உண்டு. காதல் உலகிலே சக்தி வாய்ந்ததொன்று. அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் இது இவர்களை மற்றக் கடமை களில் இருந்து திசைதிருப்பிவிடும்.

இந்தக் காதலை இவர்கள் தங்கள் படிப்பு முடிந்தபின்பு வைத்துக்கொண்டால், அது இவர்களுக் கும், இவர்களைப் பெற்றவர்களுக்கும் நன்மையைத் தரும். சரியான பக்குவமடையாத வயதில் தோன்றும் காதல் நல்லதல்ல. படிப்பு முடிந்தபின்பு ஒரு நல்லவேலையைத் தேடிக்கொண்டு, கொஞ்சக் காலம் பெற்றோருடன் இருந்து அவர்களைச் சந்தோசப் படுத்திவிட்டு இவர்கள் காதலித்தாலோ அல்லது கல்யாணம் செய்தாலோ பரவாயில்லை. பெற்றோர் கள் கூட சந்தோசப்படுவார்கள். நல்ல குடும்பப் பின்னணியா? வாழ்க்கைக்கு பொருத்தமான இடமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் பார்த்து பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டால் இவர்களின் வாழ்க்கை நன்றாக அமையும். அதைவிடுத்து, வாழ்க்கையில் பெரும் பகுதியை கடந்துவிட்ட பெற்றவர்களுக்கு மன வேதனையையும், துக்கத்தையும் கொடுக்க முற்பட்டார்கள் என்றால் அது அவர்களுக்குத் தீமையைத் தேடித்தரும். தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியினையும், முன்னேற்றத்தையும் கண்டு பெருமைப்படவும், பூரிப்படையவும் செய்யாத எந்தப் பெற்றோரும் இருக்க முடியாது. என்பதை இந்த இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழும் இளையோர்கள் இரண்டு விதங்களில் பெற்றோரின் மனங்களைக் காயப்படுத்துகிறார்கள் என்று அறியமுடிகிறது. ஒன்று முன்பு சொன்னதுபோன்று தாங்களாகவே தேடிக் கொள்ளும் காதல். அதைத்தொடர்ந்து அவர்கள் முன்னெடுக்கும் முடிவுகள், தாய் – தந்தையினரை மதிக்காத தன்மை. இரண்டு, தீய பழக்கங்களால் சீரழிந்து சமூகத்தில் கெட்டவர்கள் என்று பெயர் எடுத்தல், பெற்றோரை நோகடித்தல், தமிழினத்தின் அடையாளங்களை மறந்து – துறந்து வாழ முற்படுதல், தமிழ்ப் பற்றுள்ள பெற்றோருக்கு மாறாத காயத்தை மனதிலே ஏற்படுத்தல், பேச்சில் இனிமையோ, கனிவோ இல்லாமல் பேசி ஒட்டுமொத்த வெறுப்பைச் சம்பாதித்தல் என்று இன்று புலம் பெயர்ந்து வாழும் அநேக இளைஞர்கள் நம்மிடையே இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் ஒன்றை இன்றுவரை உணர்ந்து கொள்ளவில்லை. யாருக்கும் துன்பத்தை அளித்தாலும் அது பாவம். பெற்றவர்களுக்கே துன்பமளித்தால் அது மகா பாவம். "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" "மாதா, பிதா, குரு, தெய்வம்" இந்த முது மொழிகள் எல்லாம் இவர்களுக்குத் தெரியுமா அல்லது புரியுமா என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

ஒரு தாய் தன் குழந்தைகளுக்காகப் படும் கஷ்டங்களும், வேதனைகளும், தியாகங்களும் விலை யில்லாதது. ஈடுகட்ட முடியாதது. அந்த நன்றிக்கடனை தீர்க்க முடியாது. நான் படித்த ஒரு புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது," மகான்கள், மகரிஷிகள் கால் களில் விழுந்து ஆசி பெறுவது என்பதை எல்லோரும் செய்யலாம். மகான்களின் தந்தைகூட செய்யலாம்.

ஆனால் அவரின் தாய் மட்டும் செய்யக்கூடாது. ஏனென்றால் அந்த மகானைவிட உயர்ந்தவள் அவரைப் பெற்ற தாய்." காதலி, காதல் பரிசாக கேட்டாள் என்பதற்க்காகத் தன்னுடைய தாயைக் கொன்று அவளின் இதயத்தைத் தட்டிலே வைத்து காதலிக்கு அளிக்கச் சென்றுகொண்டிருந்த ஒரு முட்டாள், கல் தடுக்கித் தடுமாறும்போது கூட அந்தத் தாயின் இதயம் "மகனே பார்த்துச் செல், அடிபட்டுவிட்டதா?" என்று கேட்ட கதை நமக்குத் தெரியும்.

அப்படிப்பட்ட தாயின் மனதை நோகச் செய்தால் இப்படிப்பட்ட இளையோரின் வாழ்வு சிறப்பாக இராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இன்றைய தமிழ் இனத்தின் இளையோர்கள் தங்களை யார் என்று உணர்ந்து கொண்டு தங்களின் கடமைகள் என்ன என்பதை தெரிந்துகொண்டு தங்களது தாய், தந்தையரின் மனம் கோணாமல் நடந்து அவர்களின் அன்பையும், ஆதரவையும், ஆசிகளையும் பெற்று, வாழும் காலம் முழுதும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்பதே இக் கட்டுரை இளையோருக்கு சொல்லும் செய்தியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆறாம் அறிவை அரட்டி விடுவோம்.......

தாய் நாட்டிலும் சரி, அந்நிய நாடுகளிலும் சரி நம்மில் பலர் வாழ்ந்தபோதும், இப்பொழுது வாழும் போதும் எதற்காக வாழ்கிறோம், ஏன் நாம் வாழ்கிறோம், நாம் ஏன் பிறந்தோம் என்ற கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்கி றோம், என்ற மனப்பாங்கில் வாழ்கிறார்கள். வாழ்க்கை யில் வெற்றி காண்பதென்பது எப்படி?

வாழ்க்கையை வசந்தமாக்குவதென்பது எப்படி? மற்றவர்களின் முன்னேற்றம், உயர்வு எல்லாம் பார்த்து எப்படி அவர்கள் இந்த நிலைக்கு வந்தார்கள் போன்ற கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் உலக நடப்பும், அதை புரிந்துகொள்ளாத தன்மையும் அல்லது புரிந்து கொள்ள, தெரிந்து கொள்ள முயலாத போக்கும் இவர்களைச் சமூகத்திலிருந்து வேறுபடுத்தி விடுகின்றது. இதனால் இவர்களிடையே பொய்யும், புரட்டும், பித்தலாட்டமும், வஞ்சகமும், பொறாமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்து கொள்கிறது. இந்தத் துர்க்குணங்களைத் தவிர்த்து நல்ல குணங்கள் இவர்களுக்குத் தேவை. அவை என்ன நல்ல குணங்கள்?

உண்மையாக இருத்தல்.. நேர்மை கொண்டிருத்தல்..... பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்தல். யாருக்கும் துன்பம் அளிக்காமல் இருத்தல்... ஏழைகளுக்கு உதவுதல்... மொத்தத்தில் நல்ல மனிதனாக வாழுதல் போன்ற குணாதிசயங்கள் ஒரு மனிதனை வெற்றிப் பாதைக்கு எடுத்துச் செல்லும். இந்தக் குணங்களுடன் வாழும் வாழ்க்கையை நாம் அமைத்துக்கொள்ளவேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு பெரிய போராட்டமே.. அதை நாம் எதிர் நீச்சல் போட்டுத்தான் வெற்றி பெறவேண்டும். எண்ணிலடங்காத சோதனைகள் எமது வாழ்க்கையில் வந்துகொண்டிருக்கும். அந்தச் சோதனைகளை எல்லாம் எதிர் கொள்பவன்தான் சாதனையாளனாக இருக்க முடியும்.

எந்த முயற்சிகளும் செய்யாமல் சோம்பேறிகளாக இருந்துகொண்டு, மற்றவர்களின் முன்னேற்றத்தைப் பார்த்து பொறாமைப்படுவதினால் நமக்கு ஒன்றும் ஆகப் போவதில்லை. இருட்டறையில் இருந்து கொண்டு மற்றவர்கள் விளக்கு ஏற்றட்டும் என்று நாம் எண்ணக்கூடாது. விளக்கை ஏற்றும் முதல் ஆளாக நாம் இருக்கவேண்டும். நல்லவர்கள் வாழும் நடுவில் நாம் நல்லவர்களாக இருப்பது சுலபமே. ஆனால் நாம் வாழும் சமுதாயத்தில் எந்தப்பக்கம் திரும்பினாலும் பொய், புரட்டு, ஏமாற்று, சுயநலம், சுரண்டல் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்து கிடக்கின்றது. ஆகவே நல்ல குணங்களை நம் வசப்படுத்திக்கொண்டு நாமும் நல்லவர்களாக வாழ்ந்து காட்டுவோமே.

நாம் நல்ல வழியில் தொடர்ந்து சென்று கொண்டிருப்போம். மற்றவர்களுக்கு உதாரணமாக உயர்ந்த வாழ்கையை வாழ்ந்து காட்டுவோம். கடவுள் நமக்கு நலம் தருவார். எங்களையும், எங்களைச்சுற்றி உள்ளவர்களையும் மாற்றிக்கொண்டு வாழ்க்கையின் உச்சத்தைத் தொடுவோம்.

இளைஞர்களே! துடிப்புடன் இருங்கள். உங்களால் முடியும். தமிழினத்தையும், தமிழையும் தாங்க வேண்டிய, தூக்கி நிறுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் இளைஞர்களாகிய உங்களிடம் இருக்கின்றதென நினையுங்கள், உணருங்கள். "துடிப்புள்ள உண்மையான நூறு இளைஞர்களைக் கொடுங்கள் இந்த நாட்டின் எதிர்காலத்தை மாற்றிக் காட்டுகின்றேன்" என்று சுவாமி விவேகானந்தர் கூறினார் அல்லவா? நீங்கள் ஏன் அதில் ஒருவராக இருக்கக் கூடாது. இளைஞர்கள் மட்டுமல்ல நாம் எல்லோருமே துடிப்புடனும், விழிப்புடனும் இருந்தால் நமக்கு வெற்றி நிச்சயம். மனிதனுக்கு பகுத்தறியும் ஆறாவது அறிவை ஆண்டவன் அளித்துள்ளான் இல்லையா அதைப் பயன்படுத்திக்கொள்வோமே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கால தமிழ் சினிமாக்கள்...?

முன்பெல்லாம் சினிமா என்ற ஊடகம் நல்ல பல கருத்துகளையும், ஜீவகாருண்யத்தையும், அன்பையும், அறத்தையும், ஒழுக்கத்தையும், பக்தியையும் உள்ளடக்கிய கதையம்சங்கள் கொண்ட திரைப் படங்களை எமது மக்களுக்குக் கொடுத்தது.

அன்று ஒலித்த சினிமாப் பாடல்களில் சமூக சீர்திருத்தங்கள்,மூட நம்பிக்கைகள், மானிட வாழ்வின் கஷ்ட நஷ்டங்கள், சகோதர பாசப் பிணைப்புகள், மற்றும் சமூக நலன் நோக்கிய கருத்துகள் நிறைய இருந்தன. அவை மக்கள் மத்தியில் தெளிவையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது. அதேபோல் அக்காலப் பாடல்களில் வன்முறையும், வக்கிரமும் இருக்காது. மாறாக அமைதியும், அறிவுறுத்தலும் சீரிய கருத்துக்களும் இருந்தன.

சரி காலத்துக்கு தகுந்தபடி மாறிவரும் அறிவியல் உலகத்தில் புதிய தேடல்களும்,நவீன தொழில் நுட்பங்களுக்கு இடம் கொடுத்தலும் கண்டிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டியதுதான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் இவை எமது மக்களையும் இளைய சமுதாயத்தினரையும் எங்கள் கலாசார, விழுமியங்களையும் சீரழிக்கும் வகையில் இருக்கக் கூடாது என்பதையே இக்கட்டுரை சொல்ல முற்படுகிறது.

அண்மையில் தமிழ்நாடு,சென்னையில் ஒரு பள்ளி ஆசிரியையை ஒன்பதாம் வகுப்பு மாணவன் கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறான். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சினிமா, தொலைக்காட்சிகளில் வரும் வன்முறையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் மன்னர் ஜவகர் வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

வகுப்பறையில் ஆசிரியை கொலை செய்யப்படு வது தமிழ் நாட்டில் இதுவே முதல்த் தடவை. சினிமா வில் வன்முறையைத் தூண்டும் காட்சிகளினால் கொலையாளியான மாணவன் மனநிலை பாதிக்கப் பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாணவர்களுக்கு அறிவுரை சொல்லக்கூடிய எத்தனையோ பாடல்கள் அன்றைய திரைப் படங்களில் வந்திருக்கின்றன. குறிப்பாக:

"நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே"
"திருடாதே பாப்பா திருடாதே"
"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி"
"சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பழைய பாடல்கள் பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்க்க பெரிதும் பயன்பட்டன.

ஆனால் இப்போதைய பாடல்கள் எப்படி இருக்கிறது?

"ஒவை திஸ் கொலை வெறிடி"
"உதடா அவள..வெட்டுடா அவள..."
"எவண்டி உன்ன பெத்தான் கைல கிடச்சா செத்தான்"
"லூசுப்பெண்ணே,, லூசுப்பெண்ணே,,"

என்றெல்லாம் லூசுத்தனமாக பாடல்கள் வருகின்றன. இவை மாணவர்கள், இளைஞர்கள் மனதில் வன்முறைத் தனமான வக்கிரங்களை பதிய வைக்கின்றன. இன்று நடக்கும் பல சீர்கேடுகளுக்கு இன்றைய சினிமாக்களே பெரிதும் காரணமாக இருக்கிறது. இன்றைய சில சினிமாப் பாடல்கள் இப்போதைய தலைமுறையை வக்கிர புத்தி உள்ளவர்களாக மாற்றி விடுகின்றன. தமிழ் நாட்டில் தமிழ் மொழியும், தமிழக் கலாச்சாரமும் ஒரு புறத்தில் அழிந்து போகின்றன என்பது என்னவோ உண்மை தான்.அது எமது தாயகத்திலும் இப்பொழுது தலை விரித்து ஆடத் தொடங்கி இருப்பது கவலைக்குரிய விடயமாகவே பார்க்கத் தோன்றுகிறது. அண்மையில் அங்கு திரையிடப்பட்ட சில படங்களின் "கட் அவுட்டு களுக்கு" பாலூற்றி அபிஷேகம் செய்ததாக செய்திகள் வெளிவந்தன. இது எமது இளையோர் தடம்மாறிப் போகிறார்கள் என்ற செய்தியைச் சொல்வதாக அமைகிறது. இது முற்றாக நிறுத்தப்பட வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அங்குள்ள பொது அமைப்புகள், நலன்பேணும் சங்கங்கள் கவனமெடுத்து, தடுத்து நிறுத்த வேண்டும் என்பதையும் இக்கட்டுரை முன்வைக்கிறது.

ஆக, வன்முறைச் சினிமாக்களும், வக்கிரமான பாடல்களும் தமிழ் சமூகத்தினரை சீரழித்துவிடும் என்பதை கருத்தில் கொண்டு இவற்றை உடனடியாக நிறுத்தி நல்ல கருத்துள்ள படங்களை, பாடல்களை சம்பந்தப்பட்டவர்கள் தர விளைய வேண்டும் என்றும் இக்கட்டுரை கோரிக்கை வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவுகளில் விரிசல் வேண்டாமே....

குடும்பங்களிலும் சரி, வேலைத்தளங்களிலும் சரி உறவுகளிடமோ, சக ஊழியர்களிடமோ அல்லது எமது நல்ல நண்பர்களிடமோ விரிசல்கள், பூசல்கள் ஏற்படாமல், அல்லது ஏற்பட்ட பிளவுகளை மேலும் பெரிதாக்காமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பல குடும்பங்களில் கணவன், மனைவிக்குள்ளே இருக்கின்ற தன்னலம், பிடிவாதம் போன்ற தன்மை களால் குடும்பங்களுக்குள் சச்சரவுகள் வந்து அவர் கள் வாழ்க்கையையே சூனியமாக்கி விடுகின்றன. அது அவர்களின் பிள்ளைகளையும் பாதிக்கும் என்ற உண்மையைக்கூட உணராமல் இவர்கள் இருப்பது தான் வேதனைக்குரிய விடயமாகும். அதே போல் அலுவலகங்களிலும் சக ஊழியர்களுடன் பலர் கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியும், முரண்பாடும் பலருக்கு மன அமைதியை தருவதில்லை. மேலும் பலர் தங்கள் நண்பர்களுடன் செய்துகொள்ளும் வாய்த்தர்க்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், விட்டுக்கொடுக்காத தன்மையும் அவர்களின் வெறுப்பை சம்பாதிக்க வழிவகுக்கும்.

இப்படியான குணநலன்கள் பலருக்கு இருப்பதால் அவர்கள் நாளடைவில் சமூகத்தால் வேறாகப் பார்க்கப் படுவார்கள் அல்லது ஒதுக்கப்படுவார்கள். ஆகவே இவர்கள் தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். அதற்கு என்ன செய்யலாம். ஒன்றும் பெரிதாக செய்யத் தேவையில்லை.

இவர்கள் தங்களுடைய போக்கை, மனப் பாங்கை, நடத்தையை (ATTITUDE) மாற்றிக் கொள்ள வேண்டும்.

எப்படி? இப்படி....


- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடவேண்டும். (EGO)
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதை விடவேண்டும். (LOOSE TALK)
- எந்தவிடயத்தையும், பிரச்சனையையும் நாசுக் காக கையாளவேண்டும். (DIPLOMACY)
- விட்டுக்கொடுக்க கற்றுக்கொள்ள வேண்டும். (COMPROMISE)
- சிலநேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆகவேண்டும் என்பதை உணரவேண்டும். (TOLERANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கொண்ட கருத்துக்களில் உடும்புப்பிடியாக இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக்கொள்ள வேண்டும். (FLAXIBILITY)
- ❖ மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களை பேசவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளவேண்டும். (COURTESY)
- ❖ புன்முறுவல் காட்டவும், சில அன்புச்சொற்க்களை சொல்லவும் பழகிக்கொள்ளவேண்டும்.
- ❖ பிரச்சனைகள் வரும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று எண்ணாமல் இவர்களே பேச்சை தொடங்க முன்வர வேண்டும்.

இப்படி இவர்கள் தங்களை மாற்றிக்கொண்டால், நாளடைவில் பல மாற்றங்களை தங்களிடம் இவர்கள் காண்பார்கள். வாழ்க்கையில் அமைதியும், சந்தோசமும் இருக்கும். முயற்சிப்பார்களா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டுதல்...

எந்த ஒரு மனிதனையோ, அல்லது செயலையோ பாராட்டுவதென்பது மேற்குலக நாடுகளிலே நாம் பரவலாக கேட்கலாம் அல்லது பார்க்கலாம். ஆனால் கிழக்காசிய நாடுகளிலோ அல்லது மூன்றாம் உலக நாடுகளிலோ இந்த பாராட்டுதல் என்பது மிக அரிதாகவே காணப்படுகிறது, உணரப்படுகிறது.

மேற்குலக நாடுகளில் THE ART OF APPRECIATION என்று சொல்லி அதனை மக்கள் வாழ்வியல் கூறாக கடைப்பிடிக்கும்படி தங்கள் பிள்ளை களுக்கு ஆரம்பத்திலிருந்தே கற்றுக்கொடுத்து அதை வழக்கிலும், பழக்கத்திலும் கொண்டுவருவார்கள். ஆனால் எமது தமிழ் சமூகத்தில் இந்த பாராட்டுதல் என்பது மிக அபூர்வமாக, அரிதாக காணப்படுகிறது. நல்ல மனசோடு யாரும், யாரையும் பாராட்டுவதென்பது மிக குறைவு என்று சொல்லலாம்.

நாம் யாரைப் பாராட்டுவது, ஏன் பாராட்டுவது, எதற்குப் பாராடுவது என்றெல்லாம் கேள்விகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விழுகின்றன. நாம் கண்டிப்பாக இந்த கேள்விகளுக்குள் போகாமல் நமக்கு நல்லதென்று படுவதையோ, அல்லது மனசை தொடும் விதத்தில் அமைவதையோ உள்ளபடி மனம் திறந்து பாராட்டலாம் அல்லவா! உண்மையில் நல்ல மனசுக்காரர் மனம் திறந்து பாராட்டுவர். ஆனால் தன்னலமும், கர்வமும், ஆணவப்போக்கும் கொண்ட பேர்வழிகள் சாதாரணமாக யாரையும் பாராட்டமாட்டார்கள். இந்தக் குணாதிசயங்கள் ஐரோப்பிய மக்களிடம் மிக அரிதா-கவே இருக்கின்றன. அதனால் அவர்கள் யாரையும் மனமார பாராட்டுவார்கள். ஒவ்வொரு சின்ன உதவிகள், சம்பவங்கள், தகவல்கள் மற்றும் நண்பர்கள் ஏன் உறவினர்களுக்கு கூட தங்களின் நன்றியை, பாராட்டுகளை தெரிவிப்பார்கள்.

"உங்கள் மேலான உதவிக்கு நன்றிகள்..." "ஆயிரமாயிரம் நன்றிகள் உங்கள் செயல் பாராட்டுதல் பெறும்.." உங்கள் அன்பு போற்றுதலுக்குரியது...." இப்படியான பாராட்டுக்களையும், நன்றிகளையும் உள்ளத்திலிருந்தே உதிர்த்து விடுவார்கள். இவை உண்மையில் வெறும் சம்பிரதாயமான பாராட்டுகளோ, நன்றிகளோ அல்ல, அதற்கு மேலாக அவர்கள் அடிமனதிலிருந்து வருபவை.


பாராட்டுதல் என்பது நல்ல மனதோடு செய்யப் படவேண்டும். எம்மக்கள் மத்தியில் இது பலவடிவங் களில் வந்துவிழும். முகஸ்துதிக்காக பாராட்டுவது, தவிர்க்கமுடியாமல் ஒரு சூழலில் பாராட்டுவது, மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுங்கி பாராட்டுவது இப்படி பல விதமாக இருக்கும். ஒருவரின் திறமையினையும், கெட்டித்தனத்தையும், ஆற்றலையும் நாம் பாராட்டும்போது அது அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியையும், ஒரு உந்துசக்தியையும் கொடுக்குமல்லவா! அது அவர்களுக்கு மேலும் தங்கள் திறமைகளை வளர்க்க அருமருந்தாக இருக்குமல்லவா!

ஆகவே நாம் நல்ல செயல்களை பாராட்டு வோம். நாமும் நாகரீகமான மனிதர்கள் என்று உலகிற்குச் சொல்வோம். காழ்ப்புணர்ச்சி, தன்னலம், கர்வம், ஆணவம் போன்ற வைரசுகளை முற்றாக அழித்துவிடுவோமே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவில்கள்...?

இப்போதெல்லாம் பெரும்பாலான கோவில் களிலே கடவுள் இருப்பதில்லை. வியப்பாக இருக் கிறதா? "நல்லவர் உள்ளம் இறைவன் வாழும் இல்லம்" என்பது எல்லோருக்கும் தெரியும். நல்லவர் களின் உள்ளங்களிலே இறைவன் இருக்கின்றான். அப்போது தீயவர்களின் உள்ளங்களில் கடவுள் இருக்கமாட்டார் என்பது அர்த்தமா? இல்லை. தீமை, என்பது கடவுளுக்குப் பிடிக்காத செயல். அதனால் அந்த உள்ளங்கள் கொண்ட மக்களிடம் அவர் இருக்கமாட்டார்.

பல கோவில்களில் தற்போது நடந்து கொண்டி ருக்கும் பலவிதமான தவறுகள், முறைகேடுகள், கோவில் சொத்துகளை அபகரித்தல், நன்கொடைப் பணத்தில் திருட்டுக்கணக்கு எழுதுதல், உண்டியல் பணத்தை கையாடுதல், நல்ல உள்ளம் இல்லாத குருக்கள்மார், அர்ச்சகர்மார், கடவுளுக்கு அளிக்கப் படும் பூஜைச் சாமான்களில் கையாடல், கலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் ஆகிய தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்தில் கடவுள் எப்படி இருப்பார்? இருக்கமாட்டார்.

கோவிலுக்கு சென்று வணங்கிவிட்டு திரும்பி வருவதற்க்கான மொத்த நேரத்தில் எத்தனை நிமிடங்கள் நாம் உண்மையான பக்தியுடன் கடவுளை வணங்குகின்றோம்? கற்பூர ஆராதனை காட்டும் ஓரிரு நிமிடங்களில் மட்டும் அவரை நினைக்கின்றோம். அப்போதும் கூட கடவுளிடம் பேரம்தான் பேசுகின்றோம். எனக்கு இதை செய்தால், நான் உனக்கு அபிஷேகம் செய்வேன், எங்களுக்கு நன்மையைக் கொடுத்தால் நாங்கள் உனக்கு திருவிழா செய்கின்றோம், உற்சவம் நடத்துகின்றோம் என்று வியாபாரம்தான் செய்கின்றோம் இல்லையா?

கோவிலுக்கு சென்று கடவுளை வணங்குவதால் மட்டும் நல்ல பலன்கள் கொடுப்பதாக இருந்தால், தினந்தோறும் பல மணி நேரங்கள் அவருக்கு அருகிலேயே இருந்துகொண்டு வழிபாடு செய்துகொண்டிருக்கும் அர்ச்சகர், குருக்கள்மாருக்கு கடவுள் பல மடங்கு நன்மைகளை, சிறப்புகளை அவர் அளித்திருக்கவேண்டும். அப்படி அவர் செய்வதில்லையே. எங்களுக்கு வாழ்க்கையில் கிடைக்கும் நன்மைகள் எல்லாம் நாம் கோவிலுக்கு சென்று கடவுளை வணங்குவதால்தான் கிடைத்தது என்று நாம் நினைக்கின்றோம். அப்படியல்ல. நாம் நடைமுறை வாழ்க்கையில் செய்யும் நல்ல காரியங்களுக்காகத் தான் கடவுள் நமக்கு நன்மைகள் அளிப்பார் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புரிந்துகொள்வதில்லை. நம் பிரார்த்தனைக்கு ஒருமடங்கு பலன் கிடைக்கும் என்றால், நமது நல்ல செயலுக்கு நூறு மடங்கு பலன் கிடைக்கும்.

ஆகவே, கடவுளை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு கோவில்களில் நல்ல உள்ளத்துடன் சென்று துதித்தால் நமக்கு நன்மை உண்டாகும். எந்தக் கடவுளை வணங்கு வதென்றாலும், எந்தக் கோவிலுக்குச் செல்வதென்றா லும் நமது மனசு அழுக்கில்லாமல் இருக்க வேண்டும். கடவுளின் ஒரு உண்மையான பக்தனின்மேல் உலகத் திலுள்ள அத்தனை சக்திகள் ஒன்றாக சேர்ந்து எதிர்த்தாலும் அவனை ஒரு தீங்கும் அணுகாது. கோவில்களில் இறைவன் இருப்பதற்கு கோவில் நிர்வாகிகள் இடம் கொடுப்பார்களா? அதை முதலில் செய்யுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித நேயம்.....

மனிதநேயம் என்றால் என்ன? பிறருக்குத் துன்பம் அளிக்காமல் இருத்தல், மற்றவர்களையும் மதித்து நடத்தல், ஏழைகளின் துன்பத்தைப் போக்குதல், இளகிய இதயமும், இரக்க சுபாவமும், உறுதியான செயல்பாடுகளும் கொண்டிருத்தல் என்று சொல்லலாம். மொத்தத்தில் கடவுளால் மதிக்கப்படும் புண்ணியத்தை கொடுக்கிற செயல்களை செய்தல் மனித நேயம். எந்த மனிதனிடம் மனித நேயம் அதிகமாக இருக்கிறதோ அவன் உயர்ந்து நிற்கிறான். கடவுளின் கருணையைப் பெறுகிறான். மனிதநேய மாந்தர்கள் அதிகம் உள்ள நாடுகள் எல்லாவகையிலும் மேலோங்கி நிற்கின்றன. இந்த நாடுகள் செல்வம், ஆரோக்கியம், கல்வி, சுகாதாரம், மற்றும் வசதிகள் எல்லாம் நன்றாக இருக்கும். மனிதநேயம் குறைவாக உள்ள நாடுகளிலே வறுமை, நோய், பஞ்சம், பட்டினி அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் தர நாடுகள் எல்லாமே மனித நேயம் குறைந்த நாடுகளாக இருக்கின்றன என்ற ஒரு கணிப்பை ஒரு சமூக நிறுவனம் ஆராச்சி செய்து வரிசைப்படுத்தி ஒரு பட்டியலையும் வெளி யிட்டிருக்கிறது. அதில் இந்தியா, சிறிலங்கா, பாக்கிஸ்தான், போன்ற நாடுகள் முறையே 136, 178, 180 என்ற இடங்களை பிடித்திருக்கின்றன. இந்த நாடு களிலே மனிதர்களை மனிதராக மதிக்காத தன்மையும், தாழ்ந்தோர், உயர்ந்தோர், ஏழை,பணக்காரன் என்ற பாகுபாடுகள் வெகுவாக பார்க்கப் படுகிறது. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று சுவாமி விவேகானந்தர் சொல்லி இருக்கிறார். இந்த மக்கள் சேவை மனப்பான்மை இந்த நாடுகளிலே இல்லை.

சுவாமி மேலும் சொல்கிறார், "கோவிலில் உள்ள விக்கிரகத்திலே கடவுளை பார்க்கிறவன் பக்தியின் அடிமட்டத்தில் நிற்கின்றான். ஆனால் ஒரு விதவை யின் கண்ணீரைத் துடைப்பதிலோ, அல்லது பசி-யோடு இருக்கும் ஒரு ஏழைக்கு உணவளித்து அவன் பசியைப் போக்குவதிலோ, பிறர் துன்பத்தைத் துடைப்பதிலோ அவன் கடவுளை காண்கிறான். மேலே உயர்ந்து நிற்கின்றான்.

என்றும் சொல்லி இருக்கின்றார்.

இப்பொழுதெல்லாம் எங்கு பார்த்தாலும் கோவில்கள். புலம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் மத்தியில் அவர்கள் வாழும் நாடுகளிலே ஏகத்துக் கும் கோவில்கள் "கோவில் இல்லாத ஊரில் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டாம்'' என்று சொல்வது என்னவோ உண்மைதான். அதற்காக கண்ட கண்ட இடங்களி லெல்லாம் கோவில் அவசியம் தானா? கோவில் இப்பொழுது வியாபார நோக்கத்திற்காக பல இடங் களில் இயங்குகின்றன என்ற பேச்சுகளும் உலவு கின்றன. மனிதநேய மாந்தர்களுக்கு இந்த திடீர் கோவில்கள், அதன் வழிபாடுகள் பற்றி எல்லாம் தெரியாது. அவர்கள் விவேகானந்தர் சொல்வதுபோல் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று அதன்படி போயிற்றே இருப்பார்கள். அவர்களுக்கு தெய்வ வழிபாடு எல்லாம் அவர்கள் மனம்தான்.

"நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புஸ்பம் சாற்றியே.. சுற்றிவந்து முணுமுணுக்கும்.. மந்திரங்கள் ஏதடா?.. நட்ட கல்லு பேசுமா? நாதன் உள் இருக்கை யில்'' என்று ஒரு சித்தர் பாடல் சொல்வது இந்த மனித நேய மாந்தர்களுக்குப் பொருந்துமோ?

வாழ்க்கை முழுவதும் பிறருக்கு தீங்கும், கெடுதலும் செய்துவிட்டு, ஆயிரம் அன்னதானங்களும், கொடுப்பனவுகளும், அபிஷேகங்களும், செய்வதில் ஒன்றும் ஆகப்போவதில்லை. சொந்த சகோதரங் களையே ஒதுக்கிவிட்டு தீர்த்தம், திருவிழா, பூசை புனஸ்காரம் என்று பெரிய மனித தோரணையில் உலவு வது ஒரு பலனையும் தரமாட்டாது. கடவுள் நன்கு அறிவார்...


ஒரு சாதாரண மனிதனே புகழ்ச்சி, போலி பணிவு, என்பனவற்றிற்கு ஆளாகாமல் எந்தவித சிபாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகளுக்கும் இடம் கொடுக்காமல் நியாய நேர்மையுடன் சரியான ஆட்களை தேர்ந்தெடுக்கையில், எல்லாம் அறிந்த எல்லாம் வல்ல கடவுள் நமக்கு நன்மை அளிக்கும்போது எவ்வளவு துல்லியமாக கணக்குப் போட்டு அளிப்பார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். "தவறான ஆத்திகனைவிட, நல்ல நாத்திகனே மேல்" என்று சொல்வார்கள். நாத்திகன் கடவுளை இகழ்ந்து பேசினாலும் கடவுள் அதை பொருட்படுத்தமாட்டார். ஆனால் வாழ்க்கையிலே பல தவறுகள் செய்துகொண்டு தினமும் மணிக்கணக்கில் தன்னை பிரார்த்தனை செய்கின்ற தவறான ஒரு ஆத்திகனை கடவுள் தண்டிப்பார்.

ஆக, மனிதநேயத்துடன் வாழ்ந்தாலே அது கடவுளை நாம் தினமும் துதிப்பதாக அர்த்தமாகிறது. முடிந்தவரை கடவுளிடம் கோரிக்கை, வேண்டுகோள் வைக்காமல் இருப்போம். அவர் எல்லாம் அறிந்தவர். அவருக்கு எப்போது, எவ்வளவு, யாருக்கு கொடுக்க வேண்டும் என்பது தெரியும். மனிதநேயத்துடன் மனிதர்களாக நாம் வாழ்ந்தாலே போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தகங்கள் படியுங்கள்....

“வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகிறது, வாசித்தல் ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது” என்றெல்லாம் நாம் அறிந்திருக்கிறோம். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் எல்லோரும் நிறையவே வாசித்து தங் களை முழுமையான மனிதர்களாக ஆக்கிக் கொண்டார்கள். எத்தனையோ அறிஞர்கள் தங்களின் மரணத் தருணத்திலும் புத்தகம் படித்துக்கொண்டே உயிரை விட்ட செய்திகளும் இருக்கின்றன. குறிப்பாக பேரறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்களை சொல்ல முடியும்.

நண்பர்கள்கூட சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏமாற்றி விடுவார்கள். ஆனால் புத்தகங்கள் எப்போதும் எங்களை ஏமாற்றாது. அவைகள் என்றுமே எங்கள் நல்ல நண்பர்களே. இந்த புத்தக நண்பர்கள்மூலம் அநேகர் பல பிரச்சினைகளிலிருந்து தெளிவு பெற்றிருக் கிறார்கள். ஆனால் இன்றைய தகவல் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பங்களின் அபார வளர்ச்சியினால், வாசித்தல் வெகுவாக குறைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

தற்போதைய இளைஞர் சமுதாயம் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங் களிலும் தங்கள் பாடத்திட்டங்களுடன் கூடிய புத்தகங்களை படித்துவிட்டு அதை அடிப்படையாக கொண்டு நடத்தப்படும் தேர்வுகளில் தோற்றி, வெற்றி பெறுவதையே பெரிதாக நினைக்கிறார்கள். இது அவர்கள் படித்த பாடங்களைக் குறித்ததாகவும், உணர்த்துவதாகவும் இருக்கும். ஆனால் அவர்களுக்கு தேவையான பொது அறிவையோ, படிக்கும் ஆற்றலையோ, நல்ல ஆளுமையையோ தரமாட்டாது. இவைகள் ஏனைய புத்தகங்கள் படிப்பதால் மட்டுமே கிடைக்கும். இளைஞர்களோ, மாணவர்களோ குறிப்பிட்ட புத்தகங்களைத்தான் படிக்கவேண்டும் என்றில்லை. எதைவேண்டுமென்றாலும் படிக்கலாம். "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்று ஒரு சொல வடை இருக்கிறதல்லவா. ஆகவே எல்லாவகையான நூல்களையும் படிக்கலாம்.

புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை நாம் ஏற் படுத்திக்கொள்ளவேண்டும். இந்த பழக்கத்தை நமது சின்ன வயதிலிருந்தே தொடங்கினால் நல்லது. புத்தகம் படிக்கும் பழக்கம் நம் அனைவருக்கும் இருந்தால் அது நமக்கு வாழ்வில் எந்த சலிப்பையும் தராது. நல்ல சிந்தனை ஆற்றல் நிறைந்த நூல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும்போது நமது அறிவின் ஆற்றல் அதிகரிக்கும். நமக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களை புத்தகம் படிப்பதிலே செலவிட்டால் நல்லது. இப்போது வெளி யாகும் புத்தகங்கள் புதுமையான முறையிலும், வேறு பட்ட கோணத்திலும் நல்ல கருத்துகளை, செய்திகளை, உலக நடப்புகளை சொல்வதாக இருக்கின்றன. கவிதை, உரைநடை, இலக்கியம், வரலாறு, புதினம், அறிவியல், புவியியல் பொறியியல், கணிப்பொறி, சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், அர்த்தமுள்ள புதுக்கவிதைகள், மற்றும் தொழில் துறை சார்ந்த புத்தகங்கள் என்று இப்பொழுது ஏகப்பட்ட புத்தகங்கள் கிடைக்கின்றன.

நாம் எந்த நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டின் நடப்புகளையும், உலகச் செய்திகளையும் அறிய செய்தித்தாள்களையும் படிக்கவேண்டும். மற்றும் வார, மாத சஞ்சிகைகளிலும் கவனம் செலுத்தினால் பல சுவையான தகவல்கள் நமக்கு கிடைக்கும்.பல பொது அறிவு சம்பந்தப்பட்ட நூல்களை வாங்கிப் படித்து நமது அறிவை அதிகரிக்கலாம். பலவகைப்பட்ட ஆற்றல் மிக்க புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை இளைஞர்கள் கைக்கொண்டால் அவர்கள் வாழ்வு சுவையாகிவிடும்.

புத்தகம் படிக்கும் பழக்கம் எங்கள் அறிவாற் றலுக்காக.. அறிவாற்றல் எங்கள் வாழ்க்கைக்கும், எதிர்காலத்திற்கும் என்று கொள்வோமே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவைத்திற... அனைத்தும் புரியும்...

காவி உடையும், கழுத்தில் உருத்ராட்ச மாலையும், தலையில் கட்டிய தலைப்பாகையும், குங்குமப்பொட்டும், குடுமி கட்டும் அளவுக்கு கூந்தலும் கொண்டவர்கள் தங்களை சுவாமி என்றும் கடவுளின் அவதாரம் என்றும் கூறிக்கொண்டு பாமரமக்களை மட்டுமல்ல, படித்த பலரையும் தங்கள் வலைக்குள் சிக்கவைத்துவிடுவது தமிழ் நாட்டில் காலம்காலமாக நடக்கும் ஓர் ஆன்மிகக்கூத்து என்று சொல்லலாம்.

இந்த ஆன்மிகக் கூத்தில் ஆட பல ஆசாமிகள் கட்டியம் கூறிக்கொண்டு இன்றும் களத்தில் நிற்க்கின்றார்கள். இந்த போலிச் சாமியார்கள் பற்றி பார்ப்பதற்கு முன்பாக உண்மையில் தங்களை துறவிகளாக்கிக் கொண்டு முற்றும் துறந்த முனிவர்களாகவும், அன்பே சிவம் என்ற கோட்பாட்டில் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். குறிப்பாக இராமகிருஷ்ணபரமஹம்சர் இவர் சீடராக வந்த சுவாமி விவேகானந்தர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வள்ளலார், திரு முருக கிருபானந்த வாரியார் போன்றோரைச் சொல்லலாம். எந்தவித ஆசாபாசங் களும், சொத்து சுகங்களும் இல்லாமல் தங்களை உண்மையான துறவிகளாக ஆக்கிக்கொண்டு வாழ்ந்து மறைந்தார்கள். உன்னதமான இந்த மகான்களை மக்கள் இன்றும் போற்றுகின்றார்கள்.

இந்த ஆன்மிகத் துறவிகள்போலே பிற்காலத்தில் பல போலித் துறவிகள் தமிழகம் எங்கும் புற்றீசல் போலப் புறப்பட்டார்கள். உழைத்துப்பிழைத்து வாழ முடியாத சுத்த சோம்பேறிகளுக்கு இந்த சாமியார் வேடம் மிகவும் வசதியாக இருந்தது. ஓர் ஆலமரமோ, ஒரு வேப்பமரமோ அல்லது ஒரு கற்குகையோ, ஒரு மலையடிவாரமோ எது தங்களுக்கு வசதியாகப் படுகிறதோ அதைத் தெரிவு செய்துகொண்டு இந்த போலிச் சாமியார்கள் பிழைப்பு நடத்தத் தொடங்கினர்.

முதலில் இவர்கள் வலையில் படிப்பறிவில்லாத பாமரமக்களே விழுவார்கள். இவர்களை தங்களின் பக்தர்களாக்கிக்கொண்டு இல்லாத பொல்லாத விடயங் களையும் பில்லி, சூனியம், காட்டு, கறுப்பன், கொள்ளிவாய், மோகினி என்றெல்லாம் அவர்களைப் பயப்படுத்தி அதற்குப் பரிகாரம் என்று சொல்லி அந்த அப்பாவி மக்களிடமிருந்து பிடுங்கித் தின்று வயிற்றை வளர்த்த இந்த போலிச் சாமிகளின் வண்டவாளங்கள் பலமுறை வெளியில் வந்தாலும், இன்னும் அந்த மண்ணிலே காவி உடுத்த வேடதாரிகளின் திருவிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. மேலும் இந்த ஆசாமிகள் தங்கள் பக்தர்கள் என்று சொல்லும் படிப்பறிவில்லாத மக்களை தங்களின் வக்கிர குணங்களின் உந்துதலினால் வரும் காம, குரோத இச்சைகளுக்காகவும் இசைவாக்கிக்கொண்டு பெண்பித்து பிடித்தவர்களாக இருந்து அனேக பெண்களின் வாழ்க்கையைச் சிதைத்து பாழாக்கி இருக்கிறார்கள். இதனால் பொதுமக்களால் துரத்தி அடிக்கப்பட்டும் நீதியின் முன் நிறுத்தப்பட்டும் தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

சில வருடங்களுக்குமுன் சுவாமி பிரேமானந்தா என்று சொல்லிக்கொண்டு பெரிய அளவில் திருச்சிப் பக்கம் ஆச்சிரமம் அமைத்து சாமானியன் தொடக்கம் அரசியல்வாதிகள்வரை தன் கைக்குள் வைத்துக்கொண்டு கோடானகோடி சொத்துக்களும் சேர்த்துக்கொண்டு பல பெண்களுடன் லீலைகளும் புரிந்த ஒரு ஆசாமியை உலகம் அறியும். பின்பு இந்த மனிதன் பிடிபட்டு தண்டனைபெற்றும் சிறை யிலேயே இருக்கிறார்.

இப்படி இருக்கையில் திருவண்ணாமலையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு வாலிபன் தான் சாமியாராகப் போகின்றேன் என்று சொல்லிக்கொண்டு சில வேத, உபநிடந்தங்களை கற்றுக்கொண்டு சாமி யார் வேடத்தில் இந்திய நாட்டின் பல மாநிலங்கள், பல ஊர்கள் என்று சுற்றிக் கொண்டு தனக்கென ஒரு கணிசமான மக்கள் கூட்டத்துடன் தன்னை சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியானந்தா என்று சொல்லிக்கொண்டு பெங்களூரில் வந்து குந்திக்கொண்டான். இந்தக் கள்ளச்சாமிக்கு அதிர்ஷ்டம் வந்து கதவை தட்டியது.

அதனால் ஆச்சிரமம், ஆள்பலம், பணியாட்கள், அரசியல் பலம், பெண்கள் சகவாசம், இளைஞர்கள் கூட்டம் மற்றும் படித்த நல்ல அறிஞர்கள் கூட்டம் என்று வரவுகள் வர மனிதன் எங்கேயோ போய்விட்டான்.

நண்டுகொளுத்தால் பொந்தில் இருக்காது என்பதுபோல வருமானமும், சொத்தும் சுகங்களும் பெருகிவர மக்கள் மத்தியில் தனது கவர்ச்சி பிரசங்கங்களை விதைத்தும் "கதவைத்திற காற்று வரட்டும்" என்று ஒரு வார சஞ்சிகையில் ஓர் ஆன்மிகத் தொடரை எழுதியும் மக்கள் பலரை தன்பால் ஈர்த்துக் கொண்டான். அத்தோடு அமெரிக்க, ஐரோப்பா என்று மேற்குலக நாடுகளிலும் தனது ஆச்சிரம கிளைகளை நிறுவிக்கொண்டான்.

கோடிக்கணக்கில் பணம் புரண்டது. வாலிப முறுக்கேறிய உடலுடன் பல பெண்களை இவன் அணுகி தன் இச்சையைத் தீர்த்துக்கொண்டதாக இவனிடம் சீடராக இருந்த பலர் தெரிவித்தும் ஆதாரம் இல்லாமல் நிருபிக்க முடியாமல் போனது. இந்த நேரத்தில்தான் நடிகை ரஞ்சிதாவுடன் இவன் சல்லாபித்த காட்சிகள் இந்திய தொலைக் காட்சிகளிலும், உலகம் முழுவதும் வலைத்தளங்களிலும் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்து இந்தப் போலிச் சாமிக்கு தமிழகத்தில் பெரும் எதிர்ப்பும், விமர்சனங்களும் வந்தன. ஊடகங்கள் முழுதும் இவனின் சல்லாபக் காட்சிகளை ஒளிபரப்பின. இதற்கு மறுப்பு தெரிவித்த இந்தப் போலிச் சாமியார், இது உண்மையல்ல, நான் அவனல்ல என்று வாதாடினான். பின்பு தலைமறை வானான். நடிகையும் தலைமறைவு என்று பத்திரிகை கள் செய்தி வெளியிட்டன. அதன் பின்பு இவன் சரண் அடைந்து சிறை சென்றான். பின்பு பிணையில் வெளிவந்து இப்பொழுது மீண்டும் தன் பரிவாரங் களுடன் தன் கூத்தை ஆடத் தொடங்கிவிட்டான்.

இப்பொழுது அமெரிக்க தனியார் தடைய, தொழில் நுட்ப அமைப்பொன்றிடம் இருந்து முன்பு காண்பிக்கப்பட்ட படக்காட்சிகள் உண்மையல்ல அது சோடிக்கப்பட்டவை என்று அத்தாட்சி பத்திரம் வாங்கி அதை ஊடக வியலாளர்களை கூட்டி பல-ரையும் நையாண்டி செய்தும், குதர்க்கமாக பேசியும், பதில்சொல்லியும், ஆடம்பரமான தன் வாழ்க்கையை மீண்டும் தன் பரிவாரங்களுடன் தொடங்கிவிட்டான்.

இவனது இந்த நடவடிக்கை குறித்தும் அந்த அமெரிக்க நிறுவனத்தின் முடிவு பற்றியும் இந்திய தடையவியல் வல்லுனர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டபோது, அவர்கள் அமெரிக்க அறிக்கை பொய்யானது. அந்தப் படக்காட்சிகளில் இருப்பது நடிகை ரஞ்சிதாவும், நித்தியானந்தாவும்தான் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார்கள். ஒருவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க நிறுவனத்திற்கு போலியான படக்காட்சிகள் கொடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது பெரும் பணம் கொடுத்து அந்த சான்றிதழைப் பெற்று இருக்கலாம் என்று கூறிவிட்டார்கள்.

இந்தக் கட்டுரை சொல்லவருவது என்ன வென்றால் என்னதான் விஞ்ஞானமும், அறிவியலும் வளர்ச்சி அடைந்து இன்று உயரத்திற்கு போனாலும் இந்திய மக்களிடம் இருக்கின்ற ஆன்மிக அடிமைத்தனம் ஆட்டம் காணப்போவதுமில்லை ஆச்சிரமங்களும், ஆசாமிகளும் ஒழியப்போவதுமில்லை. பெரியார் சொல்லுவார்...

> "உன் சாத்திரத்தைவிட... உன் சம்பிரதாயத்தை விட....
> உன் முன்னோரைவிட.. உன் வெங்காய விளக்கு மாத்தைவிட...
> உன் அறிவே பெரியது..... அதை சிந்தி"

என்று. இதை இந்த மக்கள் சிந்திப்பார்களா?

அறிவுக்கண்ணைத் திறவுங்கள்... அப்போது அனைத்தும் புரியும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மருத்துவர்கள் ?

புலத்தில் பணியில் இருக்கும் தமிழ் மருத்துவர் களின் அசட்டுத்தனத்தாலும், அசமந்தபோக்காலும் எம்மில் பல உயிர்கள் அற்ப ஆயுளில் இந்த உலகத்தைவிட்டும், உறவுகளைவிட்டும் பிரிந்துவிடு வது பரவலாக புலம்பெயர்ந்த நாடுகளில் நடக்கின்றது. புலத்தில் வாழும் எம் மக்கள் அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள மருத்துவர்களையும், வைத்தியசாலைகளையும் நாடவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆங்கிலத்திலோ, பிரன்ஸ்லோ, டொச்சிலோ அல்லது ஸ்கண்டிநேவிய மொழிகளிலோ போதிய புரிதல் இல்லாத அநேகர் தமிழ் வைத்தியர் களை நாடும் வழக்கம் இருக்கிறது. உண்மையில் இது ஏற்றுக்கொள்ளவேண்டிய விடயம்தான்.

தங்கள் உடல் நோய்கள் பற்றியும், நோய்களின் அறிகுறிகள் குறித்தும் தாய்மொழியில் பேசி, தமிழ் மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுவது ஒரு ஆரோக்கி யமான விடயமே. பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹோலாந்த் மற்றும் கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் எம் மக்கள் வாழ்கிறார்கள். இந்த நாடுகளிலுள்ள மருத்துவமனை விதிகளின்படி ஒரு நோயாளிக்குரிய பிரத்தியேக பொது மருத்துவர் ஒருவரை பொதுமக்கள் தெரிவுசெய்து அவர்களிடம் தங்களை பதிவு செய்துகொண்டு அவர்கள் மூலமாகவே சிகிச்சை பெறமுடியும் என்று இருக்கிறது. இந்த GP, FAST LEGEN என்று அழைக்கப்படுகின்ற பொது மருத்துவர் மூலம்தான் ஒரு நோயாளிக்கு பெரிய அளவில் சிகிச்சையோ அல்லது சத்திரசிகிச்சையோ செய்துகொள்ள முடியும். அதனால் இந்த பொது மருத்துவர் என்பவர் மிகவும் முக்கியமானவர் ஆகின்றார்.

இந்தப் பொது மருத்துவரின் கவனிப்பும், கருத்தும், நோய்பற்றி அவர் அறிந்து செயல்படும் விதமும் ஒரு நோயாளிக்கு மிக முக்கியமாகும். இதனால்தான் புலத்தில் வாழும் எமது மக்கள் தாய்மொழி பேசும் தமிழ் மருத்துவர்களை தங்கள் பொது மருத்துவர்களாக தெரிவு செய்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் பல தமிழ் மருத்துவர்கள் தமிழர்களாக இருந்தும் தமிழில் பேசுவதில்லை. தங்களின் பந்தாவையும், வீம்பையும் காட்டுவதற்க்காக ஆங்கிலத்திலே பேசுவதுண்டு. இந்த ஈனப் பிறவி-களை என்னசெய்வது?, சரி அது போகட்டும். இந்தப் பொது மருத்துவர்கள் எப்படி நோயாளிகளிடம் நடந்துகொள்கின்றார்கள் என்பதுதான் இன்றைய பல கோடி பெறுமதியான கேள்வியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் பலர் தங்கள் சொந்த நாட்டில் மருத்துவம் படித்து பின்பு மேற்குலக நாடுகளுக்கு வந்து சிறப்பு தேர்வுகளும், பயிற்சிகளும் பெற்று வைத்தியர்களாக பணிபுரிகின்றார்கள். சிலர் ஐரோப்பிய நாடுகளிலும், பிற நாடுகளிலும் மருத்துவ படிப்பை முடித்து வைத்தியர்களாகின்றார்கள்.

உண்மையில் மருத்துவப் படிப்பு மேன்மையான படிப்பே. மக்கள் கடவுளுக்கு அடுத்தபடியாக மருத்து வர்களையே பார்கிறார்கள். ஆனால் சில மருத்துவர்கள் நோயாளிகளிடம் எப்படி நடந்துகொள்கின்றார்கள் என்பது பற்றி பல விமர்சனங்கள் இருப்பதாக அறிய முடிகின்றது. லண்டன், டொராண்டோ போன்ற மாநக ரிலே இயங்கும் வைத்திய நிலையங்களிலே பணிபுரி யும் தமிழ் மருத்துவர்களில் பலர் தங்களின் நோயாளி களுடன் அன்பாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்வதில்லை என்றும் நோய்களின் அறிகுறிகள் தெரிந்துகொண்டு எந்த வகையான நோய் என்பதை அறிந்து நோயாளிக்கு சிகிச்சை அளிக்க தவறிவிடு கின்றார்கள் என்றும் மற்றும் நோயாளிகளே தங்களின் நோயின் தன்மைபற்றியும், அதன் தாக்கம், அதனால் அடையும் துன்பம், வலி என்பனவற்றை சொல்லியும் மருத்துவர் சிலர் அக்கறை எடுப்பதில்லை என்றும் பல செய்திகள் காதுகளுக்கு எட்டுகின்றன.

இப்படியான மருத்துவர்கள் கண்டிப்பாக தங்களின் போக்கை உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும். மருத்துவத்துக்கும், மனிதத்திற்கும் இவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பு கொடுக்க வேண்டும் என்று இக் கட்டுரை வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

அண்மையில் லண்டனில் ஒரு தமிழ் மருத்துவரின் அலட்சியப் போக்கினால் அற்புதமான குணநல சிறப்புகள் கொண்ட, உயர் பதவியில் இருந்த ஒரு தமிழ் பெண் அநியாயமாக மரணம் அடைந்துள்ளார். அந்த இளம் பெண்ணின் மரணத்திற்கு ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் துக்கத்தையும் அனுதாபத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த இளம் பெண்ணின் இறுதிக் கிரியைகளிலும், நல்லடக் கத்திலும் கலந்துகொண்ட பெரும் திரளான மக்களி டையே குறிப்பிட்ட தமிழ் மருத்துவர் பற்றிய விமர்சனம் மிக கார சாரமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. அத்தோடு பல அறிவாளர்களின் உரையாடல்களும், இந்த அசட்டையாகவும், அலட்சியப் போக்காகவும் இருக்கும் பல தமிழ் மருத்துவர் பற்றியும் இருந்தது.

ஆக, இந்த அநியாய இறப்புகளுக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்க நாம் ஆவன செய்ய வேண்டும். மேற்கூறப்பட்ட விமர்சனங்களுக்கு பொருத்தமான மருத்துவர்கள் தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும், இல்லையென்றால் இவர்கள் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் இந்தக் கட்டுரை சொல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல தமிழ் பேச நாக்கு வராதோ.

தமிழ் படிப்பது அவமானம், தமிழ் பேசுவது இழிவு, தமிழ் எழுதுவது கேவலம் என்று ஏனைய இனத்தவர் அல்லது பிற மொழியாளர்கள் கருதினால், எண்ணினால், சிந்தித்தால் பரவாயில்லை. இதை தமிழர்களே கருதியதுதான் – எண்ணியதுதான் மிக மனவேதனைக்கு உரிய விடயமாகும். புலம் பெயர்ந்து இன்று எம்மவர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, கனடா, அவுஸ்த்ரேலியா போன்ற நாடுகளிலும் வாழ்கின்றார்கள். அந்தந்த நாட்டில் உள்ள மொழிகளைக் கற்றுக்கொண்டு நல்லபடியாக தங்களின் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். நல்ல உத்தியோகம், உயர் பதவிகள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. இது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஆனால் இவர்களின் பிள்ளைகளுக்குத் தமிழ் பேச, படிக்க, எழுத எத்தனை பேர் கற்றுக் கொடுக்கின்றார்கள் என்பது கேள்விக்குரியதே. தமிழ் படிப்பித்தால் தமிழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசக் கற்றுக்கொடுத்தால் தங்கள் பிள்ளைகளுக்கு வேலை, கிடைக்குமா, சோறு கிடைக்குமா, என்று எண்ணுகின்றார்களா அட நாய், பன்றிக்குக்கூட சோறு கிடைக்கிறது. தமிழ் எமக்கு சோறல்ல.. தமிழ் எங்களின் உயிர் என்பதை ஏன் நாம் புரிந்துகொள்ள மறுக்கிறோம். எங்கள் மூச்சு, அடையாளம், உறவு என்று எல்லாமே நம் தாய்மொழி தமிழ் தான்.

ஒரு மனிதனின் உடல்வளர்ச்சிக்கு தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ அதேபோல் அவனின் உளவளர்ச்சிக்கு அவனின் தாய்மொழி அவசியம். ஒரு குழந்தை தன் தாயிடமிருந்துதான் பேசுவதற்கு கற்றுக்கொள்கிறது. அது தன் தாய்மொழியில்தான் தன் கல்வியையும் கற்கவேண்டும். ஆனால் மேற்குலக நாடுகளில் வாழும் எம்மக்களுக்கு அவர்களின் பிள்ளைகளை அந்தந்த நாட்டு மொழிகளிலேயே கற்பிக்கும் கட்டாயம் இருக்கிறது. தமிழை இவர்களுக்கு வீட்டிலோ அல்லது விடுமுறை நாட்களில் இயங்கும் தமிழ் பள்ளிக்கூடங்களிலோ இவர்கள் கற்றுக்கொள்ள ஆவன செய்யலாமல்லவா?

எத்தனைபேர் இதில் ஆர்வமாக இருக்கிறார்கள். மற்றது முக்கியமான விடயம் என்னவென்றால் வீட்டில் இவர்கள் தமிழில் பேசுகின்றார்களா என்பதுதான். அநேகமான பெற்றோர்கள் வீட்டில் தங்கள் பிள்ளைகளுடன் தமிழில் பேசுவதில்லை. மாறாக ஆங்கிலத்திலோ, பிரான்சிலோ, டோச்சிலோ மற்றும் மேற்கு ஐரோப்பிய மொழிகளிலோதான் பேசுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இருக்கும்போது எப்படி பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ளும். எந்த மொழி வேண்டுமானாலும் படியுங்கள், கற்றுக்கொள்ளுங்கள். எல்லா மொழிகளை யும் நாம் கற்பது வாழ்வதற்காகவே. நம் உயிர் தாய்மொழியைப் படிப்பது நமது இனம் வாழ்வதற்கு என்பதை நாம் ஏன் மறந்துவிடுகின்றோம்.

உலகத்திலே நாம் எந்த மொழிபடித்தாலும். எவ்வளவு பெரிய உயர் நிலையில் இருந்தாலும் சொந்தமொழி, தாய்மொழி தெரியாவிட்டால் உலகம் எங்களை முட்டாள்கள் என்றுதான் சொல்லும். என்னடா தமிழ் படிக்க சொல்லி, தமிழில் பேசச் சொல்லி ஒரு பழமைவாதிபோல் இருக்கிறார்கள் சிலர் என்று பலர் எண்ணுவார்கள். அப்படியல்ல எமது வரலாற்றைப் படி, எமது தொன்மையை உணர், எமது பூர்வீகத்தை அறி அப்பொழுது தான் உன்னை நீ உணரமுடி யும் என்று சொல்வதை நாம் புரிந்துகொள்ளலாம். இதற்காக நாம் தமிழ் மொழியைப் படிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எமது பிள்ளைகளுக்கும் அதை கற்றுக்கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

இற்றைக்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இமயமலை, பொதிகைமலை என்று எமது மொழி தோன்றி, துலங்கி இருக்கிறது என்ற வரலாறு உண்டு. தமிழை தமிழாகவே பேசவேண்டும். பிறமொழி கலந்து பேசினால் அது தமிழ் அல்ல. அன்றும் சம்ஸ்கிருத மொழியின் கலப்புடன் எம் மொழி பேசப்பட்டது. இன்றும் நாம் பேசும்போது பலமொழி-களை தமிழில் கலந்தே பேசுகின்றோம். உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எந்த மொழி பேசுபவனும் தன் தாய் மொழி யுடன் பிற மொழியை மறந்தும் கலந்து பேசமாட்டான். காரணம் அது அவனுக்கு அவமானம். அப்படிப் பேசுவதற்கு எந்த அவசியமும் இல்லை.

சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர் கள் கட்டிக்காத்த தமிழை இன்று தமிழகத்தில் எப்படி பேசுகின்றார்கள்? என்பதை நாம் பார்க்கிறோம். அங்குள்ள வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில், தமிழ் திரைப்படங்களில் எல்லாம் எப்படி தமிழ் நாறடிக்கப்படுகின்றது என்பதும் நம்மில் பலருக்கு தெரியும். இதை அண்ணன் காசி ஆனந்தன் அவர்கள் தன் உணர்ச்சிக் கவிதைமூலம் அழகாகச் சொன்னார்." தமிழா நீ பேசுவது தமிழா" என்ற பாடல்மூலம்.

"ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் மொழியை முதலில் ஒழிக்கவேண்டும்" என்று ஹிட்லர் சொன்னான். இன்று ஏறக்குறைய எமது இனம் அழிந்து கொண்டு வருகிறது. இன்று தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் பெயரளவில்தான் அது தமிழ் நாடு. தமிழுக்கும் அதன் இனத்திற்கும் அது சுடுகாடாக மாறி இருக்கிறது. தமிழர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. நாம் தமிழில் பேசினால் மற்றவன் தன்னை தரக் குறைவாக எண்ணி விடுவானோ, படிப்பறிவில்லாதவன் என்று கருதிவிடு வானோ என்று அஞ்சுகிறான். ஆங்கிலமோ அல்லது வேறு ஒரு ஐரோப்பிய மொழி பேசினால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவன் என்று மற்றவர்கள் மதிப்பார்கள் என்று எண்ணுகின்றான். அமெரிகாவில் ஆடு மேய்ப்பவன் கூட ஆங்கிலம் பேசுகிறான். பிரிட்டனில் பிச்சை எடுப்பவன்கூட ஆங்கிலத்தில் பேசித் தான் பிச்சை எடுக் கின்றான். அது அவன் தாய் மொழி அதனால் அவன் பேசுகிறான். நமக்கு தாய்மொழி ஆங்கிலமா?. அழகு தமிழ் மொழி இருக்கும்போது நாம் ஏன் அந்நிய மொழி யில் பேசவேண்டும். ஆங்கிலம் ஒரு மொழி. அது அறிவா காது. ஆங்கிலம் படிச்சவன் எல்லாம் அறிவாளிகள் அல்ல. எவ்வளவு முட்டாள்கள் எல்லாம் ஆங்கிலம் பேசிக்கொண்டு அலைவதை நாம் பார்க்கின்றோம்.

அரிசியிலே நாம் கல்லை கலக்க அனுமதிப் போமா, பாலில் தண்ணீரை கலக்க ஒத்துக்கொள் வோமா இல்லையே. அப்படியென்றால் ஏன் நாம் தமிழில் மட்டும் பிறமொழியை கலக்க அனுமதிக்கிறோம். கூடாது. ஆங்கிலத்திலே பேசவேண்டுமா? அதில் பேசினால்தான் நமது நாக்கு அரிப்பு அடங்கும் என்றால் முழுமையாகக் பேசுவோம். அந்த மொழிக்கும் ஒரு மதிப்பு கிடைக்கும். அதை விட்டு விட்டு நாம் சொந்தமொழியையும் சரியாக பேசாமல் அடுத்தவன் மொழியையும் முறையாக பேசாமல் அல்லாடுகிறோம்.


உலகிலே நாம் எந்த மொழியையும் படிக்கலாம், அதில் தப்பொன்றும் இல்லை. அதற்கு முன் சொந்த மொழியை படிக்கவேண்டும். நமது பெற்ற தாயை பட்டினி போட்டுவிட்டு ஆயிரம் பேருக்கு அன்னதானம் கொடுப்பதுபோல்தான் தாய்மொழியை விட்டுவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறமொழிக்கு ஆலாவட்டம் வீசுவதும். இரண்டுமே பாவி கள் செய்யும் வேலையே.

ஆக புலத்தில் வாழும் நாம் எங்களையும், எமது எதிர்கால சந்ததியையும் நல்ல தமிழ் பேசு பவர்களாகவும், தமிழ் அறிஞர்களாகவும் ஆக்கிக் கொள்ள ஆவன செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிணற்றுத் தவளைகளா நீங்கள்?

உலகம் இன்று எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. அறிவியல் விஞ்ஞானமும், தொழில் நுட்ப வளர்ச்சியும், நாளுக்கு நாள் இந்த பூமியில் தோன்றும் புதுமைகளும், இந்த புதிய வரவால் ஏற்படும் பரபரப்பும் மனித குலத்தின் ஆரோக்கியமான ஆற்றலையும், அதி புத்திசாலித்தனத்தையும் இன்று ஒவ்வொருநாளும் உலகிற்கு அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றும் எமது மக்களில் ஒருசாரார் இந்த மாற்றங்கள் பற்றியோ நவீனத்துவத்தின் நன்மைகள், தீமைகள் குறித்தோ கண்டு கொள்வதுமில்லை, அறிந்து கொள்ள முற்படுவதுமில்லை. குறைந்தது மற்ற மனிதர்களைப் பார்த்தாவது தங்களின் நடையுடை பாவனைகளிலிருந்து மாறவுமில்லை.

இதில் இன்னும் மனதை நெருடும் விடயம் என்ன தெரியுமா, நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு வந்து பல வருடங்கள் வாழ்ந்தபின்பும், இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலக மக்களின் நாகரிக நடைமுறைகளையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் பார்த்தும்கூட இன்னும் இவர்கள் அநாகரிகமாக நடந்துகொள்வதும், உலகநடப்பு, மனிதநேயம் உணராதவர்களாகவும், வெறுமனே கிணற்றுத் தவளைகள் போல் இருப்பதும், இவர்களதும், இவர்கள் குடும்பத்தினரதும் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற கேள்வியை எழுப்புகின்றது.

வாழ்க்கைச் சக்கரம் சுழலும் போது அது மாற்றங்களை வாழ்வியலில் ஏற்படுத்தும். இது இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாததும், உலக நியதி யாகவும் பார்க்கப்படுகின்றது. இதையெல்லாம் உணர்ந்து கொண்டு தங்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் சிலர் இன்னும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்னதான் இவர்கள் இந்த வெளிநாடுகளில் வாழ்ந்து பணத்தையும், பொருளையும் சம்பாதித்துக் கொண்டாலும் நல்ல பண்பு பழக்கங் களையும், நாகரிகமான நடைமுறைகளையும், இனிமை யாக, கனிவாக, நல்ல சொற்களால், நல்ல வார்த்தை களால் பேசுவதை கற்றுக்கொள்ளாமல் இன்னும் தங்கள் ஊரில் வாழும்போது எப்படி இருந்தார்களோ (பலர் விதிவிலக்கு) அப்படியேதான் இன்றும் இந்த புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கிறார்கள்.

இங்கிதம் தெரியாதவர்களாக, இடம், பொருள், ஏவல் என்ற குறியீடுகள் புரியாதவர்களாக, நாலுபேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் எப்படி பேசுவது, நடந்துகொள்வது என்ற ஒரு தெளிவும், புரிந்துணர்வும் அற்றவர்களாக பலர் எம் மத்தியில் வாழ்கிறார்கள். இவர்களைப் பார்த்து மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்ற விவஸ்தையோ அல்லது “அட, அந்த இடத்தில் அப்படிப் பேசிவிட்டோமோ, அப்படி நடந்து விட்டோமோ என்ற ஒரு தன்னிலை உணர்ச்சி அல்லது இந்த சூடு,சொரணை என்பார்களே, அவைகள் அற்ற மனிதர்களாகவே இவர்கள் இருக்கிறார்கள்.

சில குடும்பங்களில் கணவன் மதுவுக்கு அடிமை யாகி இருப்பதுண்டு. இன்னும் சில குடும்பங்களில் கணவன், மனைவி, ஏன் பிள்ளைகள் கூட இதற்கு அடிமையாகி விடுவதுண்டு. கணவன் குடிகாரனாக இருக்கும் குடும்பத்தில் நாள்தோறும் பிரச்சினை இருக்கும். அளவுக்கு அதிகமாக அவன் குடித்துவிட்டு மனைவி, பிள்ளைகளை அவன் அசிங்கமாகவும், கெட்டவார்த்தைகள் கொண்டு திட்டுவதையும், வீட்டில் உள்ள பொருட்களை உடைப்பதையும் அவனது மனைவி மக்கள் விரும்ப மாட்டார்கள். மாறாக அவன்மேல் வெறுப்பைத்தான் கொட்டுவார்கள். மேலும் சில குடும்பங்களில் இது வேறுவிதமாகவும் நடக்கிறது. ஆண்கள் வாரத்தில் ஒருநாளோ, இரண்டு நாளோ மது அருந்தினாலும் மனைவிமார் அதை ஏற்றுக்கொள்வதில்லை. ஒரே ஏச்சும், பேச்சும் கொடுத்து தன் கணவனை கோபப்படுத்துவதுண்டு. மற்றவர்கள் முன்பாக தன் கணவனை இகழ்ந்து, தரக்குறைவாக பேசுவதுண்டு. இதனால் அவன் மனமொடிந்து மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியை நாடுகின்றான். தனது விருப்பமின்மையை அவள் தன் கணவனிடம் தனது வீட்டில் வைத்து சொல்லி, அவனைத் திருத்தவேண்டும். அதே போல் வாக்குவாதங்கள் வரும்பொழுது பாவிக்கப்படும் சொற்கள் அசிங்கமாக இல்லாமல் நாகரிகமாக இருக்கவேண்டும். சிலர் கேட்கவே நாராசமான சொற்களைச் சொல்லுவார்கள். இது அவர்களை, மற்றவர்களுக்கு தாங்கள் எப்படிப்பட்டவர் என்பதை காட்டிக் கொடுத்துவிடும். இவர்களுக்கு சமூகத்தில் நல்ல மதிப்பும், மரியாதையும் கிடைக்காது. நாளைக்கு இவர்களுக்கு ஒரு நல்ல காரியம் நடக்க இருந்தாலும், நல்ல பண்பாளர்கள், நாகரிகமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவர்களை கண்டு கொள்ள மாட்டார்கள். இது எங்கே பாதிக்கும் என்றால், இவர்கள் பிள்ளைகளுக்கு ஒரு கல்யாணம், காட்சி என்று வரும்போது பலர் இவர்களின் சம்பந்தத்தை ஒதுக்குவார்கள்.

இப்படி பலவிதங்களில் இவர்கள் பாதிப்படைவார்கள். பணம், பொருள், பண்டம் மட்டும் இருந்தால் மட்டும் போதாது. சமூகத்தில் நல்ல பெயர் இருக்கவேண்டும். நல்ல பெயர் வருவதற்கு ஆழ்ந்த அறிவுடன் கூடிய செயல்பாடுகளும், பழைய பழக்க வழக்கங்களை மாற்றும் போக்கும் இவர்களுக்கு வேண்டும். கிணற்றுத் தவளைகளாக இருக்காமல் இவர்கள் வெளியே வரவேண்டும். புதியனவற்றைப் பார்க்கவேண்டும். நல்லவற்றை நாடவேண்டும். அபோது தான் இவர்கள் வாழ்வு சிறப்பாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இவர்களுக்கு என்னதான் இருந்தாலும் வாழ்க்கையில் நிம்மதியும், மகிழ்ச்சியும் இருக்காது. உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். சந்தோசம் என்னும் காற்று வந்து உங்கள் வீட்டுக்குள் வீசும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைக்கு மேலே கத்தி

"தலைக்கு மேலே கத்தி" என்பார்களே அப்படித்தான் இருக்கும் அன்றாடம் மதுவை அருந்தித் கொண்டிருக்கும் தினக் குடிகாரர்களுக்கு. இந்த மது என்னும் மயக்கத்தைத் தருகின்ற பானம், இன்று நேற்று அல்ல மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே இருக்கிறது. சோமபானம், சுகிர்தபானம், மதுபானம் என்ற பலபெயர்களில் இது அன்று தொடக்கம் இன்றுவரை உலகம் முழுவதும் உபயோகத்தில் இருக்கிறது. இதை எப்பொழுது, எப்படி கையாள்வது என்பதில்தான் பிரச்சினை இருக்கிறது.

மதுவை மருந்தாகவும் சிலர் பாவிப்பதுண்டு. சிலர் விருந்தின்போது இதை அருந்துவதுண்டு. பலர் இதை மறந்தும் தொடுவது கிடையாது. ஆனால் அநேகம்பேர் இதற்கு அடிமையாகி, தினமும் முடாக்குடிகாரர்களாக மாறி கடைசியில் வாழ்வையே முடித்துக்கொள்ளும் பொழுதுதான் இதன் தாக்கம் இதனுடைய மூர்க்கம் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குடி, வாழ்க்கையின் வசந்தத்தை பறித்து விடும். குடும்பத்தின் குதூகலத்தை, சந்தோசத்தை, குழிதோண்டிப் புதைத்துவிடும். ஒருவன் குடிகாரனாகி விட்டால் அந்தக் குடி அவனின் கட்டிய மனைவியை, பெற்ற பிள்ளைகளை ஒட்டிய வயிற்றுடன் ஓட்டாண்டி களாக்கி வறுமைக்குள் தள்ளிவிடும். கடனாளி ஆக்கி விடும். அவனை அணுவணுவாகக் கொன்றுவிடும். உடல் உறுப்புகளைச் சுட்டுவிடும். நரம்புத் தளர்ச்சியை தந்து விடும். சமூகத்தில் அந்தஸ்த்தைக் குறைத்துவிடும். குடும்பத்தில் சண்டை சச்சரவைக் கூட்டிவிடும். மனைவி வெறுத்திடுவாள். பெற்ற மக்கள் ஒதுக்கிடுவார்கள். கடைசியில் காலன் வந்து, வாசலில் காத்து நின்று கழுத்துக்குக் கயிறை எறிவான். கதையும் முடிந்து விடும்.

நாகரிகமாக குடிப்பவர்களையும், அவ்வப்போது சந்தோசத்திற்காக மது அருந்துபவர்களையும் நாடி பிடிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக நாள்தோறும் குடித்து வாழ்க்கையை நரகமாக்கும் சிலருக்கு இந்தக் குடியின் கோரத்தாண்டவத்தை கோடிட்டுக் காட்டுவதேயாகும்.

இந்த மது என்னும் கொடிய அரக்கன்மேல் எப்போதும் விருப்பம் கொண்டு இருப்பவர்களை எவரும் கண்டு பயப்படவோ அல்லது மரியாதை செய்யவோ மாட்டார்கள். இவர்கள் வாழும் காலத்திலேயே வடிவிழந்து, பொலிவிழந்து, பொச்சியாகி, குச்சியாகி பலராலும் ஒதுக்கப்படுவார்கள்.

இந்த மதுவுக்கு அடிமையானவர்களுக்கு அச்சம், வெட்கம், சூடு, சுரணை எதுவும் கிட்டவராமல் எட்டவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும். தன் பணத்தைக் கொடுத்தே தன்னை அறியாத உடல் மயக்கத்தை வாங்குவது, ஒருவனின் அறிவீனத்தை காட்டுவதைவிட என்னவாக இருக்க முடியும். உறங்குபவர்கள், இறந்து போனவர்களிலும் வேறுபட்டவர்கள் இல்லை.

அதேபோல்தான் எப்போதும் மதுவை குடிப்பவன் நஞ்சு உண்பவரிலும் வேறுபட்டவன் அல்ல. இதைத் தான் வள்ளுவர் அழகாக சொன்னார்:

"துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லஎஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள் உண்பவர்" என்று... ஆகவே மதுவால் பாழாக்கப்பட்ட பேரறிவாளர்களே சிந்தியுங்கள். சுயத்தை மறந்து கற்பனை உலகில் உலவவிட்டு பல்லாயிரக்கணக்கான மனிதர்களை பித்தர்களாகவும், வெறியர்களாகவும் மாறச்செய்த மது என்னும் பிசாசைப் பற்றிச் சிந்தியுங்கள். இந்தக் குடியால் ஏற்படும் தாக்கங்கள், தற்கொலைகள், மூளைக் கோளாறுகள் மற்றும் பாதிப்புகளை எண்ணிப்பாருங் கள். மரண ஆற்றின் இருகரைகளிலும் உங்கள் சிதைவு கள் நிறைந்து கிடப்பதை நெஞ்சில் நிறுத்துங்கள். "தெளிவாக யோசிக்கும் ஒவ்வொரு மனிதனும் இழி பொருளாகிய மதுவை முற்றாக வெறுத்து ஒதுக்கி விடுவான்" அமெரிக்கரான இங்கர்சால் என்னும் அறிஞர்.

ஆக, தலைக்கு மேலே தொங்கும் கத்தியை தட்டி விடப்போகிறீர்களா? இல்லை, கழுதை தொங் கிட்டு போகட்டும் என்று உங்கள் வழி தொடரப் போகின்றீர்களா, என்று நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேர்ந்து வாழ்தல்...?

இருமனம் சேர்ந்ததுதான் திருமணம். இந்தத் திருமணம் ஆயிரங் காலத்துப் பயிர் என்று சொல்வார்கள். இதை நல்ல முறையில் விதைத்தால்த்தான் பயிர் செழித்து வளரும். ஆண், பெண் இருபாலாரின் உள்ளங்கள் நல்ல பண்பட்ட நிலங்களாக இருக்க வேண்டும். வறண்ட நிலமாகவோ, உப்புக்கரிச்ச நில மாகவோ இருந்தால் பயிர் செழித்து வளருமா? வளராது. பண்பட்ட நிலத்தில் விதைத்து விட்டால் மட்டும் போதுமா? அதற்கு உரமிட்டு, நீர்பாய்ச்சி, களை பிடுங்கி, பராமரித்தால்தானே நல்ல அறுவடையைப் பார்க்க முடியும். அதே போல்த்தான் திருமணம் முடித்தால் மட்டும் போதாது அதை நல்ல முறையில் வாழ்ந்து காட்டவேண்டும்.

எமது சமூகத்தில் இந்த திருமண சம்பந்தம் என்பது தலைமுறையாக இருந்துவருகின்ற சமாச் சாரமே. சிலருக்கு அது நன்றாக அமைந்துவிடுகிறது, பலருக்கு அது சிறப்பாக இருப்பதில்லை. ஆனால் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாச்சார விழுமியங்களுக்குள் இருப்பதால் கடைசிவரைக்கும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டில் வாழ்ந்து வந்திருக்கின்றோம்.

இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே திருவள்ளுவர் அவர் அருளிய திருக்குறளில் இல்லறவியல் என்று ஒரு அதிகாரமே கொடுத்து இல்லறத்தின் பெருமைகளையும், நல்லது, கெட்டது களையும் உலகிற்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார். மனைவியோடு கூடிய வாழ்க்கையை அதற் குரிய இயல்புகளோடு வாழ்பவனே, கடவுளை அறியவும், அடையவும் முற்படுபவனைக் காட்டிலும் முதன்மை யானவன்.

மனைவியோடு வாழ்பவன்தான் பிள்ளைகள், பெற்றோர், உறவினர் என்னும் மூன்று உறவுகளுக்கும் நல்ல வழியில் உதவுகிறவன் ஆகின்றான்.

திருவள்ளுவர் காலத்தில் ஆணுக்குத்தான் முதன்மை இருந்தது. என்றாலும் ஆணின் உயர்வுக்கு பெண்ணின் பங்களிப்பு கண்டிப்பாகத் தேவை என்றும் அவர் கூறுகின்றார். ஒரு பெண், மனைவி யான பின்பு, தான் பிறந்த, புகுந்த குடுப்பங்களுக்கு ஏற்ற நல்ல குணம், நல்ல செயல்கள் உடையவளாக தன்னை ஆக்கிக்கொண்டு, கணவனின் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவள் நல்ல மனைவி.

கற்பு எனப்படும் மனஉறுதி மட்டும் பெண்ணிடம் இருக்குமானால் அவளைவிட இந்த உலகில் மேலானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் இல்லை. அதேபோல் உடலாலும், உள்ளத் தாலும் தன்னைக் காத்து, தன் கணவனின் நலன் களில் கவனம் வைத்து, குடும்பத்துக்கு நலம் தரும் புகழைக் காத்து, அறத்தைக் கடைப்பிடிப்பதில் சோர்வு இல்லாமல் இருப்பவள்தான் மனைவி என்றும் அழகாகச் சொல்லிவைத்திருக்கிறார்.

ஆக, பண்டைய காலங்களில் காதலும், கற்பும், களவொழுக்கமும் இருந்தாலும் அன்பும்,அறனும் ஒருமித்த வாழ்வும் இருந்திருக்கிறது. ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற உறவை திருக்குறளில் நாம் கண்டு வியக்கின்றோம். ஆனால், இப்பொழுதெல்லாம் மேற் குலக நாடுகளில் திருமணம் என்ற பாரம்பரியம் மிகமிகக் குறைந்து, சேர்ந்து வாழ்தல் (Living together) என்ற ஒரு நிலை உருவாகிவிட்டது. யாரும் யாருடனும் எப்பொழுது வேண்டுமானாலும் சேரலாம், வாழலாம், குடும்பம் நடத்தலாம், குழந்தைகள் பெற்றுக் கொள்ள லாம். இடையில் பிடிக்கவில்லையென்றால் விட்டு விடலாம் என்ற போக்கு நிலவுகிறது. இது மேற்குலக நாகரிகத்தில் பெரிய விளைவுகளை ஏற்படுத்து வதில்லை. ஏனென்றால் அவர்களது கலாச்சார விழுமியங்களுக்கு இந்த நடை முறை ஏற்புடையதே.

ஆனால் எமது பண்பாட்டுக் கோலங்களுக்கு இந்த நடைமுறை ஒத்துவருமா? என்றால் நிச்சயமாக இல்லை. இதை எம்மவர்களால் ஜீரணிக்க முடியாது.ஆனால் அறிவியல் உலகமென்றும், நாகரிக வளர்ச்சி என்றும் வந்த பின்பு இந்தக் கட்டுக் கோப்புகள், கால்விலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடுதல் எல்லாம் தேவைதானா? எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும், நாங்களும் வாழ்க்கையை மற்ற இனத்தவர் போல் இனிமையாக நுகரவேண்டும், அனுபவிக்க வேண்டும் என்று எம்மவர்களில் பலர் நினைக்கின்றார்கள். நினைப்பதோடு மட்டுமல்ல சிலர் அப்படியே வாழவும் தொடங்கி விட்டார்கள். இந்த சேர்ந்து வாழ்தல் (Living together) என்ற வாழ்க்கை முறை புலம்பெயர்ந்து வாழும் எம்மவரிடம் தற்பொழுது பரவலாக ஊடுருவி வருகின்றதென்றும், அது எமது விழுமியங்களைச் சீர்குலைக்கின்றதென்றும் ஒருசாரார் கூறுகிறார்கள். எமது இளையோர்களிடம் காணப்படும் மேற்கத்தேய நாகரிக மோகம்தான் இந்தக் கலாச்சார சீர்கேட்டுக்கு வழிவகுக்கின்றது என்றும் சொல்லப்படுகிறது.

இது எந்த அளவிற்க்கு எமக்கு ஆரோக்கியமானது? என்ற கேள்வி பலரிடையே எழுகிறது. திருமணம் செய்துகொள்ளாமல் ஒரு பெண், ஒரு ஆணோடு சேர்ந்துவாழும் முறை நல்லதா? என்றும் பெண்களிடையே இப்பொழுது பரவலாகக் கேள்வி இருக்கிறது. இந்த வாழ்க்கை முறை பதட்டம் நிறைந்தது, பாதுகாப்பு இல்லாதது. இந்த வாழ்க்கை முறையில் பாதிக்கப்படுவது பெண்தான் என்ற கருத்துகள் பல பெண்களிடமிருந்து வருகிறது.


சிலர் சொல்கிறார்கள், திருமணம் என்பது ஒரு அற்புதமான இணைப்பு, பிணைப்பு, ஒரு வரம். இதைச் செய்யாமல் அந்த இன்பத்தை நுகராமல் பெண்ணாக இருந்து என்ன பயன்? எங்கள் பெண்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழித்து, எங்கள் வாழ்க்கையை நாறடிக்க நாங்கள் தயாரில்லை என்கிறார்கள். இந்த வாழ்க்கை முறை எமது வாழ்வியல் வட்டத்துக்கு வளம் சேர்க்குமா?

அல்லது வறட்சியைக் கொடுக்குமா? நீங்களே தீர்மானியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சடங்குகள்...?

சடங்குகளும், சம்பிரதாயங்களும் தமிழர்களின் வாழ்வியல் வட்டத்துக்குள் தவிர்க்க முடியாதவை-கள் என்பது என்னவோ உண்மைதான். ஒருபக்கம் கோவில்கள், தேவாலயங்கள் இவற்றின் உற்சவகாலங் கள், விரதகாலங்கள், என்று மக்கள் ஆன்மீகத்துக்குள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு பூஜைகள், புனஸ்க் காரங்கள், நேர்த்திகள், நிறைவேற்றல்கள் என்று வருடம் முழுவதும் வளைய வருவார்கள். இதை விடுத்து, நல்ல நாள், பெருநாள் என்று வருடத்தில் பல நாட்கள் வந்தவண்ணமிருக்கும். குறிப்பாக உழவர் திருநாள், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகை கள் இவற்றில் அடங்கும். இவைதவிர கொம்புமுறி, தேங்காய் உடைப்பு ஆகியவை தமிழர்களின் பாரம் பரிய கொண்டாட்டங்களாக விளங்கும்.

மற்றும் திருமணவைபவங்கள், பூப்புனித நீராட்டு, என்று பல சடங்குகளும் தமிழர்களின் சம்பிரதாயங்கள் என்ற வட்டத்துக்குள் வருகின்றன. இவைகள் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் காலம் காலமாக இருந்துவருகின்ற, எம் மக்களால் கட்டிக்காக்கப்படுகின்ற, வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த, பிரிக்கமுடியாத சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஆகும்.

இப்பொழுது எம்மக்களில் லட்சோப லட்சம் மக்கள் தாயகத்தை விட்டு வந்து உலகம் முழுவதும் பரவி வாழ்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தோடு மேற்கூறப்பட்ட அத்தனை அம்சங்களும் தமிழர்களின் அடையாளங்கள் என்பது உண்மையே. ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் இவற்றின் அவசியம் என்ன? இவைகளில் எல்லாம் அனுட்டிக்கப்பட வேண்டுமா? ஒரு அந்நிய தேசத்தில் இயந்திரமயமான வாழ்வியல் முறையில் மாற்றுக் கலாச்சார சூழலில் இந்த சடங்குகளும், சம்பிரதாயங்களும் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டுமா? இவை அவசியம்தானா? என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புலத்தில் வாழும் எம் மக்களில் பலர் இன்னும் இந்தச் சடங்கு, சம்பிரதாயம். மற்றும் மூட நம்பிக்கைகள் என்று மூழ்கிபோய்ப் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் அநேகமானவர்களுக்குப் பிறந்தநாள், திருமண விழா, அரங்கேற்ற நிகழ்வு, பூப்படைந்த பெண்ணுக்கு ஒரு விழா என்று ஏகப்பட்ட வைபவங்கள் இருக்கின்றன. ஒரு அவசரத்திற்கு, அல்லது ஒரு முக்கியமான விடயத்திற்கு இவர்களைச் சந்திப்பதென்பது முடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம். சொல்வார்கள், "இன்று எங்களுக்கு அந்தப் பார்ட்டி, இந்தப் பார்ட்டி" இருக்கிறதென்று. ஐந்து நாட்களும் இரவுபகலாக உழைத்த இவர்களுக்கு வீட்டில் ஆற அமர இருந்து மகிழ்ச்சியாக குடும்பத்துடன் இருப்பதற்கும் முடிவதில்லை. காரணம் இந்த "பார்ட்டிகளுக்கு" இவர்கள் கண்டிப்பாகச் சென்றே ஆகவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது. சரி அது போகட்டும்...... இந்தக்கால கட்டத்தில் இந்தச் சடங்குகள், சம்பிரதாயங்கள் தேவையா?

ஒரு வாழ்வு கல்யாணம் என்பது மிக முக்கியமான நிகழ்வுதான், அதை யாரும் மறுக்க முடியாது.எல்லா இனத்தவர்களிடமும் இந்தத் திருமண வைபவம் இருக்கிறது. ஆனால் இந்த பெண்பிள்ளைகள் வயசுக்கு வந்துவிட்டார்கள் என்று, அதை ஒரு சடங்காக, "சாமத்திய வீடு" என்று ஆடம்பரமாக எம்மக்கள் கொண்டாடுவதை நாம் பார்க்கிறோம். இது அவசியம் தானா? என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது.

இப்போதெல்லாம் ஒன்பது, பத்து வயதிலேயே பெண் பிள்ளைகள் ஆளாகி விடுவதை அவதானிக்க முடிகிறது. காரணம் இங்குள்ள உணவுகள், காலநிலை மாற்றங்கள் காரணிகளாக இருக்கலாம். இவர்களின் உடலில் ஏற்படும் ஒரு மாற்றமே இந்தப் "பூப்படைதல்" என்று கொள்ளவேண்டும். 9 -10 வயசு பிள்ளைகளுக்கு அதுபற்றிய செய்தியும், அறிவும் கொடுக்கப்பட வேண்டியதே. இதெல்லாம் இப்பொழுது இவர்களின் பள்ளிக்கூடங்களிலே சொல்லித் தரப்படுகின்றது. இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் மன நிலை என்ன? இவர்களின் மன உளைச்சல் என்ன? என்பது பற்றியெல்லாம் பெற்றோர் பார்ப்பது கிடையாது. பக்கத்து வீட்டுக்காரனுக்கோ, அல்லது பந்தாவுக்காகவோ தன் மகளை ஒரு சோடனைப் பொருளாக்கி பெரும் எடுப்பில் பலருக்கும் காட்டி விடவேண்டுமென்றே விரும்புகிறார்கள். தங்களின் பிள்ளைகளின் விருப்பத்தைக்கூட இவர்கள் கேட்ப தில்லை என்பதுதான் கொடுமையான விடயம். மேற்குலக நாடுகளில் இப்படியான நிகழ்வுகள் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஏதோ சாட்டுக்கு இது எங்கள் கடமை, உரிமை, சம்பிரதாயம், கௌரவப் பிரச்சினை, சொந்தங்கள், உறவுகள் குறை சொல்வார் கள் என்ற காரணங்களைச் சொல்லிக்கொண்டே இந்த “சாமத்தியவீடு” என்ற பெயரில் சாமர்த்தியமாக கொடுத்ததைத் திரும்பவும் பெற்றுக்கொள்வதற்காக நடத்தப்படும் ஒரு விழா என்றும் பலர் சொல்கிறார்கள். இது எவ்வளவு உண்மையோ தெரியாது.


அண்மையில் விஜய் தொலைக்காட்சியில் கூட “நீயா நானா” என்ற நிகழ்ச்சியில் இந்த பூப்புனித சடங்கு தேவைதானா என்ற கேள்வியுடன் ஒரு விவாதமே நடந்தது. உங்களில் பலர் அதைப் பார்த் திருப்பீர்கள். அதில் கலந்துகொண்ட இளம் பெண்கள் இது முட்டாள் தனமானது, இந்த அறிவியல் காலத்தில் இது அபத்தமானது. பழைய சம்பிரதாயங்கள் என்று கூறிக்கொண்டு பெண்களைக் காட்சிப் பொம்மைகளாகக் வும், கல்யாணத்திற்கும், பிள்ளைப் பெற்றுக் கொள் வதற்கும் எங்கள் பிள்ளை தயாராக இருக்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தம்பட்டம் அடிப்பதற்கும் செய்யப்படுகின்ற ஒரு நிகழ்வுதான் இது என்று காட்டமாகச் சாடியுள்ளார்கள். இதில் அனைத்துப் பெண்களும் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அத்தோடு இந்தச் சடங்குக்குப் பின்பு தாங்கள் படுகின்ற அவஸ்தைகள், கேலிகள், கிண்டல்கள் எல்லாம் தங்களுக்கு மன உளைச்சலைத் தருவதாகவும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தார்கள். அதற்கு எதிரணி பெண்கள், இல்லை, இது எங்களின் பாரம்பரியம், எமது கலாச்சாரம் இதை காலாகாலமாகச் செய்துவருகிறோம். இதை மாற்ற முடியாது என்று வாதாடினார்கள்...

ஆக, இது மேற்குலக நாட்டில் வாழும் எம் தமிழ் பிள்ளைகளிடம் மட்டுமல்ல தமிழ்நாட்டில் இருக்கும் இளம் பெண்களிடமும் இது ஒரு வேண்டப்படாத சடங்காகவே பார்க்கப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தக் கட்டுரை பெற்றோரின் மனதைப் புண்படுத்தவோ, அல்லது அவர்களின் செயல்களைக் கொச்சைப்படுத்தவோ அல்ல என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளின் மன நிலையை அறிந்து கொண்டு செயல் பட்டால் நல்லது என்பதை சொல்வதே நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உப்புச்சப்பற்ற உரையாடல்....?

ஒரு இனத்தின் அடையாளம் அதன் மொழிதான் என்பது எல்லோருக்கும் தெரியும். பல அடையாளங்கள் இருந்தாலும் மொழியே ஒரு இனத்தின் மூலாதாரம் என்றால் அது மிகை இல்லை. இந்த மொழியைப் பேசுவதிலும் புரிவதிலும் கையாள்வதிலும் எம்மில் பலருக்குச் சிலவேளை பிரச்சினைகள் எழுவதுண்டு.

“அமிழ்தினும் இனிய தமிழ்” மொழியை அழகாகப் பேசுபவர்களும், அடுக்கு மொழியில் பேசுபவர்களும், அறிவார்ந்தமாகப் பேசுபவர்களும், அநாயசமாக பேசுபவர்களும், ஆணித்தரமாகப் பேசுபவர்களும், ஆக்ரோசமாகப் பேசுபவர்களும் எம்மில் பலர் இருக்கிறார்கள். இனிமையான சொற்கள், கனிவான வார்த்தைகள், போற்றுவதற்குரிய எடுத்துக்காட்டுகள், அறிவுள்ள பழமொழிகள், ஆச்சரியப்படக்கூடிய முது மொழிகள், காதுக்கினிய பாடல்கள், கருத்துச் செறிந்த உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைகள் என்று ஏகபட்ட வகையறாக்கள் தமிழ் மொழியில் இருக்கின்றனவே.

இவற்றை ஓரளவிற்காவது தெரிந்து கொண்டு இருப்பதும், பேசுவதும் நல்லதே. நமது ஈழத் தமிழர் களின் பேச்சுச் சுவை மிக இனிமையானது, இதை தமிழ் நாட்டு தமிழ் அறிஞர்கள் கூட சொல்லியிருக் கிறார்கள். அதிலும் வட்டார வழக்கு பேச்சு, மாவட்டத்திற்கு மாவட்டம், பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும். இதில் ஒவ்வொன்றிலும் ஓர் இனிமை இருக்கும். யாழ்மாவட்டத்தில் வடமராச்சிக்கும், வலி காமத்துக்கும் இடையில் வித்தியாசம் இருக்கும்.

வன்னிக்கும், மன்னாருக்கும் இடையில் வட்டார வழக்கு வேறுபடும். கிழக்கிலே திருகோணமலைக்கும், மூதூருக்கும் இடையிலும், அம்பாறைக்கும் மட்டக் களப்புக்கும் இடையிலும் இந்த வட்டார வழக்குகள் வேறுபடும். இதுதவிர கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தமிழுக்கும், கொழும்பு, கேகாலை முஸ்லிம்களின் தமிழுக்கும் நிறையவே வேறுபாடு உண்டு. ஆகப் பேச்சு வழக்குகள் வேறுபட்டாலும் தமிழ் கேட்பதற்கும், படிப்பதற்கும் இனிமையான மொழிதான் என்பதில் எமக்குச் சிறிதும் ஐயமில்லை.

என்ன? இந்த அழகிய மொழியைச் சிலர் உப்புச்சப்பற்று பேசும்பொழுதுதான் மனது தாங்கொணாத் துயரம் அடைகிறது. குறிப்பாக நாம் ஒரு விவாதம், அல்லது கலந்துரையாடல் என்று ஒரு குறித்த விடயத்தைப் பற்றி பேசும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுபூர்வமாக ஆராய்ந்து பேசுவோம் இல்லையா? இப்படியான சந்தர்ப்பங்களில் சிலர் தாங்கள் என்ன பேசுகிறோம், பேசுவது சரியாக இருக்கிறதா? எடுத்துக்கொண்ட கருப்பொருளுக்குள் பேசுகிறோமா? என்று சற்றேனும் சிந்திக்காமல், எழுந்தவாரியாக, தங்களுக்கும் எல்லாம் தெரியும் என்ற கோதாவில் பேசுவார்கள். அவர்கள் பேசுவது அவர்களுக்கே புரியாது. கேட்பவர்களுக்கு எப்படிப் புரியும் என்ற கவலையும் அவர்களுக்கு இல்லை.

எந்த விதமான பேச்சு வழக்கிலும் இவர்கள் பேசலாம். ஆனால், சரியான விதத்தில் அல்லது கனத்தில் பேசுகிறோமா? என்று தெரிந்துகொண்டு பேச வேண்டும். எல்லாம் தெரிந்தவர் மாதிரி பேசி, மூக்கறு படக்கூடாது. ஒரு விடயம் பற்றி தெரியா விட்டால் பரவாயில்லை. எல்லோருக்கும் எல்லாம் தெரிவ தில்லை தானே. அறியாத, தெரியாத விடயத்தை மற்றவர் சொல்ல கேட்டு தெரிந்து தெளியலாம். இதைவிடுத்து, தெரிந்தமாதிரி பாவனை செய்து கொண்டு உரையாட முற்படுவது அவ்வளவு ஆரோக்கி யமாக இருக்காது.

இது பல வழிகளில் சம்பந்தப்பட்டவர்களை பாதிப்புக்குள் தள்ளிவிடும். ஒருபோதும் இவர்களால் புதிய தகவல்கள், நடப்புகள், அறிவுசார் விடயங்கள் என்பனவற்றை அறிந்துகொள்ள முடியாமல் போய் விடும். அறிவியல் அசுரத்தனமாக உலகில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த காலக்கட்டத்தில் இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைவேக்காட்டு மனிதர்களாக இருக்கத்தான் வேண்டுமா? என்பதை சிந்தித்துப் பார்த்தால்,நல்ல பயன் கிடைக்கும். ஒரு விடயம் பற்றி பேசுவதற்கு முன் பலதடவைகள் யோசித்துக்கொண்டு தயார்படுத்திக் கொண்டு, அதில் கருத்தும், கனதியும், செறிவும், செழுமையும், அழகும், ஆழமும் இருக்கிறதா? என்று தெரிந்துகொண்டு பேசமுற்பட்டால் எல்லோருக்கும் நல்லது. அது அறிவையும், ஆற்றலையும், மொழி பற்றிய மேன்மையையும் நமக்கு தரும் என்று கண்டிப்பாக நாம் நம்பலாம். நல்ல தமிழ் பேசுவோம், நல்ல தமிழ் கேட்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் குடும்பம் எப்படி?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், குடும்பம் ஒரு கோவில், என்று சொல்வதை நாம் கேள்விப் பட்டிருக்கிறோம் அல்லவா? ஒவ்வொருத்தருக்கும் நல்ல கணவனோ, நல்ல மனைவியோ கிடைத்தால் வாழ்க்கையில் கண்டிப்பாக வசந்தம் வரும்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று சொல்வதுபோல் ஒரு பெண்ணுக்கும் கணவன் அமைவதுவும் அப்படித்தான் என்று கொள்ள வேண்டும். இரு மனங்களின் சங்கமமே இல்வாழ்க்கை. இதில் ஒரு மனம் முடங்கிப்போனாலோ, அல்லது தடம் மாறிப்போனாலோ இல்வாழ்க்கை இருண்ட வாழ்க்கையாகிவிடும் என்பதை குடும்பமானவர்களும், குடும்பமாகப் போகிறவர்களும் உணரவேண்டும்.

அந்தக் காலங்களில் காலையில் நித்திரைவிட்டு எழும்போது கடவுளை வணங்காமல் கணவனையே தெய்வமாக கருதி வணங்கிய பெண்கள் இருந்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். ஆனால் தற்காலத்தில் பெண்கள் இப்படிச் செய்வது இல்லை. ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம். நாகரிக, அறிவியல் உலகில் இது அவசியமும் இல்லைதான். ஆனால் ஒரு பெண் இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குணங்களை உடையவளாகவும், தன் கணவரின் கஷ்ட, நஷ்டங்களில், நல்லது, கெட்டது களில் பங்கெடுப்பவராகவும், வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்பவராகவும் இருந்தால் நிட்சயமாக அது நல்ல வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் தரும். அதே போல் கணவனும், மனைவியின் மனம் நோகாமல், அன்பாகவும், ஆதரவாகவும் தனிமனித ஒழுக்கம் கொண்டவனாகவும் இருந்தால் கண்டிப்பாக வாழ்க்கை யில் நிம்மதியும், சந்தோசமும் இருக்கும்.

எமது சமூகத்தில் தற்பொழுதெல்லாம் பல குடும்பங்களுக்குள் பிரச்சினைகளும், சண்டை சச்சரவு களும், மனமுறிவுகளும் ஏற்படுவதை பரவலாகப் பார்க்க முடிகிறது. இது சிலநேரம் திருமண முறிவில்கூட கொண்டு விட்டுவிடுகிறது. பத்து, பதினைந்து வருட இல்வாழ்க்கையுடனும் ஓரிரு குழந்தைகளை பெற்ற பின்பும் இப்படியான விவாகரத்துகள் இப்பொழுது பரவலாக இடம்பெறுகின்றன. குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவர்மத்தியில் நடக்கின்றன. இதற்கு என்ன காரணம் எங்கே தவறு நடக்கிறது? யார் பிழை விடுகிறார்கள்? என்ற கேள்விகள் எழும் பொழுதுதான் நாம் பலவற்றைப் பதிலாக அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலம், விட்டுக்கொடுக்காத சுபாவம், ஆணவம், நாகரீகமோகம், ஆடம்பர உச்சம், ஊதாரிச் செலவுகள். கருத்து மோதல்கள், ஒவ்வொருவரின் ஒவ்வாத செயற்பாடுகள், பொருளாதரத்தில் தனித்து நிற்கக்கூடிய வல்லமை போன்ற காரணங்கள் இரு பாலாரிடமும் ஏற்படுகின்றபோது கருத்து மோதல்கள் ஏற்பட்டு கடைசியில் மணமுறிவு ஏற்படும் சூழல் வருகிறது.

மேற்குலக சமூகத்தில் இதுவொரு சாதாரண விடயமாக இருந்தாலும் எமது சமூகத்திற்கு இது ஒத்துவருமா? என்று பார்க்க வேண்டும். பல குடும்பங் கள் பிரிந்து வாழ்வதையும், பிள்ளைகள் வேறாக வாழ்வதையும் பார்க்க முடிகிறது. தமிழ்க் கலாச்சாரம், விழுமியங்கள் பற்றி அக்கறை இல்லாதவர்களுக்கு இது பெரிய விடயமாக இருப்பதில்லை. ஆனால் இந்தப் பண்பாட்டுக் கோலங்களில் வாழ விருப்புகிறவர்களுக்கு இது பல விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். எப்படியான பாதிப்பு? என்று பார்த்தால், மன உளைச்சல், மன அழுத்தம், விரக்தி, தன்னிலை மறத்தல், இறுதியில் தற்கொலை முடிவு என்று செல்வதை நாம் பார்க்கலாம்.

மனித வாழ்க்கை என்பது ஒரு குறுகிய காலம் தான். இதில் ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் எப்படி வாழ்ந்தோம், வாழ்கிறோம், வாழ்வோம் என்று பார்க்க வேண்டும். அதுதான் சொல்வார்கள், முப்பது வயதில் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்க்கையை திருப்பிப் பார்க்கவேண்டும். ஏன் தெரியுமா?

ஏதாவது தப்பு பண்ணியிருக்கிறோமா? என்பதற் காக. பண்ணியிருந்தால் திருத்த வேண்டும். நாற்பது வயதில் மீண்டும் பார்க்க வேண்டும் தப்பெல்லாம் சரியாகிவிட்டதா, நாம் நன்றாக வாழ்கிறோமா என்பதற் காக. அறுபது வயதில் திரும்பி பார்க்க வேண்டும். நாம் திருப்தியாக வாழ்ந்தோமா என்பதற்காக. அறுபது வயதில் ஜெயித்தவர்களை அணுகிக் கேட்டால் சொல்வார்கள் தாங்கள் ஜெயித்ததற்கு காரணம் குடும்பமே என்று. குடும்பம் என்ற அமைப்பை சிதைத்துவிட்டு எப்படி வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பது? என்பதை சிந்தியுங்கள்.

உங்கள் கையிலேதான் வாழ்கையின் உந்து கோல் இருக்கிறது. தெரிந்து கொள்ளுங்கள். வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று.. உலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி இல்லறம் மேற்கொண்டு வாழ்பவர்கள் வானுலகில் உள்ள தேவருள் ஒருவராக வைத்து மதிக்கப் படுவார்கள். நீங்கள் எப்படி?உங்கள் குடும்பம் எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொச்சையா... பச்சையா... பேசாதீர்கள்...

தான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் ஒரு மொழியை எங்கும் கண்டதில்லை என்று சொன்னவன் பாரதி. தமிழ் மொழிக்கு இருக்கும் அழகும், அர்த்தமும், ஆழமும் வேறு எந்த மொழிக்கும் இல்லை என்பது அவனது கருத்தாக இருந்திருக்குமோ தெரியாது, ஆனால் அப்படி சொல்லி வைத்திருக்கின்றான்.

தமிழைப் பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் தங்கள் பிரதேசத்திற்குரிய வழக்கிலே பேசுவார்கள். குறிப்பாக மதுரைத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், கொங்கு தமிழ் (கோயம் புத்தூர்தமிழ்) தஞ்சாவூர்த் தமிழ், சென்னைத்தமிழ் என்று ஒவ்வொரு இடத்திற்குமான வட்டார வழக்கு இருக்கிறது. இதேபோல் சிங்கப்பூர் தமிழ், மலேசிய தமிழ் இலங்கைத் தமிழ் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இலங்கை தமிழ் யாழ்ப்பாணத்துதமிழ், மட்டக் களப்புத் தமிழ், மலையகத்தமிழ், கொழும்புத் தமிழ் இஸ்லாமியத் தமிழ் என்றும் வகைப்படுத்தப்பட்டிருக் கிறது.

தமிழை எந்தப் பாணியில் பேசினாலும் அதில் ஒரு நளினமும், அழகும், கனதியும் கண்டிப்பாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு அருமையான மொழியை எம்மில் பலர் எப்படிப் பேசுகிறார்கள் என்பது பற்றித்தான் இக்கட்டுரை பார்க்க இருக்கிறது.

நல்ல தமிழையும், நாடகத் தமிழையும் நாங்கள் பேசுவதை விட்டுவிட்டால் நாளைய சந்ததிகள் எப்படி தமிழைப் பேசுவார்கள்? எம்மில் பலர் நாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நாகரீகமற்ற முறையில் பேசும்போது கேட்பதற்கு நாராசமாக இருக்கும். பல குடும்பங்களில் கணவன், மனைவிகளுக்குள் இடம்பெறும் சண்டை சச்சரவின்போது அவர்கள் பேசிக்கொள்ளும் முறையும், அவர்கள் பயன்படுத்தும் சொற்களும் அருவருப்பாக இருக்கும்.

மதுபோதையில் இருந்தால் கெட்ட வார்த்தை களைக்கூட இவர்கள் சரளமாக பேசுவதைப் கேட்க முடியும். வயசுக்கு வந்த படித்த பிள்ளைகள் வீட்டில் இருப்பதைப் பற்றியும் இவர்களுக்குக் கவலையில்லை. கீழ்த்தரமான மூன்றாம் தர சொற்கள் கொண்டு இவர்களுக்குகிடையே நடக்கும் வாக்குவாதங்கள், ஏச்சுப் பேச்சுகள் உண்மையில் அருவருக்கும் விதத்தில் இருக்கும். கொச்சையாகவும், பச்சையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் இவர்கள் தன்மையை என்னென்று சொல்வது? இவர்கள் வெளியில் பெரிய புள்ளிகளாகவும், மற்றவர்கள் மதிக்கக்கூடியவர்களாகவும் இருந்து என்ன பயன்? வீட்டில் பிள்ளைகள் முதலில் மதிக்க வேண்டும்.

சில குடும்பங்களில் மதுபோதையில் பலர் மதிகெட்டு நடப்பது மிகவும் கேவலமாக இருக்கும். ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இருக்கும் சட்டங்களுக்குப் பயந்து ஒருவரும் அடித்துத் துன்புறுத்துவது கிடையாது, மீறி செய்பவர்களுக்கு தண்டனை கிடைக்கும் என்பது இவர்களுக்குத் தெரியும். அதனால் இவர்கள் அடித்துத் துன்புறுத்துவதற்கு பதிலாக அசிங்கமாக பேசிக்கொண்டே வீட்டுப் பொருள்களை உடைப்பது, கார் சாவியை மறைத்து வைப்பது, கடவுச் சீட்டை ஒழித்து வைப்பது, வங்கி அட்டையைச் சேதப்படுத்து வது போன்ற பல வழிகளில் தங்களின் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கிறார்கள். இந்த நடவடிக்கை இருப்ப தால் குடும்பங்களில் சந்தோசமும், அமைதியும் இல்லாமல் போகிறது.

போதை தெளிந்தபின் இவர்கள் தங்கள் தவறை உணர்கிறார்களா என்றால் இல்லை. இவர்கள் மனிதர்களா அல்லது மிருகங்களா என்று கேட்கத் தோன்றும். மற்றைய சமூகத்தினர் எப்படி நாகரீக மாக, நாணயமாக வாழ்கிறார்கள் என்று இவர்கள் அறிந்துகொள்வதில்லையா? இல்லை வேண்டுமென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நடக்கிறார்களா? என்று புரிவது கஷ்டமாக இருக்கிறது. 'கல் தோன்றா மண் தோன்றாக் காலத் திற்கு முன்தோன்றிய மூத்த குடியாம் தமிழ்க்குடி' என்று சொல்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு பின் தோன்றிய இனம், அல்லது சமூகம் எப்படி நாகரீ-கமாக இருக்கிறது, எப்படி உலகில் வாழ்கிறது என்றும் இவர்கள் அறியவில்லை என்பதுதான் பெரிய கவலையான விடயம்.

ஆக, இந்த கொச்சை, பச்சையாக பேசுபவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைக் கூறாமல் கடும் சொற்களையோ, அருவருப்பான பேச்சுக்களையோ கூறுவது கூடாது.

இதையே வள்ளுவரும் சொல்கிறார். "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" இதை அறிந்து இனியாவது உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இல்லாமல் போன இன்பங்கள்...

புலத்திலும் சரி, நிலத்திலும் சரி நம்மவரின் குடும்பங்களில் இப்பொழுதெல்லாம் சந்தோசமும், ஆரவாரமும், அன்பும், பாசமும், அழகு தமிழ்ப் பேச்சும் இருக்கின்றனவா என்றால் இல்லை. மாறாக வெறுமையுள்ள உள்ளங்களும், வெறிச் சோடிக் கிடக்கும் வீடும் ஏதோ ஒருவித அமைதியும் தான் அண்டிக்கிடக்கின்றன. இரண்டு பிள்ளைகள், பெற்றோரைக் கொண்ட ஒரு அளவான குடும்பம் என்றாலும் சரி பல அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் என்றாலும் சரி இவர்களுக்கிடையே இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு இருந்த கலகலப்பும், சுறுசுறுப்பும், ஆனந்தமும் இப்பொழுது காணமுடிவ தில்லை. இதை பலர் சொல்ல நான் கேட்டிருகின்றேன். சிலருடன் உரையாடியபோது, ஊரில் வாழ்ந்தபோது இருந்த சந்தோசம் ஊரைவிட்டு வந்தபோது இல்லாமல் போய்விட்டது என்றும் சொல்கிறார்கள். புலத்திலே உள்ள குடும்பங்களில் பலர் ஊரிலிருந்து தங்களின் தாய்,தந்தையரை தருவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது முதிர்ந்த இந்த பெரியவர்களுக்கு இங்கு மனச் சஞ்சலம் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏனென்றால் இவர்கள் ஊரில் ஓய்வு நேரங்களில் பல நிலைகளில் பல இடங்களில் இருந்து இன்பங் கண்டவர்கள். ஒரு முச்சந்தி, ஒரு கோவிலடி, ஒரு வேப்பமரம், அல்லது ஆலமரம், முற்றத்து மாமரம் இப்படி ஏதாவது ஒரு மரத்தின் கீழ் இருந்து இவர்களின் பால்ய நண்பர்களுடன் பலதையும் பேசி பரவசமாக இருந்தவர்கள். இவர்களுக்கு இந்த புலத்து வாழ்க்கை, புது வாழ்க்கை ஏன் சிறை வாழ்க்கை என்றும் சொல்லலாம் பிடிக்காமல் போகலாம். இளம் குடும்பங்களில் ஏன் இப்படி? என்று பார்க்கும்போது தான் சில தகவல்கள் தெரிய வருகின்றன. வேலையும், வீடும் என்றிருந்தாலும் இவர்களுக்குப் பிள்ளைகள் பற்றிய அக்கறையும், அவர்களுக்கான கடமையும் இருக்கிறது. எல்லாம் ஒரு இயந்திரம் மாதிரி செய்து முடித்தாலும் இவர்களிடம் மனநிறைவோ, நிம்மதியோ தொலைந்து போய்விடுகிறது.

வீட்டில் கலகலப்பு இல்லை,பேச்சு சத்தம் இல்லை, வீட்டில் உள்ளவர்கள் தனித்தனியே ஏதோ செய்துகொண்டும், பண்ணிக்கொண்டும் இருக்கிறார்கள். இதனால் வீட்டுத் தலைவியை விட தலைவனுக்குத்தான் மிக பாதிப்பும் கஷ்டமாகவும் இருக்கிறது என்று அறிய முடிகிறது. உண்மைதான் முன்பு அந்நியோன்யமாக இருந்த குடும்ப அங்கத்தினர் இப்பொழுது தங்கள் வேலை, தங்கள் பிரச்சினை என்று இருக்கிறார்கள்.ஒரு கலந்துரையாடல், ஒரு கருத்துப்பரிமாறல் எதுவுமே இப்பொழுது பல வீடுகளில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் என்னவென்று பார்க்கும்போது தகவல், தொழில்நுட்பத்தின் அதி உன்னத வளர்ச்சிதான் இந்த வெற்றிடத்திற்கு வித்திட்டது என்று அறிய முடிகிறது. தகவல், தொழில் நுட்பத்தின் அமோக வளர்ச்சியால் நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்புகள், புதிய பொறி முறைகள் வந்த வண்ணமிருக்கின்றன. செல்போன் போய், ஐ பொட், ஐபொட், வலைத் தளங்களுடன் வந்திருக்கின்றன.

முகநூல், (FACE BOOK) தனிப்பக்கம், (TWITTER) மற்றும் எண்ணிலடங்காத இணையத்தளங்கள் என்று இருக்கின்றன.எல்லோரின் கைகளிலும் விதவித மான உதிரிகள், மென்பொருள்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் வேலை முடிந்து வந்தாலோ அல்லது பள்ளிக்கூடம் இருந்து வந்தாலோ இவர்களுக்கு வேலை என்ன தெரியுமா? மின் அஞ்சல் பார்த்தல், முகப் புத்தகம் பார்த்தல், தனிப்பக்கம் தட்டல், என்று மணிக்கணக்கில் செலவு செய்கிறார்கள். இதனால் பிள்ளைகளை பொறுத்தவரை பெற்றோருடனோ, அல்லது பெற்றோரைப் பொறுத்த வரை பிள்ளைகளுடனோ அல்லது வீட்டில் உள்ள மற்றவர்களுடனோ பேசுவதோ பழகுவதோ மிகக் குறைந்து போய், பெரிய இடைவெளியே வந்து விட்டது.

தகவல் தொழில்நுட்பத்திற்கு வசமாகிவிட்டதால் இவர்கள் தங்களை மறந்து, மற்றோரை மறந்து, வீட்டையே மறந்துவிடும் நிலைக்குப் போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் ஆரவாரமோ, சந்தோசமான பேச்சுக்கதைகளோ, சிரிப்புச்சத்தமோ இல்லாமல் போய், ஒரு வெறுமையும், மூதேசித்தன்மையும் வந்துவிடுகிறது. இதில் ஒரு படி மேலே சென்று பார்த்தால் இன்னுமொரு இடி தெரிகிறது. சிறு குழந்தைகள் கூட இப்பொழுது கணணியும் கையுமாக ப்ளேஸ்டேசன் (PLAY STATION) என்று சொல்லுகின்ற விளையாட்டுடன் உட்கார்ந்தார்கள் என்றால் எழும்பவே மாட்டார்கள். இரண்டு பிள்ளைகள் இருந்தால் எனக்கா, உனக்கா என்று சண்டையும், கசமுசாவுமாகவே இருக்கும்.

இதில் ஒரு வேதனை என்னவென்றால், ஒரு தகப்பன் ஆசையுடன் தன் பிள்ளையை நெருங்கி செல்லம் கொஞ்சிவிட போனால் பிள்ளையோ "சும்மா போ, நான் ரொம்ப பிசியாக இருக்கிறேன்" என்று தகப்பனை ஓரம் கட்டிவிடுகிறது. இது எவ்வளவோ தூரம் நாம் எமது விழுமியங்களில் இருந்து வெகு தூரம் சென்றுவிட்டோம் என்பதைக் காட்டுகிறதல்லவா?

ஒரு உண்மையான பாசமுள்ள தந்தைக்கு இது மனதளவில் காயத்தை ஏற்படுத்தும். தாய்க்கு மனக்கவலையைக் கொடுக்கும்.

இந்தத் தகவல் சாதனங்களை கண்டபடி பயன்படுத்தும் பிள்ளைகளுக்கு பக்க விளைவுகள் பல ஏற்பட வாய்ப்பு உண்டு என்று மருத்துவர்கள் உலக அளவில் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இந்த தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினால் நமது மக்களிடையே மகிழ்ச்சி பறிபோய்விட்டதே என்று சொல்வதுதான் இந்தக் கட்டுரையின் உள்ளார்ந்தம். மாறாக புதிய தகவல் தொழில் நுட்பத்திற்கு எதிராகவோ, அல்லது விரும்பாமலோ இக்கட்டுரை இல்லை என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழந்தது ஏராளம்.....

தாய்மண்ணை இழந்தோம், எழில் கொஞ்சும் கிராமங்களை இழந்தோம், பொன்விளையும் பூமி, வயல்காட்டை இழந்தோம், வளம் கொழிக்கும் கடலை இழந்தோம், செந்தமிழை மறந்தோம், தெருக்கூத்தை மறந்தோம், அன்பையும், பாசத்தையும் அடி-யோடு மறந்தோம், பண்பை மறந்தோம் பண்பாட்டுக் கோலத்தை மறந்தோம், நல்ல உணவை இழந்தோம், நல்ல உறக்கத்தை இழந்தோம், கோவில், தேவாலய திருவிழாக்களை, அவற்றின் உற்சவகாலங்களை இழந்தோம் இப்படி நாம் இழந்தது ஏராளம், ஏராளம்..

இன்னும் சொல்லப்போனால் மட்டக்களப்பு தயிர், யாழ்ப்பாணத்து மாம்பழம் பருத்தித்துறை வடை, களுதாவளை வெற்றிலை, மண்டூர் தண்ணீர், கீரை, வடமராச்சி பினாட்டு, தோலகட்டி நெல்லிரசம், நீர்வேலி வாழைக்குலை, மருதமுனை பாய்,பனிச்சங்கேணி நண்டு, கோரைக்களப்பு இறால், பூநகரி, சம்மாந்துறை அரிசி, நெடுந்தீவு, களுவாஞ்சிகுடி பனங்கிளங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பு ஒரு மணம் எல்லாம் இருந்ததே. அத்தனையும் இன்று நாம் இழந்தவர்களாக அந்நிய மண் ஒன்றில் அல்லாடுகிறோமே.

முற்றத்து மல்லிகையும், கிணற்றடிச் செவ்வரத்தையும், பறித்து எங்கள் அப்புவும், ஆச்சியும் சாமிகளுக்குச் சாற்றியதையும், அடுப்பில் சாம்பல் அள்ளி அடுக்கடுக்காய் விறகு வைத்து தேத்தண்ணிப் பானையில் தண்ணீர் சுடவைத்து நன்னாரி வேர்போட்டு தேத்தண்ணி குடிச்ச அம்மாவையும் அவர் பரிமாற அப்பாவும் பிள்ளைகளும் குடித்ததையும், வீடும், வளவும் கூட்டி அள்ளியபின் விரைவாக காலைச் சாப்பாடு செய்த அம்மா அவருக்கு ஒத்தாசையாக இருந்த அக்கா, தங்கச்சி, அந்த புட்டு, சொதி, சம்பல் அமர்க்களமாக இருக்குமே இதையெல்லாம் நாம் இன்று இழந்து நிற்கிறோம். என்னதான் பத்து பவுணுக்கோ, பத்து யூரோவுக்கோ. ஐம்பது டொலருக்கோ, அல்லது நூறு குரோணருக்கோ நூறு இடியப்பம், சொதி சம்பல் வாங்கினாலும் நம்மஊரு, நம்ம வீட்டுப் புட்டு இடியப்பத்துக்கு ஈடாகுமா? இல்லவே இல்லை. சும்மா சொல்லக்கூடாது நாம் இழந்தது ஏராளமே.

மண்வாசத்தை, மனைகளின் மங்களத்தை இழந்தோம். ஆண்களின் உழைப்பையும் வீரத்தையும் இழந்தோம். சேவல் கூவுதல், காகம் கரைதல், மயில் அகவுதல் அலைகடல் இரைதல், இந்த அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய செவியேறல்களையும் இழந்தோம். சூரி-யோதய அழகு நிலவொளிக் காட்சிகள் இவை யாவற்றையும் இழந்து இன்று இந்த இயந்திர வாழ்வில் மாட்டிக்கொண்டு உழலுகின்றோம்.

என்னதான் வெளிநாட்டு வாழ்க்கை, என்றாலும் எமது மனங்களில் முன்பிருந்த மகிழ்ச்சி இருக்கிறதா என்று எங்கள் மனச்சாட்சியைக் கேட்டுக்கொள்வோம் .மகிழ்ச்சியாக இருந்தால் சந்தோசம். அல்லது நம் மகிழ்ச்சியை நாமே தேடிக்கொள்வோம். எப்படித்தான் என்றாலும் நாம் இழந்தது ஏராளம் இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல்... வாழ்வதற்கா? வழுக்கி வீழ்வதற்கா?

காதல் புனிதமானது. அது தெய்வீகமானது. காதலுக்குக் கண்ணில்லை. காதலுக்குச் சாதி, மத, சம்பிரதாயங்கள் இல்லை. இவ்வாறு பலவிதமாகக் காதல் பற்றிச் சொல்லபடுகின்ற பேச்சுகளை நாம் கேட்கிறோம். ஆனால் தற்காலத்தில் காதலித்துக் கடைசிவரைக்கும் கல்யாணம்வரை செல்லும் காதலர்கள், அல்லது பெற்றோரைச் சந்தோசப்படுத்தி, அவர்களின் ஆசியுடன் கல்யாணம் செய்துகொள்ளும் காதலர்கள், தங்களுக்குப் பொருத்தமான ஆண்மகனா, அல்லது பெண்ணா என்று பார்த்து மனசைப் பறிகொடுக்கும் காதலர்கள் நமது சமூகத்தில் இருக்கிறார்களா? என்பதுபற்றியும், குடும்பத் தகுதி, சாதி, சமயம் பார்க்கும் பெற்றோர்கள் காதல் என்று வரும்போது அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலை யில் இருக்கிறார்களா? என்று பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் காதல் தற்காலத்தில் மட்டுமல்ல கற்காலத்திலும் இருந்திருக்கிறது. எக்காலத்திலும் காதல் இருக்கும். மனித இனத்தில் மட்டுமா காதல் இருக்கிறது. மரம், செடி, கொடிகள், பறவைகள், மிருகங்கள் கூடக் காதல் செய்கின்றன. ஏன் கடவுள்கள் கூடக் காதல் செய்திருக்கிறார்கள் என்று நாம் புராண, இதிகாச, காப்பியங்களில் இருந்து அறிகின்றோம் அல்லவா? இது உண்மையா, என்பதை உங்களிடமே விட்டுவிடுகின்றேன். ஆனால் படித்திருக்கிறோம் இல்லையா? இந்தக் கடவுள்களின் காதல்களுக்குள் நாம் போகவேண்டாம். காதல்... காதல்... காதல்! காதல் இல்லையேல் சாதல் என்று கூறிய பாரதிகூட காதலின் மகத்துவத்தை உலகிற்குச் சொல்லிச் சென்றான். இந்தக் காதல் எந்தப் பொழுதிலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்தத் தருணத்திலும் வரலாம். இந்தக் காதலுக்கு எதிரானவர்கள் அந்தக்காலத்திலும் இருந்திருக்கிறார்கள், இந்தக்காலத்திலும் இருக்கிறார் கள். அந்தக் காலத்திலே பேசப்பட்ட காதல்களாக நாம், அம்பிகாபதி அமராவதி, சலீம் அனார்க்கலி, லைலா மஜ்ஜுனு, சாஜஹான் மும்தாஜ் போன்ற காதலர்கள் பற்றி படித்திருகின்றோம். இவர்களும் காதல் மறுக்கப்பட்டவர்களே. ஆனால் இன்றுவரை பேசப்படுகிறார்கள். காரணம் அவை உண்மைக் காதல்கள்.

இப்படிப்பட்ட தெய்வீகத் தன்மைகொண்ட காதலை இப்போதெல்லாம் பலர் கொச்சைப்படுத்தியும், பொழுதுபோக்குக்காகவும், இனக்கவர்ச்சி, வயதுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளறு, போன்றவற்றில் நாட்டம் கொண்டு காதலித்துப் பின்பு கைவிட்டு விடுகிறார்கள். இது இருபாலரிடமும் நடக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர் மனமொடிந்து, தற்கொலை செய்துகொள்வதுண்டு அல்லது மனநிலை பாதிக்கப்பட்டு ஒரு நடைப்பிணமாக வாழ்வதுமுண்டு.

"பாத்திரமறிந்து பிச்சைபோடு கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு" என்ற சொல்லாடலை இன்றும் சிலர் பின்பற்றுகிறார்களோ என்று எண்ணத் தோன்று கிறது. தாய்நாட்டில் இருந்தபொழுதுதான் இந்தச் சாதி, மதம், குடி, கோத்திரம் என்று இருந்தார்கள் என்றால் புலம் பெயர்ந்துவந்து இந்த மேற்குலகில் வாழ்ந்தா லும் இவர்கள் பாழாய்ப்போன இந்தச் சாதியை விடுவதாய் இல்லை. ஒரு மனிதன், அல்லது ஒரு சமூகம் செய்யும் தொழிலைக் கொண்டு வகுக்கப்பட்ட இந்தச் சாதி என்னும் சாத்தான் இன்னும் சாகாமலே இருக்கிறான். என்னதான் விசுவாசமாக இருப்போம் என்று நினைத்தாலும் நம்மை அவிசுவாசமாக்க இந்தச் சாதி என்ற சாத்தான் முனைப்பெடுப்பான்.

ஆண், பெண் இருபாலாரும் காதல் வயப்படுதல், மனதைப் பறிகொடுத்தல் எல்லாம் அவர்கள் மனசைப் பொறுத்தது. ஆனால் மனசைக் கொடுப்பதற்கு முன்ப தாக தங்கள் குடும்பம், பெற்றோர், உறவுகள் பற்றி யும் இவர்கள் சிந்திக்க வேண்டும். குறிப்பாகப் பெற்று, வளர்த்து, படிப்பித்து ஆளாக்கிவிட்ட தாய், தந்தையை மகிழ்ச்சிப்படுத்தி, அவர்கள் மனம் கோணாமல் பார்ப்பதே பிள்ளைகளின் தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பிள்ளைகள் இதில் கவனமாக இருக்கிறார்கள். சிலர் தவறிவிடுகிறார்கள்.

காதலுக்கு பல பெற்றோர் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள். சிலர் எதிர்ப்பு தெரிவிக்கலாம். அதனால் காதலிக்கமுன் ஒரு காதலனோ, அல்லது காதலியோ தனக்கும், தங்கள் குடும்பத்திற்கும், தங்கள் குடும்ப பின்னணிக்கும் ஏற்றவரா? எல்லோராலும் விரும்பப்படக் கூடியவரா? என்று நன்றாகச் சிந்தித்து காதலிக்க தொடங்கலாம். எனக்குப் புரிகிறது "என்னடா பயித்தியக் காரத்தனமாக இருக்கிறது. காதல் என்பது இதையெல்லாம் பார்த்தா, கேட்டா வரும்" என்று நீங்கள் நினைப்பது. ஆனால் இது தற்காலத்திற்கு மிக அவசியமாகிறதே. ஏன் காதலிப்பவர்களுக்கும் இது முக்கியமாகிறது என்று சொல்லலாம்.

இப்போதெல்லாம் காதலிக்க முன்னரே பலர் தங்களைப் பல கோணங்களில் தயார்படுத்திக் கொள் கிறார்கள். இவர்கள் பாசையில் சொல்வதானால் "இருவருக்கும் இடையில் கெமிஸ்ட்ரி வொர்கவுட் ஆகுமா? லைப் ஸ்டைல் ஒத்துவருமா? ஈக்குவல் ஸ்டேட்டஸ் இருக்கிறதா? புரிதல், தன்னலம் இவைகள் பற்றிய தெளிவு இருக்கிறதா? என்றெல்லாம் விலாவாரி யாக ஆராய்ந்து அறிந்து கொண்டபின்பே காதலிக்க முடிவெடுக்கிறார்கள். பின்பு பெற்றோரிடம் சொல்லும் போது இது அவர்களுக்கு மகிழ்ச்சியையும், சந்தோசத் தையும், வெற்றியையும் கொடுக்கிறது. நல்ல சம்பந்தம், நல்ல குடும்பம், நாம் பார்த்துப் பேசிச் செய்தாலும் இப்படி அமையாது என்று சொன்ன பெற்றோர்களை நாம் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோம். சில பிள்ளைகள் இப்படி முன்யோசனையின்றி வழுக்கி வீழ்ந்து, தங்கள் குடும்பத்துக்கு ஒத்துவராத பின்னணியில் ஒருவரை விரும்பி, அதை தங்கள் பெற்றோரிடம் கூறும்போது பிரச்சினை உருவாகிறது. பெற்றோர் அதை மறுக்கும்போதும், எதிர்க்கும் போதும், மனதை மாற்றிக்கொள்ள முடியாமல், பெற்றோரை எதிர்த்துத் தாங்களே பிரிந்து சென்று மணம் முடிக்கும் போது பெற்றோர்மனம் என்னபாடுபடும் என்பதை இவர்கள் நினைக்க வேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட பெற்றோர் மனமொடிந்து நோய்வாய்பட்டு கடைசியில் காலனை அணைக்கும் நிலையும் வரும்.

இந்த அசம்பாவிதங்களை, அசௌகரியங்களைக் காதல் செய்பவர்கள் ஏற்படுத்தக் கூடாது. இப்படி செய்வதால் பெற்றோரையும் கஷ்டப்படுத்தி நாளடைவில் இவர்கள் தங்களையும் கஷ்டத்துக்குள் ஆக்கிவிடுவார்கள். என்பதை இவர்கள் உணரவேண்டும். ஆக, காதலர்களே கேளுங்கள்.

காதலிப்பது தப்பில்லை. காதல்தான் வாழ்க்கையின் வசந்தம் ஆனால் காதலிக்கப்படுபவர் உங்களுக்கும், உங்களின் குடும்பத்திற்கும் பொருத்த மானவரா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள் என்பதே இக் கட்டுரை உங்களுக்குச் சொல்லும் செய்தி என்பதை உள்வாங்கி கொள்ளுங்கள். "காதல் என்பது எதுவரை கல்யாணக் காலம் வரும்வரை" என்றில்லாமல் கல்யாணத்திற்குப் பின்பும் காதலியுங்கள். அப்பொழுதே காதலின் புனிதத்தை நீங்கள் உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூட நம்பிக்கைகளை மூட்டைகட்டுங்கள்......

உலகத்தில் மனித இனம் தோன்றிய காலம் தொட்டு "மூடநம்பிக்கை" (superstitous) என்று சொல்லப் படுகின்ற ஒரு வழக்கம்,அல்லது ஒரு கடைப்பிடித்தல் மனிதர்களிடையே இருந்துகொண்டு வருகிறது. கற்காலத்தில் இதன் கற்பிதம் மிகக் கடுமையாகவும், தற்காலத்தில் இதன் தன்மை தாராளமாகவும் மக்களி டையே காணப்படுகின்றது.

நம்பிக்கை என்பது மனித சமுதாயத்திற்கு அவசியம் இருக்கவேண்டியதே. இந்த நம்பிக்கை மனிதரிடையே தெம்பையும், உற்சாகத்தையும், வெற்றி யையும் தரும். ஆனால் மூடநம்பிக்கை மக்களின் அறிவீனத்தையும், அசட்டுத்தனத்தையும் அம்பலப் படுத்திவிடும். ஒவ்வொரு இனத்திடையேயும் இந்த மூட நம்பிக்கை முளைவிட்டு நிற்கிறது. இந்த உலகில் உள்ள இனங்களை மூன்றாக வகைப்படுத்தியுள்ளனர். ஒன்று காக்கோசொய்த் (caucasoid) என்னும் வெண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினம், இரண்டு மங்கோளியிட் (mongoloid) என்னும் மஞ்சள் இனம்,மூன்றாவதாக நீக்ரோயிட் (negroid) என்னும் கறுப்பினம். மற்றும் இந்தக் கறுப்பு இனத்திற்கு கீழே ஆஸ்த்ரோலோயிட் (australoid) என்னும் துணை இனமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள மக்களைப் பிரித்துள்ளனர். மேற்கூறப்பட்ட அத்தனை இனங்களிலும் இந்த மூட நம்பிக்கை இருக்கிறது என்பது உண்மைதான். அவற்றை விலாவாரியாக எடுத்துச் சொல்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக நம்மிடையே உள்ள பல மூட நம்பிக்கைகள் பற்றியும், இவை இந்த அதிக வளர்ச்சியடைந்த விஞ்ஞான யுகத்தில் அவசியந்தானா? என்பதுபற்றியும் பார்க்கலாம்.

இந்தியாவில்தான் இந்த மூட நம்பிக்கையின் நதிமூலம் தொடங்கியது என்று சொல்லலாம். விஞ்ஞானி களின் இனம் குறித்த கணிப்பின்படி நான்காவது உப இனமாக இந்திய உப கண்டத்திலும், அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் உள்ள மக்கள் உள்ளடக்கப்பட்டனர். இவர்களிடையே மூட நம்பிக்கைகள் அதிக அளவிலே காணப்பட்டன. இப்பொழுதும் கடைப்பிடிக்கபடுகின்றன. தமிழ் நாட்டில் வாழ்ந்து மறைந்த பகுத்தறிவுத் தந்தை என்று சொல்லப்படுகின்ற ஈ.வே. இராமசாமி, பெரியார் என்று அறியப்பட்டவர் இந்த மூட நம்பிக்கைகளுக்கு எதிராக எழுந்தார். போர்க்கொடி தூக்கினார். இவர் பின்னால் கணிசமான மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். திரா விடக் கொள்கைகள் என்று இவர் வகுத்த பலவற்றில் நாஸ்திகமும், மூட நம்பிக்கைகளும் உள்ளடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் என்னதான் பெரிதாகப் பேசப்பட்டாலும் ஆரியத்தின் ஆதிக்கம் இன்னும் அங்கு குறைந்த பாடு இல்லை.

இது எமது மக்களையும் இன்னும் விட்டபாடில்லை. இந்த ஆரிய விழுமியங்களுக்குள் விழுந்த நாம் இன்று வரை எழும்பமுடியாமல் இருக்கிறோம் என்பதுதான் உண்மை. நாளும், கோளும், சாஸ்திரமும், சாதகமும் சம்பிரதாயமும் என்று அல்லாடுகின்றோம். விருந்தினர் வீட்டுக்கு வருவதானால் செவ்வாய்க்கிழமை வேண்டாம் என்பதும், ஒரு உறவினர் வீட்டுக்குப் போனால் இன்று வியாழக்கிழமை தண்ணீரும் குடிக்க மாட்டோம் என்பதும், ஒரு விதவை, ஒரு பூனை, ஒரு நாய், தற்செயலாக குறுக்கே போனால் சகுனம் சரியில்லை என்பதும், இப்படி பட்டியலிட்டால் எவ்வளவோ எடுத்துச் சொல்லலாம் அதனால் நீங்களே மூடநம்பிக்கையாக என்னென்னவற்றையெல்லாம் கையாள் கிறீர்கள் என்று எண்ணிப் பாருங்கள்.

எட்டாம் இலக்க வீடு வேண்டாம் என்பது, பதின்மூன்றாம் இலக்க வீட்டில் குடியிருக்க மறுப்பது, பல்லிச் சத்தம், நாய் ஊளை, ஆந்தை அலறல் இவற்றை யெல்லாம் அபசகுனமென நினைப்பது இப்படிப் பல.


வெள்ளிக்கிழமைகளில் மச்சம், மாமிசம், சாப்பிடக்கூடாது, என்பது இந்துக்களின் வழக்கமாக இருக்கிறது. மற்றைய நாட்களில் அத்தனை கால் நடைகளையும், பறவை இனங்களையும், தின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்துவிடும் இவர்கள் சொல்வது வெள்ளிக்கிழமை, சைவம்தான் என்று. சைவம் உடல் நலத்திற்கு நல்லது. அதை எப்பொழுது வேண்டுமானாலும் சாப்பிடலாம். குறிப்பிட்ட நாளில்தான் சாப்பிட வேண்டும் என்பதில்லையே. ஆன்மீகப் பூச்சை பூசிக் கொண்டு அல்லாடும் இவர்கள் நல்ல மனிதர்களாக வாழ்கிறார்களா என்றால் இல்லை. தில்லுமுல்லு, திருட்டுத்தனம், பகையுணர்ச்சி, பொறாமை, எரிச்சல் புறம்பேசுதல் போன்ற அத்தனை குணங்களும் இவர்களிடம் உண்டு, ஒருசிலர் விதிவிலக்காகவும் இருக்கலாம்.

ஆக, இந்த வருடத்திலாவது உங்கள் மூட நம்பிக்கைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு மிஞ்சி இருக்கும் காலத்திலாவது புதிய மனிதர்களாக வாழவும், புதுமைகளைத் தேடவும் உங்களைத் தயார்ப்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடன்பிறந்தோரை வெறுக்காதீர்கள்

இந்தப் பூமிப் பந்தில் நாம் வாழும் காலம் மிகக் குறுகிய காலமே, முதலில் இதைப் புரிந்துகொள்ளுங்கள். சூது, பொறாமை, வஞ்சகம், கொலை, களவு, ஏமாற்றம், துரோகம், எரிச்சல், புகைச்சல் போன்ற பயங்கரமான விளைபொருட்களுக்குச் சந்தை விரித்து வைத்திருக்கும் இந்த சமூகத்தின் மத்தியில் நமக்கென்று அன்பு காட்டவும், கஸ்ட, நஸ்டங்களில் பங்கு கொள்ளவும், துன்பம் வரும்போது துடித்துக் கொண்டு வருவதற்கும் நமது சொந்த இரத்தங்களே அதாவது உடன்பிறப்புகளே இருக்கிறார்கள். எமது சகோதர, சகோதரிகள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். "தானாடாவிட்டாலும் தசையாடும்" "தம்பியுடையான் படைக்கஞ்சான்" போன்ற சொலவடைகள் பல தமிழில் இருக்கின்றன. இவை இரத்த பாசத்துக்கு ஈடு இணை இல்லை என்பதை எடுத்துக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண காலம் தொட்டு இந்த சகோதர பாசத்தை நாம் பார்க்கலாம். திரேத யுகத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகின்ற இராமன், பரதன், லட்சுமணன், சத்துருக்கன், ஆகியோரின் சகோதர பாசத்தைப் படித் திருக்கிறோம், துவாபர யுகத்தில் வாழ்ந்த பஞ்ச பாண்டவர்கள் என்று சொல்லப்பட்ட தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரின் இரத்த பாசத்தைப் படித்தும் வியந்திருக்கிறோம், அத்தோடு, அன்பு - சகோதரத்துவம் பற்றி யேசு, புத்தர், நபிகள் நாயகம், கூறிய தெய்வத் திருவாக்குகளையும் மனதில் பதித்து வாழ்ந்து காட்ட வேண்டும்.

ஆனால் இந்தக் காலத்தில் மட்டும் இந்த மகத்தான சகோதரத்துவ அன்பு அடிபட்டுச் சோரம் போன அவலத்தை என்னவென்று சொல்வது. நமது நாட்டிலே அன்பாக, அந்நியோன்யமாக வாழ்ந்திருந்த உடன்பிறப்புகள், உறவுகள், சொந்தங்கள் அவ்வப்போது கோபதாபங்களிலும், மனக் கசப்புகளிலும் இறங்கி இருக்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் ஒரு நல்லது கெட்டது நடக்கும்போது அடிபட்டுப்போனதையும் நாம் அறிந்து கொண்டுள்ளோம். இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் ஒரு "உப்புச்சப்புக்கும்" உதவாத காரியத்தில் கூட இவர்கள் மனத்தாங்கல் பட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு பிடிவாதம், தன்னலம் (egoism) என்ற காரணிகளே காரணங்களாக இருந்திருக்கும். இந்தக் கோபதாபத் திற்கு பெற்றோரின், அல்லது மற்றோரின் அறிவுரை யின்பின் (counseling) இவர்கள் நேசமாகிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது பல குடும்பங்களில் சொந்த உடன்பிறப்புகள் ஒட்டு உறவின்றி விரோத, குரோத தன்மைகளுடன் ஒரு எதிரியைப் பார்பதுபோல, கூடப் பிறந்த சகோதர, சகோதரிகளைப் பார்பதையும், நேருக்கு நேரில் கண்டால் கூட முகத்தைத் திருப்பிக் கொண்டு போவதையும் பார்த்து நெஞ்சம் உடைந்த பலர் இருக்கிறார்கள்.

ஏன் இப்படி? எதனால் இது ஏற்படுகிறது? இதற்கு தூபம் போடுவது யார்? சொந்தச் சகோதரர்களையே பிரிப்பதற்கு நினைப்பது யார்? இந்த உறவுகளுக்கு மத்தியில் கசப்பையும், வெறுப்பையும் விதைக்க முடியுமா? அப்படியென்றால் யாரால் முடியும்? இப்படி யான கேள்விகள் தலைதூக்கும் போது பல விதமான பதில்கள் வந்து விழுந்தாலும் ஒரு பதில் நிலைத்து நின்றுவிடுகிறது. என்ன தெரியுமா? திருமணத்தின் பின் ஏற்பட்ட மனைவி, அல்லது கணவன் என்ற உறவே இந்த உடன் பிறப்புகளைப் பிரித்தாழ நினைக்கும் பாதகச் செயலைச் செய்கிறார்கள் என்று பாதிக்கப்பட்ட பலர் கூறுகிறார்கள்.

என் அன்பான வாசகர்களே, இது எவ்வளவு தூரத்திற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது அதனால் நான் உங்களிடமே விட்டுவிடுகின்றேன். அப்படி இதில் உண்மை இருக்கிறது என்று உங்கள் மனச்சாட்சி சொன்னால், அல்லது நீங்கள் நினைத்தால் சிந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் கருவறையில், அந்த இருட்டறையில், ஒன்றாக இருந்து ஒரே தொப்பிளில் சுவாசித்து, ஒரே தாய்ப்பாலைக் குடித்து ஒரே இரத்தத்தில் உருவாகி இந்தப் பூமிப் பந்தில் பிறந்த உடன்பிறப்புகளைப் பிரிப்பதற்கு எங்கேயோ பிறந்து, வளர்ந்து திருமணம் என்ற பந்தத்தில் ஒட்டிக்கொண்ட மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ என்ன அதிகாரம் இருக்கிறது இரத்த பாசத்தைக் கூறுபோடுவதற்கு? கண்டிப்பாக இருக்க முடியாது. இருக்கக் கூடாது. தங்களின் தன்னலத்துக்கும், கோபதாபத்திற்கும் சகோதர சகோதரி களைப் பலிக்கடா ஆக்கும் இவர்கள் கண்டிக்கத் தக்கவர்களே.

மற்றது இன்னுமொரு விடயத்தையும் இந்தக் கட்டுரை மூலம் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இப்படி ஒட்டு உறவின்றி இருக்கும் உடன்பிறப்புகள் நாளைக்கு ஒரு நல்லது கெட்டது நடக்கும் பொழுது எப்படி முகம்கொடுப்பது? பிறத்தியார்போல் வந்திருந்து ஒதுங்கி இருந்து கலந்துகொண்டு போவதா? சமூகம் நாளைக்குக் காறித் துப்புமே என்பதற்காக வந்து போவதா? அதிலும் உங்கள் தன்னலமும், வீம்புமே புலனாகும் என்பதையும், சமூகம் உங்களை இழிவாகப் பேசும் என்பதையும் ஏன் நீங்கள் புரிந்து கொள்ள வில்லை? இப்படியான மனப்பாங்கில் உள்ளவர்கள் நல்லது கெட்டதுகளுக்கு வராமல் இருப்பதே நல்லது. ஏனென்றால் உங்கள் நடவடிக்கைமூலம் உங்கள் உடன்பிறப்புகளுக்கு மேலும் மன உளைச்சலையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தையும், வெறுப்பையும் கொடுப்பீர்களேதவிர மாறாகச் சந்தோசத்தைக் கொடுக்கமாட்டீர்கள்.

உங்களுக்குள் ஏற்படுகின்ற கொடுக்கல், வாங்கல் அல்லது சொத்துப்பிரிப்பு மற்றும் உடன் பாடற்ற சம்பவங்கள், ஏனைய ஒவ்வாத விடயங்களை உங்கள் சகோதரங்களுடன் நேரடியாகவே பேசித் தீர்க்க முற்படுங்கள். மனம் விட்டுப் பேசினால் எல்லாம் சுபமாக முடியும். ஒரு நூலிழையில் இருக்கின்ற முறிவை முடிப்பதை விட்டுவிட்டு நிரந்தரமாக கற்சுவர் கட்ட யாரையும் அனுமதிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பைத் தேடி அலையும் அப்பாக்கள்....

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் பல குடும்பங்களில் பிரச்சினைகள் எழுந்து அவர்கள் வாழ்வைச் சூனியமாக்கிய சம்பவங்களை அடிக்கடி ஊடகங்கள் வாயிலாகவும் பத்திரிகைச் செய்திகளாக வும் நாம் கேட்டும் படித்தும் இருக்கின்றோம். பல சம்பவங்களைப் பட்டியல் இடலாம், ஆனால் இந்தக் கட்டுரைக்கு அவை தேவையற்றவையென கருதலாம்.

புதிய பிரச்சினையாக முளைத்திருப்பது என்ன வென்று பார்த்தால் பல தந்தைமார்கள் தங்களின் வளர்ந்த பிள்ளைகளினால் (ஆண், பெண்) புறக் கணிக்கப்படுகின்றார்கள், உதாசீனப் படுத்தப்படு கின்றார்கள், ஏளனப் படுத்தப்படுகின்றார்கள். தகப்பன் என்று ஒரு மட்டு மரியாதை இல்லாமல் நடக்கின்றார்கள். இதனால் மனம் நொந்து, நொடிந்து,வெந்து, வெதும்பி வெளியே சொல்ல முடியாமல் திக்கித் திணறி திண்டாடுகிறார்கள். இது எதனால் ஏற்படுகின்றது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரச்சினைக்கு என்ன காரணம்,மற்றும் இதன் நதி மூலம் என்ன? என்ற கேள்விகள் வரும்போது ஒருவரும் எதிர்பார்க்காத பதில் ஒன்று வந்து ஆச்சரியப்படுத்துகிறது. பிள்ளைகளின் தாய்தான் இந்தக் கொடிய துன்பத்துக்கு தூபம் போட்டு வளர்த்து விட்டவர் என்ற உண்மை தெரியவருகிறது, இதை கேட்பதற்கும், ஏற்பதற்கும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அது எப்படி ஒரு தகப்பனிடமிருந்து பிள்ளைகளை பிரித்தாழ ஒரு தாய் நினைப்பது என்ற கேள்வி வரும்போது, தங்கள் கணவன் மாரில் கொண்ட வெறுப்பு, கோபம் காரணமாக தனது பிள்ளைகளை வைத்து பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாக இது இருக்கிறது என்ற தகவல் தெரியவருகிறது.

பனி, குளிர், மழை, வெயில் என்று பாராமல் இந்தக் குளிர் நாடுகளில் இராப் பகலாக ஓடோடி உழைத்து தனது பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாச மாக இருக்கவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்ட ஒரு பெற்ற தகப்பனை மரியாதைக் குறைவாகவும், எடுத்தெறிந்து பேசியும், பேசாமல் ஒதுக்கியும் பார்க்கும் பிள்ளைகளை அந்தத் தகப்பன் எப்படிப் பார்க்க முடியும்? அல்லது என்ன செய்யமுடியும்? தனது மனைவி அல்லவா இதற்கு காரணமாக இருக்கிறாள் என்று அறியும்போது மெல்லவும் முடியாமல் விழுங்க வும் முடியாமல் என்பதுபோல் தனக்குள்ளேயே எல்லா வற்றையும் ஜீரணித்துக் கொண்டு ஒரு நடைப்பிணமாக அந்தத் தகப்பன் நடமாடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தகப்பனிடம் பிள்ளைகள் மதிப்பு மரியாதை இன்றி நடந்தால் தாய்தானே தட்டிக் கேட்டு திருத்த வேண்டும். இதுதானே முறை அல்லது நியதி. ஆனால் இங்கு கதை வேறுமாதிரி அல்லவா நடக்கிறது. தகப்பனைப் பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் பிள்ளைகளிடம் சொல்லி தாயே வெறுப்பேற்றும் நாடகமல்லவா நடக்கிறது.எனக்குத் தெரிந்த சில குடும்பங்களில் இந்த இழிவான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அந்தத் தந்தைமார் மனம் நொந்து வருந்தி வாடுவதை நான் பார்த்திருக்கின்றேன், சிலர் உள்ளுக்குள்ளே குமுறி வெடிக்கிறார்கள் சிலர் சமூகத்திற்காக தங்களின் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். என்ன ஒரு பரிதாபமான நிலை பாருங்கள். தான் பெற்ற பிள்ளைகளால் ஒரு தகப்பன் மன நோயாளியாக மாறுகின்றான் என்றால் எப்படி? பல குடும்பங்கள் அமைதி இழந்து அன்பைத் தொலைத்து அல்லாடுகின்றன. சில குடும்பங்களில் முறிவு ஏற்பட்டு நிரந்தரப் பிரிவும் வந்திருக்கின்றது. பல அப்பாக்கள் சமூகத்தில் தங்களுக்கு இருக்கும் மதிப்புக்கும், மரியாதைக்குமாக மன உளைச்சலுடன் வாழ்கிறார்கள். அவர்கள் அன்புக்காக தினமும் ஏங்குகிறார்கள். ஆனால் மனைவியோ, பிள்ளைகளோ இந்த அப்பாக்களின் அவதியையும், ஆதங்கத்தையும் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் மிகக் கொடுமையான விடயம்.

என்னதான் இந்த மேற்குலக நாடுகள் இவர்களுக்கு வசதிகளையும் வாய்ப்புகளையும், கல்வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகமைகளையும் கொடுத்தாலும் எங்களின் பண்பாட்டு விழுமியங்களும், அடையாளங்களும் இல்லாமல் போனால் எப்படி? இந்தப் பூமிப் பந்தில் இன்னும் என்னென்ன சீரழிவுகள் நடக்கப் போகின்றனவோ? மனசுக்கு மகா வேதனையாக இருக்கிறதல்லவா?

---

குறிப்பு: அன்பைத் தேடும் அப்பாக்களுக்காக எனது பாடல் வரிகள்....

பாடல்:

---------

அன்பைதேடித்தேடித்தானே...
எந்தன் நெஞ்சம் ஏங்குது
அன்பில்லாத வீட்டில்தானே
அல்லும்பகலும் தூங்குது
நொந்து நொந்து நூலாய்ப் போனேன்டா-நான்
வெந்து வெந்து தணலாய் ஆனேன்டா
முடியல்ல..முடியல்ல... என்னால் முடியல்ல..
முடிவென்ன... முடிவென்ன அதுவும் புரியல்ல...

சொந்தபந்தம் என்பது எல்லாம்
சுத்தப் பம்மாத்துடா..
சொத்துசுகம் இல்லையென்றால்
வெத்துவெறும் வேட்டுடா..
எந்தப்புத்தில் எந்தப் பாம்புடா -அட
எந்தப்புள்ள நல்ல புள்ளடா ..
தெரியல்ல...தெரியல்ல..ஒன்றும் தெரியல்ல..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியோடி மாடாய் உழைத்தும்
கொண்டதெல்லாம் என்னடா
ஆடி முடிஞ்சு ஓய்ந்தபோதும்
கண்டதெல்லாம் என்னடா
விட்டகுறை தொட்டகுறையா -நான்
வெட்ட வெளி பட்ட மரமா
புரியல்ல..புரியல்ல..ஒன்றும் புரியல்ல..

வளர்த்த கடா முட்டி முட்டி
மனசு ஒடிஞ்சு போச்சுடா
பாசம் வைச்ச பசுவும் குத்தி
நெஞ்சில் காயம் ஆச்சுடா
இன்னும் என்ன இந்த வாழ்க்கைடா-நான்
மண்ணுக்குள்ள போகவேணும்டா
முடியல்ல முடியல்ல என்னால் முடியல்ல...

ஆக, கொஞ்சக் காலம் வாழப் போகும் இந்த வாழ்க்கையில், கூடப் பிறந்த சகோதர, சகோதரிகளுடனும், மற்றும் இரத்த உறவுகளுடனும் நாம் பாந்தமாக, பாசமாக, நேசத்துடன் இருந்து கொண்டால் எமது வாழும் காலத்திலேயே மகிழ்ச்சியையும், இன்பத்தையும் பார்க்கலாமே!

கொஞ்சம் உட்காந்து சிந்தியுங்கள். வசந்தம் வாழ்வில் வீசும்... "தன் சகோதரனை நியாமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு எதுவாக இருப்பான். தன் சகோதரனை வீணன் என்று சொல்கிறவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாவான். மூடன் என்று சொல்கிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாக இருப்பான். என்றும், சமாதனம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்றும் திருவி விலியம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமைப்பருவம்.... ஒரு நெருப்பாறு?

இப்போதெல்லாம் நிலத்திலும், புலத்திலும் உள்ள பெற்றோரின் கவலை என்ன தெரியுமா? தங்களின் பிள்ளைகள் இந்த இளமைப்பருவத்தை நல்லபடியாகக் கடந்து விடவேண்டுமே என்பதுதான். இவர்களின் இந்த கவலைக்கு அல்லது பயத்திற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? என்று கேட்டால், இருக்கிறது. மூன்று தசாப்தங்களுக்கு முன் இருந்த வாழ்வியல் முறைக்கும், இப்போது இருக்கும் முறைக்கும் தமிழ் மக்களிடையே நிறையவே மாற்றங்கள் ஏற்பட்டி ருக்கின்றன. தமிழர்கள் தங்களுக்கென்ற பண்பாடு களையும், விழுமியங்களையும், அடையாளங்களையும் கொண்டவர்கள். தாய்மண்ணில், போர் தொடங்கு வதற்கு முன் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

அரச ஊழியர்களாக இருந்தாலும் சரி விவசாயி களாக இருந்தாலும்சரி அல்லது வேறு எந்தத் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர்களாக இருந்தாலும் தங்கள் குடும்பம், தங்கள் கலாச்சாரம், தங்கள் மேம்பாடு என்று வாழ்ந்தி ருந்தார்கள். தங்கள் பிள்ளைகள் பற்றிய எந்த கவலை யும் அவர்களுக்கு இருந்ததில்லை. பிள்ளைகளும் தங்கள் குடும்ப சூழ் நிலை அறிந்து வளர்ந்தார்கள், படித்தார்கள் வாழ்க்கையில் உயர்ந்தார்கள்.

ஆனால் போர் தொடங்கியபோது பிள்ளைகளின் திசை மாறிப்போனது என்பது என்னவோ உண்மைதான். பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றோரும் பல மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். இதுபற்றி விளக்கமாக பேசுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அது முடிந்துபோன அத்தியாயங்கள்.

இளமைப்பருவம் இது ஒரு நெருப்பு ஆறு. இதை கடப்பது அல்லது கடப்பிப்பது, அதாவது இந்த ஆற்றில் விழுந்து கருகிவிடாமல் தங்களின் பிள்ளைகளைக் காப்பாற்றுவது எப்படி? என்ற கவலையே இப்போது நிலத்திலும், புலத்திலும் ஏற்பட்டிருக்கின்றது. நிலம் என்பது தாய் மண்ணையும், புலம் என்பது தாய்மண்ணை விட்டு சிதறுண்டு வெளிநாடுகளில் வாழ்வதையும் குறிக் கிறது. நிலம் பற்றி பின்பு பேசுவோம் இப்போது புலம் பற்றிப் பார்ப்போம்.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற பெற்றோரிடையே தங்கள் பிள்ளைகள் பற்றிய கவலை அதாவது அது ஆணாக இருந்தாலும்சரி, பெண்ணானாலும் சரி இப்பொழுது பெரிய அளவில் இருக்கிறது. மேற்கத்தேய வாழ்வியல் முறைக்குள் வாழ இவர்கள் விரும்பியோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாமலோ தள்ளப் பட்டிருக்கிறார்கள். குறிப்பாக மொழியையும், அடையாளங்களையும் தொலைத்தவர் களாக தங்கள் பிள்ளைகள் வளர்வதை இவர்கள் அனுமதிக்கிறார்களா? அல்லது அனுமதிக்க வேண்டிய சூழ் நிலையா? என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். ஆனால் ஒன்று தங்கள் பிள்ளைகள் தடுக்கி, வழுக்கி விழாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை இவர் களிடம் இருக்கிறது.

மேற்கு நாடுகளிலே உள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப, வளர்சிகளும், வாழ்வியல் முறையும் தங்களையும், தங்கள் பிள்ளைகளையும் அந்நியப் படுத்தி விட்டனவோ என்ற கேள்வி புலம்பெயர்ந்த பெற்றோரிடையே எழுகிறது. விஞ்ஞான, தொழில்நுட்ப, வளர்சிகளும், மற்றும் காரணிகளும் எப்படி பிள்ளை களுக்கு விரோதமாக மாறும்? என்று நீங்கள் சிந்திக்கலாம்.

இப்போதெல்லாம் உலகமே இவர்கள் கைகளில் இருக்கிறது. computor என்று சொல்லப்படுகின்ற கணனி இன்று எல்லோருக்கும் ஒரு முக்கியமான அத்தியாவசியமான பொருளாக இருப்பதோடு இது இல்லாமல் இருக்கமுடியாது என்ற ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. உண்மைதான்.

இருபது ஆண்டுகளுக்கு முன் இருக்காத அளவிற்கு இப்பொழுது இந்தக் கணனி உலகம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பெட்டிவடிவாக இருந்த கணனி மாறி இலகுவானது. பின்பு எங்கும் தூக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வகையில் laptop என்று அழைக்கப்பட்டது. இப்போது கைபேசியில் இருக்கிறது. இப்படி இருக்கும் போது, நடக்கும்போது, ஏன் படுக்கும் போதும், கூட இதனை பயன்படுத்த முடியும். சரி. இது கண்டிப்பாக மனித வாழ்க்கையில் இன்றைய காலக்கட்டத்தில் அவசியமாகிவிட்டது என்றே வைத்துக்கொண்டாலும் இதன் சாதக, பாதகங்களையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அறிவார்ந்த விடயங்களும், அருவருப்பான விடயங்களும் கூட இந்தக் கணனியில் உள்ளன. இதை எவ்வாறு பிள்ளைகள் கையாள்கிறார்கள் என்பதுதான் இன்றைய பெரிய பிரச்சினை. புலம்பெயர்ந்த நாடுகளில் பெற்றோர் பிள்ளைகளை தங்கள் கட்டுப்பாடுகளுக்குள் வளர்க்கவேண்டும் என்று அவர்களை உரத்துப் பேசியோ, அடித்து கண்டித்தோ வளர்க்க முடியாது. அதற்கு அவர்கள் வாழும் நாட்டு சட்டம் இடம் கொடுக்காது.

இதனால் பிள்ளைகள் தங்கள் எண்ணப்படி எதை யும் செய்யலாம் என்ற ஒரு நிலை உள்ளது. இந்தச் சட்டத்தை பிள்ளைகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி பெற்றோருக்கு பாதகத்தை விளை விக்கவும், தங்களுக்கு தாங்களே தீமூட்டிக் கொள்ளவும் பயன் படுத்தக் கூடாது என்பதுதான் மிக முக்கியமான விடயமாகும்.

அடுத்து, வாழும் நாடில் உள்ள வாழும் முறை (life style) இது கூட இன்று தமிழ் பிள்ளைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம் மாறி செல்ல வழிவகுத்திருக்கிறது. இதனாலும் பெற்றோர் பெரிதும் கவலைப் படுகின்றார்கள். பொது வாக teen age என்று சொல்லப்படுகின்ற பிள்ளைப் பருவத்தில் இவர்கள் வழுக்கி விழுந்தால் விழுந்தது தான் கரையேற முடியாது. "இந்தப் பாழாய்ப் போன கணணியும் அந்நிய மண் கலாச்சாரமும், வாழ்க்கை முறையும் எங்கள் பிள்ளைகளை பாழ்படுத்திவிடுமோ" என்று பல பெற்றோர் அச்சத்துடன் கூறுவதை நான் கேட்டிருகின்றேன். பல பிள்ளைகள் சீரழிந்து போனதை யும் நான் பார்த்திருகின்றேன். இந்தப் பிள்ளைப் பருவம் என்பதுதான் பிரச்சினை. இந்தப் பருவம் தாண்டி வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் வெற்றியடைகிறார்கள். அதுதான் இது ஒரு நெருப்பு ஆறு என்று சொல்கின்றோம்.

இனி தாய்மண்ணில் இந்த நெருப்பு ஆற்றிற்கு என்ன அவசியம் வந்தது என்று கேட்டால், அதற்கும் பதில் இருக்கிறது. போருக்கு முன்பும் போர்க்காலத்திலும் இல்லாத ஒரு கலாச்சார சீர்கேடு போர் முடிந்த பின்பு அங்கு தோன்றியுள்ளது என்பதை நாம் பல செய்திகளூடாக பார்க்கிறோம்.

தப்பித் தவறி மிச்சம் மீதி இருக்கின்ற பிள்ளை கள் கூட தப்புத் தண்டாவில் இறங்கிவிடக்கூடிய சூழலை அங்கு திட்டமிட்டு பல தீய சக்திகள் உருவாக்கி விட்டார்கள் என்ற செய்திகளும் வந்து சேர்கின்றன. குறிப்பாக பாலியல் வியாபாரம், ஆபாசப் படக்காட்சி கள், விரும்பத்தகாத கேளிக்கை நிகழ்வுகள், இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அங்கு நடப்பதாக அறியமுடிகிறது. அதனால் அங்குள்ள பெற்றோரும் அச்சத்தில் உள்ளனர்.

ஆகவே இந்த இளமைப் பருவம் என்கின்ற அதி உன்னதமான பருவத்தைக் கடந்து வருவதில் பிள்ளைகள் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்பதும் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வது பெற்றோரின் பங்கு என்பதும் இங்கு முக்கியமான விடயமாகும். பிள்ளைகளே! உங்களைச் சுற்றி பல தப்புகள் நடக்கலாம் தடம் மாறிவிடாதீர்கள். சந்தன மரத்தைப் பாம்பு சுற்றும் ஆனால் அந்த மரம் தன்னுடைய நறுமணத்தையும் இழக்காது, பாம்பின் விஷத்தையும் எடுத்துக்கொள்ளாது. அதேபோல் பிள்ளைகளே, இளைஞர்களே உங்களைச் சுற்றி தப்புகள் நடந்தாலும் நீங்கள் தடம்மாறிவிடாதீர்கள். உங்கள் பெற்றோரின் உண்மையான கவலையைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உயர்வுடனும், தனிமனித ஒழுக்கத்துடனும் வாழவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு தாய் தந்தையின் விருப்பமாக இருக்கும் அதைப் புரிந்து நடந்து அவர்களுக்கு மகிழ்ச்சியையும், உங்களுக்கு உயர்ச்சியையும் உண்டாக்கிக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகைகள் திருடுதல்... ஒரு தொழிலாகிறது?

அண்மைக்காலங்களில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்தில் லண்டன் மாநகரிலும், ஜேர்மனியில் முக்கிய நகர்களிலும், பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், ஆகிய நாடுகளின் தலை நகர்களிலும், கனடா, ஆஸ்திரேலிய போன்ற நாடு களிலும் கொலைகளும், பல குற்றசெயல்களும் பயமுறுத்தல்களும், திருட்டு சம்பவங்களும் இடம் பெற்று புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும், ஆச்சரியத்தையும் கொடுத்த வண்ணம் இருக்கின்றன.

இப்போது தங்க நகைகள் திருடுபோதல் பரவலாக நடக்கிறது. வீடுகளில் திருட்டு என்பதை எப்போதாவது நாம் தாய்நாட்டில் இருந்த பொழுது கேட்டிருப்போம். மேற்குலக நாடுகளிலும் திருட்டா? திருடும் போது கொலையா? இது எப்படி நடக்கிறது? இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள்?, என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்கு விடைதேடும் பொழுது பல அதிர்ச்சி தரும் செய்திகள் பதிலாக வந்து விழுகின்றன.

திருடுவதை ஒரு தொழிலாக ஒரு கூட்டம் ஒவ்வொரு நாடுகளிலும் செய்து வருகின்றது. அதற்கென்று ஒரு நெறிமுறை, பொறிமுறை வைத்து கனகச்சிதமாகக் களவு மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் கூட்டத்தினரின் இலக்கு தங்க, வைர ஆபரணங்களிலும், பணம் மற்றும் விலைமதிப்புள்ள வீட்டுப் பொருள்களிலும், கடவுப் புத்தகங்களை களவாடுவதிலும் சார்ந்து இருக்கிறது என்ற தகவலும் தெரியவருகிறது.

புலத்திலே வாழ்கின்ற எம்மவர்கள் எல்லா வசதிகளுடனும் வாழ்கிறார்கள் என்பது ஓரளவு உண்மையே. தங்களின் பொருளாதார நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை சீரமைத்துக் கொள்கிறார்கள். ஒரு குடும்பத்தில் அனைத்து அங்கத்தவர்களுக்கு முரிய நகை நட்டுகளை தாங்கள் வாழும் நாடுகளிலும் மற்றும் சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளிலும் கொள்வனவு செய்வது இவர்கள் வழக்கம் என்று சொல்லப்படுகிறது. சிலர் அளவோடு தங்க ஆபரணங்களை நுகர்வு செய்கிறார்கள் பலர் அளவுக்கு அதிகமாகவே வாங்கிக் கொள்கிறார்கள். பழைய நகைகளை கொடுத்து புதியனவற்றை பெற்றுக் கொள்ளுதல், நவீன வடிவங்கள் வரும்போதெல்லாம் வாங்கிச் சேர்த்தல், சுபகாரியங்களின் போது பரிசாக கிடைத்தல் என்று நாளுக்குநாள் நகைகள் பல்கிப் பெருகி நூறு, இருநூறு சவரன்கள் என்று ஆகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெண்களுக்கு தாலி என்பது மங்கள நாண் என்பதைவிட இப்போது பலரிடம் ஆடம்பர மாகவும், அடுத்தவர் பார்த்து ஆ, ஊ என்று சொல்ல பெருமைப்பட்டுக் கொள்ளும் விதத்தில் தாலி கழுத்தில் ஜொலிக்க வேண்டும் என்பதும் முக்கியமாகி விட்டது.

தமிழர்களின் கலாச்சார விழுமியங்களில் பல சடங்குகள் இடம் பெறுவது இயல்பானது. தாய் நாட்டில் வாழ்ந்தபோது திருமணம், பெண்பிள்ளைகளின் பூப்புனித சடங்கு என்பன சிறப்பாக நடக்கும். ஆனால் இங்கு புலத்தில் வாழும் நம்மக்கள் மத்தியில் இன்னும் சில கொண்டாட்டங்கள் சேர்ந்து கொண்டன. குறிப்பாக அரங்கேற்றம், பிறந்தநாள், ஒன்றுகூடல், கலை நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டி, தேசிய எழுச்சி போராட்டங்கள், கோவில்கள், தேவாலயங்களில் நடக்கின்ற உற்சவங்கள் என்று ஏகப்பட்ட நிகழ்வுகள்.

இப்படியான நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் எம்மவர் குறிப்பாக பெண்கள் தங்களை சிறப்பாக அலங்காரம் செய்துகொள்கிறார்கள். அத்தோடு தங்கள் அனைத்து நகைகளையும் அணிந்து கொள்கிறார்கள். ஒருசிலர் தங்களை ஒரு நகைக்கடை பொம்மை போல் அலங்கரித்து எல்லோரையும் திரும்பிப் பார்க்கவைப் பார்கள். இதை நம்மவர் மட்டுமல்ல பிற சமூகத்தினரும் பார்த்து வியப்பதுண்டு. இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் மற்றவர்கள் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமைப்பட்டு, எரிச்சலப்பட்டுக் கொள்வதற்கும் சிலரின் மனதில் வக்கிரமான எண்ணங்கள் தோன்று வதற்கும் இவர்களின் போக்கு வழிவகுக்கும் என்பதே.

புலம்பெயர் நாடுகளில் நாம் பல இன மக்களுடன் வாழ்கின்றோம். இவர்கள் யார்? என்ன செய்கிறார்கள்? இவர்களின் தன்மை எத்தகையது?, என்பதுகூட எமக்குத் தெரிவதில்லை. ஏன் எதிர்வீட்டில், பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்று அறிவதற்கும் வாய்ப்பு இல்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஆக இந்தக் கொலை, களவு, குற்றச்செயல்கள் யாரால் எப்போது எப்படி நடக்கின்றன என்பதை அறிந்துகொள்வதும் கடினமா கிறது. எனக்குக் கிடைத்த ஒரு சிலரின் தகவல்களின் படி பல திருட்டுச் சம்பவங்களின் பின்னணியில் தமிழர்களே இருக்கிறார்கள் என்ற செய்தி அதிர்ச்சியைத் தருகிறது. ஒருவேளை இதற்கு சாத்தியம் இருக்கிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. ஏன் தெரியுமா? அதிக நகைகளை அணிந்து மேற் குறிப்பிட்ட கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் பெண்களை நோட்டம்விட்டு அவர் களின் வீடு, நடமாட்டம், நடவடிக்கை, எப்போது வெளியில் போகிறார்கள், வருகிறார்கள் என்ற தகவல் களைச் சேகரித்து பின்பு திட்டம் தீட்டித் திருடுகிறார்கள் அல்லது திருட்டுத் தொழிலில் தேர்ச்சிபெற்ற பிறநாட்டினரை அணுகி இவர்கள் பின்னிருந்து செயற்படுகிறார்கள் என்ற செய்தியும் வாய்பிளக்க வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இருந்தாலும் பலர் இந்தப் பனி நாடுகளில் கடின உழைப்பின் மத்தியில் சம்பாதித்துச் சேகரித்த தங்களின் நகைகளைப் பறிகொடுத்து பரிதவிப்பது மிக மனவேதனையாக இருக்கிறது. காவற்த் துறையோ அல்லது வேறு துறையோ எமக்கு உதவும் என்பதை விட, எமது உடைமைகள் பறிபோகாமல் பார்ப்பது நமது பொறுப்பே என்பதை நாம் உணர்ந்து கொண்டு அதற்கான பாதுகாப்பில் இறங்க வேண்டும்.

நகைகள், பணங்கள், மற்றும் விலையுயர்ந்த பொருட்களை வீட்டில் வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். வீட்டின் கதவுகள், யன்னல்கள் யாவும் தரமானவையாகவும், பூட்டுகள் பலமானவையாகவும் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அயலவர்கள், அந்நியர்கள் ஆகியோரில் கவனமாக இருக்க வேண்டும். இப்படிப் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தால் இந்தத் திருட்டுச் சம்பவங்களில் இருந்து விடுபட எங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மக்களே! சிந்தித்துச் செயல்ப்படுங்கள். நல்லது நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த மானம் கெட்ட தமிழனை என்ன செய்வது?

தாய்மண்ணை விட்டு அந்நிய மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நிறையவே இழந்திருக்கின்றோம். என்னதான் புதிய வாழ்வியல் வட்டத்திற்குள் நாம் இருந்தாலும், என்னதான் புதிய மேம்பாடுகளும் சுற்றுச்சூழலும் இருந்தாலும் நாம் எமது சொந்த அடையாளங்களையும் விழுமியங்களையும் தொலைத்தவர்களாகவே இருக்கின்றோம் என்பது எம்மில் எத்தனைபேருக்குத் தெரிகிறது, புரிகிறது?

ஒரு இனத்தின் முக்கியமான அடையாளமாக அந்த இனத்தின் மொழியே இருக்க முடியும். ஒரு இனத்தின் மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்த மாதிரி. பழக்க வழக்கங்களோ, ஆடை அணிகலன் களோ மற்றும் நடையுடை பாவனைகளோ இரண்டாம் பட்சமே. தாயின் கருவில் நாம் இருக்கும்போதே காதுகொடுத்துக் கேட்கும் மொழி நம் தாய் மொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைப் புறக்கணிப்பதும், தாய்மொழியைப் புறக் கணிப்பதும் மண்ணில் வாழும் மனிதர்கள் செய்யும் பாவங்களிலே மன்னிக்க முடியாத பாவங்களாகும். இனிமையும், நீர்மையும் இணைந்த மொழி, நாம் பேசும் தாய் மொழியாக வாய்த்தது நமக்குக் கிடைத்த வரம். ஒரு இனத்தின் தொன்மை நாகரிகத்தையும், பண்பாடுகளையும் வாழையடி வாழையாக வளர்த் தெடுப்பதும், அடுத்துவரும் தலைமுறைக்கு தோள்மாற்று வதும் அந்த இனத்தின் தாய்மொழிதான்.

மொழி அழிந்தால் ஒரு இனத்தின் முகம் அழியும். மொழி தொலைந்தால் ஒரு இனத்தின் தனித்துவம் மிக்க அடையாளமும் மறைந்துபோகும்.

உலகம் முழுதும் சிதறிக் கிடக்கும் தமிழர்கள் இவற்றை உணர்ந்து, புரிந்து வாழ்கிறார்களா என்றால் இல்லை. புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் அவர்கள் வாழும் நாட்டின் மொழியின் அவசியம், அதைக்கற்றுக்கொள்ள வேண்டிய தேவை, தங்கள் பிள்ளைகளின் கல்வி இப்படி பல வகை யிலும் அவர்கள் வாழும் நாட்டின் மொழி அவர்களுக்கு அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இவர்கள் எங்கே தவறு செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஆம் இவர்கள் தாய்மொழியான தமிழை மறந்து அல்லது ஒதுக்கிவிட்டு, தமிழ் பேசினால் தரக்குறைவு என்ற ஒரு வறட்டுக் கற்பிதத்தில் வாழ்கிறார்கள். அதில் இன்னுமொரு வேடிக்கை என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றால் சில பெற்றோருக்கு தாங்கள் தமிழர்களே இல்லையென்ற நினைப்பும் இருக்கிறது. இவர்களுக்குத் தெரிவதில்லை "நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் நாய் நாய்தான்" என்று. இன்னும் சிலருக்கு தங்களுக்கு இந்த அந்நிய மொழிகள் பேசத்தெரியாவிட்டாலும், தங்களின் பிள்ளைகள் கண்டிப்பாக தமிழ் பேசாமல் அந்நியமொழிதான் பேசவேண்டும் என்று இருக்கிறார்கள். இன்னும் சில பெற்றோர்கள் தமிழ் நுண் கலைகள் பலவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கு புலம் பெயர்ந்த நாடுகளிலே கற்றுக் கொடுத்து அவர்களை அந்தக் கலைகளிலே தேர்ச்சி பெறவைத்து தங்கள் பிள்ளைகளுக்கு அரங்கேற்றம் செய்து பலருக்கும் அறிமுகம் செய்தும் வைக்கிறார்கள். இது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய செயல்பாடே.

ஆனால் கற்றது என்னவோ தமிழ் கலைகள் இவர்கள் மேடையில் பேசுவது தமிழ் அல்ல. குறிப்பாக லண்டன் மாநகரில் பல அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கும், ஊர் மக்களுக்கு நலன்கள் செய்கின்றோம் என்று இயங்கும் ஒருசில அமைப்புகளின் நிகழ்வுகளுக்கும் சென்று பார்த்தால் தமிழ் இருக்காது. ஆங்கிலத்தில் தான் மேடையில் அத்தனை அலுவல்களும் நடக்கும். இங்கே தமிழனே தமிழுக்குப் புதைகுழி தோண்டி உயிரிலும் மேலான தமிழைப் புதைப்பதைப் பார்த்து மனம் வெதும்பி, பொறுக்க முடியாமல் வெடித்து எழுந்து வெளியேறிய சம்பவங்கள் எனக்குப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இவர்களுக்குத் தெரிவதில்லை ஆங்கிலம் ஒரு மொழிதான் அது அறிவு அல்ல என்பது.

உலகத்திலே இந்தப் பண்பற்ற தமிழன் ஒருவன்தான் தன் தாய் மொழி மறந்து வேற்று மொழி பேசுவதைப் பெருமை என்று எண்ணிப் பேசுகிறான். வேறு எந்த இனத்தவரும் தங்கள் தாய்மொழியை விடுத்து பிறமொழிக்கு முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. தங்கள் இனத்தவருடன் பேசும்போது தங்கள் மொழியிலேதான் பேசுவார்கள். தமிழன் மட்டுமே தன் இனத்துடன் தன் சொந்த மொழியைப் பேசுவதையே அவமானமாக நினைக்கின்றான் இந்த மானம் கெட்ட தமிழனை என்ன செய்வது?

தமிழ் மொழிமேல் பற்றுக்கொண்டவர்களும், தமிழ் உணர்வாளர்களும் பிற மொழிக்கு எதிரானவர்கள் அல்ல என்பதும் இங்கே பதிவு பதிவுசெய்யப்பட வேண்டியதொன்றாகும்..

"புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழா-நீ
பேசுவது எந்தனுயிர் தமிழா
தென்பொதிகை செந்தமிழை மறந்தாய்-நீ
சொந்தமொழி அழித்திடவா பிறந்தாய்

பல மொழிகள் பேசுவதில் தவறில்லையடா-அது
பயன்படும் இடங்களிலே பேசவேணும்டா
தாய்மொழியில பேசுவதில் வெட்கமென்னடா அட
மேதினியில் மேன்மைபெற்ற செம்மொழியடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்நிலத்தில் வாழ்ந்தபோது தமிழ் பேசினாய் -இங்கு
ஏதிலியாய் வந்த பின்பு ஏன் மாறினாய்?
தூய தமிழ் உனக்கு என்ன துரோகம் செய்தது -அதை
நாசம் செய்ய உனக்கு ஏனோ மனசு வந்தது

ஆங்கிலேயன் அவன் மொழியை அழித்ததில்லையே
பிரன்சுக்காரன் தன் மொழியை சிதைத்ததில்லையே
டொச்சிக்காரன் தன் மொழியை தொலைத்ததில்லையே-அட
தமிழன் மட்டும் தன் மொழியை மறந்ததேனடா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் கூறும் நல்லுலகத்தின் வாழ்த்துப்பெறும் இலக்கியர் "எஸ்.பொ"

தமிழ் கூறும் நல்லுலகத்தின் வாழ்த்துப்பெறும் இலக்கியர் "எஸ்.பொ" ஈழத்து இலக்கிய நீண்ட நெடும் பாதையில் ஒரு மைல் கல்லாக அமைந்தவர் இந்த மஹா படைப்பாளி. "எஸ்.பொ" என்று தமிழ் இலக்கியர்களால் அழைக்கப்படும் அல்லது அறியப் பட்ட பெருமதிப்புக்கும், மரியாதைக்குமுரிய திரு. எஸ். பொன்னுத்துரை அவர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர். இவர் பதித்து வந்த பாதச் சுவடுகள் இன்றும், என்றும் அழியாதவைகளாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மூன்று தலைமுறைகள் கடந்தும் இன்றும் ஒரு இளைஞனைப்போல சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் திரு.எஸ்.பொ. அவர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவ்வப்போது பல ஆக்கினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை, விமர்சனங்களை எதிர் கொண்டவர் என்பதை பலர் அறிவார்கள். யாழ்மேட்டுக்குடி என்று தங்களை தம்பட்டம் அடித்துக்கொண்ட ஒரு சிலரின் காழ்ப்புணர்ச் சியுடன் கூடிய விமர்சனங்கள் இவரை காயப்படுத்த முனைந்தாலும், அதையெல்லாம் சற்றேனும் சட்டை செய்யாமல், அஞ்சா நெஞ்சனாக தனது பாணியில் முன்னின்று முழு இலக்கியம் தந்த ஒரு மூத்த படைப்பாளி திரு.எஸ்.பொ. அவர்களாகும். அறுபதுகளில் இருந்து ஆழமாகக் கால்பதித்து இயற்த்தமிழுக்கு இன்றுவரை மகுடம் சூட்டிக்கொண்டிருக்கும் இந்த மகா தமிழ் மகனை கௌரவப்படுத்த கனடா நாட்டின் 2010ம் ஆண்டுக்கான "இயல் விருது" கிடைத்திருக்கின்றது. இதற்காக ஈழத்து தமிழ் இலக்கியவாதிகள் மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகில் உள்ள அனைத்து இலக்கியர் களும் பெருமைப்படவேண்டும். வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் அவர்கள் தெரிவித்து நிற்கின்றார் கள்.

ஈழத்தில் இருந்த காலத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் இவரது படைப்புகள் பரிண மித்தன. அவ்வப்போது அவை நூல்களாகவும் வெளி வந்தன. இவர் புலம்பெயர்ந்த பின்பு இவர் தன்னை தமிழ் இலக்கியத்திற்கே தாரை வார்த்தார் என்று சொல்லலாம். "மித்ர" பதிப்பகத்தை இவரின் மூத்த மகன் டாக்டர் பொன். அனுர அவர்களின் முகாமைத் துவத்தில் தொடக்கி தனது படைப்புகளை மட்டுமல்லாது ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளையும், புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளையும் வெளிக் கொண்டு வரவேண்டும் என்ற வேட்கையில் முன்னின்றார்.

அந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றார். நூற்றுக்கணக்கான நூல்களை இவர் மித்ர பதிப்பகத்தின் ஊடாக வெளியிட்டிருக் கின்றார்.

அண்மையில் கனடாவில் கிடைத்த இயல் விருதுக்காக, இவரை தமிழ் நாட்டிலுள்ள இலக்கியப் பெருமக்கள் பாராட்டி, இவரைக் கௌரவப்படுத்தி யிருக்கின்றார்கள். நமது இனம் சந்தித்த இழப்புகள், துன்பங்கள், துயரங்கள் மத்தியிலும் இன்னும் பீனிக்ஸ் பறவைகள் போன்று மீண்டும் எழுந்து பறப்பதற்கு தயா ராகும் எம் இளைய சமுதாயத்திற்கு திரு.எஸ்.பொ. போன்றவர்கள் முன்னோடிகளாய் இருக்கின்றார்கள் என்பது மறுக்க தொன்றாகும். இவர் பல்லாண்டு வாழ வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாக்கு

இது எலும்பில்லாத மனித உடல் உறுப்புகளில் ஒன்று என்ற வரைவிலக்கணம் மட்டும் இதற்கு போதுமா, இல்லை. நிச்சயமாக இல்லை. இதை, வேறு கோணத்தில் வைத்து பார்க்கவேண்டும். சொல்வார்கள், எலும்பில்லாத நாக்கினால் எதுவேண்டுமானாலும் பேசலாமா என்று. நாக்கு என்ன தானாகவா பேசுகிறது?. மனித மனத்தின் உணர்வுகள் மூளைக்குச் சென்று அந்த மூளையின் உந்துதலினால்தானே நாக்கு பேசுகிறது.

ஆகவே வாயைத் திறந்து நாக்கின் உதவியுடன் பேசுவதற்கு முன்னர், ஒருதடவைக்கு பல தடவைகள் யோசித்துவிட்டு பேசவேண்டும் என்றும் சொல்வார்கள். வாயிலிருந்து வரும் சொற்கள், வார்த்தைகள் இதமாக வும், பதமாகவும், இனிமையாகவும் இருக்க வேண்டும். அதேநேரம் கருத்துள்ளதாகவும், கனதியாகவும் இருக்க வேண்டும். நாவானது, சிறிய உடல் உறுப்பாக இருந்தாலும் பெருமையானவைகளைப் பேசும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய நெருப்பு, எவ்வளவு பெரிய காட்டை எரித்து அழித்துவிடுகின்றது. இந்த நாக்கும் அந்த நெருப்புக்குச் சமனானதே. இது அநீதி நிறைந்த உலகிற்கு அச்சத்தையும், அறைகூவலையும் கொடுக்கக் கூடியது. அதேநேரம், மனித உடலைக் கறைப்படுத்தி, களங்கப்படுத்தி பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் இது காரணமாகிறது. ஆகவே இதை கையாள்வதில் "கவனம் மிகத் தேவை" என்பதுதான் கவனிக்கப் படவேண்டியதொன்றாகும். இந்த நாவினாலே எல்லோருக்கும் பொதுவான இறைவனை துதிக்கிறோம், வணங்குகிறோம், பாடுகிறோம்; அதேநேரம் அவன் படைத்த மனிதர்களையே அண்டுகிறோம், சபிக்கிறோம், கண்டபடி திட்டுகிறோம். துதித்தலும், சபித்தலும் ஒரே நாக்கினால் செய்யப்படுகிறது. இது எப்படி ஏற்புடையதாகும்?

ஒரே ஊற்றிலிருந்து நல்ல தண்ணீரும், உப்புத்தண்ணீரும் ஊறுமா?. அத்திமரம் அப்பிள் பழங்களையும், திராட்சைக்கொடி மாம்பழங்களையும் தருமா? இல்லையே!. அப்படியானால் எப்படி ஒரே நாக்கினால் நல்லதையும், கெட்டதையும் பேசமுடிகிறது. நாக்கு என்ன செய்யும்? அது தன்பாட்டிற்கு வாயில் எலும்பில்லாமல் சிறைப்பட்டிருக்கும் ஒரு சிறு உறுப்பு. மனிதர்களின் அறுசுவைகளையும் அறிந்து உணர்வதற்கு அது பயன் படுகிறது.

உலகத்தில் தோன்றிய ஜீவராசிகளுக்குள் மனிதனுக்கு மட்டுமே பேசும் சக்தியை ஆண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தான். (கிளி பேசுவதும், மற்றும் ஒரு சில பறவைகள் பேசுவதும் விதிவிலக்கு) அந்த பேச்சை இந்த நாக்குத்தானே மனிதனுக்கு கொடுக்கிறது. மனிதன் ஒவ்வொருநாளும் வாயைச் சுத்தம் செய்கிறானோ இல்லையோ அவன் கண்டிப்பாக நாக்கைச் சுத்தம் செய்யவேண்டும்.

எம்மில் பலர் காலையில் எழுந்தவுடன் நாக்கைச் சுத்தம் செய்து கடவுளை வணங்குவதற்கும், கனிவான பேச்சுகளைப் பேசுவதற்கும் அவர்கள் நாக்கை பயன்படுத்துவார்கள். இதற்கு மாறாக சிலர் கண்டபடி தங்கள் மனம் போனபோக்கில் பேசி தங்களையும், தங்கள் நாக்கையும் நாறடிப்பார்கள். ஆனால் வேறு சிலரோ, மனித உடல் கூறுகளில் நாக்கு ஒரு பிரதான அவயவம் என்பதால், அதை அளவோடுதான் பயன் படுத்துவார்கள். அக்காலங்களில் முனிவர்கள், சித்தர் கள், துறவிகள். ஏன் அதீத ஆற்றல் கொண்ட அறிஞர்கள் கூட நாக்கை அதிகம் பயன்படுத்துவதில்லை. தற்காலத்திலும் புத்திஜீவிகளும், மனிதநேய மாந்தர் களும் வாரத்தில் ஒருநாள் மௌன விரதம் இருக்கிறார் கள். கல்விமான்களும், சிந்தனையாளர்களும் இதற்குள் அடங்குவர். வாரத்தில் ஒருநாளாவது நாக்குக்கு ஓய்வும், அன்றைய தினம் முழுவதும் அந்த நாக்கினால் அவர்கள் அதற்கு முன்னர் பேசிய பேச்சுகள், வெளிப்படுத்திய சொற்கள், பிறரை காயப்படுத்திய சம்பவங்கள் பற்றி சிந்திக்கிறார்களோ என்னவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌன விரதம் என்பதுகூட நாக்கிற்கு இவர்கள் கொடுக்கும் தண்டனையோ தெரியாது. ஆக, நமக்கு நாக்கு என்ற உறுப்பு இருப்பது உணவைச் சுவைத்து சாப்பிடுவதற்க்கு மட்டுமல்ல. எமது உள்ளத்து உணர்வு களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் நாம் அதைப் பார்க்கவேண்டும். இந்த நாக்கினால் உலகில் பல அழிவுகளும், சச்சரவுகளும் ஏற்பட்டுள்ளன என்பதையும் நாம் கருத்தில் கொள்ளலாம். நாக்கினால் நாம் நல்லதையே பேசுவோம்

மற்றவர்களைக் காயப்படுத்தாது பேசுவோம். அறிவோடு பேசுவோம், அளவோடு பேசுவோம். எமது வாழ்வில் நலன்களும், நன்மைகளும் வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனம்

இந்த மனம் என்ற சொல் எதைக்குறிக்கிறது? மனம் என்றால் என்ன? மனிதனின் நாகரிகம் வளர்ச்சியடைந்த காலம் தொட்டு அவனின் மனத்தில் எழும் கேள்விதான் இது. ஆனால் மனம் என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது. யாராலும் அறியப்படமுடியாமலே இருக்கிறது.

"மனச்சாட்சி இல்லாமல் பேசாதீர்கள்"

"மற்றவர்களுக்கு உதவுவதற்கும் நல்ல மனம் வேண்டும்"

"மனதுதான் மிகவும் வேதனைப்படுகிறது"

"மனசையே அவளிடம் கொடுத்திட்டேன்"

"மனதை திடப்படுத்திக்கொண்டு காரியத்தைப் பாருங்க"

இப்படியான சொல்லாடல்களை நாம் பலர் பேசும் பொழுது கேட்டிருக்கிறோம் அல்லவா!. அப்படியானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? இந்தக் கேள்வியை நாம் யாரிடமாவது கேட்டால், உடனே அவர்கள் தங்கள் மார்பில் கைவைத்துக் காட்டுவார்கள். அப்படியானால் நெஞ்சில்தான் மனம் இருக்கிறதா? அல்லது இதயத்தில் இருக்கிறதா? இதற்கு பதில் இன்னும் தெரியாமலே இருக்கிறது. ஆனால் இதயமே மனிதமனத்தின் பிறப்பிடம் என்று சிலர் நினைப்பதுண்டு. ஆனால் சத்திரசிகிச்சை செய்யப்போகும் ஒரு நோயாளிக்கு மயக்கமருந்தை கொடுத்து அவரின் நினைவுகளை மறக்கசெய்து சத்திரசிகிச்சை செய்கிறார் மருத்துவர்.

மனம் என்பது இதயத்தில் இருக்குமானால் நோயாளிக்கு சிகிச்சைபற்றிய நடவடிக்கை கொஞ்சமாவது தெரிந்திருக்கவேண்டும் அல்லது உணர்ந்திருக்கவேண்டும். மேலும் இன்றைய அறிவியல் விஞ்ஞான யுகத்தில் இதய மாற்று சிகிச்சையும் செய்கின்றனர். அவ்வாறு இரவல் இதயம் பொருத்தப் பட்ட ஒருவர், தன் கடந்தகால நிகழ்வுகளைக் கூறுகின்றார் என்றால் இதயத்தில் மனம் இல்லையென்றுதானே நாம் கொள்ளவேண்டும். மனம் இதயத்தில் இருந்தால், மாற்று இதயத்திற்கு சொந்தக்காரனின் எண்ணங்களை அல்லவா சிகிச்சை பெற்றுக்கொண்டவர் பிரதிபலிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு காண முடிவதில்லையே.

ஆகவே இதயத்தை மனதின் பிறப்பிடமாக கருத முடியாது. அப்படியானால் மனதாக கருதப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தை இயக்கம் கருவியாக மூளையை, மனதின் இருப்பிடமாக கருதலாமா?. ஆனால் இதுவும் ஆய்வுக் குரிய விடயமாகவே இருக்கிறது. மனித உணர்ச்சி களுக்கும், செயல்களுக்கும் மூளையே முக்கிய காரணம் என்பது உண்மை. இந்த மூளையை இயக்குவது யார்?. மூளையுடன் தொடர்புடைய ஐம்புலன்கள்தான் மூளையை இயக்குகிறது. எனவே ஆசை உண்டாவதற்கு இந்த ஐம்புலன்கள்தான் முதல் காரணம் என்று கூறலாம். ஆக, ஆசை உண்டாக ஒரு மனம் இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியென்றால் ஆசையை உண்டாக்கும் ஐம்புலன்களை மனம் என்று கூறலாமா? அல்லது மனம் உடல் முழுவதும் வியாபித்து இருக்கிறது என்று சொல்லலாமா? அதாவது உடல்தான் மனம். மனம்தான் உடல். சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்பவே ஐம்புலன்கள் செயல்படும். இப்படி செயல் படும்பொழுது ஒருவித மாயத்தோற்றத்தால் மனமாக தன்னைக் காட்டிக்கொண்டு ஆசைகளை அல்லது விருப்பு, வெறுப்புகளை இந்தப் புலன்கள் வெளிப் படுத்துகின்றன. எனவே உடல்தான் மனம். மனம்தான் உடலாகிறது. ஆனாலும் மனம் என்பது நெஞ்சில்தான் உள்ளது என்று நெஞ்சில் கைவைத்து சொல்வது ஏன்? ஐம்புலன்களில் தொடங்கி இதயத்தில் முடிவது காரணமாக இருக்குமோ?

நெஞ்சுக்குள் இதயம் இருப்பதால், இந்த மனம் நெஞ்சில்தான் உள்ளதோ? இதில் சிறிது உண்மை உள்ளதா என்பது தெரியாது. அதனால் மனம்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல், உடல்தான் மனம் என்ற கருத்தும் முழுமையாக உண்மையாகி விடாது. ஆக, ஐம்புலன்களின் அடக்கமே உடல். இந்தபுலன்களை அடக்கி ஆள்வது மூளை. அதுதான் சொல்வார்களே, உடற்க்கட்டுப்பாடு, மனக் கட்டுப்பாடு என்று. மூளைதான் இரண்டையும் கட்டுப்படுத்தவேண்டும்.

மனம் என்பது ஐம்புலன்களின் இயக்கத்தினால் ஏற்படும் மாயத் தோற்றம்தான். அந்த மாயத் தோற்றத்திற்குதான் மனம் என்று பெயர். உண்மையில் மனம் என்று ஒன்று கிடையாது என்ற முடிவுக்கு வரலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி மறப்பது நன்றன்று

மானிட வாழ்க்கையில் கஷ்டங்களும், துன்பங் களும் மாறிமாறி வருவதுண்டு. இதை மனம் தளர்ந்து போகாமல் எதிர்நீச்சல் போட்டு எல்லாவிதத் தடைகளையும், தடங்கல்களையும் தனித்தே நின்று எதிர் கொள்ளும் துணிச்சல் சிலருக்கு உண்டு.

அது அவர்களின் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் எடுத்துச் சொல்வதாக இருக்கும். சிலருக்கு அது முடிவதில்லை. இவர்களுக்கு யாருடைய உதவியாவது உரிய நேரத்தில் தேவைப் படும். உறவுகளின் உதவியோ அல்லது நல்ல நண்பர்களின் தயவோ வேண்டப்படுகிறது.

அது தனிப்பட்ட உதவியோ அல்லது பொருளாதார, சரீர உதவியோ எதுவானாலும் தமக்கு உதவ முன்வருபவர்களுக்கும், உதவியவர்களுக்கும் இவர்கள் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டு மல்லவா?. ஆம், கண்டிப்பாக நன்றி தெரிவிக்க வேண்டும். பிறர் செய்த உதவியை நினைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி பாராட்டுவதே உயர்ந்த பண்பாகவும் இருக்க முடியும்.

நன்றி உடையவர்கள் சமூகத்தில் நல்லவர் களாகவும் மதிப்புள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் நன்றி மறந்தவர்கள் ஐந்தறிவுள்ள நாயை விடக் கேவலமானவர்கள் என்று சொல்வதுண்டு, ஏனென்றால் நாய்கூட நன்றியுள்ள பிராணி. ஒருவரின் துன்பத்தைப் போக்கியவருடைய அன்பையும், நட்பை யும் நன்றியுடையவன் எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்ளுவான். அந்த உதவியைத் தான் வாழும் காலம் முழுதும் நினைவு கூறுவான். யாராவது நமக்கு சிறிய நன்மையோ, உதவியோ செய்தாலும் அதன் பயனை நாம் உணர்ந்து அவருக்கு நன்றி பாராட்டுவதே தர்மமாகும். எம்மில் பலருக்கு இந்த நன்றி உணர்வு இருப்பதில்லை. தங்களின் தேவைகளும், பிரச்சினைகளும் முடிய வேண்டும் என்பதற்காக பலரிடமும் பலவிதத்தில் உதவிகளைப் பெறுவார்கள். எல்லாம் முடிந்தபின் உதவியவர்களை மறந்து விடுவார்கள். இவர்கள் நன்றி மறந்தவர்கள் இல்லையா?

இவர்கள் மானுடத்தின் மகத்துவத்தையும், மனிதத் தன்மையின் புனிதத்தையும் உணராதவர் களாக இந்த பூமிப் பந்தில் வாழ்கின்றார்கள்.

இவர்களுக்காகவே திருவள்ளுவர் அன்றே சொல்லிவைத்திருக்கிறார் இப்படி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்று. அதாவது எத்தனை பெரிய அறங்களை அழித்தவர்க் கும், பாவத்தைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்து தீமை செய்பவனுக்கு வழியே இல்லை என்கிறார். நன்றியுணர்வை நாம் விலங்குகளிலும், பறவைகளிலும் கூடப் பார்க்கலாம். ஐந்தறிவுள்ள இவைகளுக்கே நன்றி உணர்வு இருக்கும் போது ஆறறிவுள்ள மனிதனுக்குச் சிலசமயம் இது இல்லாமல் போவது துக்கப்பட, ஏன் வெட்கப்பட வேண்டிய விடயமாகவும் இருக்கிறது.

பண்டைய காலங்களிலும் நன்றி உணர்வுடன் இருந்தவர்கள் இருக்கிறார்கள் என்று நாம் அறிகி றோம். உதாரணமாக நெருக்கடி நேரத்தில் தனக்கு துரியோதனன் உதவினான் என்பதற்காக கர்ணன், தான் யார் என்று தெரிந்தும் கடைசிவரைக்கும் நன்றியுடன் கௌரவர் பக்கமே இருந்து யுத்தத்தில் மடிந்தான் என்று புராணத்தில் படித்து அறிகி றோம். மற்றும் தனக்கு வியாபாரத்தையும், அதனை மேம்படுத்துவதற்கு சகல விதத்திலும் உதவிய கதிஜா என்ற பெண் தனக்கு பல வருடங்கள் மூத்தவராக இருந்தாலும் தன்னை விரும்பிய பொழுது மறுக்காமல் நன்றி உணர்வுடன் திருமணம் செய்து கொண்டார் நபிகள் நாயகம் முகம்மது நபி அவர்கள் என்று வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, சின்ன உதவிகளாக இருந்தாலும் தக்க சமயத்தில் நமக்கு யாராவது உதவினால் கடைசிவரைக்கும் மறக்காமல் இருந்தால் நாம் மனிதர்கள். இதை வள்ளுவர் மேலும் ஒரு குறளில் இப்படி சொல்கிறார்...

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது" என்று,

ஆகவே பிறர் செய்த நன்மையை மறவாது இருந்து அவர்களுக்கு நன்றி பாராட்டுவோம்; நம்மை நலன்கள் நாடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறாமைத் தீயை அணையுங்கள்

ஒரு மனிதன் நல்லவனாகவோ, சமுதாயம் போற்றத்தக்கவனாகவோ இருக்க வேண்டுமென்றால், பல ஆமைகளை அவன் தன்னிடமிருந்து அப்புறப் படுத்தவேண்டும். கொல்லாமை, கள்ளாமை, வெகுளாமை, திருடாமை, பொறாமை என்று பல ஆமைகள் அடம் பிடித்து கிடக்கும். இவற்றை இவன் தட்டி எழுப்பித் துரத்திவிட வேண்டும். பல ஆமைகளுக்கு இவன் இடம் கொடுத்திருந்தாலும் பொறாமை என்பதே இவனுக்கு பொல்லாப்பை ஏற்படுத்தும். இதை அழுக்காறு, காழ்ப்புணர்ச்சி என்றும் சொல்லிக்கொள்ளலாம்.

சமுதாய வீதியில் ஆடையில் அழுக்குப் படாமல் உலவிவரும் பலரை நாம் பார்க்கிறோம் அல்லவா?. இவர்களில் அநேகம்பேர் பொறாமை பிடித்த பிணியாளர்களே என்று நமக்குத் தெரிவதில்லை. ஏன் அவர்களுக்குக் கூட அதுபுரிவதில்லை. பொறாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிடம் அண்டிக்கிடப்பதால், அவமானமும் இவர்களிடம் ஒண்டிக்கிடக்கும்.

இதனைப் பல சந்தர்ப்பங்களில் இவர்கள் எதிர் கொள்ள நேரும். உள்ளத்துள் பொறாமை இல்லாமல் வாழும் குணத்தை ஒருவன் தனக்குரிய ஒழுக்க மாகக் கொள்ளவேண்டும். எவரிடத்திலும் பொறாமை கொள்ளாத மனத்தை ஒருவன் கொண்டிருந்தால் சீரிய சிறப்புகள், அவனை வந்து சேரும். ஆனால் இது நம்மிடையே எத்தனை பேரிடம் இருக்கிறது? எம்மில் பலரிடம் இந்த அழுக்காமை அடம்பிடித்துக் கிடக்கிறதே.

பக்கத்து வீட்டுக்காரன் நன்றாக இருப்பது பிடிப்பதில்லை. அவனின் உழைப்பையும், முயற்சி யையும் பார்த்து எரிச்சல் கொள்வது, தனக்குள்ளே புழுங்குவது அல்லது அவனுக்குத் தீங்கு செய்ய முயல்வது, மற்றவன் முன்னேறுவதைக் கண்டு பொறாமைப் படாமல் அவன்போல் தானும் முன்னேற முற்படாமல் அவனையே முனிவது அல்லது முட்டுவது, இதனால் இந்தப் பொறாமை கொண்டவனிடம் இருக்கும் ஒருசில நல்லவைகளும் நழுவிப்போய்விடும் என்பதை இவன் மறுக்கிறான்.


இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே வள்ளுவர் சொன்னார், "அவ்வித்து அழுக்காறு உடை யானைச் செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்" என்று. அதாவது பிறர் உயர்வைக் கண்டு பொறாமைப் படுபவனை பார்க்கும் திருமகள் அவன் மீது வெறுப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தன் அக்காள் மூதேவிக்கு அவனை அடை யாளம் காட்டிவிட்டு விலகிப் போய்விடுவாள். அதனால் அவனுக்கு பீடையே பிடித்துவிடும். பிறர் பொறாமை யும், எரிச்சல் அடைவதிருக்கட்டும் இப்போதெல்லாம் சொந்தங்களுக்குள்ளே இவை தலைவிரித்தாடுவதை பார்க்கமுடிகிறது. சொந்தங்கள் நல்லாயிருப்பது சொந்தங்களுக்குப் பிடிப்பதில்லை. ஒரு நண்பன் முன்னேறுவது மற்ற நண்பனுக்குப் பிடிக்காது. அண்ணன் நன்றாக இருப்பது தம்பிக்கு பிடிப்பதில்லை. தங்கை நன்றாக இருப்பது அக்காளுக்குப் பிடிப்ப தில்லை. இதனால் குடும்பங்களுக்குள்ளே நல்ல உறவு இல்லாமல் போய்விடுகிறது. ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுத் தன்மை குறைகிறது.

இந்தப் பொறாமை என்னும் மூதேசி எவரிடம் இருக்கிறதோ அது அவனது வசதிகள், செல்வங்களை அழிப்பதோடு அவனைப் படுகுழியில் தள்ளிவிடும். ஆகவே பொறாமை கொண்டு உயர்ந்தவர்கள், இந்த உலகில் எவரும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொண்டால். நாம் வாழும் காலம் சிறப்பாக அமையும். பொறாமையுடையவர்களுக்குத் தீமையை-யத் தருவதற்கு பகைவர்கள் தேவையில்லை. இந்தப் பொறாமையே அதைத் தேடித் தரும், என்பதை நாம் கருத்தில் கொள்வோமாக!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னடக்கம் உன்னை உயர்த்தும்

மனித வாழ்வியலில் மனிதரின் தன்மைகள் பலதரப்பட்டதாக இருக்கிறது. நவரசங்கள் என்று சொல்லப்படுகின்ற ஒன்பது குணாதிசயங்களிலும் மனிதனின் இயல்புகள் பொதிந்துள்ளன. இன்னும் சில சிறப்பம்சங்கள் இந்த மனித இனத்திடம் அண்டிக்கிடக்கின்றன. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று அறிகின்றோம் அல்லவா? அதேபோல் ஒரு மனிதனுக்கு வரும் நல்லது, கெட்டதுக்கெல்லாம் அவனது எண்ணங்களும், செயல்களுமே காரணமாக அமைந்துவிடுகிறது.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று வள்ளுவர் சொன்னதுபோல் ஒருமனிதனுக்கு அடக்க மும் ஒரு அணிகலனே. நாவடக்கம், அவை அடக்கம் என்பனவற்றோடு தன்னடக்கம் என்பதும் ஒரு மனிதனுக்கு மிக மிக அவசியமாகிறது. "மனிதன் தன் இதயத்தின் ஆழத்தில் எந்த எண்ணத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறானோ அதேபோல் ஆவான்'' என்பது ஒரு முதுமொழி. மனிதனே அவனது குணங்களை அமைக்கும் சிற்பி, சூழ்நிலையை உருவாக்கும் ஓவியன், விதியை நிர்ணயிக்கும் படைப்பாளி. தன்னடக்கத்துடன் இருக்கும் ஒருவனுக்கு நல்ல பண்புகள் அனைத்தும் தானாக அமைந்துவிடும். ஆனால் தனிமனிதப் பண்புகள் கொண்ட பலரிடம் இந்தத் தன்னடக்கம் இல்லாமல் போவதுண்டு.

என்னதான் பெரிய மனிதனாக ஒருவன் நடமாடினாலும் தன்னடக்கம் இல்லாத மனிதன் கடைசியில் தடுக்கி விழுவான் என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. புராண, இதிகாச, காப்பியங்களிலும் நாம் இவற்றைக் காணலாம். அவையடக்கமும், தன்னடக்கமும் இல்லாமல் செயல்பட்ட துரியோதனன் தலைமையின் கீழ் செயல்பட்ட கௌரவர்கள், தன்னடக்கம் இல்லாமல் தடம்பிரண்ட இராவணன், மற்றும் பாண்டியமன்னன், சாலமன் என்று பல உதாரணங்களையும் நாம் பார்க்கலாம். நான் உச்சத்தை அடைந்துவிட்டேன் என்னை எதுவும் செய்ய முடியாது என்று தன்னடக்கம் இல்லாமல் எண்ணும் ஒரு தனிமனிதன் ஒரு நிறுவனம், அல்லது ஒரு நாடு என்னவாகும்?. சரிவை நோக்கிப்போகும் என்பதை நாம் அண்மைக்காலங்களில் பார்க்கிறோம்.

தன்னடக்கம் ஒரு மனிதனுக்குச் சிறந்த ஆபரணம் என்று சொல்லலாம். திருவிவிலியத்திலே "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' என்று சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கிறதல்லவா? ஆகவே தாழ்ச்சியும், தன்னடக்கமும் கிட்டத்தட்ட ஒரே தன்மை வாய்ந்ததே. ஒருமனிதன் இவ்வுலகில் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களும், கஷ்டங்களும்தான் நரகம் என்பதும், அவன் இப் பூமியில் அனுபவிக்கும் இன்பங்கள்தான் சொர்க்கம் என்பதும், இதற்கு மேலே சொர்க்கம், நரகம் எதுவுமில்லை என்பதையும் ஒரு தன்னடக்கவாதி தெரிந்து கொள்கிறான்.

மேலும் ஒருமனிதனின் உள்மனதில் எழும் எண்ணங்கள்தான் அவனது சொல்லாடலாக வெளியே தெரிகிறது. புற வாழ்வில் தனக்கு நேரும் கெட்ட சம்பவங்களைத் தவிர்க்க வேண்டுமானால் அவன் தன் உள்மன சிந்தனைகளை முதலில் சீர் செய்யவேண்டும். இதெல்லாம் கடைப்பிடிப்பதற்கு மனதளவில் அடக்கம், ஆம் தன்னடக்கம் தேவை.

ஒரு மனிதன் தன்னடக்கத்துடன் தன்னுடைய எண்ணங்களை உயர்த்திக் கொள்ளுதல் மூலம் தன்னிலையில் இருந்து எழ முடியும், வெற்றி காண முடியும், சாதிக்க முடியும். ஆக, தன்னடக்கமுள்ள மனிதர்கள் இந்தப் பூமிப்பந்தில் நல்லவர்களாகவும், நன்னம்பிக்கை மிக்கவர்களாகவும், மற்றவர்களால் மதிக்கப்படக் கூடியவர்களாகவும் வாழ்கிறார்கள், வாழ்வார்கள் என்று கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பை மதித்து நட...

நமது வாழ்நாளில் எத்தனையோ மனிதர்களை சந்திக்கின்றோம். அத்தனைபேரும் எமது மனதில் இடம்பிடித்துவிடுகிறார்களா என்றால் இல்லை. எமது பால்ய காலம், வாலிபகாலம், நடுத்தரகாலம், அந்திம காலம் என்று நாம் ஒவ்வொரு பருவ காலங்களையும் கடக்கும்போது கண்டிப்பாக பலர் எமக்கு பரிட்சயமும், சிநேகமும் ஆகிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனைபேர் எமது உள்ளங்களில் நிலையாக இடம்பிடிக்கிறார்கள், மிகச்சிலரே... இல்லையா? அதிலும் ஒருசிலரே ஆத்மாத்தமாகி விடுவதுண்டு. அதிலும் ஓரிருவர் ஆருயிர் நண்பர்களாகி விடுவதுண்டு. எத்தனை உறவுகள் எமக்கு இருந்தாலும் நல்ல நட்புள்ள நண்பன், அல்லது நண்பி என்ற உறவே மிகச்சிறப்பானது என்பதையும் நாம் அறிவோம்.

நாம் ஒரு நல்ல நட்பை தெரிவு செய்வதில் மிக அவதானமாக இருக்கவேண்டும். சொல்வார்கள், "உன் நண்பன் யார் என்று சொல்லு, உனைப்பற்றி தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறோம்'' என்று. எங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு எமது நண்பர்கள்தான் அளவுகோலாக இருக்கப்போகின்றார்கள் என்றால் இந்த சமூகம் நட்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது, என்பதை நாம் உணரவேண்டும்.

புராண, காப்பியங்களிலும் நல்ல நட்புக்கு எடுத்துக்காட்டுகள் பல இருந்ததாக நாம் படித்திருக் கிறோம். கண்ணபிரானுக்கு ஒரு குசேலர், துரியோத னனுக்கு ஒரு கர்ணன், கோப்பெருஞ் சோழனுக்கு ஒரு பிசிராந்தையர் என்று நட்புக்கு பலர் இலக் கணமாக இருந்திருக்கிறார்கள் என்று அறிகி றோம். ஆகவே ஒரு நட்பு நமக்கு கிடைப்பதற்கு முன், அது நல்ல நட்பா என்று அறிவது மிக முக்கியம். நாம் ஒருவரை விரும்பி நட்புக் கொண்டாடியபின் அதை விடுவது கடினமாகிவிடும். அதனால் முன்பே ஒருவரைப்பற்றி நன்கு அறியாமல் நட்புக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் அது நமக்கு துன்பத்தை தரும்.

இதைத்தான் திருவள்ளுவர் சொன்னார். "ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடை முறை தான்சாம் துயரம் தரும்'' அதாவது ஒருவனது குணத்தை, குற்றத்தை நன்கு அறிந்து ஆராய்ந்து நட்பு கொள்ளாதவனுக்கு, அந்த நட்பு இறுதியில் அவனை சாவை அடைவதற்கு ஏற்ற துன்பத்தை தரும். ஆகவே ஒருவனது குணம், குடுப்ப சிறப்பு, குற்றம், ஆகியவற்றை அறிந்தபின் நட்பு கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நம்மிடம் நண்பர்களாக இருப்பார்கள் ஆனால் நமக்கொரு கஷ்டம், துன்பம் என்று வந்தால் கண்டுகொள்ளாமல் விலகிவிடுவார்கள். அப்படியானால் நாம் எப்படிப்பட்ட நட்பை தேர்ந்து கொள்ளவேண்டும். நாம் தவறு செய்ய எண்ணினால், நம் மனமறிந்து கொள்ளும் விதத்தில் எடுத்துச் சொல்லியும், தவறு செய்துவிட்டால் அதை எடு கண்டித்து சொல்ல அறிவார்ந்தமான ஆற்றல் உள்ள ஒருவரை அறிந்து அவரிடம் நட்பு கொள்ளவேண்டும்.

அத்தோடு ஒருவர் நம்மோடு நட்புக்கொள்ளுதல் வெறுமனே சிரித்து, மகிழ்வதற்கும், வேழக்கை பேச்சுகளுக்குமாக மட்டும் இருக்கக் கூடாது. மா-றாக, எம்மிடம் கெட்ட குணங்கள், தீய பழக்கங்கள் இருந்தால் அதை கண்டுபிடித்து உடனே புத்தி சொல்வதற்கும் எம்மை திருத்துவதற்காகவும் இருக்க வேண்டும். சிலர் பார்க்கும்போது கண்ட இடத்தில் முகம் மட்டும் மலர எம்முடன் பழகுவார்கள், அது நட்பாகாது. உண்மையான அன்பு அவர்களின் அடிமனத்தில் இருக்காது. அழுக்காறு இருக்கும். இவர்களை நாம் இனம் கண்டுகொள்ளவேண்டும். நமக்கு எல்லோருக்கும் தெரிந்த மற்றுமொரு குறள் சொல்லுகிறதல்லவா, இப்படி-

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”

என்று, அழகாக சொல்லிவைத்திருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான நண்பர்கள், கெட்ட சகவாசம் எல்லாம் இருந்திருக்கும்போல தெரிகிறது. அதுதான் நட்பு பற்றி ஒரு அதிகாரத்தையே அவர் அருளி இருக்கிறார். அப்போதே அப்படியென்றால் இப்போதுதான் பொய்யும், புரட்டும் கொலையும், வெறியும், களவும், காமமும் என்று எல்லாம் தலை விரித்து ஆடுகின்றதே. எப்படிப்பட்ட நண்பர்கள் நம்மை எதிர்கொள்வார்கள்,

அரிசியில் கிடக்கும் கல்லைப்போல இவர்கள் நமக்கு தெரியமாட்டார்கள். இவர்களை நாம்தான் பிரித்து, இனம் கண்டுகொள்ளவேண்டும். நமது கஷ்ட, நஷ்டங்களை சொல்வதற்கு நமக்கு கட்டாயம் ஒரு நல்ல நண்பர் அல்லது நண்பி தேவை. எல்லாவற்றையும் பெற்றோரிடமோ அல்லது மனைவி மக்களிடமோ, பகிர்ந்து கொள்ள முடிவதில்லை அல்லவா? அதற்காக ஒரு நல்ல சிநேகிதன் அல்லது சிநேகிதி இருப்பது அவசியமே. ஆனால் அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது நமது பொறுப்பும், கடமையும் என்று கொள்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப்பா அது உவர்ப்பா...

"வெறும் உப்புச்சப்பு இல்லாத விசயத்திற்கு ஏன் இவ்வளவு தூரம் கவலைப்படுறீங்க" என்று நாம் பலர் பேசுவதை கேட்டிருக்கிறோம். இந்தப் பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் ஒரு முக்கியமான, ஒரு கனதியான விசயமாக அது இல்லை. உப்புச்சப்பு அதில் இருந்திருந்தால் கண்டிப்பாக அது கனதியான விசயமாக இருந்திருக்கும்.

இங்கே உப்பு உசத்தியாக இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், பலர் இந்த உப்பைப் பற்றி பெரிய அளவில் நினைப்பதில்லை. அதேநேரம் உப்பு இல்லாமல் இந்த உலகமில்லை என்ற உண்மையும் பலருக்குப் புரிவதில்லை.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று ஒரு சொல்லாடல் இருக்கிறது. இதிலிருந்து உப்பு எந்த அளவிற்கு உயர்ந்து நிற்கிறது என்பது தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்றும் சொல்வார்கள். எந்த ஒரு உணவுப் பண்டமும் உப்பில்லாவிட்டால் சுவையாக இருக்காது.

ஒரு மனிதனுக்கு சூடு, சுரணை, மானம், மரியாதை இருக்கவேண்டாமா, என்று கேட்பதற்குப் பதிலாக "உப்புப் போட்டுத்தான் சோறு தின்னுறீரா" என்று கேட்பதும் உண்டு. இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது யாதெனில் உப்பு மிக மலினமான பொருளாக இருந்தாலும் மனித வாழ்க்கையில் மிக, மிக அத்தியாவசியமான ஒன்றாகவும், உலகில் எந்த வீட்டிலும் இதன் தேவை தவிர்க்க முடியாததொன்றாக வும் இருக்கிறது என்பதே.

புராண, மற்றும் அவதார புருசர்களிடமிருந்தும் உப்பு உச்சம் பெற்றிருக்கிறது. பாரதத்தில், குந்திதேவி தன்மகன் கர்ணனை அணுகி "நீ கௌரவரை விட்டு வந்துவிடு" என்று கேட்பாள். அதற்கு கர்ணன் "அம்மா நான் துரியோதனனின் உப்பைத் திண்டவன். உப்பிட்டவனை எப்படியம்மா நான் விட்டு வரமுடியும்" என்று பதில் சொல்லுவான்.

மற்றும் திருவிவிலியத்தில் இயேசு தன் சீடர் களைப் பார்த்து "நீங்கள் பூமியில் உப்பாக இருக்கிறீர் கள். உப்பு உவர்ப்பற்று போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்பாக்குவது? உப்பு உவர்ப்புடன் உப்பாகவே இருக்கவேண்டும். அதேபோல் மனிதன் மனிதப்பண்புடன் தான் இருக்க வேண்டும்." என்று மனிதனையும், உப்பையும் ஒப்பிட்டுக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதேபோல் ''உணவின் எஜமான் உப்புத்தான்'' என்று நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார். மேலும் வெள்ளையர்களுக்கு எதிராக மகாத்மா காந்தி அவர்கள் உப்புச் சத்தியா கிரகம் செய்தது பற்றி உலகம் நன்கு அறியும். அதைத் தொடர்ந்து இந்தியா சுதந்திரம் அடைந்ததும் வரலாறு.

உப்பில்லாத உணவை நாம் சுவைத்துச் சாப்பிட முடியாது. முன்பெல்லாம் ஒவ்வொரு தமிழ் வீடுகளிலும் ஒரு உப்புச்சிரட்டை இருக்கும். வெள்ளைவெளீரென்று உப்புக்கற்கள் சிரட்டையில் பளிச்சென்றிருக்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் உப்பின் தோற்றமே மாறிவிட்டது. ஏன் பெயரும்கூட மாறிவிட்டது. ரேபிள்சால்ட், கறிசால்ட் என்றெல்லாம் இப்பொழுது கடைகளில் கவர்ச்சிகரமாகப் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

எப்பொழுதும் விருந்து வைக்கும்போது இலை யில் முதலில் உப்பைத்தான் வைப்பார்கள். அதிலும் இலையின் இடதுபக்கத்தில்தான் உப்பையும், ஊறு-காயையும் வைப்பது வழக்கம். இனி இந்த உப்பை எப்படிக் கையாள்வது? உப்பு ஒரு மனிதனுக்கு அவசியமே.

ஒருநாளைக்கு ஒருவருக்கு ஒரு மேசைக்கரண்டி உப்பு போதுமானதாகும். இரத்த அழுத்தம் உள்ளவர் கள் உப்பைக் குறைவாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு வைத்திய தகவல் சொல்கிறது. உப்பு உலகத்தில் மலினமாக கிடைத்தாலும் அது உன்னத மான, அவசியமான பொருளே என்று சொல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒப்பிட்டுப் பார்த்தல்...

எம்மிடமுள்ள முக்கிய குணங்களில் ஒன்று எம்மை நாம் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது. இதில் ஒரு பலவீனம் என்னவென்றால், எப்பொழுதும் எம்மைவிட மேல்நிலையில் உள்ளவர்களுடன்தான் எங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஏங்குகின்றோம். நல்ல வசதியாக பணம், பொருள், வீடு, வாசல் என்று இருந்தாலும் அழகாக இல்லாவிட்டால் அழகுள்ளவர் களுடன் எம்மை ஒப்பிட்டு மனம் புழுங்குவது. அதே போல் அம்சமாக நாம் இருந்தும் வசதியாக இல்லா விட்டால் வசதி படைத்தவரைப் பார்த்து ஏக்கம் கொள்வது, ஆனால் என்றாவது ஒருநாள் நம்மைவிட கீழ் உள்ளவர்களுடன் எம்மை ஒப்பிட்டு பார்த்திருக்கி றோமா என்றால் இல்லை.

தினசரி மூன்றுவேளை சாப்பிட வசதி இல்லாதவர்கள், தங்குவதற்கு இடமில்லாதவர்கள், வீதியோரங்களையே வீடாக கொண்டவர்கள், குழந்தைகளின் படிப்பிற்குப் புத்தகம், பேனா வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வசதியற்றவர்கள் மற்றும் குழந்தைகளின் நோய்க்கு மருந்து வாங்கப் பணமில்லாதவர்களும், அவர்களுக்குப் பால் வாங்க முடியாமல் இருப்பவர்களும் இப்படி எம்மைவிட கீழ் மட்டத்தில் உள்ளவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறோமா?

இது புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்க்குப் பொருந்தாது என்றாலும் இக்கட்டுரைக்கு வலுச் சேர்க்கும் என்பதற்க்காக குறிப்பிடலாம். இப்படி ஒப்பிட்டு பார்த்தால்தானே நமக்கு ஒரு திருப்தி கிடைக்கும். தற்போது நம்மை வைத்துள்ள நிலைக்கு கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் வரும். அடுத்த வேலையை செய்வதற்கு மனதிலும், உடலிலும் உற்சாகம் வரும்.

"நான் அணிந்து கொள்வதற்கு எனக்கு காலணிகள் இல்லையே என்று சலித்துக்கொண்டே இருந்தேன், கால்களே இல்லாத ஒருவரை பார்க்கும் வரை" என்ற வாசகத்தை நினைவு படுத்திப் பாருங்கள். எம்மைவிட மேலானவருடன் அல்லது வசதி கூடியவருடன் எம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் இழப்பதோடு பொறா மையையும், எரிச்சலையும் நாம் அவர்கள் மீது வளர்த்தும் கொள்கின்றோம். நமக்குக் கடவுள் கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது. அதேபோல் நமக்கு அவர் தடுப்பதை எவரும் கொடுக்க முடியாது. ஆண்டவர் எமக்கு ஒரு நன்மையோ, தீமையோ தர நினைத்தால் அதை எந்தச் சக்தியாலும் மாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. விரலுக்கு ஏற்ற வீக்கம், வருமானத்திற்கு தக்க வாழ்க்கை என்ற அடிப்படையில் நாம் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டால் நமக்கு நல்லது.

ஆசை, பேராசை ஆகியவற்றிற்கு உட்பட்டும், மற்றவர்களுடன் எம்மை ஒப்பிட்டுக் கொண்டும் மன அமைதியின்றிப் போலி வாழ்க்கையுடனும், வறட்டுக் கௌரவத்துடனும் நாம் இருந்தால் எமக்கு கஷ்டம்தான் வந்து கதவைத் தட்டும். இந்த ஒப்பிடுதல் நமக்கு தேவைதானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளமும்... உழைப்பும்...

எமது உடலில் உயிர் ஊசலாடும் வரை எம்மோடு சேர்ந்து இருப்பது உள்ளம். இதற்கு இதயம், மனம் என்றும் பெயர்கள் இருக்கின்றன. தூய்மையான மனம், இரக்கமுள்ள இதயம், நல்ல உள்ளம் என்றெல்லாம் சொல்கிறார்களே!. ஆமாம் அந்த உள்ளம்தான் ஒரு மனிதனின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் காரணமாக இருக்கிறது. இந்த உள்ளம் என்னும் நிலத்திலே விளையும் பயன்களை நமது மரணத்திற்கு பின்னரும் கூட எமது சமுதாயத்திற்கு விட்டு செல்ல முடியும்..

இப்பொழுது நாம் அனுபவிக்கும் அறிவியல், படித்துணரும் பண்டைய காப்பியங்கள், வாழ்க்கைக்கு வழிகாட்டும் அறநூல்கள், எமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அருங்கலைகள் எல்லாம் எம் முன்னோர் கள் எமக்கு விட்டுச்சென்ற சொத்துக்களே. அவர் களின் உள்ளமெனும் நிலத்தில் விளைந்த விளை பொருட்களாகவே நாம் இவற்றை இன்று பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. தங்களுடைய உள்ளமென்னும் உயர்ந்த மூலதனத்தை அடிப்படையாக கொண்டே அந்த முன்னோர்கள் தங்களின் வாழ்வில் அரும் பெரும் சாதனைகள் புரிந்தார்கள் என்றும் நாம் அறிகின்றோம்.

நல்ல சிந்தனையும், தூய உள்ளமும், தன்னம் பிக்கையும், விடாமுயற்சியும் உடைய மனிதர்கள் தங்களின் கடுமையான உழைப்பால் உன்னத மானவர்களாக, உயர்ந்தநிலையில் உள்ளவர்களாக இந்த பூமிப் பந்தில் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் என்றும் நாம் படித்துணர்கின்றோம். நல்ல உள்ளத் தோடு சேர்ந்து உழைப்பும் இவர்களிடம் இருந்தது. எம்மில் சிலரிடம் நல்ல உள்ளம் இருக்கும் ஆனால் உழைப்பு இருக்காது. பலரிடம் உழைப்பு இருக்கும் நல்ல உள்ளம் இருக்காது.

இவை இரண்டும் ஒரு மனிதனிடம் இருக்கும் பட்சத்தில் அவன் நிட்சயமாக உயர் நிலையை எட்டுவான். எமது சமூகத்தில் பலபேர் நல்ல உள்ள மில்லாமல் குறுக்குவழியில் உழைக்க முற்படு கிறார்கள், ஆனால் அந்த உழைப்பு நிரந்தரமல்ல என்பதை நாம் பலரின் முடிவுகளில் இருந்து தெரிந்து கொள்கிறோம். நாம் கருதுகின்ற காரியம், எதிர்பார்கின்ற இலக்கு வெற்றியளிக்க வேண்டுமானால் நாம் நல்ல மனதுடன் கடுமையாக உழைக்க வேண்டும். வித்தகரும், துறவியுமான சுவாமி விவேகானந்தர் சொல்லுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விழுமின், எழுமின் கருதிய காரியம் கைகூடும் வரை உழை, உழை, உழைமின்" என்று. உழைக்காமல் பலனை எதிர்பார்க்க முடியாது. நாம் உழுதாமல், விதைக்காமல், நீர்ப் பாய்ச்சாமல், உரமிடாமல், களை பிடுங்காமல், காவல்காக்காமல், அறுவடை செய்ய முடியுமா?. அதே போல்த் தான் நல்ல உள்ளத்துடன் கடின உழைப்பும் இருந்தால் நாம் கருதிய காரியம் கைகூடும்.

இரண்டாவது உலகப்போரை ஹிட்லர் தொடங்கி னார். இந்தப் போரில் மிகவும் பாதிப்படைந்த ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் ஒரு கால் நூற்றாண்டு காலத்திற்குள்ளே மீண்டும் நிமிர்ந்து நின்று உலகின் முன்னே கம்பீரமாகக் காட்சி அளிக் கின்றனவே. அங்கே வறுமை இல்லை, வளம் கொழிக் கிறது. சோம்பல் இல்லை உழைப்பு உயர்கிறது. தளர்ச்சி இல்லை, வலிமை வலுப்பெறுகிறது. என்ன காரணம்?

அந்த நாட்டு மக்கள் தோல்விகளையோ, துன்பங்களையோ, சரிவுகளையோ கண்டு சிறிதும் கூட அஞ்சாத தன்மை கொண்டவர்கள். நல்ல உள்ளமும். அதீத உழைப்பும் இருந்தபடியால்தான் அவர்களால் இன்று உயர முடிந்தது. இதேபோல் எமது மக்களிடமும் உறுதியும், நல்ல உள்ளமும், கடின உழைப்பும் இருந்தால் அழிந்துபோன எமது ஊர்களைக்கூட புதிதாக கட்டி எழுப்ப முடியும். புலத்தில் வாழும் எம்மக்களின் உள்ளக்கிடக்கையும், உழைப்பாற்றலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு விதமாக இருக்கும். நிலத்தில் வாழும் எமது மக்களின் மனநிலையும், ஆற்றலும் வேறு விதமாக இருக்கும்.

புலத்தில் உள்ளவர்களின் உறவுகளும், சொந்தங்களும்தானே ஊர்களில் இப்பொழுதும் வாழ்கிறார்கள். இந்த இரு சாராரும், ஒருமித்து எழுந்தால் நிட்சயமாக ஒரு உள்ளப்புரட்சி, உழைப்புப் புரட்சி செய்து இழந்தவைகளை மீண்டும் உருவாக்கமுடியும். இதைச் செய்வதற்கு நாம் முன்பு கூறிய நல்ல உள்ளமும், கடின உழைப்பும் தேவை.

நம் உள்ளம் ஒன்றை மட்டும், நாம் உறுதியாக வைத்துக் கொள்ள முடிந்தால் அதைக்கொண்டு நாம் என்ன விரும்புகிறோமோ அதை நம்மால் செய்ய முடியும். இழந்தவைகளை மீள நாம் பெற்றுக்கொள்ள முடியும். நாமும் சிறப்பாக வாழ்ந்து நம்மைச் சேர்ந்தவர்களையும் சிறப்பாக வாழச் செய்யமுடியும். ஆக, நல்ல உள்ளத்தையும், கடின உழைப்பையும் நாம் கைக்கொள்ளுவோமே! எல்லோருடைய வாழ்வும் சிறப்படையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உன் வாழ்க்கை...
# உன் கையில்...

பாவம் எது? புண்ணியம் எது? மற்றவர்களுக்கு துன்பத்தை அளித்தல் பாவம் என்று சொல்லலாம். புண்ணியம் என்றால் என்ன? அல்லது புண்ணியம் செய்வது எப்படி?. பலர் கோவிலுக்குச் சென்று கடவுளை கும்பிடுவது, அர்ச்சனை, அபிஷேகம், யாகம், சடங்கு கள் செய்வது புண்ணியம் என்று சொல்கிறார்கள். ஆனால் பிறருக்குத் துன்பம் அளிப்பது எப்படிப் பாவமோ, அதற்கு எதிராகப் பிறர் துன்பத்தை போக்குவதுதான் சிறப்பான புண்ணியமாக இருக்க முடியும்.

அப்படியானால் உண்மையான புண்ணியவான் யார்? எல்லாவித ஆசா பாசங்களையும் துறந்து இறை வனின் திருவடிகளில் சேர்ந்து பிறவிப் பெருங்கடல் நீந்த முனையும் தவசிகளா? அல்லது அடக்கத்துடன் பணிவுடன் தன்னுடைய கடமைகளை, பலனை எதிர்பார்க்காமல் மிகச் சிறப்பாகச் செய்துகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்குத் துன்பம் அளிக்காமல் வாழ்ந்து, அவர்களின் துன்பத்தைப் போக்குகிற ஒரு யோகியா? யார் புண்ணியவான்? “தவசிகளை விட யோகி மேலானவன். ஞானிகளை விட யோகி சிறந்தவன்” என்று பகவத் கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

“ஏழை ஒருவனுக்கு உதவி செய்யும்போது, ஆண்டவர் உனக்கு கடன் பட்டவராகிறார்” என்று திருவிவிலியத்தில் (பைபிள்) சொல்லப்பட்டிருக்கிறது.

“ஏழைகளுக்கு, மிகவும் துன்பத்தில் உள்ளவர்களுக்கு, சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்குச் செய்கின்ற உதவி கடவுளுக்கே செய்த உதவி” என்று மேலும் திருவிவிலியம் கூறுகிறது. இதையே பகவத்கீதை “எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன்” என்று வேறு வகையில் சொல்கிறது.

ஆகவே துன்பப்படும் உயிரிலும் கடவுள் இருக்கிறார். அந்த உயிருக்கு செய்யும் உதவி ஒருவிதத்தில் கடவுளுக்கே செய்யும் உதவியாகும். புண்ணியம் தேடிக் காசிக்குப் போகத்தேவையில்லை. தெய்வத்தை தேடி ஆலயம் போகத் தேவையில்லை. காரணம் அந்தத் தெய்வமே குழந்தைகளிலும், ஏழைகளிலும்தான் இருக்கிறது. கங்கை, பாவத்தை போக்கும் புனித நதி என்று சொல்வதுண்டு. ஆனால் பாவப் பிறவிகளின் கண்ணீரைப் போக்கினால் தங்களின் பாவத்தைப் போக்கலாம் என்று ஒருவரும் அறிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை அடைவதற்கு திருக்குர்ஆன் மூன்று வழிகளைச் சொல்கிறது. முதல் வழி: பிரார்த்தனை. இது நம்மைப் பாதி தூரம் அழைத்துச் செல்லும். இரண்டாம் வழி: நோன்பு. இது கடவுளின் மாளிகை யின் வாயில் வரை அழைத்துச் செல்லும். மூன்றாம் வழி: ஏழைகளின் துன்பத்தைப் போக்குதல். இது நம்மை மாளிகையின் உள்ளே அழைத்துச் செல்லும். பிரார்த்தனையைவிட ஏழைகளின் துன்பத்தைப் போக்குகிற செயல்தான் கடவுளுக்கு மிகப் பிடித்தமான செயல் என்று குர்-ஆன் கூறுகிறது.

ஆகவே அடிப்படைக் குணங்களான கடவுள் பக்தி, அடக்கம், பணிவு, பிறருக்குத் துன்பம் அளிக்காமல் இருத்தல், ஏழைகளின் துன்பத்தைப் போக்குதல் ஆகியவற்றை எல்லா மதங்களும் சொல்கின்றன. வலியுறுத்துகின்றன.

நாம் எல்லோரும் இறுதியாக சென்றடைகின்ற இடம் ஒன்றுதான். போகும் பாதைதான் வேறு வேறு... மதங்கள் உருவாக்கப்பட்டவை. கடவுள் ஆதி, அனாதி. புண்ணியத்தை தேடி காசிக்கோ, இராமேஸ்வரத்திற்கோ செல்லத் தேவையில்லை. பிறர் துன்பத்தைப் போக்கி, ஏழைகளுக்கு உதவி, பிறர் நலனைப் பேணினால் நமக்குப் புண்ணியமாய்ப் போகும். நம் தலையெழுத்தை கடவுள் எழுதுவதில்லை. நாம்தான், அறியாமை யால் தவறாக எழுதுகின்றோம். சிந்தனையாளர்கள் சொல்வார்கள், "உன் வாழ்க்கை உன் கையில்" என்று. அது உண்மைதான். நமது வாழ்க்கை நமது கையில்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வார்த்தைகள்... காயப்படுத்தும்...

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு, முடம் நீக்கிப் பிறத்தல் அரிது" என்று பாடி வைத்தார் ஔவையார். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடிவைத்தவர் அதில் ஊமை, மனநிலை பாதிப்பு, மற்றும் தற்போது மனிதப் பிறப்பின்போது காணப் படும் பல குறைபாடுகள் பற்றி அவர் அன்று அறிந் திருக்கவில்லைபோலும். அந்நாளில் தெய்வ கடாட்சம் பெற்று பிறவி ஊமை பேசியதாகவும், கோழை வீரனாகியதாகவும், குருடர் பார்வை பெற்றதாகவும் நாம் புராண, இதிகாசங்களில் படித்து அறிகின்றோம்.

பிறவியிலே குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தை கள் கடவுளின் குழந்தைகள் என்றும், கவனிக்கப்பட வேண்டிய குழந்தைகள் என்றும், நாம் சொல்வதுண்டு. அவர்கள் வளர்ந்து வரும்போது அந்தக் குழந்தை களின் அவதி, வலி, அவர்களின் பெற்றோர் படுகின்ற சிரமங்கள், வேதனைகள், துன்பங்கள் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை. இப்படியான பிள்ளைகளின் வாழ்க்கையில் எமது சமூகத்தின் பார்வை எப்படி இருந்தது அன்று, எப்படி இருக்கின்றது இன்று என்று சற்று பார்க்கலாம்.

முன்பெல்லாம் குறைபாடுகளுடனோ அல்லது மனவளர்ச்சி குன்றியோ பிறக்கும் குழந்தைகள் வேண்டப்படாத பிறவிகளாகவேதான் பார்க்கப் பட்டார்கள், வளர்க்கப்பட்டார்கள், அவர்களுக்குரிய சிகிச்சை முறையோ, பராமரிப்பு வழிகளோ நல்ல முறையில் கிடைக்கவில்லை.

அவர்களை விழித்து சொல்லப்பட்ட சொற்பிரயோ கங்களும் அவர்களைக் காயப்படுத்துவதாகவே இருந்தன. ஆனால் இப்பொழுதெல்லாம் மாற்றுத்திறன் கொண்டவர்கள், மாற்றுதிறனாளிகள் என்று நாகரிக மாக, மிக அழகாக அழைக்க எமது சமூகம் கற்றுக் கொண்டது. அத்தோடு இவர்களின் பெற்றோர்களால் நல்லமுறையில் கவனிக்கப்படாவிட்டாலும் பல பரா மரிப்பு நிலையங்கள், பொதுநல, அரச அமைப்புகள் இருக்கின்றன. இவர்களுக்கு அன்பும், அரவணைப்பும், அமைதியும்தான் மிக முக்கிய தேவையாக இருக்கும்.

இவை அநேக பெற்றோரிடமிருந்து இப்பிள்ளை களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் இந்தக் கடவுளின் குழந்தைகள் அன்னை இல்லம், அன்பு இல்லம், அமைதிப்பூங்கா, பூந்தளிர்கள், செந்தளிர்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பராமரிப்பு அல்லது காப்பகங்களில் கொண்டு சேர்க்கப்படுகின்றனர்.

உண்மையான சேவை உணர்வும், "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கோட்பாட்டை கொண்டவர்களும், இந்தப் புனிதச் சேவையில் தங்களை இணைத்துக்கொண்டு இந்த மாற்றுத் திறனாளிகளை மற்றவர்கள் கண்டு போற்றும் வண்ணம் சேவையும், தொண்டும் செய்து நல்ல மனிதர்களாக வாழ்கின்றார்கள். ஒரு சில பெற்றோர்கள் என்னதான் கஷ்டங்கள் இருந்தாலும் தங்கள் பிளைகளை தாங்களே நல்லபடியாகப் பார்த்துக் கொள்வது முண்டு.

பல பெற்றோரும், சமூகத்தில் உள்ள பலரும் இந்தக் கடவுளின் குழந்தைகளை நல்ல மனதுடன் பார்ப்பதுமில்லை, நாடுவதுமில்லை. மாறாக இவர்கள் இந்தக் குழந்தைகளை அல்லது பிள்ளைகளை தீண்டத்தகாதவர்களாகவும், சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் பார்ப்பதுதான் மிக வேதனைக்குரிய விடயமாக இருக்கிறது. அதிலும் பல தாய், தந்தையர் இப்படியான தங்கள் குழந்தை களையே வெறுப்புடனும், வேண்டாத ஒரு பிறவி யாகவும் பார்ப்பதோடு மட்டுமல்ல கடும் வார்த்தை களால்கூட இவர்கள் இந்தக் குழந்தைகளைக் காயப்படுத்துவதுண்டு.

நமது தாயகத்தில் பிறப்பால் ஊனமுற்று இருப்பவர்களைவிட அங்கு நடந்த போரினால் குண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாலும், கனரக ஆயுதங்களாலும் காயப்பட்டு அங்கங் களை இழந்த பலர் இருப்பதை இந்த உலகம் இன்று உணர்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இன்று மாற்றுத் திறனாளிகளாக எமது தாய் மண்ணிலே இன்று இருக்கிறார்கள். இவர்களுக்கும் அங்கு சரியான பராமரிப்போ, வழிகாட்டலோ, சிகிச்சைகளோ போதிய அளவு இல்லை என்பதே உண்மை. மற்றும் இவர்கள் தங்கள் மக்களாலே கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகி மிக வேதனைப்படுகின்றார்கள் என்ற ஒரு செய்தியும் அண்மையில் செய்தித் தளங்களில் பார்க்க முடிந்தது.

ஆக, நாகரிகம் வளர்ச்சியடைந்த இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலேயே, உலகம் முழுதும் மாற்றுத் திறனாளிகளுக்கு மரியாதையும், மதிப்பும் கொடுக்கப்படுகின்ற இந்தக் காலத்திலே இன்னும் எம்மிடையே உள்ள பலர் இந்தக் கடவுளின் குழந்தைகளை வார்த்தையால் காயப்படுத்தியும் சமூகத்தில் இருந்து ஒதுக்கியும் பார்ப்பது எந்த வகை யில் நியாயம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன கர்ணர்கள் மாறுவார்களா?

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி" ஆகா... எவ்வளவு அழகாக சொல்லிச் சென்றான் பாரதி. சமூகத்தின் சாக்கடைகளை சாடிச்சாடி நாறடித்த அந்த மகா கவிஞனின் கருத்தியலையும், உன்னதமான கவித்துவத்தையும் வைத்துத்தான் இன்றும் தமிழ் கவியுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்" ஆம்! இன்று எம்மத்தியில் வாழும் பலருக்கு இருக்கும் படா டோபத்துக்கும், பவுசுகளுக்கும் ஆடம்பரத்துக்கும், அட்டகாசத்துக்கும் அளவே இல்லாமல் போய்விட்டது. இதைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் முடியவில்லை. வஞ்சனையும், வக்கிரமும், சூழ்ச்சியும், பொறாமை யும், சூதும், வாதும், உற்றவர்களையும், மற்றவர்களை யும் தாழ்வாக, தரக்குறைவாக பேசும் தன்மையையும் பலர் எம்மிடையே கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவர்களுக்குத் தங்களின் முன்னைய நிலைமை, தங்களின் குடும்பப்பின்னணி, தங்களின் இப்போதைய நிலைக்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? என்பதெல்லாம் தெரிவதில்லை. தான் ஏறிவந்த ஏணியையே உதைத்துத் தள்ளும் உள்ளம் கொண்டவர் கள் இவர்கள். வாயில்லாவிட்டால் இவர்களால் வாழ முடியாது. ஆனால் அதே வாய்தான் இவர்களை அடையாளமும் காட்டும்.

"இட்டுக் கெட்டவன் கர்ணன்...
இடாமல் கெட்டவன் துரியன்...
தொட்டுக் கெட்டவன் இந்திரன்..
தொடாமல் கெட்டவன் இராவணன்"

என்று சொல்வார்கள். இவர்கள் வாயாலே கெட்ட வர்கள்....

இப்படி பலர் எம்மிடையே வாழ்கின்றார்கள்.

தாய் நாட்டில் வாழ்ந்தபோது எப்படியிருந்தோம் என்று கொஞ்சமும் எண்ணாமல், ஏதோ தாங்கள் வசதியாகவும், உசத்தியாகவும் வாழ்ந்ததுபோல் நினைத்துக்கொண்டு தப்பிலிகள் போலே தம்பட்டம் அடிக்கிறார்கள்.

"உண்டானபோது கோடான கோடி உரையுறைவார்
-இல்லாதபோது
கண்டாலும் பேசார் கண்ணெடுத்தும் பாரார்
சண்டாளர்கள் சகவாசம் வேண்டாம்"

என்று கொடுத்துக் கெட்டவர்கள் சொல்வதுண்டு. வாங்கி வயிறார உண்டவர்களும், வாய் நிறைய நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவர்களும் இன்று ஓங்கி, ஒருசுற்றுப் பெருத்து, மேற்குலக நாடுகளில் வாழ்கிறார்கள். காசையும், பொருளையும், காரையும், வீடையும் ஆடம்பர வாழ்வை யும் கண்ட இவர்களுக்குக் கண்மண் தெரிவதில்லை, பேச்சில் சுத்தமில்லை. எப்படி இருந்த நாம், இன்று இப்படி வருவதற்கு யார் காரணம் அல்லது எதனால் இந்த வாழ்க்கை வந்தது, என்றெல்லாம் எண்ணு வதில்லை. மாறாக வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள்.

மற்றவர் மனங்களைக் காயப்படுத்துகிறார்கள். திமிர் பிடித்துத் திரிகிறார்கள். தினம் தினம் தப்புப் பண்ணுகிறார்கள். ஊரில் உள்ள சொந்தங்களுக்கும், உறவுகளுக்கும் உதவ வேண்டும் என்பது நல்ல மனசுக்காரர்களுக்கு ஏற்படும் உணர்வுதான். அதை நல்ல முறையில் பண்ணவேண்டும்.

“வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக்கூடாது” என்பதுபோல் அந்த உதவி இருக்க வேண்டும். ஆனால் எம்மில் சிலர் எப்போதாவது இருந்து விட்டு உதவும் போதும் அல்லது ஊருக்குச் சென்று சொந்தங்களைப் பார்க்கும்போதும் அவர்கள் மனம் நோகும்படி பேசுவதும், அவர்களைக் குத்திக்காட்டி நெஞ்சை ரணப்படுத்துவதும் தங்களுக்குச் சந்தோ சத்தைத் தருகிறது என்று நினைக்கிறார்கள். ஆனால் அதே ஊர்களில் இவர்கள் எப்படி இருந்தவர்கள் என்று எண்ணிப் பார்க்க மறக்கின்றார்களா?

அல்லது மறந்தபடி நடிக்கின்றார்களா என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். உதவி செய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாலும் இவர்கள் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதுமே. விடுப்பில் ஊருக்குச் செல்லும் ஒரு சிலர் தங்கள் செருக்கையும், செழுமையையும்

காட்டுவதற்காக உறவுகளுடன் இல்லாத பொல்லாத, தேவையற்ற கதைகளைப் பேசி அவர்களை மனக்கஷ்டத்திற்கு ஆளாக்குவதுடன், இவர்களைப் பற்றி ஊரவரும், உறவினரும் மதிப்பிடுவதற்கும், இவர்களின் குணநலங்கள் பற்றி விமர்சிப்பதற்கும் ஆளாகிறார்கள்.

"ஊருக்குப் போனமா வந்தோமா" என்று இல்லாமல் வீணாக வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொள்வது இவர்கள் வாடிக்கையாகிவிட்டது. நாம் வாழும் காலம் சில காலம்தான் அதை உறவோடு வாழ்ந்தால் பூக்கோலம்தான் என்பதை இவர்கள் உணர்வதுமில்லை. உறவுகளுக்கிடையே சிண்டுமுடித்து பார்த்து மகிழ்வதை இவர்கள் விடுவதுமில்லை.

இவர்கள் மாறுவார்களா? மாறமாட்டார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூக்கு தண்டனை...
# மரண தண்டனை...?

மனித வாழ்க்கையில் காத்திருத்தல் என்பது சந்தோசமானதா? அல்லது கஷ்டமானதா? இரண்டுமே நாம் எதற்காக காத்திருக்கிறோம் என்பதைப் பொறுத்தது இல்லையா... உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் ஏதோவொன்றுக்காக காத்திருக்கின்றன. பசியோடு உணவிற்காக காத்திருக்கும், தாகத்தோடு குடிநீருக்காக காத்திருக்கும், மழையென்றால் வெயிலுக்காகவும், வெயிலென்றால் மழைக்காகவும் காத்திருக்கும் மனித குலத்தில், நல்லவிசயங்களுக்காக காத்திருப்பதும், ஒரு காதலனின் வருகைக்காக காதலியும், காதலியை எதிர்பார்த்து காதலன் காத்திருப்பதும் பின்பு திருமணத்திற்காக காத்திருப்பது, அதன்பின் குழந்தைக்காக காத்திருப்பது, இன்னும் அம்மாவின் அன்புக்காக, அப்பாவின் பாசத்திற்காக, உடன்பிறந்தோரின் உண்மையான அன்புக்கும், உறவுக்கும் காத்திருப்பது என்று இந்த காத்திருப்புகள் கணக்கிட முடியாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒரு மனிதன் தன் மரணத்திற்காக காத்திருக்கின்றான் என்றால் அதை என்னென்று சொல்வது? எப்படி எதிர் கொள்வது? ஆம், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தங்கள் மரணங் களுக்காக காத்திருப்பது கொடுமையிலும் கொடுமை யல்லவா?

அநேக உலக நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விடவேண்டுமென்று முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்தியும் விட்டன. நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இப்பொழுது மரண தண்டனை இல்லை. இன்னும் வளைகுடா இஸ்லாமிய நாடுகள், ஆசிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள், அமெரிக்காவில் சில மாநிலங்கள்தான் இந்த தண்டனையை தங்கள் வசம் வைத்திருக்கின்றன.

குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை கொடுப்பது அவர்கள் மீண்டும் குற்றம் செய்யாமல் இருப்பதற்கே. அல்லது தண்டனைகளைப் பார்த்து மற்றவர்கள் குற்றம் செய்யாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும் தான். ஒரு நாட்டின் அரச சட்டதிட்டங்களுக்கு அமைய அந்த நாட்டின் நீதித்துறை தண்டனை வழங்குகிறது. இப்பொழுது மேற்குலக நாடுகளில் அதிகபட்ச தண்ட னையாக ஆயுட்கால தண்டனை வழங்கப்படுகிறது. இது 21 வருடங்கள்.

குற்றவாளியின் நன்னடத்தையை பொறுத்து இது 16 அல்லது 17ஆகவும் குறையலாம். சிறைச்சாலை என்பது ஒரு மனிதனைத் தனிமைப்படுத்துவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரது இயல்பு வாழ்க்கையிலிருந்து, வெளி உலகத்திலிருந்து, உறவுகளிடமிருந்து பிரித்துவிடுவது என்று சொல்லலாம். இப்படிப்பட்ட சூழலில் சில நாட்டுத் தலைவர்களும் தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை கழித்திருக்கிறார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள், இவர் 37 ஆண்டுகள் சிறை வாசம் இருந்தவர். அடுத்து மியன்மார் (பர்மா) நாட்டு எதிர்க்கட்சி தலைவி ஆன் ஷான் சூக்கி, இவர் 16 வருடங்கள் சிறையில் இருந்து அண்மையில் விடுதலை பெற்று நோபில் பரிசும் பெற்றவர்.

இந்தியா போன்ற நாடுகளில் இன்னும் இந்த தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தண்டனை நிறைவேற்றப்படாமல் மிக நீண்டகாலம் சிறையில் கிடந்து வாடுகின்றார்கள். கருணை மனுபோட்டு 23 வருடங்கள் ஆகியும் இன்னும் எந்தவித பதிலும் இல்லாமல் தினம் தினம் செத்துக்கொண்டிருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் பற்றி உலகம் நன்கு அறியும். தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு இரண்டு தசாப்பதங்களாக காத்திருக்கும் இவர்கள் மனதளவில் ஏற்கனவே செத்துவிட்டார்கள், இல்லையா? "சாகும் நாள் தெரிந்தால் வாழும் காலம் நரகமாகிவிடும்" என்பதுபோல் இவர்கள் புலன்கள் செத்து, நடைப்பிணமாக கிடக்கிறார்கள். "justice delay is justice deny" அதாவது தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட, வழங்கப்படாத நீதியே. மரணத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பதென்பது மிக கொடுமையானது. மரண தண்டனைக் கைதிகளை சூரிய உதயத்திற்கு முன்னரே தூக்கிலிடுவது வழக்கமாகும். இந்த மரணக் கைதி களின் மனநிலை எப்படியிருக்கும், இருந்தது என்று பல ஆய்வாளர்கள் எழுதி உள்ளார்கள்.

28 வயது நிரம்பிய ரஷிய எழுத்தாளர் தஸ்தா வோஸ்கி என்பவருக்கு தேசத்துரோக குற்றம்சாட்டி அன்றைய ரஷிய மன்னரால் தூக்கு நிறைவேற்றப்பட இருந்தது. ஆனால் அவர், தண்டனையில் இருந்து ஒரு நிமிடத்துக்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டார். இப்படியான காட்சிகளை நாம் திரைப்படங்களில் பார்ப்பதுண்டு. ஆனால் உண்மையில் இப்படி நடந்திரு கின்றன.

தஸ்தாவோஸ்கி மரணத்தில் இருந்து விடுபட்ட போது, அவனிடம் உனது கடைசி சிந்தனை எப்படி இருந்தது? என்று கேட்டபோது, "அந்த நேரத்தில் என் சகோதரனை மாத்திரமே நான் நினைத்தேன். அவனோடு வாழ்ந்த அந்த நாட்களை மாத்திரமே என் நினைவுக்கு கொண்டுவந்தேன். எஞ்சிய அவனது நாட்களை அவன் நிம்மதியாக கழிக்க நான் பிரார்த்தித்தேன்" என்று சொன்னாராம்.

இன்னுமொரு புத்தகத்தில் ஒரு காட்சிபடிவம் வருகிறது. ஒரு குற்றவாளிக்கு மரணதண்டனை முடிவாகிவிட்டது. அவனை தண்டனை வழங்கப்படும் இடத்திற்கு அழைத்து செல்கிறார்கள். அவன் நடந்து போகும் வழியில் தண்ணீர் கொட்டிக்கிடக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன் கால்கள் அழுக்கடையாமல் இருக்க தண்ணீரை விட்டு பாய்ந்து, கடந்து செல்கின்றான். அடுத்த நிமிடத்தில் உயிர் பிரியப்போகும் ஒருவன் தனது கால்கள் அழுக்காகாமல் இருக்கவேண்டும் என்று இப்படி செய்தான். இந்த காட்சி பற்றி என்ன சொல்வது?

"மனிதர் நோக, மனிதர் பார்க்கும்

வாழ்க்கை இனி உண்டா?" என்று பாரதி கேட்டதுபோல் இனியாவது இந்த உலகம் மனிதர் களுக்கு மரண தண்டனைகளைக் கொடுக்காமல் அவர்களை வேறு விதத்தில் தண்டிக்கலாமே. மேலும் ஒருவன் குற்றவாளி ஆவதற்கு அவனது சமூகமே பொறுப்பாகவும் இருக்கிறது என்ற உண்மையை ஏன் இந்த உலகம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றுமை

"ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு
நன்மையே...
வேற்றுமையை வளர்ப்பதனாலே விளையும்
தீமையே..."

என்ற பாடல் வரிகள் நமக்கு நினைவிருக்கின்றன அல்லவா!. எவ்வளவு தெளிவாக ஒற்றுமை, வேற்றுமை பற்றி தனது சமுதாயத்திற்கு எப்போதோ சொல்லி சென்றுள்ளான் மக்கள் கவிஞன். ஆனால் ஒற்றுமை என்பது இன்றைய பொழுதிற்கு ஒருவரிடமும், ஒருவிட யத்திலும், தனி மனிதர்களிடமோ, குடும்ப உறவு களிடமோ, நெருங்கிய நண்பர்களிடமோ, இன்னும் சொல்லப்போனால் சாதி, மத, மொழி அடிப்படையிலோ, மாநிலத்திற்கு மாநிலமோ,மாகாணத்திற்கு மாகாணமோ, மாவட்டத்திற்கு மாவட்டமோ ஏன் நாட்டுக்கு நாடோ கிடையவே கிடையாது என்பதுதான் உண்மை. எல்லா வித கட்டமைப்புகளுக்கும் அதாவது அரசியல், சமூகம், பொதுவாழ்வு, குடும்ப வாழ்வு என்று சகல வாழ்வியல் வட்டங்களுக்கும் மிக முக்கியம் ஒற்றுமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண, இதிகாச காலங்களிலேயே இந்த ஒற்றுமையின் அவசியம் எமக்கு தெரிகிறது. அன்றே ஒற்றுமையில்லாமல், வேற்றுமையாக இருந்தபடியால் தான் பல யுத்தங்கள், மாற்றங்கள் எல்லாம் நடந்த தாக நாம் வரலாற்றை படித்து அறிகின்றோம். கடந்து சென்ற யுகங்களிலும் சரி, இன்றைய கலியுகத்திலும் சரி மனிதப்பிறவி மிக உயர்வான பிறவி. அது பெருமைமிக்கது, மதிப்பு மிக்கது. இப்படிப்பட்ட மனிதப்பிறவியை கொண்டவர்களிடம் ஒற்றுமை என்னும் பேராறு ஓடாததால்த்தான் அவர்களின் மனங்கள் வறண்டுபோன பாலை வனங்களாக மாறி இருக்கின்றன. கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையில் ஒற்றுமை இல்லாது போனதால் பாரதப்போர் மூண்டது. இராவணன் தனது பிழையை உணராதபோது அவனது மனைவியும், இளைய தம்பியும் எடுத்துச் சொல்லி யும் அவன் கேட்கவில்லை. அதனால் அவர்களிடம் ஒற்றுமைக்கு பங்கம் வந்து பின் அது யுத்தத்தில் முடிந்தது. இராவணன் அழிந்தான்.

அதேபோல் ஏசுபிரானின் சீடர்களில் ஒரு சிலர் ஒற்றுமையாக இருக்கவில்லை. அவர் இதை அறிந்து கொண்டு, உபதேசித்தார். ஆனால் ஒற்றுமை பேணப் படவில்லை. இறுதியில் அவர் காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் உயிர் நீத்தார் என்றும் நாம் அறிகின் றோம். இந்த புராண, இதிகாச காலங்களுக்குள் நாம் போகத்தேவையில்லை. தற்காலத்திலும் இந்த உலகம் ஒற்றுமை இல்லாமல் எப்படி சீரழிந்து, சின்னா பின்னமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது என்பதை நாம் பார்க்கிறோமே. உலக நாடுகளுக் குள் ஒற்றுமை இல்லாமல் முதலாம் உலகப் போரும், இரண்டாம் உலகப்போரும் முறையே 1914லிலும், 1945லும் ஏற்பட்டு, பேரழிவை மனித சமூகம் சந்தித்தது. அதன் பின்பு வல்லரசு நாடுகளிடமும், மத்தியதர, மூன்றாம் உலக நாடுகளிடமும் ஒற்றுமை என்னும் பாலம் சரிவர கட்டி முடிக்கப்படாததால் பல சமயம் அதில் உடைவுகளும், சிதைவுகளும் ஏற்பட்டுச் சிக்கல் ஏற்படுகிறது. பல நாடுகளுக்கும், பல நகரங்களுக்கும், பல ஊர்களுக்கும் இடையிலும் இந்த ஒற்றுமை என்னும் அரண் இல்லாததால் இன்றும் பல முரண்கள் ஏற்பட்டு உயிர் இழப்புகள், பொருள் இழப்புகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லாத காரணத்தால் போட்டி, பொறாமை, வெட்டு, குத்து ஏற்பட்டு இறுதியில் இன அழிப்புக்கே போய் விடுகிறது. மற்றும் உறவுகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் போன தால் உறவுப் பாலமே உடைந்து போய்விடுகிறது. அதிலும் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளுக்குள் ளும் பெற்றோர், பிள்ளைகளுக்குள்ளும் இந்த ஒற்றுமை என்னும் சுவர் உறுதியாக இல்லாததால் பல குடும்பங் களில் உடைவுகளும், பிரிவுகளும், முறுகல்களும் ஏற்பட்டு இவர்களின் எதிர்கால இணைவே கேள்விக் குறியாகி நிற்கிறது. மனிதர்களிடமே இந்த ஒற்றுமை இல்லாது போவதற்குக் காரணம் ஆசை என்று சொல்லாம். ஆசைகள் உச்சத்திற்குப் போகும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்கள் அடங்காமல் அலைபாயத் தொடங்குகின்றன. இதனால் மனிதர் களிடையே ஒற்றுமை அற்றுப் போகின்றது.

ஆகவே மனிதர்களுக்கு ஒற்றுமை என்பது மிக அவசியம். தனிப்பட்ட அளவில் சாதிக்க முடியாததைக் கூட சமுதாய அளவில், குடும்ப அளவில், சாதிக்க முடியும். அதனால்தான் வேத, இதிகாச நூல்களும், ஒற்றுமையாக சேர்ந்து செல்வோம், ஒற்றுமையாக இணைந்து வாழ்வோம், ஒற்றுமையாகச் சேர்ந்து சாதிப்போம் என்று உரைக்கின்றன. நமது தாய் நாட்டிலும் கூட எமது மக்களிடையே ஒற்றுமை என்ற பாலம் இருந்திருந்தால் இன்று எமது இனத்திற்கும், தேசத்திற்கும், மொழிக்கும் இந்த அளவிற்கு உயிரிழப்புக் களும், பேரழிவுகளும் ஏற்பட்டிருக்காது.

இனிவரும் காலங்களிலாவது இந்த ஒற்றுமை என்னும் பாலம் எமது இனத்திடமும், இளைய தலை முறைகளிடமும் கட்டி எழுப்பப் படவேண்டும் என்பதே இன்றைய கட்டாய தேவையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோர்கள்...

வளர்ந்துவிட்ட இன்றைய நாகரிக, நவீன உலகிலே பெற்றோர்களின் நிலை மிகவும் பரிதாபகர மாக இருக்கிறது. தாயகத்திலும் சரி, புலத்திலும் சரி எமது பெற்றோர்கள் பல்வேறுபட்ட மன உளைச்சல் களில் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த நிலை இவர் களுக்கு வருவதற்க்கு காரணம் இவர்களின் பிள்ளை களேதான் என்று பலர் சொல்கிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சிறுவயது முதல் பெரியவர்களாக்கும் வரை தங்கள் அரவணைப் பில் வளர்த்து ஆளாக்குகிறார்கள். அதாவது பிறந்ததி லிருந்து மூன்று வயது வரை அக்குழந்தைக்கு பேசக் கற்றுக்கொடுக்கிறார்கள். அதன்பின்பு பள்ளிக்கூடத் திற்கு அனுப்பி கல்வியறிவையும், மற்ற விடயங் களையும் அறிய வழி செய்கிறார்கள். பள்ளிப்படிப்பை தொடரும் போதே பல நுண்கலைகளையும் அவர் களுக்கு பகுதி நேரமாக கற்க ஏற்பாடு செய்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். பள்ளிப்படிப்பு முடிந்ததும் மேற்படிப்புக்காக தங்கள் பிள்ளைகளை அனுப்ப படாதபாடுபடுகிறார்கள்.

பட்டப்படிப்பு முடிந்ததும் மிகவும் சந்தோசப்படும் இவர்கள், பிள்ளைகள் வேலை ஒன்றை தேடிக்கொண்ட பின்தான் மனம் ஒடிந்துபோகிறார்கள். அதற்கு காரணம் பிள்ளைகளின் நடவடிக்கையே. இருந்தாலும் பெற்ற கடமைக்காக இவர்களுக்கு மணவாழ்க்கை அமைத்துக் கொடுப்பதில் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் சில பிள்ளைகள் இதற்கும் இவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதில்லை.

தங்களுக்குரிய துணைகளை தாங்களாகவே தேடிக்கொள்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் தங்களின் பெற்றோர்கள் செய்த எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவர்களை தங்களின் தாய், தந்தை என்ற மரியாதை கூட இல்லாமல் நடத்துவதும், தாங்களாகவே முடிவெடுப்பதும், எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டு வந்து ஒரு பேச்சுக்கு பெற்றோரிடம் சொல்வதும் என்று பெற்றவர்களைக் காயப்படுத்துகிறார்கள்.

இன்னும் சில பிள்ளைகள் ஒருபடி மேலே போய் பெற்றோரை முதியோர் பராமரிப்பு இல்லங்களிலும் சேர்த்துவிடுகின்றனர். தங்கள் பெற்றோருடன் கூடி வாழ்வதையே இவர்கள் சங்கடமாக நினைக்கிறார்கள்.

தாய்தந்தையினரின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக இன்றைய இளைஞர்கள் இருக்கி றார்கள். வாழ்க்கையில் நாகரீகம் வேண்டும் என்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக தங்களைப் பெற்றவர்களையே உதாசீனப்படுத்து கிறார்கள்.

தங்கள் பிள்ளைகளை மார்மேலும், தோள்மீதும் போட்டு வளர்த்து கல்வியையும், வாழ்வியலையும் கற்றுக்கொடுத்து அவர்களை ஆளாக்கிவிட்டு இன்று பல பெற்றோர் மனமொடிந்து, நொந்து நூலாகி இருக்கிறார்கள். சில பெற்றோர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் வருந்தும்பொழுது பாசத்துடன் வந்து தொட்டுப்பார்த்து, தூக்கிச்சாற்றி பாசம்காட்டா மல் ஏதோ பிறத்தியார்போல தள்ளிநின்று பார்த்துவிட்டு சாட்டுக்கு "எப்படி இருக்கிறீர்கள்" "டாக்டர் என்ன சொன்னார்" என்ற சம்பிரதாய கேள்விகளை மட்டும் கேட்டுச் செல்கிறார்கள். சில பிள்ளைகள் நெஞ்சில் ஈரமே இல்லாமல் "நீங்கள் இருப்பதைவிட சாவதே மேல்" என்றும் சொல்வதுண்டு. இதனால் பல பெற்றோர் கள் மனம்நொந்து தனியாகவே சென்று வாழ்கிறார் கள். புலம்பெயர்ந்த நாடுகளிலே மனிதநேயமும், மனிதமும் போற்றப்படுவதால் பிள்ளைகளால் கைவிடப் பட்டவர்கள், இவர்களைவிட்டு ஒதுங்கிக்கொள்கிறார் கள். பணத்திற்கும், பொருளுக்கும், சொத்துக்குமாகவே பெற்றோர், என்ற நிலையே இன்றைய இளைஞர் களிடம் இருக்கிறது. தாய்நாட்டிலே, தங்கள் கிராமத் திலே, ஊர்ப்பள்ளிகளிலே இவர்களைப் படிப்பித்திருக்க வேண்டும்,

அப்பொழுது தெரியும் இவர்களுக்குக் கஷ்டம். இவர்களை மேற்குலக நாடுகளுக்கு கொண்டுவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாக்கிவிட்டது தாங்கள் செய்த மகா மடத்தனம் என்று பல பெற்றோர்கள் சொல்கிறார்கள். தங்களின் பிள்ளைகளின் வளர்ச்சி, முன்னேற்றம், உயர்ச்சி, மேன்மை என்ற படிகளுக்காக பல கஷ்டங்களைக் கடந்து இவர்களை உயர்த்திவிட்ட இந்தப் பெற்றோர் கள், இன்று சொல்கிறார்கள், இப்படிப்பட்ட பிள்ளை களுக்காக நாங்கள் ஏன்தான் செய்தோம் என்று நினைக்கத் தோன்றுகிறது என்று.

ஆக, பெற்றோர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அவர்களின் ஆயுட்காலம்வரை அவர்களிடம் அன்புடன் நடந்துகொள்ள இன்றைய பல பிள்ளைகள் தவறிவிடுகிறார்கள். பெற்றோர்கள்தான் நமது கண்கள், அவர்கள் இல்லாமல் நாம் இந்த உலகத்தையே பார்க்கமுடியாது. நமது கண்களை நாமே பிடுங்கி எறிய முடியுமா என்று இன்றைய இளைஞர்கள் ஏன் சிந்திப்பதில்லை?. பெற்றோர்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டிகள்.

அவர்கள் நம்மைப் பெறாவிட்டால் நாம் இந்த பூமியில் வந்திருக்க முடியுமா என்று ஏன் இன்றைய பிள்ளைகள் நினைக்கிறார்கள் இல்லை என்ற கேள்விகளை பல பெற்றோர் கேட்கிறார்கள். இவர் களின் இந்த கேள்விகளுக்கான பதில்கள் என்னவாக இருக்கமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவு என்ன ஊறுகாயா?

வெளிநாட்டில் ஒரு பிள்ளை இருப்பது என்பது எம்மவர்களுக்கு ஒரு சமூக அந்தஸ்து என்று பலர் நினைக்கலாம்... ஆனால் அது அவர்களுக்கு அந்தரங்கமான சோகம் என்பது அவர்களுக்குத்தான் தெரிகிறது. அதேபோல் வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகளுக்கும் பணம், பொருள், படாடோபம், நாக ரீகம், வாழ்வியல் மாற்றத்தினால் ஏற்பட்ட புத்துணர்ச்சி என்று ஏகப்பட்டவை இருந்தாலும் பலருக்கு பிரிவின் தாக்கமும், பெற்றோர், உறவுகள் பற்றிய ஏக்கமும், பாசமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஐரோப் பிய நாடுகளிலும், கனடா, ஆஸ்த்திரேலியா போன்ற நாடுகளிலும் எம்மவர்கள் தாய் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அநேகமானோர் நாற்பது ஆண்டுகளுக்குமேல் தங்கள் மண்ணையும், மக்களை யும், சொந்த பந்தங்களையும் பிரிந்து வந்தவர்களாக இருக்கிறார்கள், ஆரம்பத்தில் அந்நிய தேசத்து வாழ்க்கை இவர்களுக்கு கலாச்சாரம், மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்ற காரணிகளில் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது அல்லது அனுசரித்துப் போவது என்பது கஷ்டமாக இருந்தாலும் காலப்போக்கில் அது அவர் களுக்குப் பழக்கப்பட்டதாகவும் ஏற்புடையதாகவும் ஆகிவிட்டது.

இயந்திரமயமான வாழ்க்கை, பனியிலும், கடும் குளிரிலும், உடல் வருந்திய உழைப்பு, ஊரில் உள்ள பெற்றொரை, உறவுகளை நல்லபடி வாழவைக்க வெண்டும் என்ற துடிப்பு, கடமை என்று இவர்களுக்குப் பல உணர்வுகள் இவர்களின் உள்ளத்தில் உறைந்து கிடந்தன. அதேபோல் ஊரில் உள்ள பெற்றோர்கள் வெளிநாட்டில் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியிலும், கௌரவத்திலும் சொல்லிக் கொண்டா லும் உள்ளுக்குள் தங்கள் பிள்ளைகள் பிரிவால் வேதனைப் பட்டார்கள். சோகத்தால் துவண்டார்கள். தங்கள் பிள்ளைகள் ஒரு வருடமோ, இரண்டு வருடமோ அல்லது பல வருடங்களுக்கு பின்னோ விடுப்பில் ஊருக்கு வரும்போது அவர்களுக்கு ஏற்படும் ஆனந்தம், மகிழ்ச்சி சொல்லும் தரமன்று. ஓடியோடி உபசரித்து ஊரில் பல இடங்களுக்கு அவர்களைக் கூட்டிச் சென்று காட்டுவதும், பிடித்த உணவுவகைகளை செய்து கொடுப்பதும், பலகாரங் கள் செய்து அவர்களுக்குப் பரிமாறுவதும் என இப்படி தங்கள் அன்பை வெளிப்படுத்தி தங்கள் பிள்ளை களைச் சந்தோசப் படுத்துவார்கள். விடுமுறை முடிந்து அவர்கள் திரும்பும்போது அவர்கள் படும் வேதனை சொல்லில் அடங்காதது. அம்மா, அப்பா, சகோதரங்கள், பாட்டன், பாட்டி, மாமா, மாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் உறவினர்கள் என்று எல்லோரும் சேர்ந்து கண்கள் கலங்கி வழியனுப்பும்போது இதயங்கள் நொறுங்கிப் போவதுண்டு. ஒரு மூன்று அல்லது நான்கு வாரத்துக்குள் என்னத்தை செய்வது? அதைப் பண்ணவில்லையே. இதைப் பண்ணலியே என்று புலம்பும் அம்மாவின் அன்பை விலக்க முடியா-மல் விடுபடும் பிள்ளைகள் கண்ணீர் ததும்பப் பிரியும்பொழுது பாசத்தின் அணை உடைந்து பிரவா-கமாக ஓடும். இந்தக் காட்சிகள் ஒவ்வொரு வருடமும் எமது தேசத்திலே, எமது ஊர்களிலே இன்றும் இடம் பெறுகின்றன. இப்பொழுதுள்ள அறிவியல் விஞ்ஞான யுகத்திலே பல மின் தொடர்பு சாதனைகள் இருப்பதால் ஊர்விட்டு வந்ததும் இந்த சாதனைகள் மூலம் தொடர்புகள் தொடரும். குறிப்பாக இப்பொழுது ஸ்கைப் என்ற காட்சி தொடர்பாடல் மூலம் தங்கள் உறவுகளுடன் பார்த்து பேசுகிறார்கள். முன்பெல்லாம் தொலைபேசியில் குரல் மூலம் உறவாடியவர்களுக்கு இன்று அறிவியல் விஞ்ஞானம் கொடுத்த பரிசுதான் இந்த "ஸ்கைப்" என்னும் தொடர்பாடல் சாதனம். தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் ஸ்கைப் மூலம் அவர்களின் பாட்டன், பாட்டிகளைக் காட்டுவதும், அவர்களுடன் பேசவைப்பதும், இன்று புலம்பெயர் நாடுகளில் அன்றாடம் நடக்கும் விடயமாகும். ஊரில் உற்றவர்களும் இதனால் மிகச் சந்தோசப் படுகிறார்கள். சில பாட்டிகள் தங்கள் பேரக்குழந்தைகளை கணினி யில் தொட்டுவிட்டு பல மணி நேரம் தங்களை மறந்து நிற்பதும், சிலவேளைகளில் கைகள் அலம்பாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். கழுவ மறுக்கிறார்கள். காரணம் கேட்டால் தங்கள் பேரக்குழந்தையை தொட்ட கை-களை கழுவ மனம் வரவில்லையாம். இதைப் பார்த்து கண்கலங்கும் மக்கள் ஏராளம் எமது மண்ணில் இன்று...

உறவு என்ன ஊறுகாயா? வாய் புளிக்கும்போது தொட்டு நக்குவதற்கு? உறவு எமது மூச்சுக் காற்று... இந்த மூச்சுக் காற்றைப் பிடித்துக் கொண்டு அந்நிய நாட்டில் வாழும் எத்தனை இளைஞர்கள் இன்று வேதனையை அனுபவிக்கிறார்கள். படுக்கையில் புரண்டு, பிரண்டுபடுத்து நித்திரை இல்லாமல் தூக்கத்தைத் தொலைத்து இவர்கள் படும் வேதனை மகா கொடியது.

அம்மா ஊட்டிவிட்டதை நினைப்பதும்...

அம்மா காட்டிக்கொடுத்ததை அசைபோடு வதும்...

அம்மாவின் சமையல், சாப்பாட்டின் மணத்தை யும், சுவையையும் ருசிப்பதும், அம்மாவின் சேலை நெடிகூட இவர்களுக்கு புது வாசனையாக இருக்கிற தாம்... என்னதான் வசதி, வாழ்க்கை என்று இருந்தா லும் இவர்களின் வாழ்க்கை இங்கேயும் அங்கேயும் ஒரு வெறுமையுடன் கூடிய வெட்ட வெளியாக, சுட்ட மண்ணாகவே கிடக்கிறது இதுதான் உண்மை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மைகள் உறங்குகின்றதா?

நமது தாயகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்த்ரேலியா போன்ற நாடுகளுக்கும் ஏதுமில்லாதவர்களாக வெறுமனே ஏதிலிகளாக வந்த எம் மக்கள் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். மொழி, வேலைவாய்ப்பு, கலாச்சாரம், காலநிலை என்று பல காரணிகளால் கஷ்டப்பட்டார்கள். ஊரிலிருந்த காணிபூமி, அம்மா அல்லது மனைவியின் தங்க நகைகள், ஏன் பத்துசத வட்டிக்கு கூட கடன் வாங்கியே முகவர்களுக்கும், விமான பயணத்திற்கும் கொடுத்தார்கள். அப்படித்தான் அநேகம் பேர் இந்த மேற்குலக நாடுகளுக்குள் வந்தார்கள். இவர்களில் தாயகத்தில் தரமான உத்தியோகத்தில் இருந்தவர்கள் கூட தங்களின் நிலத்தை விட்டு புலத்துக்கு வரவேண்டிய சூழ்நிலை இருந்தது. இங்கு வந்தபோது இவர்கள்தான் மிகவும் கஷ்டப்பட வேண்டியதாகப் போய்விட்டது. தாயகத்தில் இருந்த போது இரண்டாந்தரப் பிரஜையாகப் பார்க்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் அந்நிய தேசங்களிலும் அவமானத்தையும், கஷ்டத்தையும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. பெரிதும் மன உளைச்சலுடன் இருந்த இவர்கள் நாளடைவில் தங்களை மாற்றிக் கொண்டு தங்களுக்கு புகலிடம் தந்த நாடுகளுடன் ஒன்றிப்போவதற்கு பழகிக் கொண்டார்கள். இப்படியே மற்றவர்களும் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டார்கள்.

பனியிலும், குளிரிலும் இவர்கள் கஷ்டமான வேலைகளையும், பார்க்கப்படாத வேலைகளையும் இரவு பகலாக செய்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது. நொந்து நூலாகி இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்த இவர்கள், முதலில் தங்களின் கடன்களை அடைத்தார்கள். பலர் அக்கா, தங்கைகளை கரைசேர்த்தார்கள். சிலர் தம்பி, தங்கைகளை படிக்கவைத்தார்கள், வளவு வாங்கினார்கள், வீடு கட்டினார்கள், உறவுகளுக்கு உதவினார்கள். ஊருக்கு பல காரியங்களுக்கு உதவினார்கள், இவ்வளவிற்கும் இவர்கள் படும் கஷ்டம் ஊருக்கோ அல்லது உறவுகளுக்கோ தெரிவதில்லை. அவர்கள் நினைப்பெல்லாம் ஏதோ வெளிநாட்டில் பணம் வானத்திலிருந்து கொட்டுகின்றதென்பதே. அதனால் தான் நாளுக்குநாள் தொலைபேசி அழைப்புகளும், கடிதங்களும் அனுப்பி இவர்களை இம்சைப்படுத்தினார்கள். இவர்கள் தங்கள் துன்பத்தை அவர்களுக்கு சொல்லி புரியவைக்க முடியாமல் திண்டாடியது, ஊரில் உள்ளவர்களுக்கு தெரியாது. புலத்தில் உள்ள பலர் தங்கள் கஷ்டத்தை மறைத்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து பணம் கேட்டபோதெல்லாம் வட்டிக்கு வாங்கி அனுப்பிய சம்பவங்கள் ஏராளம். இன்னும் சொல்லப்போனால்... தங்களின் தம்பியையோ, அக்காளின் மகனையோ அல்லது மனைவியின் தம்பியையோ ஒரு வெளிநாட்டுக்கு கூப்பிடுவதற்கு பெருந்தொகைப் பணம் அனுப்ப வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு வரும்போது இவர்கள் வங்கிகளில் கடன் எடுத்துத்தான் செய்ய முடிந்தது. இதையெல்லாம் ஊரில் உள்ளவர்கள் அறியார்கள் ஆனால் உண்மை அதுதான். இவர்கள் இரவு பகலாக ஊன், உறக்கமின்றி ஓய்வு உளைச்சலின்றி நாள்தோறும் வேலை செய்தே இவர்களின் கடன்களை படிப்படியாக கட்டவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். இன்னும் சொல்லப் போனால் ஊரில் உள்ள கோவில் குளம், சிறு-வர் காப்பகம், முதியோர் இல்லம், வெள்ள அழிவு, பள்ளிக்கூட முன்னேற்றம், சமூக நலம் சர்ந்த நடவடிக்கைகள் என்று ஏகப்பட்ட காரியங்களுக்கு இவர்கள் பங்களிப்பு செய்ய வேண்டிவரும். அதைவிட புலத்தில் நடக்கும் திருமணங்கள், பெண்கள் வயசுக்கு வரும் விழா, பிறந்த நாள் கொண்டாட்டம், கேளிக்கை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்று பலவற்றிற்கு இவர்கள் பணம் செலவழித்தே ஆகவேண்டும். இதை விட இவர்களின் வீட்டு கடன், பிள்ளைகளின் பாட-சாலை கட்டணம், மாதாந்த மின்சாரக் கட்டணம், வீட்டு தொலைபேசிக் கட்டணம், கையில் உள்ள அலை பேசி கட்டணம், இணையவலை கட்டணம், காருக்கு உரிய காப்புறுதிக் கட்டணம் அதற்குரிய வீதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டணம், எரிபொருள் நிரப்ப பணம், வைத்தியசாலை கட்டணம், மாத்திரை, மருந்துக்குரிய பணம், மாதாந்த கடனட்டை கொடுப்பனவு, வீட்டு நிர்வாக செலவு, இதில் உணவு, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் முக்கிய இதர செலவுகள் வந்து இவர்களின் முன் நிற்கும். வாசிக்கும் போதே மூச்சு வாங்குதல்லவா? இதையெல்லாம் இவர்கள் எப்படி கஷ்டப்பட்டு சமாளிக் கிறார்கள் என்பது அந்த ஆண்டவர் ஒருவனுக்குத்தான் தெரியும். ஊரில் இருக்கும் சொந்தங்களுக்கோ அல்லது பொதுப் பணிக்கு பணம் கேட்டு எழுதும் அமைப்புகளுக்கோ தெரியாது.

இன்று பார்த்தால், ஊரில் உள்ள ஒரு சாரார் புலத்தில் வாழும் மக்களைவிட வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து நிற்கிறார்கள் என்பதை ஊருக்கு போய்வந்த பலர் சொல்கிறார்கள். குறிப்பாக ஆழிப் பேரலை அழிவுக்குப்பின் அரசாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் பல திட்டங்களும், வசதிகளும், வாய்ப்புகளும் பரவலாக ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை என்றும் அநேக வீடுகள் மாடி வீடு களாக கட்டப்பட்டும், அநேக வீடுகளில் மகிழூர்திகழும், (கார்) உந்தூர்திகளும் (மோட்டார் சைக்கிள்) கணிச மான வீடுகளில் இருக்கின்றன என்ற தகவலும் வருகின்றன. அங்கு வசதியாக உள்ளவர்கள் தங்களை வளம்படுத்தவே பார்க்கிறார்கள். தங்களின் பணத்துக்கு பங்கம் வராமல் காணிபூமி வாங்கி விடுகிறார்கள். மாடுகன்று, தோட்டம் துரவு, வீடுவளவு என்று சொத்து சேர்ப்பதில் நாட்டமாக இருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற செய்திகளும், அங்குள்ள பொதுநல தேவை களுக்கு இவர்கள் பெரிதாக உதவுவதில்லை, இதை புலம் பெயர்ந்த மக்களிடமே எதிர்பார்க்கிறார்கள் ஏன் இப்படி என்ற கேள்வியும், ஆதங்கமும் புலத்தில் வாழும் மக்களிடையே இன்று எழுந்து நிற்கிறது. பலர் வெளிப்படையாகவே தங்களின் கஷ்டத்தையும், இயலாமையையும் சொல்லி ஊரில் வசதியாக உள்ளவர்களிடமும் பொதுநல அமைப்புகள் உதவி கோரலாமே என்று சொல்கிறார்கள். சிலர் வழமை போல் என்ன கஷ்டமோ ஏதோ தங்களால் முடிந்ததை செய்கிறார்கள். இந்தக் கட்டுரை என்ன சொல்ல வருகிறதென்றால் புலத்தில் வாழும் மக்கள் இங்கு மகா கஷ்டத்திலேதான் அதாவது கட்டுரையில் சொன்ன பல பிரச்சினைகளுக்குள் இருந்தே வாழ்கிறார்கள் என்பது உண்மை. இந்த உண்மை உறங்குகிறது. ஊரில் உள்ள உறவுகளும், ஏனையோரும் இதை புரிந்து கொள்ளுங்கள் என்பதை தான். வாசகர்களே சற்று சிந்தியுங்கள்... சரியென்று படுகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற படைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | படகுத்துறை அருகினிலே | (நாவல்) |
| 2. | லாவண்யா ஒரு முற்றுப்புள்ளி | (நாவல்) |
| 3. | இளமைக் கோவில் ஒன்று | (நாவல்) |
| 4. | விடியாத இரவுகள் | (சிறுகதைத் தொகுப்பு) |
| 5. | புதுக் கோலங்கள் | (மெல்லிசைப் பாடல்கள்) |
| 6. | மண்வாசம் | (கவிதைத் தொகுப்பு) |
| 7. | தேசத்தின் தென்றல் (தாயக உணர்வுப் பாடல்கள்) | (இறுவெட்டு) |
| 8. | பக்திப் பாடல்கள் | (இறுவெட்டுகள்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இன்று நம் பார்வையில் விரிந்து கிடக்கின்ற தமிழ் இலக்கியத் தளத்தில் மண்ணின் மணமும், நிறமும் மாறாமல் யதார்த்த வாழ்க்கைப் போக்குகளை போலிப்பாசங்கின்றி அவசியமற்ற சரிகை வார்த்தைகளின் அலங்காரமின்றி எளிமையாய், இயல்பாய், கட்டுரை, கவிதை, புதினம், நாடகம் போன்ற பலவடிவங்களில் படைத்தளித்து அழுத்தமாக தங்கள் தடத்தைப் பதித்து வருபவர்கள் ஈழத்தமிழர்களே. இந்த உண்மைக்கு உரம் சேர்க்கின்ற கோவிலூர் செல்வராஜன் அவர்களின் இந்தச் சிந்தனைத் தொகுப்பு. கோவிலூரரை இன உணர்வு சார்ந்த ஊடகவியலாளராக தமிழ் கூறும்நல்லுகம் நன்கு அறியும். ஒரு நாவல் வடிப்பதைவிட, ஒரு கவிதை படைப்பதைவிட, செறிவான கருத்துக்கள் அடங்கிய ஒரு கட்டுரையை வாசகர்களின் வாசிப்பு அனுபவமாக மாற்றும் வண்ணம் தீட்டுவதுதான் எழுத்துலகில் சிரமமானது. இத்தொகுப்பில் கோவிலூர் செல்வராஜன் சிரமமில்லாமல் அச்சாதனையை இயல்பாக நிகழ்த்தியுள்ளார்".

-தமிழருவி மணியன்

தமிழ்ச்சாதியின் பிணிபோக்கி அவர்தம் வாழ்வுக்கு அணிசேர்க்கும் சக்தியுடன் அச்சேறி இருக்கிறது தம்பி கோவிலூர் செல்வராஜனின் கருத்தோசைக்களமாக வெளிவந்திருக்கும் இந்த நூல் திருத்த விரும்பாத உணர்வாளர்களையும், சாதிசமய சாக்கடைகளின் எசமானர்களையும், ஏமாற்றிகளையும், ஏமாளிகளையும் மாறுங்களேன் என்று மதிப்போடும், மனத்தூய்மை யோடும், அக்கறையோடும், ஆதங்கத்தோடும் தனது கட்டுரைகளினூடே கேட்கிறான் இந்தச் சமுதாயச்சிற்பி. கட்டுரைத் தலைப்புகளே கவிதை மொட்டுக்களாக கருத்தினைக் கொட்டுகின்றன. கட்டுரைகளின் மத்தியில் மெட்டுக்களோடு தாயகச் சிட்டுக்கள் சிறகுவிரித்து நிற்கின்றன. பாடல் களை எழுதி மிகவும் கம்பீரமான குரலில் பாடும் ஆற்றல் பெற்ற கவிஞன் கோவிலூர் செல்வராஜன். இவன் பாடல்களின் யதார்த்தமும் இருக்கும், பதார்த்தமும் இருக்கும், கதார்த்தமும் இருக்கும்"

-புலவர் சிவநாதன்

ISBN 978-9381322154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org